தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்

இந்திரா சவுந்தர்ராஜன்

தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்!

ஒவ்வொருவரும் அறிந்திருக்கும் ஐந்தாவது வேதம் இது வியாசர் என்னும் மாமுனிவரால் ஒரு லட்சம் ஸ்லோகங் களால் எழுதப்பட்டது. இப்படி சொல்வது கூடப் பிழை தான் வியாச முனிவர் சொல்லச் சொல்ல நாம் அன் போடு வணங்கும் கணபதி தான் பாரதத்தை எழுதினார். அதுவும் எப்படி? தன் தந்தங்களில் ஒன்றை ஒடித்து அதையே பேனாவாக, அதாவது எழுத்தாணியாக ஆக் கிக் கொண்டு எழுதினார். அப்படி எழுதப்பட்ட பாரதம், மகாபாரதமாக கருதப்படவும் ஒரு காரணம் உண்டு.

தேவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து வியாசர் எழுதிய பாரதத்தின் சிறப்பை அறிந்து கொள்ள முயல்கின்றனர். உள்ளிருக்கும் லட்சம் ஸ்லோகங்களையும் சொல்லி அவர்களுக்குப் புரியச் செய்வது ஒருபுறம். அதற்கு அவ சியம் இல்லாதபடி நொடியில் புரிய வைத்துவிட, ஒரு வழியைக் காண்கிறார் கணபதி. ஒரு பெரிய தராசைக் கொண்டு வரச் சொல்லி, அதில் ஒரு பக்கம் பாரதத் தையும், மறுபக்கத்தில் நான்கு வேதங்களையும் வைக் கிறார். பாரதம் உள்ள தட்டும், நான்கு வேதம் உள்ள தட் டும் சமமாக நிற்கிறது. தேவர்கள் வியக்கின்றனர்.

வேதங்கள் இறைவனிடமிருந்தே தோன்றியது. அதுவே மானுட வாழ்விற்கு ஆதாரமாக வழிகாட்டியாக எல் லாமுமாக உள்ளது. அதை அசுரர்கள் அழிக்க நினைத்த போதெல்லாம், மகாவிஷ்ணுவே அதைமீட்டு வந்து பிரம்மனிடம் அளித்து பின் ரிஷிகளை அடைந்து அனைவருக்கும் பொதுவானது. அப்படிப்பட்ட வேதங்க

ளுக்கு இணையான பாரதம் இருப்பதை அறிந்த தேவர்கள், 'இது பாரதம் அல்ல. மகாபாரதம்' என்றனர்.

மகாபாரதம் மட்டுமல்ல. ராமாயணமும் இதிகாசம். இந்த இரண்டையும் அதாவது இரண்டின் சாரத்தையும் திருக்குறள் போல சுருங்கச் சொல்வதும் உண்டு.

மண்ணாசையால் விளைந்தது மகாபாரதம்! பெண்ணாசையில் விளைந்தது ராமாயணம்! முன்னதில் அந்த திருமால் கிருஷ்ணனாக அவதரித்து தந்திரங்கள் புரிந்தான். பின்னதில் ராமனாய் அவதாரம் எடுத்து தர்மங்கள் புரிந்தான். ஒன்று கிருஷ்ண தந்திரம். இன்னொன்று ராமதர்மம். ஒன்று அறிவு சார்ந்தது. இன்னொன்று உணர்வு சார்ந்தது. உடல் சார்ந்தது. உயிர் சார்ந்தது என்றும் கூட கூறலாம்.

அந்த வகையில், மண்ணாசையில் விளைந்த மகாபாரதத்திற்குள் எவ்வளவோ பாத்திரங்கள். சந்தனு மகாராஜாவிடம் தொடங்கும் கதை, கவுரவர்கள் பாண்டவர்கள் என்று பிரிவுபட்டு இருதரப்புக்குமான பெரும் யுத்தமாக 18 நாட்கள் நடந்தேறி, இறுதியில் பாண்டவர்கள் வெற்றி பெற்று அவர்கள் சொர்க்கநரகம் செல்வது வரை தொடர்கிறது.

சிரஞ்சீவி தன்மையோடு திகழும் இந்த பாரதத்தில் தர்மர், அர்ஜுனன், பீமன், நகுலன், சகாதேவன், குந்தி, துரியோதனன் உள்ளிட்ட முக்கிய பாத்திரங்கள் இருந்தாலும், பல துணைப் பாத்திரங்களும் இவர்களுக்கு இணையாக இருப்பது பாரதம் படித்த பலருக்கே கூட பெரிதாகத் தெரிந்திருக்காது. அவர்கள் யாரென்று பார்க்கும் போது சந்தனு, அம்பை, விதுரர், ஆணி மாண்

டவ்யர், மாத்ரி, துச்சலை, திருஷ்டத்துய்மன் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

பாரதப் பரம்பரை என்பது சராசரியான மானுட இனத்தின் ஆயிரக்கணக்கான பரம்பரைகளில் ஒன்றல்ல. இந்த பூமியில் அது தோன்றிய நாளிலிருந்து அதில் உயிர்கள் உருவான காலம் தொட்டு கோடானு கோடி பேர் பிறந்தும் பின் அவர்கள் இறந்தும் என்று ஒரு சுழற்சி நடந்து கொண்டே தான் இருக்கிறது. அத்தனை பேரையும் வரலாறு தன்னுள் பதிவு செய்து கொள்வதில்லை.

அந்த கோடான கோடி பேர்களில் வெகுசிலரே இந்த உலகம் வியக்கும் செயல்களைச் செய்பவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் ஏதோ ஒரு விதத்தில் சிறந்த உதாரணங்களாகவும் ஆகிறார்கள் இவர்களில் கங்காதேவி பற்றி முதலில் அறியலாம். துஷ்யந்தன், சகுந்தலைக்குப் பிறந்தவன் பரதன். இந்த பரதனிலிருந்து பெரும் பரம்பரை தோன்ற ஆரம்பிக்கிறது. அதில் சந்திர வம்சம், சூரியவம்சம் என்ற பிரிவுகள் உண்டாயிற்று. சந்திர வம்சாவளியில் தான் மகாபாரத பாத்திரங்கள் வருகின்றன. இவர்களில் ஒருவன் மகாபிஷக். இவன் தன் வாழ்நாளில் ஆயிரம் அஸ்வமேத யாகங்களையும், நூறு ராஜசூய யாகங்களையும் செய்து தேவர்களின் தலைவனான இந்திரனின் அன்புக்கும், கருணைக்கும் ஆளானான். இதனால் இவனுக்கு சொர்க்கம் கிட்டியது. சொர்க்கம் என்றவுடனேயே துன்பமே இல்லாத ஒரு இன்ப உலகம் என்று தான் நாம் அர்த்தப்படுத்துகிறோம். அது உண்மை தான்.

அங்கே பூவுலக மனிதர்களிடம் காணப்படும் காமம், குரோதம், பயம், சந்தேகம் போன்ற உணர்வுக

ளுக்கு இடமில்லை. இதற்கெல்லாம் அங்கு அவசியமும் இல்லை. அத்துடன் இங்கு சில நியமங்களும் உள்ளன. அதன்படி, சொர்க்கவாசிகள் ஒருநாள் மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மதேவனைக் கண்டு அவரது அருளில் திளைத்தபடி இருக்கின்றனர். அவ்வேளையில், புண்ணிய நதிகளின் தாயான கங்கையும் பிரம்மாவை வணங்க வருகிறாள். அவளது அழகு மகாபிஷக்கை சலனப்படுத்திட, பிரம்ம தியானத்தை விட்டு விட்டு கங்கையை ஆசையுடன் பார்க்கிறான்.

இதைக் கண்ட பிரம்மா, மகாபிஷக்கிடம் பூலோக வாசனை மிச்சமிருப்பதைக் கண்டு, "நீ திரும்ப மானிடப் பிறப்பெடுக்க கடவாய்," என்று சபித்து விடுகிறார். மகாபிஷக்கின் மனதில், ஆசை ஏற்படக் காரணமான கங்கையாலேயே, சாபவிமோசனமும் ஏற்படும் என்று வழிகாட்டுகிறார்.

தன்னால் மகாபிஷக் சாபத்திற்கு ஆளானதை எண்ணி கங்கை வருந்துகிறாள். அந்த வருத்தத்தோடு திரும்பிச் செல்கையில், சொர்க்கத்தில் வசித்துவரும் அஷ்டவசுக்கள் என்னும் எட்டு வசுக்களைப் பார்க்கிறாள். அவர்கள் துளியும் பொலிவு இல்லாமல் வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் போல் இருக்கிறார்கள். இவர்கள் யார் என்பது ஒரு தனிக்கதை. வசுக்களைப் பார்க்கும் கங்கை அதிர்ச்சி அடைகிறாள். வசிஷ்ட மகரிஷியின் சாபத்தால் தாங்கள் பொலிவு இழந்து விட்டதாகவும், பூவுலகில் மானிடப் பிறப்பெடுக்கும் சாபம் ஏற்பட்டு விட்டதாகவும் அவர்கள் கங்கையிடம் கூறுகின்றனர்.

சாபத்திற்குரிய காரணம் பற்றி கங்கை அவர்களிடம் கேட்கிறாள். ஒரு வசு இதற்கு பதிலளித்தான். "தாயே!

வசிஷ்டர் வசமுள்ள காமதேனு பசுவின் மேல் என் மனைவி விருப்பம் கொண்டாள். அவரோ மகாமுனி. அவருக்கு எதற்கு எல்லாம் தரும் காமதேனு. சொர்க்க வாசியான நமக்கல்லவா காமதேனுவின் சகல ஐஸ்வர் யங்களும் சொந்தமாக வேண்டும் என்னும் ஆசையில் அவருக்குத் தெரியாமல் காமதேனுவைக் கொண்டு வந்து விட்டோம். இதை அறிந்தே அவர் எங்களைச் சபித்து விட்டார்," என்கிறான். கங்கைக்குச் சிரிப்பு தான் வருகிறது.

ஒருபுறம் பெண்ணாசையால் சபிக்கப்பட்ட மகாபிஷக். மறுபுறம் களவால் சபிக்கப்பட்ட வசுக்கள். சொர்க்கத்தி லும் கூட இவ்வகைப் பண்புகள் உள்நுழைந்து தன் வீரி யத்தைக் காட்டத்தான் முனைகிறது. கங்கை பூவுலகில் பாய்ந்து செல்பவள். மனிதர்கள் மனதாலும், வாக்காலும், உடம்பாலும் செய்கிற பாவங்களை எல்லாம் தன் புனி தத்தால் போக்கி அவர்களை புண்ணியர்களாக ஆக் குகிறவள். அப்படிப்பட்டவள் வசுக்களின் வருத்தத்தை மட்டும் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பாளா? "வசுக் களே! உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?," என்று கேட்கிறாள்.

"அம்மா! நாங்கள் மானுட கர்ப்பத்தில் உடலெடுத்து பிறக்க விரும்பவில்லை. அதே சமயம், சாபத்தையும் அனுபவித்தாக வேண்டும். இதற்கு ஒரே வழிதான் உள் ளது. எங்கள் பொருட்டு நீ மானிடப் பிறவி எடுக்க வேண் டும். உன் வயிற்றில் நாங்கள் பிறக்க வேண்டும். நாங்கள் பூமியில் வாழ விரும்பாததால், எங்களைப் பெற்றெடுத்த சில க்ஷணத்திலேயே நீ கொன்று விடு. உன்னுள் மூழ்கி உயிர் விட்டால் பாவம் நீங்கிவிடும் என்பதால் எங்களை நீயே விழுங்கி விடும். அதன்பின் நாங்கள் வசுக்களாகி

திரும்பவும் சொர்க்கத்தை அடைந்துவிடுவோம். இனி வரும் நாளில் மனிதனின் மனோபாவனை போல் தவறு கள் செய்ய மாட்டோம்," என்கின்றனர்.

அப்போது தான் கங்காதேவிக்கு, அன்று பிரம்ம தேவ னிடம் அருள்பெற வந்த காரணம் புரிகிறது. வசுக்கள் பாவவிமோசனம் கொடுத்தாலும் கூட, அவர்களைப் பெற்றவுடன் கொல்லப் போவதால், உலகத்தார் தன் னைத் தவறாகப் பேசப்போவது பற்றி எண்ணிப் பார்க் கிறாள். அதுபோல், தான் அவர்கள் பொருட்டு மணக் கப் போகும் அரசனுக்கு ஒரு பிள்ளையைத் தர வேண்டி இருப்பது பற்றியும் எண்ணுகிறாள்.

இதைப் புரிந்து கொண்ட வசுக்கள், "எங்களைக் கொல் லும் செயலுக்குப் பரிகாரமாக நாங்கள் எட்டுப்பேரும் எங்கள் சக்தியில் நாலில் ஒரு பங்கை உனக்கு தரு கிறோம். உன்னால் எங்கள் சக்திபிரபாவத்தோடு, ஒரு பிள்ளை பிறக்கட்டும். அதை நீ அந்த அரசனுக்கு அளித்து விடு. உனக்கும் உன் கடமையைச் செய்த நிறைவு வரும். எங்களுக்கும் சாபவிமோசனம் கிடைத் தது போல் இருக்கும்," என்றனர். அந்த கங்காதேவி தான் மகாபாரத பாத்திரங்களில் உத்தமரான பீஷ்மருக் குத் தாயாகிறாள்.

சந்திர வம்சாவளியில் பரதனை தொடர்ந்து வந்தவர்க ளில், பிரதீபன் என்னும் அரசன் மகாபாரதத்தில் நாம் அறிந்திராத பாத்திரம். பிரதீபன் ஆன்மிக நெறி அறிந் தவன். கங்கை நதிக்கரையில் மனதை அடக்கி தவம் செய்யத் தொடங்கினான். ஒருநாள் அவனைக் கண்ட கங்கைக்கு அவன் மீது காதல் தோன்றியது. அவனது வலது தொடையில் அமர்ந்து தன் காதலைக் கூற முற்

பட்டாள். ஆனால், பிரதீபன் அவளது காதலை மறுத் துவிட்டான். மனித வாழ்வின் தர்மநெறிபற்றி அவளிடம் கூறத் தொடங்கினான்.

"கங்கா! என்னை நீ விரும்பியதில் பிழையில்லை. ஏனென்றால், ஒருவரை விரும்புவதன் பின்புலத்தில் சில நுட்பங்களும், விதிக்கூறுகளும் இருக்கும். ஆனால், உன்னைப் பொறுத்த வரையில், அந்த விதிக்கூறு தவ றாகி விட்டது. நீ எனது இடது தொடையில் அமர்ந்து என்னை மோகித்திருந்தால், நான் உன்னை ஏற்றிருப் பேன். ஆனால், வலது தொடையில் அமர்ந்து விட்டாய். வலத்தொடை சந்ததிகளும், மருமகளும் அமர வேண் டியது. அவ்வகையில், நீயும் என் மருமகளாகிறாய். அத னால், உன்னை மணக்க ஒரு புத்திரனைத் தருவேன்," என்றான்.

பிரதீபனுடைய பேச்சிலிருந்த தர்மம் சிந்தனைக்கு கங் கையும் கட்டுப்பட்டாள்.

"அரசே! காலக்கணக்கிற்கு அப்பாற்ப ட்ட நான், காலக் கணக்கிற்கு கட்டுப்பட்ட மானிடர்களோடு சம்பந்தம் கொள்வதன் மூலம் பாவங்களைப் போக்கும் என் குணப்பாடும், உயிர்களைக் காக்கும் என் கருணையும், தாகம் தீர்க்கும் என் தயையும், எனக்குப் பிறக்கின்ற பிள் ளையிடத்திலும் குவிந்திருக்கும். இதன் மூலம் வருங் காலத்தில் பரதவம்சத்தின் போக்கிலும் அது எதிரொ லிக்கும். அப்படி ஒரு பிள்ளையைப் பெற்றிட உங்களின் தவம் பயன்படட்டும்," என்று கூறிச் சென்றாள்.

அவ்வாறு கங்கைக்காக, உருவான புத்திரனே சந்தனு. சந்தனு முற்பிறப்பில் மகாபிஷக் என்ற தேவனாக இருந்

தான். ஒருசமயம் கங்கை பிரம்மலோகம் சென்றபோது, அவளை இச்சையுடன் பார்த்தான். அதனால், மானிடப் பிறப்பெடுக்க வேண்டிய சாபம் ஏற்பட்டது. அவனே, தற் போது சந்தனுவாகப் பிறந்திருக்கிறான். வாலிப பிராயத் தில், அவன் கங்கைக்கரைக்கு வந்தான்.

அவனுக்காகவே, காத்திருந்த கங்கையைக் கண்டான். ஆனால், அவள் தான் கங்கை என்று அவனுக்குத் தெரியவில்லை. அது தான் விதியின் மாயை. பிரம் மதரிசனத்தின் போது, மகாபிஷக்காக இருந்து அன்று கொண்ட காதல், இப்போதும் அவள் மீது ஏற்பட் டது. கங்கைக்கோ, இரண்டு கடமைகள் இருந்தது. ஒரு புறம் இந்த சந்தனுவைச் சேர வேண்டும் என் பது. இன்னொன்று அஷ்ட வசுக்களுக்கு கொடுத்த வாக்கு. அஷ்ட வசுக்கள் என்பவர்கள் வசிஷ்டரிடம் இருந்த காமதேனு என்னும் பசுவை கவர்ந்து விட்டனர். இதன்காரணமாக, அவர்கள் பூமியில் பிறக்க வசிஷ்டர் சாபமிடுகிறார். அவர்கள் பிரம்மலோகம் வந்த கங்கா தேவியைச் சரணடைந்து, அவளுக்கே பிள்ளைகளாகப் பிறந்து உடனடியாக தங்களை கொன்று விடும்படி கேட் டுக் கொண்டனர்.

அவ்வாறு செய்வதன் மூலம், மானிடப்பிறப்பு உடனடி யாக நீங்கும் என அவர்கள் கணக்கிட்டனர். அவர்க ளின் கோரிக்கையை கங்காதேவியும் ஏற்றுக் கொண் டாள் இதன் காரணமாக, சந்தனுவின் காதலை ஏற் றாள் ஆனால், சில நிபந்தனைகளை சந்தனுவுக்கு விதித்தாள். "அரசே! நான் உங்கள் மனைவி ஆவ தில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், என் னுடைய மூலத்தை நீங்களோ, உங்களைச் சார்ந்தவர் களோ துளியும் அறிந்து கொள்ள முயலக்கூடாது. நான்

விரும்பிச் செய்யும் எதையும் தடுக்கக் கூடாது. என் மனம் வருந்தும் விதமாக நடக்கக் கூடாது. இதில் எது நடந்தாலும், நான் அடுத்த நொடியே உங்களை விட்டுப் பிரிந்து விடுவேன்," என்றாள்.

சந்தனு காதல் மோகத்தில் நிபந்தனைகளை ஏற்றான். இருவருக்கும் திருமணம் ஆனது. கங்கைவிதித்த நிபந்தனைகளின் படியே அவன் நடந்து கொண்டான். அந்த வேளையில், சாபமுற்றிருந்த அஷ்ட வசுக்கள் தங்களின் சாப் விமோசனத்திற்காக காத்திருந்து, ஒவ்வொருவராக கங்கையின் வயிற்றில் கருவாயினர். முதல் குழந்தை பிறந்தது. அந்த பிஞ்சுக் குழந்தையை புரண்டு வரும்கங்கையில் அவள் தூக்கிவீச, ஜல பிரவாகம் அந்த குழந்தையை ஏற்றுக் கொண்டது.

இதேபோல், அடுத்தடுத்து ஏழு குழந்தைகள் பிறந்தன. அத்தனை பேரும், கங்கை நதியில் மூழ்கிப் போயினர். நிபந்தனைப்படி, சந்தனு ஏதும் கேட்க முடியாமல் இருந்தான். எட்டாவது வசு தான், வசிஷ்டரின் ஆஸ்ரமத்திற்குச் சென்று அங்குள்ள காமதேனுவைத் திருடி வந்தான். அவன் இம்முறை கங்கையின் வயிற்றில் கரு கொண்டான்.

கரு வளர வளர, சந்தனுவிடமும் மனதில் நிறையவே நான் மாற்றங்கள். ஒன்றுக்கு ஏழு பிள்ளைகளை நிபந்தனை என்னும் பெயரால் இழந்து விட்டேன். இந்த பிள்ளையை அதுபோல இழக்க மாட்டேன். இவன் எனக்கு வேண்டும் என்கிற எண்ணம் மிக தீர்க்கமாகத் தோன்றுகிறது. எனவே, இந்த பிள்ளையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் எட்டாவது பிள்ளை பிறந்து,

கங்கை குழந்தையை ஆற்றில் வீச சென்றபோது, பின் தொடர்ந்த சந்தனு அவளைத் தடுத்து நிறுத்தினான்.

"கங்கா! இது நாள் வரையில் உன் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு வந்தேன். என்னைக் கல்லாக்கிக் கொண் டேன். ஆனால், இம்முறை அவ்வாறு இருக்க இயல வில்லை. இந்த பிள்ளையையும் நீ கொல்வதை அனும திக்க முடியாது. அதுமட்டுமின்றி, நீ ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய் என்பதை என்னால் கேட்காமலும் இருக்க முடியாது. நீயார்? எதனால் இப்படி நடந்து கொள்கிறாய். ஒருதாய் செய்கிறகாரியமா இது?" என்று வெடித்துக் கத றினான்.

கங்கையும் பதில் கூறத் தொடங்கினாள். "அரசே! இப் படி கோபத்தோடு என்னைக் கேள்வி கேட்கும் நாளுக் காகவே காத்திருந்தேன். ரிஷிகளின் சாபமும், விதியின் பலனும் எப்போதும் வலியவை. என் மூலமாய் அவை உங்களை நிபந்தனை என்னும் பெயரால் கட்டிப்போட்டு விட்டன. முதலில் நான் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். உத்தமரான ஜனக மகரிஷியின் புதல்வி நான். என் பெயர் கங்கை. உங்களை நான் மணந்தது, நமக்கு எட்டுப்பிள்ளைகள் பிறந்தது என்கிற எல்லாமே, விதியின்படி நடந்தது. அதை அறிய நீங்கள் அஷ்ட வசுக் களைப் பற்றியும், அவர்களுக்கு நான் அளித்த வாக்கி னையும் தெரிந்து கொள்ள வேண்டும்..." என்று ஆரம் பித்தவள் சகலத்தையும் கூறி முடித்தாள்.

அனைத்தையும் கேட்ட சந்தனுவிடம் திகைப்பு... பிர மிப்பு... அந்த பிரமிப்பில் இருந்து விடுபடாதவனாக இருந்த சந்தனுவிடம், முற்பிறப்பில் அவன் மகா பிஷக்

என்பவனாக இருந்து அப்போதே மோகித்த வரலாறை யும் சொன்னாள்.

தொடர்ந்து, "அரசே! எட்டாவதாகப் பிறந்த இவன், அஷ்ட வசுக்களின் பலம் மிகுந்த அம்சத்தை உடைய வன். அவர்களின் வரத்தால் நிரம்பியவன். அஷ்ட வசுக் களும் தேவர்கள். எனவே, இவன் ஒரு தேவ வரதன். அடுத்து இவன் என் அம்சங்களையும் கொண்டிருப்ப வன். எனவே, இவன் கங்காதரன். பிறப்பிலேயே சிறப்பு டைய இவனுக்கு, அரிய பல வித்தைகளைக் கற்பிக்க விரும்புகிறேன். நிபந்தனைப்படி, நீங்கள் என்னைக் கேள்வி கேட்டதால், உங்களை விட்டும் பிரியும் இவ்வே ளையில் இவனையும் என்னோடு அழைத்துச் செல்லப் போகிறேன். இது என்ன நியாயம் என்று கூட நீங்கள் கேட்கலாம்.

இவ்வேளையில், உங்களுக்கு நான் ஒரு வாக்கினை அளிக்கிறேன். இவனை உங்களின் சந்திர வம்சத்திற் கென்றே பெரும் வீரனாக உருவாக்குவேன். இவன் வாலிப பிராயத்தை எட்டியதும் பெரும் வீரனாக உங் கள் வசம் ஒப்படைப்பேன். இப்போது எனக்கு விடை கொடுங்கள்," என்றாள் கங்காதேவி.

சந்தனுவால் எதுவும் பேச முடியவில்லை. காலம் வலை போல பின்னிக்கொண்டு, காரண காரியங்களோடு பல செயல்களைச் செய்து கொண்டே போகிறது. மகனைப் பிரிந்து வாழ்வது, ஒருபுறம் வருத்தமாக இருந்தாலும், அஷ்டவசுக்களின் அம்சங்களோடு அவன் உருவா னதை நினைக்க மகிழ்வாகவும் இருந்தது. காலம் உரு ளத் தொடங்கியது.

கங்காதேவியும் தான் அளித்த வாக்குப்படி, சகல வித்தைகளையும் மகனுக்குப் பயிற்றுவித்தாள். அதில் தேவலோக வித்தைகளும் அடக்கம். இந்த வித்தைகள் தான், அந்த மகனை மகாபாரதத்திலேயே தனித்துக் காட்டப் போகிறது. மேலும், துளியும் பெண் நினைப்பே இல்லாமல் அவனைக் கங்கை வளர்த்தாள். பெண்ணாசையாலேயே பிழைகள் அதனாலேயே சாபங்கள் பின் பலவித பிறப்புகள்... தன் மகனுக்கு அப்படி ஒரு ஆபத்து நேரக்கூடாது என்னும் வைராக்கியத்தைப் புகட்டினாள். சந்தனு மகாராஜாவிடம் வந்து சேரப்போகும் அந்த இளைஞனே பீஷ்மன்.

பாரதத்தில் பீஷ்மர் பற்றிய அறிமுகம் அநேகமாகத் தேவை இருக்காது. ஆனால், அவரோடு தொடர்புடைய விசித்திர வீரியன், அம்பா, அம்பிகா, அம்பாலிகா ஆகிய பாத்திரங்கள் நமக்கு அறிமுகம் இல்லாதவர்கள். இவர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால், பீஷ்மரின் வரலாற்றையும் நாம் தெரிந்தே ஆக வேண்டும். பீஷ்மரை தேவவிரதன் என்பார்கள். 'பீஷ்மர்' என்ற சொல்லுக்கு சத்தியம் தவறாதவர், மிகுந்த வைராக்யம் உடையவர், தனக்கென வாழாதவர் என்ற முப்பெரும் பொருள் உண்டு.

சந்தனுவுக்கும், கங்காதேவிக்கும் எட்டாவதாகப் பிறந்த இவர், கங்கையாலேயே வளர்த்து ஆளாக்கப்பட்டார். கங்காதேவி அவரைத்தன் அன்புக்குரிய மகனாக மட்டும் வளர்க்கவில்லை. சகல சாஸ்திரங்களையும் கற்பித்தாள். அஸ்திரவித்தையைப் பயிற்றுவித்தாள். வசிஷ்டர் இவருக்கு வேதங்களைக் கற்பித்தார். சுக்ராச்சாரியாரும் இவருக்கு வித்தைகளைக் கற்றுக் கொடுத்தார். சாஸ்திரம், அஸ்திரம் இரண்டிலும் இணையில்லாத பரசுராமர்

அவருக்குத் தெரிந்த கலைகளைச் சொல்லிக் கொடுத்தார்.

ஒருமுறை கங்கையின் குறுக்கே தன் அஸ்திரங்களால் தடுப்பணை கட்டினான் தேவவிரதன். இதனால், தளும்ப தளும்ப பாய்ந்து கொண்டிருந்த கங்கை, அந்த தடுப்பணைக்கு அப்பாற்பட்ட பகுதியில் நீர்ப்போக்கு இல்லாமல் வறண்டு போனாள்.

இந்த அதிசய செய்தி, சந்தனு மகாராஜாவை அடைந்தது. அவர் தடுப்பணையை உடைப்பதற்காக வந்தார். தேவவிரதன் அவரோடு பதிலுக்கு மல்லுக்கு நின்றான். "ஓடும் நதிநீரைத் தேக்கி நிறுத்தாதே! இதை நான் அனுமதிக்கமாட்டேன்," என்கிறார் சந்தனு.

"என் தாயோடு நான் விளையாடுவதை தடுக்க நீங்கள் யார்?," என்று கேட்கிறான் தேவவிரதன். அப்போதே, சந்தனுவிற்கு தேவவிரதன் என்பது யார் என்று விளங்கி விடுகிறது. கங்காதேவியும், இருவரையும் மல்லாட விடவில்லை. நேரில் பிரசன்னமாகி, இருவரையும் இணைத்து வைத்தாள். அந்த நொடியே தேவவிரதனும், தாயின் கட்டளைக்கேற்ப தந்தையின் பின்னே சென்றான். சென்றது மட்டுமல்ல! இப்படியும் ஒரு பிள்ளையா என்று இந்த உலகே வியக்கும்படி பண்போடும், பொறுப்போடும் நடந்து கொண்டான்.

அதற்கு சாட்சியாகிறது ஒரு சம்பவம். தேவவிரதன் தந்தையை அடைந்து இளவரசனாக முடிசூட்டப்பட்டான். நான்கு வருடங்கள் கழிந்து விட்ட நிலையில், சந்தனு மகா ராஜாவின் பார்வையில் யமுனையாற்றில் படகோட்டும் சத்தியவதி என்னும் பெண் தென்படுகி

றாள். அவளது எழிலும், அவள் மேலிருந்து வீசிய வாச மும் சந்தனுவை மயக்கிற்று. சத்தியவதியை மணக்கும் எண்ணம் தோன்றியது. அவளது வளர்ப்புத்தந்தையான செம்படவ தலைவனிடம் சென்று தன் விருப்பத்தை தெரிவித்தார். அந்த தலைவனோ, சந்தனு மகாராஜா வுக்கு ஒரு நிபந்தனை விதித்தான்.

"அரசே! என் மகளை உங்களுக்குத் தருவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அவளை நீங்கள் மணக்கும் பட்சத்தில் அவளுக்குப் பிறக்கும் பிள்ளைகளே உங்கள் அரசாட்சிக்கு சொந்தமாக வேண்டும் சம்மதமா?" என்று கேட்டான். அந்த நிபந்தனையை சந்தனுவால் ஏற்க முடி யவில்லை. தனக்கும் கங்கைக்கும் பிறந்த கங்காதரனா கிய தேவவிரதன் வீராதி வீரனாகவும், சூராதிசூரனாகவும் இருக்க இந்த நிபந்தனையை ஏற்க முடியாமல் வருத் தத்தோடு திரும்பினான்.

தந்தையின் வருத்தம் தனயனுக்குத் தெரிய வருகிறது. செம்படவதலைவனிடம் சென்று தந்தைக்காக பெண் கேட்டான்.

இது உலகில் எங்கும் நடக்காத அதிசயம். செம்பட வதலைவனும் தேவவிரதன் செயல்கண்டு ஆச்சரியப் பட்டான். "இளவரசே! தந்தையின் மகிழ்ச்சிக்காக தாங் கள் வந்திருப்பது ஆச்சரியம், அதிசயம். அதற்காக, என் மகள் ஒரு அரசனின் ஆசை நாயகியாக இருப்பதை நான் விரும்பவில்லை. என் மகள் வயிற்றுப் பிள்ளை களே நாடாள வேண்டும். தாங்கள் முதல் பிள்ளையாக இருக்க அது எப்படி சாத்தியம்?" என்று கேட்டான்.

இதைக் கேட்ட தேவவிரதனிடம், ஒரு தீர்க்கமான முடிவு. "தலைவனே! உனக்கு நான் சத்தியம் செய்து தருகிறேன். உன் மகளுக்குப் பிறக்கும் பிள்ளைகளே நாடாளுவார்கள். நான் ராஜ்ய உரிமை கோர மாட்டேன். போதுமா?" என்று கேட்க, செம்படவ தலைவன் சரி என கூறவில்லை. "இளவரசே! தாங்கள் அரசாள விரும்பவில்லை என்று இப்போது கூறலாம். நாளையே உங்களுக்கு ஒரு பிள்ளை பிறந்தால் அந்த பிள்ளைக்கு உரிமை உள்ளதே! அப்போது, என் மகளும் பிள்ளைகளும் ஓரம் கட்டப்படுவார்களே..." என்ற நியாயமான கேள்வியைக் கேட்க, தேவவிரதன் இன்னொரு சத்தியமும் செய்தான்.

"தலைவரே! உன் மகள் தான் என் தந்தையின் மனைவி. எனக்கு சிற்றன்னை. என் வாரிசுகள் அவளது குழந்தைகளுக்கு போட்டியாக வரக்கூடும் என்று நீ அச்சப்படுவதால், நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை. இது சத்தியம்! இனியேனும் திருமணத்தை தாமதப்படுத்த வேண்டாம்," என்று கூற செம்படவத் தலைவன் ஆடிப்போனான். சந்தனு மகாராஜா, மகனின் சத்தியத்தைக் கேட்டுச் சிலிர்த்துப் போனார். அதன்பின், சந்தனுவிற்கும் சத்தியவதிக்கும் திருமணம் நடந்தது. தேவவிரதனுக்குச் சான்றோர்களால், 'பீஷ்மர்' என்ற பட்டப்பெயர் அளிக்கப்பட்டது. தந்தையான சந்தனு, தன் மகனுக்கு அவன் விரும்பும் போது மரணிக்கும் வரத்தை தந்தான்.

சந்தனு சத்தியவதி தம்பதிக்கு சித்ராங்கதன், விசித்திர வீரியன் என்ற வாரிசுகள் தோன்றினார்கள். இவர்கள் இளம்பிராயத்தை கடக்கும் முன்பே, சந்தனுவின் காலம் முடிந்து போனது. மூத்தவராகிய பீஷ்மர், சித்ராங்கத

னுக்கு முடிசூட்டினார். ஆனால், அவன் குறிப்பிடும்படி யாக நாட்டை ஆளவில்லை.

அவனுக்கும், அவன் பெயரைக் கொண்ட கந்தர்வன் ஒருவனுக்கும் பகை மூண்டது. அது போரில் வந்து நின் றது. அந்தப்போரும் மூன்றாண்டுகள் நடந்தது. போரில் பீஷ்மர் களமிறங்கி இருந்தால் சித்ராங்கதனுக்கே வெற்றி கிடைத்திருக்கும்.

ஆனால், சித்ராங்கதனிடம் நியாயம் இல்லை கந்தர் வனை வம்புக்கிழுத்து யுத்தம் செய்திருந்தான். இந்த யுத்தத்தை தவிர்க்க, பீஷ்மர் முயன்று சித்ராங்கத னுக்கு அறிவுரை கூறினார். அதை அவன் கேட் கவில்லை. மாறாக பீஷ்மரிடம், "நடைபெறப்போகும் போரில் எனக்கு உங்கள் உதவி ஒன்றும் தேவை யில்லை," என்று கூறிவிட்டான்.

அதன்பின் போரில் தோற்று உயிரையும் விட்டான். அப் படி இறந்தவனுக்கு, பீஷ்மரே முன்னிலையில் இருந்து, கர்மகாரியங்களைச் செய்து முடித்தார்.

பின் விசித்திரவீரியனை ராஜாவாக்கியதோடு, ஒரு ராஜ குருவைப் போல் அவனருகிலேயே இருந்து வழிநடத்த வும் செய்தார். இதுவரை தர்மப்படியும், செய்து கொடுத்த சத்தியப்படியும் வாழ்ந்து விட்ட பீஷ்மருக்கு, விசித் திர வீரியனுக்கு திருமணம் செய்விக்கவேண்டும் என்ற நிலை வந்த போதுதான், சோதனையும் ஆரம்பமா யிற்று. விசித்திரவீரியனுக்கு தகுதியான பெண் வேண் டும் என்று தேட முற்பட்டபோது, காசி அரசன் தன் மகள் களான அம்பை, அம்பாலிகை, அம்பிகை என்ற மூன்று பேருக்கும் சுயம்வர ஏற்பாடு செய்திருந்தான்.

திருமண ஏற்பாட்டுக்கு முன்பே, சவுபல தேசத்து அரச னான சால்வன் என்பவன் மீது அம்பை காதல் கொண் டிருந்தாள். சால்வனும் அம்பையை மணம் செய்து கொள்ளும் நோக்கத்தோடு சுயம்வரத்திற்கு வந்திருந் தான். சுயம்வரத்திற்கு பீஷ்மரும் வந்திருந்தது தான் ஆச் சரியம். தன் தம்பி விசித்திர வீரியனுக்காகவும், தன்நாட் டுக்கு அரசசந்ததி உருவாக வேண்டும் என்பதற்காக வும், பீஷ்மர் சுயம்வர மண்டபத்திற்கு வந்தார்.

இது கண்டு காசிராஜன் மட்டுமல்ல! சுயம்வரத்திற்கு வந்திருந்த அத்தனை பேருமே ஆச்சரியப்பட்டார்கள் அதிர்ச்சிக்கும் ஆளானார்கள்.

'இந்தப் பிறப்பில் எனக்கு திருமணமில்லை என்று சத்தி யம் செய்திருக்கும் பீஷ்மர், சுயம்வரத்திற்கு வந்தது ஏன் என்ற கேள்வி

அவர்கள் ஒவ்வொருவர் முகத்திலும்...! 'காலமும் பீஷ் மரை வைத்து விளையாட காத்திருந்தது. அப்படி அது விளையாடப் போவதை வைத்து நாம் அடுத்தடுத்து அறிந்து கொள்ளப்போகும் பாத்திரங்கள் தான் சால் வன், அம்பை, அம்பாலிகை, அம்பிகை, துருபதன் என் னும் பாத்திரங்கள்.

காசி ராஜனின் சுயம்வர மண்டபத்திலே பீஷ்மர் அதைக் கண்ட அவ்வளவு அரசர் பெருமக்களிடமும் அதிர்ச்சி! அடுத்த அதிர்ச்சியாக பீஷ்மர் காசிராஜனின் மகள்க ளான அம்பை, அம்பிகா, அம்பாலிகா ஆகிய மூன்று பேரையும் தன் வாள் முனையில் மடக்கி ரதத்தில் ஏற்றி அஸ்தினாபுரத்திற்குப் புறப்பட்டு விட்டார். அந்த நாளில்

அரசர்களிடையே, இப்படி கவர்ந்து மணம் செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டிருந்தது.

இதை ராட்சஷ விவாகம் என்பார்கள். இதைப் போல், இன்னும் ஏழுவகைத் திருமணங்கள் இருந்தன. ஆனால், எந்த விவாகமாக இருந்தாலும்... அதில் அந்த பெண்ணின் விருப்பம் முக்கியம். பீஷ்மர் தன் தம்பியின் பொருட்டு, இம்மூன்று பேரையும் கவர்ந்து செல்வதைப் பொறுக்காமல், சுயம்வரத்தில் கலந்து கொள்ள வந்த அரசர்கள் பீஷ்மரை எதிர்த்துப் போர்புரிய முற்பட்ட னர். ஆனால், அவரின் வீரத்தின் முன்னால் அவர்கள் தெறித்து விழுந்தனர். சவுபல தேசத்தின் அரசன் சால் வன், கடத்தப்பட்ட அம்பையின் காதலன். அவன் மட் டும் விடாமல் பீஷ்மரின் ரதத்தை பின்தொடர்ந்தான்.

பாணங்களால் அவரை வீழத்தவும் முயன்றான். ஆனால், இறுதி வரை அவனால் முடியாமல் போயிற்று. ரதத்தில் இருந்த அம்பையும், சால்வன் தோற்று திரும் பச் செல்வதைக் கண்ணீருடன் பார்த்தாள். ஒருவழியாக பீஷ்மர், வருங்கால அஸ்தினாபுர ராணிகளுடன் அரண் மனை புகுந்தார். அந்த மூவரிடத்திலும் அப்போது தான் தன் தம்பி விசித்திர வீரியன் பற்றிக் கூறினார்.

"இளவரசிகளே! உங்களை நான் என்பொருட்டு கவர்ந்து வரவில்லை. என் தம்பியும், அஸ்தினாபுரத்து அரசனுமான விசித்திர வீரியனுக்காகவே கவர்ந்து வந் தேன். உங்களால் எங்கள் வம்சம் விருத்தியடைந்து இந்த நாட்டு மக்கள் வாழ்வாங்கு வாழவேண்டும் என்று விரும்புகிறேன்," என்றார். அவரின் கருத்தை அம்பி கையும், அம்பாலிகையும் ஏற்றுக்கொண்டனர். ஆனால், அம்பை பீஷ்மரைப் பார்த்துக் கண்ணீர் விட்டாள். பீஷ்

மரே! நீங்கள் என் விஷயத்தில் அவசரப்பட்டு விட்டீர் கள். நான் சவுபல அரசன் சால்வனை விரும்புகிறேன். சுயம்வரத்தில் அவருக்கே மாலை சூட எண்ணியிருந் தேன். இதை அறியாமல் நீங்கள் என்னைக் கவர்ந்து வந்தது பெரும் பிழை. இது நீதியாகாது," என்றாள்.

பீஷ்மர் ஆடிப்போனார்.

அவர் துளியும் எதிர்பார்த்திராத நிலைப்பாடு. பெண்க ளிடம் சினேகம், அவர்களை ரசிப்பது, அவர்கள் தொடர் பான காதல் தொடர்பான உணர்வுகளுக்கெல்லாம் இடமே இல்லாத, சத்திய வாழ்வு வாழ்பவராக இருந் ததால், இப்படி ஒரு காதல் சிக்கல் உருவாகக்கூடும் என்பதை அவரால் யூகிக்க முடியாமல் போய் விட்டது. அம்பையின் கண்ணீரும், கோபமும் பீஷ்மரை சிந்திக்க வைத்தது.

ஒரு முடிவுக்கு வந்தவராக, "பெண்ணே நீ சால்வனை மணந்து கொள். உன் காதலை நான் கெடுக்கத் தயா ரில்லை. நீ போகலாம்," என்றார்.

அம்பைக்கு தன் காதல் தப்பி பிழைத்துவிட்ட சந்தோ ஷம். அதே சமயம் அம்பாலிகையும், அம்பிகையும் விசித் திரவீரியனை மணந்து கொண்டனர். அம்பை தன் காத லன் சால்வனின் நாட்டுக்கு ரதமேறி சென்றாள். ஆனால் பாவம்...! அவள் வாழ்வில் விதி விபரீதமாக விளையாடத் தொடங்கியது. தன் முன் வந்து நின்ற அம்பையை ஏற்க அவன் மறுத்து விட்டான்.

"உன்னை நான் எதிரியிடம் இருந்து வெல்ல முடியாத வனாகி விட்டேன். தர்மப்படி நீ பீஷ்மரின் உடைமை

யாகி விட்டாய். உன்னைக் கவர்ந்து சென்றவன் மணப் பது தான் நியாயம். உனக்கும் அது தான் அழகு," என்று சொல்ல அம்பைக்கு தலையில் இடி விழுந்தது போல் ஆனது.

வேறு வழியின்றி மீண்டும் அஸ்தினாபுரத்திற்கே திரும் பினாள். பீஷ்மரிடம் நடந்ததைச் சொன்னாள். "என்னை நீங்கள் கவர்ந்து வந்தபடியால், எவருமே என்னை மணம்புரிய மறுப்பார்கள் என்பது தான் இப்போது என் நிலை. எனவே, என்னைக் கவர்ந்து வந்த நீங்களே மணந்து கொள்ளுங்கள்," என்றாள்.

பீஷ்மர் அவளிடம், "அம்பா! நான் ஜிதேந்திரியன். இப் பிறப்பில் எவரையும் மணக்க மாட்டேன் என்று சத்திய பிரக்ஞை கொண்டிருப்பவன். அதனால், உன்னை மட் டுமல்ல யாரையும் நான் எண்ணத் தயாரில்லை. சால்வ னின் கருத்து சரியாக இருக்கலாம். ஆனால், உன்னை நான் கவர்ந்தது நான் மணப்பதற்காக அல்ல. இந்த விஷயத்தை நீ அவனிடம் மீண்டும் சென்று சொன்னால் உனக்கு விமோசனம் பிறக்கும்," என்றார்.

அம்பையும் அவர் சொன்னது போல செய்ய சால் வன் ஏற்கனவே சொன்ன பதிலையே திரும்பச் சொன் னான். "மண்ணில் கைதவறி விழுந்த பதார்த்தத்தை திரும்ப எடுத்து உண்ண முயல்வது எப்படி இழுக்கான செயலோ... அப்படித்தான் நான் உன்னை மணப்பதும் ஆகும். எனவே, என்னை மன்னித்து விலகிச் செல்," என்றான்.

சால்வனின் பதிலால் அம்பை விக்கித்துப் போனாள். நடுத் தெருவில் நிற்பவள் போல் ஆனாள். அம்பைக்கு

ஏற்பட்ட இந்த ஏமாற்றம் அவளுக்குள் பெரும் கோபமாக உருவெடுத்தது.

"பீஷ்மரிடம் திரும்பிய அவள், "ஒரு பெண்ணாகிய என் பாவத்தை கொட்டிக் கொண்டு விட்ட உங்களைச் சும்மா விட மாட்டேன். நீங்கள் நினைத்தால் மட்டுமே மரணிக்கலாம் என்னும் வரம் பெற்ற உங்களுக்கு, என் னாலேயே மரணம் சம்பவிக்க வேண்டும் என்பதே இனி என் விருப்பம். அது சம்பவித்தே தீரும். அதற்காக நான் தவம் மேற்கொள்வேன்," என்று சங்கல்பம் செய்து கொண்டவள் இமயச்சாரலை அடைந்து நெடிய தவத் தைத் தொடங்கினாள்.

எப்படி தெரியுமா? கால் கட்டை விரலை ஊன்றி, ஆக்ரோஷமும் பெரும் கோபமுமாய் அவள் செய்யத் தொடங்கிய தவம் 12 ஆண்டுகள் தொடர்ந்தது. அது தேவாதி தேவர்களை எல்லாம் கலக்கியது. விண்ணில் இருந்த இந்திரன் அவளின் தவத்தைப் பார்த்து வியந் தான். தனக்கு இணையான வீரரான பீஷ்மரை அழிக்க எண்ணி அவள் தவம் செய்ததால், அவனால் வரம் தர முடியவில்லை. இறுதியில், அம்பையின் தவம் முருகப் பெருமானையே வரவழைத்து விட்டது. முருகப்பெருமா னும் அம்பை கோரிய வரமான பீஷ்மரைக்கொல்லும் ஆற்றலை நேரடியாகத் தந்து விடவில்லை. தேவலோ கத்து தாமரைப் பூக்களால் ஆன ஒரு மாலையை அவளிடம் தந்த முருகன், "இதை எவன் ஒருவன்சூடு கின்றானோ, அவனே பீஷ்மனுக்கு காலன்," என்று கூறி மாலையைத் தந்து விட்டு மறைந்தார். ஆனால், அந்த மாலைக்குரிய கழுத்து அகப்பட வேண்டுமே? அதி லும், பீஷ்மாச்சாரியாரை எதிரியாகக் கருதி அவரைக் கொல்லும் எண்ணம் கொண்ட ஒரு அரசனும் அப்

போது இல்லை. மேலும், அம்பைக்காக அவரை யாரும் பகைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை.

அம்பை அந்த மாலையுடன் பல அரசர் பெருமக்களைச் சென்று பார்த்தாள். அதைச் சூடிக் கொள்பவருக்கு 'நான் அடிமை' என்றும் சொல்லிப் பார்த்தாள். யாரும் உடன் படவில்லை. இறுதியாக, பாஞ்சால் அரசன் துருபதனை நாடி வந்தாள்.

இவன் யார் தெரியுமா? மகாபாரதத்தில் பிரதான நாயகி யான திரவுபதி எனப்படும் பாஞ்சாலியின் தந்தை. அவன் பாஞ்சால் தேசத்திற்கு அரசன் ஆனதே ஒரு ஆச்சரிய மூட்டும் செய்தி.

அவனது பிறப்பும் மிக விநோதமானது. அதை அறிந்தால் தான் துருபதன் என்னும் பெயர் காரணத்தை நாம் அறிய முடியும். இவன் பிறப்பை மட்டுமல்ல. இவனது மகளான சிகண்டினி பற்றியும் தெரிந்து கொண்டால் தான் அம் பையின் வாழ்வில் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பது நமக்கு தெரிய வரும். பாஞ்சால மன்னன் முத லில் புத்திரப்பேறு இல்லாமல் இருந்தான். அதற்காக காட்டுக்குச் சென்று தவத்தில் இறங்கினான். அரசர்கள் கடுந்தவம் புரிவது மிகவும் கடினம். அவர்களால் புலன் களை நெடுங்காலத்திற்கு அடக்கியாள முடியாது.

துருபதனுக்கும் இதே போன்ற சோதனை இந்திர லோகத்து மேனகை வடிவில் ஏற்பட்டது. அந்த வனத் தில் இருந்த அபூர்வ ஜாதி பூக்களை பறித்துச் செல்ல அவள் வந்திருந்தாள். தவச் சிந்தனைகலைந்ததுருப தன் அவளைப் பார்த்து விட்டான். அவள் மீது ஆசை

கொண்டான். அந்த ஆசையின் விளைவாக அவனை யும் அறியாமல் அவனது இந்திரியம் கீழே விழுந்தது.

தன்னை மேனகை இழிவாக கருதி விடுவாளோ என்று எண்ணி அதனைக் காலால் மறைத்து விட்டான். இவை அனைத்தும் 'துரு' என்னும் மரத்தின் கீழ் நிகழ்ந்தது. மேனகை சென்றதும், மன்னன் காலை விலக்கினான். அந்த இடத்தில் கர்ப்பத்தில் உருக்கொண்டது போல் ஒரு குழந்தை. இதை கலியுகத்தோடு ஒப்பிடக்கூடாது துவாபர யுகத்து தர்மத்திற்கேற்ப, இந்த சம்பவம் நிகழ்ந் தது. துரு மரத்தின் கீழ் கால் என்னும் பதம்பட்டு பிறந்த காரணத்தால், அந்த குழந்தை துருபதன் என்று பெயர் வந்தது. இந்த துருபதனைப் பார்க்கத் தான் அம்பை தேவலோகத்து மாலையுடன் வந்தாள்.

இதன்பிறகு, என்ன நடந்தது?

அம்பையின் நிலையைப் பார்த்து, துருபதனும் கலங்கித் தான் போனான்.

"மன்னா! பீஷ்மர் செய்த தவறால் நான் பந்து போல உதைத்து விளையாடப்படுகிறேன். பீஷ்மரும் ஏற்க வில்லை, அவர் சகோதரனும் என்னை ஏற்கவில்லை. நான் காதலித்த சால்வனும் என்னை ஏற்க மறுக்கிறான். எனக்கு வழி தெரியவில்லை. வேறுவழியின்றி தவம் செய்ய இமயம் சென்றேன். தவத்திற்கு பயனாக முருகப் பெருமான் இந்த தேவலோக தாமரைப்பூக்களாலான மாலையைத் தந்து, இதை அணிபவரால் பீஷ்மருக்கு முடிவு ஏற்படும் என்றார். இதை நீ அணிந்து கொண்டு என்னையும் விவாகம் செய்து கொண்டு எனக்கொரு வாழ்க்கையைத் தரவேண்டும்," என்று கெஞ்சினாள்.

ஆனால், அந்த கெஞ்சலுக்குப் பலனில்லை. துருபதன் பீஷ்மரின் சகலவல்லமையும் நினைத்துப் பார்த்து முடிவில், "அம்பை... உன் விருப்பத்தை என்னாலும் நிறைவேற்ற முடியாது. பீஷ்மரைப் பகைத்துக் கொண்டு அவருக்கு காலனாக நான் மாறத் தயாரில்லை. எனவே, என்னை மன்னித்து இங்கிருந்து போய்விடு..." என்று கெஞ்சினான். அம்பை அதைக் கேட்டு அழுதாள்.

இங்கே சற்று அம்பையை விட்டுவிட்டு சில சிந்தனைகளுக்கு ஆட்படுவோம். மகாபாரதக் கதையைப் பற்றிச் சிந்திக்கும்போது பாஞ்சாலியான திரவுபதியும், அவளுக்கு ஏற்பட்ட துகில் உரியும் காட்சியும் தான் அனைவரின் நினைவிலும் வரும். இந்த தேசத்தில் ஒரு பெண்ணின் மானக்கேடு என்பது மறக்கக்கூடிய ஒன்றல்ல. அதை விடப் பெரிய பாவமும் இல்லை எனலாம். பெண்களுக்கான இப்பாவத்தை பஞ்சமா பாதகங்களில் ஒன்றாக நம் சாஸ்திரம் கூறுகிறது. மனிதப் பிறப்பெடுத்து விட்டால், பாவம் செய்யாமல் வாழ்வது முற்றும் துறந்த முனிவர்களுக்கு கூட சற்றும் சாத்தியமில்லாத ஒரு விஷயமே...

நாம் நடந்து செல்கையில், நம் பாத அடிகளுக்கு கீழ் எறும்புகளும், பூச்சிகளும் இருந்து நாம் அறிந்தோ, அறியாமலோ மிதிக்கப்போய் அதற்கான காரணப்பாவம் நம் கணக்கில் ஏறி விடும். இதனாலேயே, ஆண்டாண்டு காலத்திற்கு அசைவற்று கல்பாறை போல ஒரே இடத்தில் அமர்ந்து தவத்தில் மூழ்கிப் போவதை முனிவர் பெருமக்கள் பெரிதும் விரும்பினர். மனம் மந்திரத்தை ஜெபித்த நிலையில், துளியும் செயலின்றிப் போவதால் வினை என்கின்ற ஒன்றே நிகழாமல் போய், அதனால் அறியாமல் செய்யும் பாவத்திற்கும் இடமில்லாமல் போகி

றது. இப்படி முயற்சிகள் செய்தாலும் கூட பாவத்தின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள முடியுமே தவிர, ஒருபாவமும் நான் செய்யவில்லை என்று கூற முடியாது. இவற்றைக்கூட தெரிந்து செய்த பாவம், தெரியாமல் செய்த அவர் சென்று இருவிதமாக பிரித்துப் பார்க்கப்ப டுகிறது.

இதில் தெரியாமல் செய்த பாவங்கள் பின்தொடரா மல், அவைகளுக்கு வாழுங்காலத்திலேயே பரிகாரம் காணவே, நம் முன்னோர் பல வழிமுறைகளைக் காட்டி யுள்ளனர்.

நுண்ணுயிர்களுக்கு நம்மால் ஏற்படும் பாதிப்புக்குப் பரி காரம் தான், தினமும் அரிசி மாவினால் கோலம் போடு வது என்பதாகும். பசுமாட்டைப் பேணுவது, வேம்பு, அரசு போன்ற மரங்களைப் பேணுவது, புற்றுக்குப் பால் தெளிப்பது, காக்கைக்குச் சோறிடுவது, பறவைகள் தாகம் தீர தண்ணீர் வைப்பது, மரம் நடுவது என்று தர் மகாரியங்கள் பலவற்றை அன்றாட வாழ்வில் சேர்த்துக் கட்டி விட்டனர்.

இவைகளையும் கடந்து வாக்கால், மனதால் நாம் பாவங் களைச் செய்கிறோம். இவைகளுக்கும் முன்னோர் பரி காரங்களை வைத்துள்ளனர். தினமும் கோயிலுக்குச் செல்வது, தேர் இழுப்பது, உழவாரப்பணி செய்வது, இறைநாமங்களைச் சொல்வது ஆகியவையே அந்த பரி காரங்கள். இதுதவிர, திருடுதல், பிறர் சொத்தை அபக ரித்தல்உள்ளிட்ட தடித்த பாவங்களால் வாழ்க்கை நாச மாகாமல் இருக்கவும் நம் சான்றோர்கள் வழிகாட்டி உள் ளார்கள்.

ஒரு சிலர் செய்த பாவத்தை எண்ணி வருந்திய பிறகும் அதன் பலன் தொடரத்தான் செய்கிறது. இவர்களுக்குச் சான்றோர்கள் நதிநீரைப் பிரதானப்படுத்தினார்கள். கங்கை போன்ற புண்ணிய தீர்த்தங்களில் நீராடும்போது, பாவங்கள் நீங்கி புனிதமாவது பற்றி சொல்லி இருக்கிறார்கள். காசிக்கும், கங்கைக்கும் போக முடியாதவர்களுக்குத் தான் மாமாங்கநீராடல், கும்பமேளா போன்றவையும், கோயில்களில் குளங்களும் உருவாக்கப்பட்டன. பாவம் என்பது ஒரு பெரும் சுமை. அதை எப்போதும் சுமந்தபடி இருக்க தேவையின்றி, நாம் நிம்மதியாக வாழத்தான் இத்தனை ஏற்பாடுகள்.

இதனால் பாவிகளின் எண்ணிக்கை குறைந்து, ஒருவித நிம்மதி உருவாகி அதன் காரணமாக நாட்டில் சுபிட்சமான மழைப் பொழிவு, பயிர்களின் விளைச்சல், நல்ல கலைகள் வளர்தல் போன்றவை ஏற்படுகின்றன. இது ஒரு சமன்படுத்தும் நிகழ்வு. இப்படி மனித மனத்திற்கும் அவன் செயல்பாடுகளுக்கும் ஏற்ப பருவச்சூழல்களும் மாறுவது நிகழ்கிறது. இதை விஞ்ஞானப்பூர்வமாகவும் பார்க்கமுடியும். அம்பை என்னும் ஒரு பாத்திரத்தில் ஆரம்பித்த சிந்தனை பாவபுண்ணியங்களைப் பற்றியதாக மாறி, அவைகளுக்கான பரிகாரங்களைப் பற்றி எண்ணி முடித்த நிலையில் மீண்டும் அம்பையிடம் வருவோம்.

அம்பை உண்மையில் அந்தப் பிறப்பில் ஒரு பாவமும் செய்யவில்லை. அவளைக் கவர்ந்து சென்ற பீஷ்மரால் தான் அவளுக்கு அடுக்கடுக்காய் துன்பங்கள். தவம் செய்து முருகப் பெருமானிடம் வரசித்தியாக, ஒரு மாலையைப் பெற்ற பிறகும் கூட, அவளுக்கு விமோசனம் ஏற்படாமல் போனது தான் விந்தை. அம்பை இதன்

பின் என்னவாகிறாள் என்பது ஒருபுறம். ஆனால் அவள் இப்படி ஆகிட காரணமான பீஷ்மர் இந்த பாவத்தை தெரிந்து செய்யவில்லை.

தெரிந்து செய்தாலும், தெரியாது செய்தாலும் சில பாவங்கள் அதற்கான தண்டனையை அளித்திட தவறுவதே இல்லை. இம்மட்டில் பீஷ்மரும், துருபதனும் அம்பையை புறக்கணித்ததன் பயன் தான் பாஞ்சாலி துகில் உரியப்பட ஒரு காரணமானது.

பெண்பாவம் என்பது அத்தனை சக்தி மிக்கது. அது மாமாங்க நீராடல்களாலும் நீங்காதது என்பதற்கு அம்பையே ஒரு சான்று. அம்பையை துருபதன்கைவிடவும், அவள் ஒரு காரியம் செய்தாள். இனி எவரிடமும் போய் கெஞ்சிக் கொண்டிராமல் மீண்டும் தவத்தில் மூழ்கி அப்படியே இறந்துவிடுவது எனத் தீர்மானித்தாள். முருகப்பெருமான் அளித்த அந்த தேவலோகத்து மலர் மாலையை துருபதன் அரண்மனை வாயில்கதவில் சூட்டினாள். அதை எடுத்து அணிபவர் மூலம் பீஷ்மருக்கு காலகதி உருவாகட்டும் என்று எண்ணியவளாகப் புறப்பட்டாள்.

இதை அறிந்த துருபதன், அவளிடம் வந்து, "தயவு செய்து இந்த மாலையை எடுத்துக் கொண்டு ஆளை விடு" என்று கெஞ்சிப் பார்த்தான்.

அம்பை காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் நடந்தாள். பார்த்தான் துருபதன். அந்த மாலையை சாத்தப்பட்ட கதவுக்கு காவல் போட்டான். தப்பித் தவறியும் அந்த மாலையை யாரும் தொட்டுவிடவோ, அணிந்து கொண்டு விடவோ கூடாது என்று உத்தரவும் போட்

டான். ஆனால், எப்போதும் விதி என்பது மதி நடந்து வரும்போது, பறந்து வரும் ஒன்றாயிற்றே! இங்கேயும் அந்த விதி வேலை செய்தது. துருபதனுக்கு சிகண்டினி என்ற பெண் இருந்தாள்.

பருவ வயதை எட்டும் நிலையில், விளையாட்டாக ஒரு நாள் அந்த மாலையை எடுத்து அணிந்து கொண்டு விட்டாள். காவலர்களை எல்லாம் மீறி, இந்த விஷயம் நடந்து விட்டது. மகளின் செயலை அறிந்த துருபதன் பதைத்துப் போனான். இதை பீஷ்மர் அறிந்தால், தனக்கும் சரி... சிகண்டினிக்கும் சரி... நல்லதல்ல என்று பயந்தவன் சிகண்டினியை விலக்கி வைக்கத் தயாராகி விட்டான்.

'இங்கே இருக்காதே... எங்காவது சென்று விடு' என்று துருபதன்கூறவும், சிகண்டினியும்தவக்கோலம் பூண்டாள். கங்கை நதிக்கரையோரமாக தவப்பணியாற்றி வந்து, 'இஷ்க' என்னும் முனிவரது ஆஸ்ரமத்தை அடைந்தாள். அவரும் சிகண்டினி யாரென்பதைப் புரிந்து கொண்டார்.

அம்பையிடம் ஆரம்பித்த பிழைசிகண்டினியைத் தொடர்வதை உணர்ந்தார். சிகண்டினியும் அவருக்கு சிறப்பான தொண்டு செய்தாள். இருப்பினும், அவளை அங்கேயே வைத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. அந்த சமயத்தில், கங்கை தொடங்கும் இமயத்து அடிவாரத்தில் கந்தர்வ புருஷர்கள் வந்து ஆராதிக்கும், 'விபஜனம்' என்னும் விழா தொடங்கியது. அதில் தும்புரு என்னும் கந்தர்வ ராஜனுக்கு பணி செய்ய சிகண்டினியை அனுப்பினார் இஷிகர்.

"இந்தகந்தர்வ ராஜனால் நீ மீண்டும் உன் தந்தையை அடையும் வாய்ப்பு ஏற்படும்," என்றும் அவர் சொன்னார். அப்படித்தான் இறுதியில் ஆனது. அங்கு வந்த கந்தர் வர்களில் ஒருவன் தன் ஆண் உருவை மாற்றி பெண் உருக் கொள்ள விரும்பினான். சிகண்டினியும் தான் பெண்ணாக இருப்பதற்குப் பதிலாக ஆணாக இருந் தால் வாழ்வை எதிர்த்துப் போராட பெரிதும் உதவியாக இருக்கும் என்று கருதினாள்.

எனவே, தன் உருவத்தை அந்த கந்தர்வனுக்குத் தர தயாரானாள். இத்தகைய மாற்றங்கள் கந்தர்வர்களுக்கு கைவந்த கலை. அவர்களின் ஒப்பந்தப்படி இருவ ரும் உருமாறிக் கொண்டனர். அழகிய கந்தர்வனின்வ டிவை அடைந்த சிகண்டினி ஆணாக மாறி, 'சிகண்டி' ஆனான்(ள்). இந்த சிகண்டி என்ன செய்யப் போகிறான்?

துருபதனின் மகளான சிகண்டினி இப்போது சிகண்டி! இந்த சிகண்டி அழகிய கந்தர்வன் வடிவில் அடுத்து நேராகச் சென்றது புத்தகம் எனும் இடத்திற்கு தான்...! தன் தோற்றத்தை அளித்த கந்தர்வனே, அந்த இடத் திற்கு செல்ல அவனுக்கு வழி காட்டினான். புத்தகம் வீரர்களை உருவாக்கும் இடம். குறிப்பாக எல்லாவித அஸ்திரங்களையும் பிரயோகிக்க கற்றுத் தரும் ஒரு இட மாகும். அந்த பயிற்சிகளைப் பெற்ற சிகண்டி, வெகு சிக் கிரத்தில் பெரும் வீரனாகி விட்டான்.

பெரும் வீரனாக மாறி கந்தர்வனுக்கான எழிலோடு ஒரு ஆண் வாரிசாக அவன் துருபத மன்னனை வந்து சந் தித்த போது துருபதனுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு ஒரு அளவே இல்லை. இருந்தாலும் இப்போதும் பீஷ்

மரை எண்ணி துருபதன் மனம் அச்சப்படவே செய்தது. ஆனால் அந்த அச்சத்தை சிகண்டி போக்கினான்.

"தந்தையே... கவலையை விடுங்கள். விதிப்பாடு என்னை ஆளாக்கிவிட்டது. அந்த மாலையை நான் விளையாட்டாக அணிந்த வேளை இன்று நானொரு மாவீரன். என் வீரத்துக்கு எந்த நாளிலும் இழுக்கு ஏற்ப டப் போவதில்லை. தைரியமாக இருங்கள்," என்று ஆறு தல் கூறினான்.

மகாபாரதத்தின் பெரும் வியப்பிற்கும் சிந்தனைக் கும் உரிய பாத்திரமே சிகண்டினியாக இருந்து பின் மாறிய சிகண்டி! (காபாரத பாத்திரங்களில் சிகண்டியை போலவே பழிவாங்க வென்றே உருவான பாத்திரம்தான் திருஷ்டத்துய்மன் பீஷ்மரால் சிகண்டி வந்தது போல், துரோணரால் வந்தவன் இவன். அதாவது வில்வித்தை யில் தலை சிறந்த அர்ஜுனன், ஏகலைவன் போன்ற பெரும் வில்லாளிகளின் குருநாதரான துரோணரை பழி வாங்கவென்றே வேள்வி ஒன்றால் பெறப்பட்டவன். இவன் யாரோ அல்ல! பாஞ்சாலி எனப்படும் சரவுபதி யின் சகோதரன். இவன் எப்படி வந்தான் என்று பார்ப் போம்.

துரோணரும், பாஞ்சால் அரசன் துருபதனும் நல்ல நண்பர்கள். ஒன்றாக படித்தவர்கள். அப்போது துரும தன் துரோணரிடம், "துரோணா! நாளையே நான் பாஞ் சால நாட்டுக்கு அரசனானாலும், உன்னுடனான நட்பை துளியும் பிரிய மாட்டேன். அதுமட்டுமல்ல! என்னுடை யது அனைத்தும் உனக்கும் சொந்தம். நான் எதை அனு பவித்தாலும் அதில் சரிபாதி பங்கு உனக்கும் உண்டு. அந்த வகையில், எனது பாஞ்சால நாட்டை நான் ஆளத்

தொடங்கும் போது உனக்கும் அதில் பாதியை அளித்து உன்னை அதற்கு அரசனாக்குவேன்," என்று சத்தியம் செய்து கொடுத்திருந்தான்.

துரோணரும் அவனது நட்பின் சிறப்பை எண்ணி சந் தோஷப் பட்டார். நாட்கள் கடந்தது. துருபதனும் பாஞ் சால நாட்டு மன்னன் ஆனான். அப்போது துரோணர் வறுமையின் பிடியில் இருந்தார். அவருக்கு அஸ்வத்தா மன் என்று ஒரு பிள்ளையும் பிறந்து அவனும் பெரும் வீரனாக வளர்ந்திருந்தான். இந்த நிலையில் தனக்காக இல்லாவிட்டாலும் தன் மகனுக்காக பாஞ்சால் நாட்டில் பங்கு கேட்டு, துருபதன் முன் சென்று நின்றார்.

ஆனால் துருபதன் மிக மாறிவிட்டிருந்தான். அரச (போகமும் யோகமும் அவன் கண்களைக் கட்டியிருந் தன. துரோணர் வரவும் முதலில் யார் என்றே தெரியா தவன் போல் நடந்து கொண்டான். பின் துரோணரை தெரிந்து கொண்டவன், "அடடே, குருகுலத்து நண் பனா? வேதம் படிக்க வேண்டிய நீ இங்கே எங்கே வந் தாய்?" என்று கிண்டலாகக் கேட்டான். துரோணருக்கு அப்போதே துருபதன் பழைய நண்பன் இல்லை என்பது புரிந்து விட்டது. இருந்தும் அவன் குருகுலத்தில் செய்து தந்த சத்தியத்தை நினைவுபடுத்தினார். அது நினை வுக்கு வரவும் துருபதனுக்கு சிரிப்புதான் வந்தது.

"துரோணா! உன்னை நினைத்தால் எனக்கு பரிதாபமாக உள்ளது. பள்ளிப் பிராயத்தில் ஏதோ விளையாட்டாக சொன்னதை இவ்வளவு உறுதியாகவா எடுத்துக் கொள் வது? பாஞ்சால தேசம் என்ன வெட்டித்துண்டு போட் டுத்தர அது என்ன பட்டுத்துணியா? தேசமப்பா... தேசம்! இந்த தேசத்தை ஒரு க்ஷத்திரியனான நான் ஆளவே

பெரும் பாடுபட வேண்டியிருக்கிறது. நீயோ வேதியன். பரத்வாஜ் முனிவரின் புத்திரன். தவம்புரிவதை விட்டு விட்டு நாடாள ஆசைப்படுகிறாயே...! வேடிக்கையப்பா பெரும் வேடிக்கை..." என்று இழுக்காக பேசி சிரித்தான்.

துரோணருக்கு கூச்சம் எடுத்தது.

இருந்தும், "துருபதா... உன் சத்தியத்தை நம்பி நான் மோசம் போய் விட்டேன். சத்தியத்தை மதிக்காத பாவத் துக்கு ஆளாகாதே. வாக்கில் நில். - உன்னைவிட என் னால் இந்த தேசத்தை நன்றாக ஆளமுடியும்," என்றார்.

ஆனால் துருபதன் கேட்கவில்லை. மாறாக மேலும் அவரை இழிவுபடுத்தி "வேண்டுமானால் உனக்கு பொற் காசுகளை பிச்சையிடுகிறேன். பொறுக்கிக் கொள்," என்று கைநிறைய காசுகளை அள்ளி துரோணர் முன் வீசி எறிந்தான்.

எப்போதும் நாம் தாழ்வாக இருக்கும் பொழுதைக் காட் டிலும், உயர்வாக இருக்கும் பொழுதுதான் மிகவே கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நம் செயல்களாலேயே நாம் மோசமான வினையை தேடிக் கொள்ள நேரிடும். துரோணர் வரையில் துருபதன் நடந்து கொண்ட விதம் துரோணரை கோபத்தின் உச் சிக்கே கொண்டு சென்றது.

'துருபதா! உன்னை நான் சும்மாவிடமாட்டேன். வேதி யன் என்றான் என்னை இகழ்ந்தாய்...? வேதமும் கல்வி யும் எப்படி இரு கண்களோ அப்படித்தான் எல்லாமே! நீ தர மறுத்த நாட்டை மட்டுமல்ல! உன்னையே நான் என் அடிமையாக்கிக் காட்டுகிறேன். அப்போது தெரியும்

இந்த துரோணாச்சாரி எப்படிப்பட்டவன் என்று..." என சபதம் போட்டுவிட்டு சென்று விட்டார்.

அடுத்து அவர் ஒரு வனத்தில் சந்தித்தது பாண்டவர்களையும் கவுரவர்களையும் தான்! இருசாரரும் ஒரு இடத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது தர்மரின் மோதிரம் அங்குள்ள கிணற்றில் விழுந்து விட்டது. அதை எப்படி எடுப்பது என்பது தெரியாமல் அவர்கள் விழித்து நின்றபோது, துரோணர் அந்த பக்கமாய் வந்தார். மோதிரம் விழுந்து விட்டதை அறிந்தவர், அர்ஜுனன் வசமிருந்த வில்லையும் அம்பையும் செலுத்தினார். அம்பின் நுனி மோதிரத்தை தன்னுள் பூட்டிக் கொண்டு துரோணர் முன் வந்து விழுந்தது.

அதைக் கண்டு தர்மர் முதல் அவ்வளவு பேரும் ஆனந்தப் பட, அர்ஜுனன் துரோணரை அப்போதே தன் குருவாக வரித்துக் கொண்டான். பின், பீஷ்மரிடம் துரோணரை கொண்டு சென்று நிறுத்த அவர் இருசாரருக்கும் குருவாக துரோணரை நியமித்தார். துரோணரும் தான் அறிந்த அனைத்தையும் அவர்களுக்கு கற்றுத்தந்தார். ஒருநாள் அனைவருக்கும் அரங்கேற்றம் நிகழ்த்தப்பட்டது. அர்ஜுனன் ஒருபுறமும், துரியோதனன் மறுபுறமும் துரோணரிடம் "தங்களது குருகாணிக்கை என்ன?" என்று கேட்டனர்.

துரோணரும், "நான் கேட்பதை நீங்கள் கட்டாயம் தருவீர்களா?" என்று பலத்த பீடிகை போட்டார். அர்ஜுனன் வேகமாக முன் வந்து, "குருவே! நான் என் உயிரைக் கூட தர சித்தமாக இருக்கிறேன்," என்றான்.

அதைக் கேட்டதுரியோதனனும், "குருநாதா... நானும் ஒன்றும் அர்ஜுனனுக்கு சளைத்தவனில்லை. எது வேண்டுமானாலும் கேளுங்கள் தங்கள் காலடியில் அதை வைக்கிறேன்," என்றான்.

அப்போது துரோணர் இருவரிடமும் கேட்டது ஒன்றைத் தான். அதுதான் துருபதனை ஒரு கைதியாக தன் கால டியில் கிடத்துவது என்பதாகும். ஒரு வினாடி இருவருமே அதிர்ந்தாலும், குருநாதரின் விருப்பத்தை நிறைவேற் றத் தயாராயினர். முதலில் துரியோதனன் துருபதன் மீது போர் தொடுத்தான். ஆனால், அதில் துருபதன் தான் வெற்றி பெற்றான். அடுத்து அர்ஜுனன் போர் தொடுத் தான்.

அவனுக்கு தர்மர், பீமன், நகுலன், சகாதேவன் என்று சகலரும் பெரிதும் உறுதுணைபோரில் அர்ஜுனன் வெற்றி பெற்றான். துருபதனைக் கைது செய்து தன் ரதத்திலேயே தூக்கிப் போட்டு இழுத்து வந்து துரோ ணரின் காலடி நோக்கிதள்ளிவிட்டான். பின், "குருநாதா! இப்போது உங்கள் காலடியில் கிடப்பது துருபதன் மட்டு மல்ல. இவனது பாஞ்சால தேசமும் தான்... நீங்கள் ஒரு பாதியைதான் கேட்டீர்கள். ஆனால், முழு தேசத்தையே நான் இப்போது உங்களுக்கு அர்ப்பணித்து விட்டேன்," என்றான் துருபதனுக்கும் தன் தவறு புரிந்தது. இருந்த போதிலும் பாண்டவர்களிடம் பிடிபட நேர்ந்து இப்படி காலில் விழுமளவு வந்தது மனதை ரணப்படுத்தி விட் டது. துரோணருக்கும் மனம் கசிந்தது.

'துருபதா... என் பால் உனக்கு நட்பில்லாமல் போனா லும், என்னிடம் அது இப்போதும் உள்ளது. நீ செய்யத் தவறியதை நான் இப்போது செய்கிறேன். நீ தராத பாதி

நாட்டை நான் உனக்கு தருகிறேன். பெற்றுக் கொள். இனியாவது அகந்தை கொள்ளாமல் தர்ம நெறிகளோடு வாழக் கற்றுக் கொள்," என்று துருபதனுக்கு பாஞ்சால் நாட்டின் வட பகுதியை தந்து அதற்கு அரசனாகவும் ஆக்கினார்.

தன் நாடு தனக்கே தானமாக வந்து சேர்ந்தது துருப தனை கொந்தளிக்க வைத்தது. அது பெரும் கோபமாக மாறியது. அந்த கோபம் துரோணர் மேல்தான் திரும்பி யது. துரோணரை வெற்றி கொண்டு பழிக்கு பழிவாங்க துருபதன் மனது துடித்தது.

துரோணரிடம் இருப்பதோ பிரம்ம தேஜோபலம்! தன் னிடம் இருப்பதோ க்ஷத்திரியபலம். க்ஷத்திரிய பலத் துக்கு, பிரம்ம தேஜோபலம் துளியும் ஈடாகாது என்பது துருபதனுக்கு புரிந்தது. இவ்வேளையில் தான் யாஜர், உபயாஜர் என்று இரண்டு பிரம்மரிஷிகளை துருபதன் பார்த்தான். அவர்களிடம் தன் ஆதங்கத்தைச் சொல்லி, பிரம்ம தேஜோபலத்தை வெல்லும் சக்தியை நான் பெற வழிகாட்டுங்கள்," என்று கேட்டான். அவர்கள் சவுத்ரா மணி எனும் யாகம் செய்யச் சொன்னார்கள்.

"அப்படி ஒரு யாகத்தை உரிய முறையில் செய்தால் யாக பலனாய் மிகுந்த அழகும் அறிவும் வீரமும் உடைய புத்தி ரன் மட்டுமல்ல, புத்திரியும் தோன்றுவது நிச்சயம்," என் றார் யாஜர். யாகமும் முறைப்படி நிகழ்த்தப்பட்டது. இந்த யாகத்தில் ஆகுதியை தேவர்களுக்கு அரசனும் அரசியும் சேர்ந்தே தரவேண்டும். ஆனால் துருபதனின் மனைவி யான ப்ருஷ்தி, தான் இருக்கவேண்டிய இடத்தில் யாஜ ரையே தன்சார்பில் இருந்து யாகம்புரியச் சொன்னாள். துருபதனும் யாஜரும் ஒன்றுபட்டு ஆகுதியை வழங்கவும்.

அந்த யாக நெருப்பில் இருந்து ஒரு அழகிய வீரன் வெளிப் பட்டான். அவன் வெளிப்பட்ட நொடியில் அசரீரி ஒலித்தது.

'இவனே துரோணருக்கு எமன். அவருக்கு நண்பனாக வும் திகழ்வான். இவனால் பாஞ்சால தேசம் நற்பெயர் பெறும்," என்றது அந்த வாக்கு. இவனே திருஷ்டத்துய் மன் 'ஜெயிக்க முடியாதவன்' என்பது இதன் பொருள். திருஷ்டத்துய்மனைத் தொடர்ந்து அந்த யாகத்தில் அழகிய பெண்ணொருத்தியும் தோன்றினாள்! அவளே திரவுபதி.

துருபதன் துரோணரை அழிக்கும் எண்ணத்தில் யாஜர், உபயாஜர் எனும் இரு பிராமணர்கள் தலைமையில் அவர்களுக்கு பத்து கோடி பசுக்களை, தானமாக கொடுத்து செய்தது தான் சவுந்தரா மணி என்னும் யாகம் இந்த யாகத்தீயில் இருந்து வெளிப்பட்டவன்தான் த்ருஷ்டத்யும்னன்

'த்ருஷ்ட' என்றால் 'அதிக கோபமும் கர்வமும் உடைய வன்'.

'த்யும்னன்' என்றால் 'கிரீடகுண்டலங்களோடு பிறந்த வன்'.

இரண்டும் இணைந்து 'த்ருஷ்டத்யும்னன்' என்றும் 'திருஷ்டத் துய்மன்' என்றும் சற்று மருவி அழைக்கப் பட்டான். இதே யாகத்தில் இவனைத் தொடர்ந்து பிறந் தவளே திரவுபதி! இவள் பிறந்த உடனேயே அசரீரி இவளை 'கிருஷ்ணை ' என்றது. "கிருஷ்ணை ' என்றால் 'கரியநிறம் கொண்டவள்' என்று பொருள்.

கிருஷ்ணன் என்றாலும் கரிய நிறத்தவன் என்பதே பொருள்! திருஷ்டத்துய்மன் தன் விதியை முடிப்பதற் காக பிறந்து விட்டது தெரிந்தும் துரோணர் அதை எண்ணிகலங்கவில்லை. அனைத்தும் விதிப்படி நடக் கும் என்று அவர் அறிந்திருந்தமையால், திருஷ்டத்துய் மனுக்கு அவரே குருவாக இருந்து தானறிந்த வித் தைகளை கற்றுத் தரவும் தயாரானார். கிருஷ்ணையான திரவுபதி பேரெழிலோடு விளங்கினாள். இவள் பிறந்த நொடி கிருஷ்ணை பிறந்து விட்டாள் என்று மட்டும் அச ரீரி கூறவில்லை.

அர்ஜுனனை மணக்கத் தகுந்தவள் பிறந்துவிட்டாள் என்றும் அதே அசரீரி கூறிற்று. எப்படியோ துருபதன் ஒரு கல்லில் இருமாங்காய் போல, துரோணர் மேல் ஏற்பட்ட வெறுப்பால் திருஷ்டத்துய்மன், திரவுபதி என்று இருமக் களை பெற்று விட்டான். துருபதனை துரோணருக்காக போரில் வென்றவன் அர்ஜுனனே... அப்படிப்பட்ட அர் ஜுனனை திரவுபதி மூலம் துருபதன் வெல்லப் போகி றான்.

இங்கே இவர்கள் இருவரும் பிறந்த வேளை, அஸ்தினா புரத்தில் பாண்டவர்களின் ஆட்சி மிகுந்த கீர்த்தியோடு நடந்தபடி இருந்ததால், துரியோதனன் மிகவும் வருத்தப் பட்டான். பாண்டவர்களின் வெற்றியை, புகழை துரியோ தனனால் ஜீரணிக்க முடியவில்லை. அவர்களை அழிக் கவும் அவனால் முடியவில்லை.

அப்போது 'வாரணவதம்' எனும் ஒரு நிகழ்வு பெரும் வனப்பரப்புக்குள் நடைபெற இருந்தது. இந்த நிகழ்வில் சிவபூஜை மிக பிரசித்தம். இது பெரிய திருவிழாபோல கொண்டாடப்படும். இதில் தேவர்களுடன் கின்னர், கிம்

புருட, நாக, யவ்வனர் என எல்லாரும் கலந்து கொள்வர். இந்த நிகழ்வு நடக்கும் வாரணவத் நகரத்துக்கு சென்று அந்த திருவிழாவில் பங்குகொள்வது பெரும் விசேஷம் என்று தர்மருக்கு சொல்லப்பட்டது. தர்மர் அங்கு செல்ல விரும்பினாலும், ராஜ்ய நிர்வாகப் பணிகளை எண்ணி எப்படி செல்வது என யோசித்தார்.

இது எப்படியோ துரியோதனனுக்கு தெரிய வர, அவன் தன் தந்தை திருதராஷ்டிரன் மூலம் தர்மரையும், அவ ரோடு கூட அர்ஜுனன், பீமன், நகுலன், சகாதேவன், குந்திதேவி என்று ஆறுபேரையும் வாரணவத நகருக்கு அனுப்புகிறான். துரியோதனனின் சூது தெரிந்தும், திரு தராஷ்டிரன் மிகுந்த சிரமத்தோடு அவர்களை வாரண வத நகரம் அனுப்புகிறான். அந்த நகருக்கு சென்று வர ஆறுமாத காலம் ஆகும். அது வரை, தான் ராஜ் யத்தை பார்த்துக் கொள்வதாக கூறுகிறான். பாண்டவர் கள் வாரணவத நகருக்கு கிளம்ப சம்மதம் தெரிவித்த மாத்திரத்தில் துரியோதனன் தன் நண்பனும் மந்திரியும், வலது கை, இடது கை என்று எல்லாமுமான புரோசனன் என்பவனை அழைத்து வாரணவத நகரில் ஒரு அரக்கு மாளிகை கட்டச் சொல்கிறான்.

அதில் அவர்கள் தங்கியிருக்கும்போது தீவிபத்து ஏற்ப டும்படி செய்து அந்த அரக்கு மாளிகை உருகி எரியும் போது பாண்டவர்களும் அழிந்து விடவேண்டும் என்பது துரியோதனன் திட்டம். புரோசனன் இந்த அரக்கு மாளி கையை மிகத் திட்டமிட்டு கட்டுகிறான். அதே சமயம் துரியோதனனின் சதியை பாண்டவர்கள், கவுரவர்கள் இருவருக்கும் சிற்றப்பனாக விளங்கும் விதுரர் தெரிந்து கொள்கிறார். அவர் பாண்டவர்களை காப்பாற்ற, தன்

சார்பில் கனகன் என்பவனை அதே வாரணவத நக ருக்கு அனுப்புகிறார்.

கனகன், புரோசனன் கட்டிய அரக்குமாளிகைக்குள் புரோசனன் அறியாதபடி பூமியைக் குடைந்து கொண்டு வெளியேறத் தோதாக சுரங்கப் பாதையை உருவாக் குகிறான். பின் வாரணவத நகரம் வரும் பாண்ட வர்கள் அரக்கு மாளிகையில் தீக்கிரையாக நேரிடும் போது அந்த சுரங்கம் வழியாக அவர்களை தப்புவிக் கச் செய்பவன் கனகன் தான். கனகன் இல்லாவிட்டால், பாண்டவர்களோ, பின் மகாபாரதமோ உருவாகியிருக்க வாய்ப்பே இல்லை!

ஆனால், பாண்டவர்கள் தப்பித்த விஷயம் துரியோதன னுக்கு முதலில் தெரியாது. அவன் அரக்கு மாளிகையில் பாண்டவர்கள் எரிந்து சாம்பலாகி விட்டதாகக் கருதி, அவர்களுக்குரிய பித்ருகர்மங்களை கூட செய்யத் தயா ராகி விடுகிறான். பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் இறந்து விட்டார்கள் என்னும் பொய்யான தகவல் துரு பதனையும் எட்டுகிறது. அவன் மிகவே வருந்துகிறான். தன் மகள் திரவுபதியால் அர்ஜுனனை இனி மாலையிட முடியாதே? தன்னை போரில் வென்ற அர்ஜுனனை மரு மகனாக்கி அடிபணியச் செய்ய எண்ணியது வீண்போய் விட்டதே என்றும் கலங்குகிறான்.

அப்போது துருபதனின் அரண்மனை புரோகிதர், "யா கத்தின் போது வந்த அசரீரி வாக்கு பொய்யாகாது. அர் ஜுனனை மட்டுமல்ல, பாண்டவர்களை அழிக்க யாரா லும் முடியாது. அவர்கள் தீயில் அழிந்திருக்க மாட்டார் கள், தப்பியிருப்பார்கள். இது நிச்சயம்," என்கிறார்.

துருபதனும் புரோகிதர் வாக்கை நம்புகிறான். பாண்ட வர்களும் சுரங்க வழியே தப்பி வாரணவத நகரைவிட்டு விலகி பெரும் வனாந்திரம் ஒன்றுக்குள் பிரவேசிக்கின் றனர். அசாத்தியமான வனம் அது! அதில் பீமன், தாயான குந்திதேவியை தோளில் சுமந்தபடி நடக்க மற்றவர்கள் பின் தொடர்கின்றனர். எப்படியோ பஞ்ச பாண்டவர்கள் தப்பி விட்டனர்.

தப்பிட மூலகாரணம் விதுரரும் அவரால் அனுப்பப்பட்ட கனகனும் தான்! இவ்வேளையில் விதுரர் குறித்து சற்று அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். சந்திர குலத் தின் வம்ச விருட்சங்களாய் பிறந்த பாண்டு, திருதராஷ் டிரன், விதுரன் ஆகிய மூவரில், விதுரர் வியாச மகரி ஷிக்கும் அரண்மனை வேலைக் காரிக்கும் பிறந்தவர் ஆவார். வியாசருக்கும் அம்பிகைக்கும் பிறந்தவர் திரு தராஷ்டிரர். வியாசருக்கும் அம்பாலிகைக்கும் பிறந்தவர் பாண்டு. இம்மூவரையும் வியாசர் சந்திர குலம் விளங் கவே பெற்றுத்தந்தார். இவர்கள் பிறப்பின் பின்னே நிறைய சூட்சுமங்கள் உள்ளன. முன்னதாக, பீஷ்மர் தன் சகோதரனான விசித்த வீரியனுக்காக அம்பிகை, அம் பாலிகை, அம்பை எனும் மூவரையும் காசி அரசனிடம் இருந்து கவர்ந்து சென்றதை அறிந்தோம்.

அதில் அம்பை விசித்ரவீரியனை மணக்க முடியாமல் தான் காதலித்த சால்வனையும் மணக்க முடியாமல், கவர்ந்து சென்ற - பீஷ்மராலும் மணக்க முடியாமல் நடுத்தெருவில் நின்று புலம்பி பின் தவமியற்றி, முருகப் பெருமானிடம் தாமரை மாலை பெற்று அதை துருப தன் அரண்மனை வாயிற் கதவில் மாட்டிவிட்டுச் சென்று விடவும் அந்த மாலையை எடுத்து அணிந்து கொண்ட துருபதன் மகளான சிகண்டினி, பின் சிகண்டியாக மாறி

யதையும் அறிந்தோம். பீஷ்மரின் செயலால் அம்பையின் தவம் சிகண்டினியில் முடிந்து நின்றது.

அதேசமயம் யாருக்காக இதை எல்லாம் பீஷ்மர் செய்தாரோ, அந்த விசித்திரவீரியன் அம்பிகை, அம்பாலிகையை மணந்தும் புண்ணியமில்லை. அவன் இறந்து விடவே, சந்திரவம்சம் வாரிசு இல்லாது போய் கேள்விக்குறியாக நின்றது. இவ்வேளையில் தான் சந்திரவம்சராணியும், விசித்திர வீரியன் மற்றும் பீஷ்மரின் தாயுமான சத்யவதி சாஸ்திரம் அனுமதித்த மாற்றுவழியில் சென்று வாரிசுகளை பெற்றுக்கொள்ள தயாரானாள். அதன்படி துளியும் லவுகீக நோக்கம் இல்லாதமுனிவர்கள் விருப்பம் தெரிவித்தால் அவர்கள் மூலம் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதை சாஸ்திரம் அனுமதிக்கிறது.

எனவே, சத்யவதி, சந்தனு மகாராஜாவை மணக்கும் முன் பராசர மகரிஷியுடன் கூடிப் பெற்ற தன்மகனான வியாசரையே அம்பிகை, அம்பாலிகைக்கு சந்ததி விருத்தி செய்ய தீர்மானம் செய்கிறாள். பீஷ்மரும் இதற்கு சம்மதிக்கிறார். முதலில் இதற்கு மறுக்கும் வியாசர், தாயின் விருப்பம் மற்றும் சந்திரகுலம் விளங்கிட இறுதியில் சம்மதிக்கிறார். அதன் அடிப்படையில் வியாசரோடு அம்பிகை, அம்பாலிகை கூடுகின்றனர். வியாசர் பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பான வராக இருப்பார்.

இதனால் இவரைக் காணும் அம்பிகை அவரைக் கூடும் நேரத்தில், தன் கண்களை இறுக மூடிக் கொள்கிறாள். இதனால்தான் இவளுக்கு இருகண்களும் தெரியாத திருதராஷ்டிரன் பிறக்கிறான். அம்பாலிகை வியாசருடைய தோற்றம் கண்டு அச்சம் கொண்டு பயத்தில்

வெளுக்கிறாள். இதனால் இவளுக்கு உடல் வெளுத்த பாண்டு பிறக்கிறான்.

இப்படி இருவரும் இருவித ஊனங்களுடன் பிறந்து விட்ட நிலையில் ஊனமில்லாத பிள்ளை பெற சத்ய வதி வேண்டுகிறாள். எனவே, அதற்காக அவள் அம் பிகையை திரும்ப வியாசரிடம் சேரத் தூண்டுகிறாள். ஆனால் அம்பிகை தன் அரண்மனை வேலைக்காரியை தன்னைப்போல் அலங்கரித்து அனுப்பி அவளை வியா சரோடு கூடச் செய்கிறாள்.

இந்த வேலைக்காரி வியாசரைப் பணிந்து அவர் தோற் றம் கண்டு வெறுப்படையாமல் ஒரு தாசியைப் போல இணக்கமாய் நடந்து கொள்ள வியாசரும் அவளுடன் பெரும் மகிழ்வுடன் கூடுகிறார். அப்படி வேலைக்காரி யுடன் மகிழ்வுடன் கூடிப் பெற்ற பிள்ளைதான் விதுரர் உண்மையில் இந்த விதுரர் யாரோ அல்ல! தர்மங்களை காத்திடும் பொறுப்புள்ள தர்ம தேவதை தான் விதுரராக பிறந்தது.

தர்மதேவதை இப்படி விதுரராக பிறந்ததன் பின்னே ஒரு சம்பவம் உள்ளது. அது தெரிந்தால் தான், விதுர ரின் பிறப்புக்கான காரணம் நமக்குத் தெரியவரும். அந்த காரணம் தெரிய வேண்டும் என்றால் நாம் ஆணி மாண் டவ்யர் எனும் பாத்திரம் பற்றி அறிந்து கொள்ள வேண் டும். அவர் யார் என்று பார்ப்போமா?

மாண்டவ்யரின் நிஜப்பெயர் மாண்டவ்யர்தான். இல்வாழ் வில் ஈடுபாடு கொள்ளாமல் தீர்த்த யாத்திரை செய்து தவம் செய்வதை தன் நோக்கமாக கொள்கிறார். அதன் பொருட்டு ஒரு ஆற்றோரம் ஆஸ்ரமம் அமைத்துக்

கொண்டு அந்த ஆஸ்ரமத்தில் அமர்ந்து மவுனத் தவம் செய்யத் தொடங்குகிறார். பொதுவில் இது போன்ற தவத்தில் ஈடுபடுபவர்கள் புயல், மழை, காற்று என்று எதற்கும் அஞ்சமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் மேல் தான் பாம்புப் புற்றுகள் எழும்பி மூடி மறைத்துக் கொள் ளும்.

தவமானது பல ஆண்டுகள் கூட கலையாது நீடிக்கும். அப்படி ஒரு தவத்தில் மாண்டவ்யர் ஈடுபட்ட போதுதான் அவர் வாழ்விலும் விதி விளையாடத்தொடங்குகிறது. அவரது ஆஸ்ரமம் அமைந்திருந்த இடத்திற்கு அருகி லுள்ள நாட்டில் திருடர்கள் சிலர் களவில் ஈடுபடுகின்ற னர்.

அவர்கள் அரசனின் அரண்மனையிலேயே களவில் ஈடு பட்டு நகைகளை திருடிக் கொண்டு செல்ல முனை யும் போது அரண்மனை வீரர்கள் பார்த்து விடுகின்றனர். திருடர்கள் தப்பி ஓட அவர்களை அரண்மனை வீரர்கள் துரத்துகின்றனர். அப்படி ஓடிவந்த திருடர்கள் மாண்டவ் யரின் ஆஸ்ரமத்துக்குள் புகுந்து ஒளிந்து கொள்கின்ற னர்.

வீரர்கள் மாண்டவ்யரிடம், "இந்த பக்கமாய் கள்ளர் கள் வந்ததைப் பார்த்தீர்களா? அவர்கள் எந்தப் பக்கம் சென்றனர்?" என்று கேள்வி எழுப்ப மாண்டவ்யர் பதிலே தும் சொல்லாமல், மூடிய கண்ணைத் திறக்காமல் தவத் தைத் தொடர்கிறார்.

வீரர்கள் ஆஸ்ரமத்துக்குள் புகுந்து பார்க்க திருடர்கள் ஒளிந்திருப்பது தெரியவருகிறது. மாண்டவ்யருக்கும் கள்வர்களுக்கும் தொடர்பு இருக்கிறது. அதனால்தான்

மாண்டவ்யர் தங்கள் கேள்விக்கு பதிலேதும் கூறாமல் மவுனத்தில் தவம் புரிவது போல நடித்தார் என்று குற்றம் சாட்ட அரசனும் மாண்டவ்யரை கழுவிலேற்ற உத்தரவிடுகிறான். அதற்கேற்ப கழுமரம் தயார் செய்யப்பட்டு அதன் மேல் உடம்பை இரு கூறாக பிளக்கும் கூரிய பெரிய ஆணி பதிக்கப்படுகிறது.

அந்த ஆணிமேல் அப்போதும் தவத்தில் மவுனமாய் இருக்கும் மாண்டவ்யரும் அமர்த்தப்படுகிறார். ஆணியானது மாண்டவ்யர் உடலுக்குள் புகுந்தும் மாண்டவ்யர் தவம் கலையவில்லை. அவர் வதைபடவோ அவர் உயிர் பிரியவோ இல்லை. அதைக்கண்ட பிறகே அரசன் அவர் ஒரு பிரம்ம ரிஷி... அவரைக் கழுவிலேற்றி பெரிய பாவத்தைச் செய்து விட்டோம் என்பதை புரிந்து கொண்டு கழுவில் இருந்து இறக்க உத்தரவிடுகிறான்.

இருப்பினும் மாண்டவ்யர் உடம்புக்குள் புகுந்த கூரிய ஆணியை அகற்ற முடியவில்லை. மாண்டவ்யரும் அதை பற்றி கவலைப்படவில்லை. அரசனோ அவர் காலில் விழுந்து மன்னிப்பு கோருகிறான். மாண்டவ்யருக்கும் கோபம் வருகிறது. ஆனால், தன்னை கழுவிலேற்றிய அரசன் மேலல்ல. தனது விதியின்மேல்...!எதனால் தனக்கு இவ்வாறு ஆனது? அனைத்தையும் துறந்து தவம் செய்யும் ஒரு துறவிக்கு இப்படி ஒரு துன்பம் வரலாமா? மாண்டவ்யர், ஆணி மாண்டவ்யராகி தர்ம தேவதை முன் சென்று நிற்கிறார்.

அவர் வந்து நிற்கும் வேகத்தைப் பார்த்து, தேவதையே சற்று நடுங்கிப் போகிறாள். 'தனக்கு நேரிட்ட துன்பத்திற்கு நான் என்ன பாவம் செய்தேன்?' என்று கேட்கிறார். தர்ம தேவதையும் அவர் பத்து வயது சிறுவனாக

பூர்வ ஜென்மத்தில் இருந்தபோது பறவைகளை கற்கள் கொண்டு எரிந்து காயப்படுத்தியதாகவும் அந்த பாவத்தையே இப்போது அனுபவிக்க நேர்ந்ததாகவும் கூறுகிறாள்.

அதைக் கேட்ட மாண்டவ்யர் தர்ம தேவதையை பெரும் கோபமுடன் பார்க்கிறார்.

"தேவதையே! ஒரு மனிதன் பன்னிரண்டு வயதாகும் வரை செய்யும் பாவங்கள் அறியாத பாவங்கள் என்பது உனக்கு தெரியாதா? அறிந்து செய்யும் பாவங்களுக்கு தானே ஒருவன் தண்டனை அனுபவிக்கலாம்? பாவம் எது, புண்ணியம் எது என்றும் கூட தெரியாத வயதில் செய்த பாவங்களை கணக்கில் கொள்வது எந்த வகையில் சரி?" என்று கேட்க தர்ம தேவதையால் அவருக்கு பதில் கூற முடியவில்லை.

மவுனமாக நின்ற அவளிடம் ஆணிமாண்டவ்யர், "தேவதையே... தவறு யார் செய்தாலும் தவறு தான்! தர்மம் நிலை பெற வேண்டுமென்றால், நீ செய்த தவறுக்கு தண்டனையாக நீ மானிட ஜென்மம் எடுக்கக் கடவாய். அப்படி எடுக்கப் போகும் பிறப்பில் எது தர்மம்? எது நியாயம்? எது நீதி? என்பதை உலகுக்கு உணர்த்துவாய்! நீ எடுக்கப்போகும் பிறப்பால் மனித குலத்துக்கு ஒரு அறநூலும் கிடைக்கட்டும்," என்று சபிக்கிறார்.

அந்தச்சாபம் தான் வியாசருக்கும் வேலைக்காரிக்குமான உறவில் விதுரனாக சந்திர குலத்தில் வந்து உதித்தது. விதுரர் பெரும் நீதிமானாக விளங்கி, 'விதுர நீதி' என்ற தர்ம சாஸ்திரத்தை உலகுக்கு அளித்தார்! இவர்

தான் கனகன் மூலம் பாண்டவர்கள் தப்பிப் பிழைக்கவும் காரணமாகிறார்.

தப்பிப்பிழைத்த பாண்டவர்களும் வனப்பிரவேசம் செய் கிறார்கள். இந்த வனப்பிரவேசத்தில் இவர்கள் சந்திக் கப் போகும் முக்கியமான சுவையான பாத்திரங்கள் தான் மூன்று அரக்கர்கள்.

அதில் முதல் இருவர் தான் இடிம்பன், இடிம்பி என்னும் பாத்திரங்கள்! (முருகப்பெருமானின் கந்த புராணத்து பாத்திரங்களான இடும்பன் வேறு இடிம்பன், இடிம்பிக்கு மனித மாமிசம் என்றால் உயிர். அரக்கர்களான இவர் களுக்கு மனிதர்களுக்கான தர்மநியாயங்கள் பொருந் தாது. அரக்கர் இனத்துக்கென்று பல தன்மைகள் உண்டு. விரும்பிய வடிவம் எடுப்பது, வானில் பறந்து திரி வது என்று மகேந்திர ஜால் வித்தைகள் எல்லாம் செய் வார்கள்.

இடிம்பன், இடிம்பிக்கு அண்ணன். இவர்களது கட் டுப்பாட்டில் உள்ள வனத்துக்குள்தான் பாண்டவர்கள் பிரவேசிக்கின்றனர். ஒரு பெரும் மரத்தடியில் களைப் போடு படுத்து உறங்குகின்றனர். அவர்களுடைய பிர வேசம் இடிம்பனால் உணரப்படுகிறது. அவனது பருத்த நாசிக்கு நர வாசனையை உணரும் சக்தி மிகுதி.

எனவே இடிம்பன் இடிம்பியிடம், "சகோதரி... நெடு நாட் களுக்கு பிறகு என் நாசி நர வாசனையை அனுபவிக் கிறது. நமக்கு இன்று நல்ல வேட்டைதான். யார் அந்த மானுடர்கள் என்று பார்த்துவா," என அனுப்புகிறான்.

இடிம்பியும் காற்றாய் பறந்து மரத்தினடிக்கு வருகிறாள்.

அங்கே பஞ்சபாண்டவர்களையும், குந்தியையும் பார்க் கிறாள். அதில் பீமன் இடிம்பியை மிகவே கவர்ந்து விடு கிறான். பீமனின் பருத்த உடலும், பரந்து விரிந்த தோள் களும் அரக்கியான அவளை பெரிதும் மயக்கி விட, அவள் வந்த நோக்கத்தை மறந்து போகிறாள்.

அதேசமயம் பீமன் கண் விழித்திட அவன் எதிரில் தன் அரக்க உருவத்தில் செல்லாமல் ஒரு அழகான இளம் பெண்ணாக அப்சர கன்னிகை போன்ற தோற்றத்திற்கு தன்னை மாற்றிக் கொண்டு அவன் எதிரில் சென்று நிற் கிறாள்.

"யார் நீ?" என்று கேட்கிறான் பீமன்."

நான் இந்த வனத்துக்கு சொந்தக்காரி. நானும் என் சகோதரனும் இந்த வனத்தை ஆள்பவர்கள். இங்கே எங்கள் அனுமதி இல்லாமல் ஒருவர்கூட நடமாட முடி யாது. உங்கள் வருகையை அறிந்து வந்தேன். உன் னைக்கண்ட மாத்திரத்தில் நான் என்னையே மறந்து விட்டேன். உன்னை மணந்து, இன்ப வாழ்வு வாழ என் மனம் விரும்புகிறது," என்று பளிச்சென்று தன் விருப்பத் தைக் கூறுகிறாள்.

பீமன் சிரிக்கிறான். அந்த நாளில் இது போல் கண்டவு டன் தோன்றும் காதல் தான் காந்தர்வ காதல் எனப்படும். அப்படி காதலோடு கூடி மணம் புரிவதுதான் காந்தர்வ மணம். இதற்கு எந்த கட்டுப்பாடும் தடையும் கிடையாது. விருப்பம்தான் இதன் அடிப்படை!

ஆனால், பீமனோ இடிம்பியிடம், "அழகான பெண்ணே... நீ இதற்கு முன் மானிடர்களையே பார்த்தது இல்

லையா என்ன? இவ்வளவு வேகமாக என்மேல் மோகம் கொண்டு விட்டாயே... நானொன்றும் என் விருப் பம் போல் நடக்க முடிந்த ஒருவன் அல்ல... உறங்கிக் கொண்டிருப்பவர்கள் என் சகோதரர்கள். அந்த மாதரசி என் தாய். நாங்கள் மிக துர்லபமான ஒரு நிலையில் இந்த வனப்பிரவேசம் செய்திருக்கிறோம். தூங்கி எழுந் தவுடன் சென்று விடுவோம். நீ போய் உன் மற்ற வேலை களைப் பார்," என்கிறான்.

அவன் பேச்சைக்கேட்டு இடிம்பி வருந்துகிறாள்.

"மகானுபாவரே! நான் பார்க்க அழகாயிருந்தாலும் அரக்க குலத்தைச் சேர்ந்தவள். என் பெயர் இடிம்பி.

எனக்கு இடிம்பன் என்ற அண்ணன் இருக்கிறான். அவன் உங்களைக் கண்டால் கொன்று தின்று விடு வான். எனவே நீங்கள் என்னை மணந்து கொண்டு எனக்கு உறவாகி என் அண்ணனிடம் இருந்தும் தப்பித் துக் கொள்ளுங்கள்," என்கிறாள்.

பீமன் திரும்பவும் சிரிக்கிறான்.

"நீ உண்மையை சொன்னதற்காக உன்னை பாராட்டு கிறேன். அதே சமயம் உன் அண்ணனைச் சொல்லி என்னை பயமுறுத்த. உன் அண்ணன் வந்தால் ஆபத்து அவனுக்கு தானேயன்றி எனக்கில்லை," என்கிறான்.

இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே இடிம்பனும் வந்து விடுகிறான். பீமனுடன் இடிம்பி பேசிக் கொண்டி ருப்பதைக் கண்டு கோபப்படுகிறான். இடிம்பி அவனை சமாதானப்படுத்தப் பார்க்கிறாள். ஆனால், இடிம்பன்

கேளாமல் பீமனோடு மோத பீமனும் அவனை எதிர் கொள்கிறான்.

இருவர் மோதும் சப்தமும் மற்ற பாண்டவர்களின் உறக்கத்தை கலைத்துவிட அவர்கள் எழுந்து யுத் தத்தை கவனிக்கின்றனர். இடிம்பியிடம் குந்தி நடந் ததை கேட்க, இடிம்பியும் நடந்ததை க கூறுகிறாள். இவ் வேளையில் அர்ஜுனன் தன் பாணத்தால் இடிம்பனுக்கு குறிவைக்க முனைய பீமன் அவனோடு சண்டை செய்த படியே வேண்டாமென்கிறான்.

'தம்பி, இவன் என்னாலேயே கொல்லப்பட வேண்டும், நீ பாணம் போடாதே..." என்று தடுக்கும் பீமன் இடிம்ப னைத் தூக்கி வானில் எறிந்திட கீழே விழுந்து தலை உடைந்து இடிம்பன் உயிரும் பிரிகிறது.

பின் குந்தி இடிம்பியின் விருப்பத்தை அறிந்து, பஞ்ச பாண்டவர்களுடன் கலந்து பேசுகிறாள்.

"வாரிசுகளுக்காக சந்திர குலம் பட்ட பாட்டை நான் அறி வேன். உங்களை எல்லாமும் கூட நான் தேவர்களின் உதவியால் தான் பெற்றேன். எனவே இடிம்பியின் விருப் பம் ஒரு வகையில் வம்ச விருத்திக்கு உதவும். பீமனும் பலசாலி. அவனுக்கேற்றவளே இடிம்பி. எனவே இவர் களை நாம் மணம் செய்யச் சொல்லலாம்," என்கிறாள்.

பீமனோ, "தாயே... நாடிழந்து நாடோடிகளாக திரிந்து கொண்டிருக்கிறோம். நம் நாட்டை திரும்ப அடையும் பெரும் கடமை காத்திருக்கிறது. இடையில் எனக்கு எதற்கு திருமணம்?" என்று கேட்கிறான்.

ஆனால் தர்மபுத்திரர் தாயான குந்தியின் விருப்பம் இறுதியில் நல்லதே செய்யும் என்று நம்பி பீமனுக்கும் இடிம்பிக்கும் அந்த வனத்திலேயே திருமணம் செய்விக்கிறார். இத்திருமணத்திற்கு வியாசரும் வருகிறார். வந்தவர் இடிம்பியின் உண்மையான பெயர் கமலபாலிகை என்று கூறி, "பீமனை மணந்ததாலும், அரக் ககுணத்தை விட்டொழித்ததாலும் இனி இவள் கமலபாலிகை என்றே அழைக்கப்பட வேண்டும்," என்கிறார்.

கமலபாலிகைக்கும் பீமனுக்கும் விரைவிலேயே ஒரு ஆண் குழந்தையும் பிறக்கிறது. அது யார் தெரியுமா?

அவன் தான் கடோத்கஜன். கடோத்கஜன் பிறக்கும்போதே பெரும்வலிமையோடும் பிறந்தான். கடம் போன்ற தலையில் ஏராளமான முடி இருந்ததால், கடோத்கஜன் என்னும் பெயர் வந்தது. ராட்சஷ கர்ப்பம் ஆனதால், மானுட லட்சணங்களோ, இயல்புகளோ அவனிடம் இல்லை. ஆனாலும், தாய் இடிம்பியின் மீதும், பீமன் மீதும் அவனுக்கு அதீத பாசம் இருந்தது. இதன் பின் பாண்டவர்களின் பயணம் அங்கிருந்து தொடங்கியது. இடிம்பியும் கடோத்கஜனும் அரை மனதாக பாண்டவர்களைப் பிரிந்தனர்.

அப்போது இருவரும் பீமனிடம், "எங்களை நீங்கள் நினைத்த மாத்திரத்தில் நாங்கள் தோன்றுவோம். உங்களுக்கு தேவையானதைச் செய்வோம்," என்று கூறியே பிரிந்தனர். இந்நிலையில் அவர்கள் அடுத்து சென்று தங்கியது ஏகசக்ரம் என்னும் நகரத்தில்...!

பிராமண வேடத்தில் வந்த அவர்களுக்கு ஏகசக்ர நகரில் ஒரு பிராமணர் வீட்டில் அடைக்கலமும் கிடைத்தது.

ஆனாலும், அவர்களுக்கு பாரமாக இல்லாமல் இருக்கவும், பிராமணர்கள் என்றாலே பிட்சை எடுத்து அதில் கிடைப்பதை புசித்து வாழ வேண்டும் என்கிற நெறி இருந்த காரணத்தினாலும் அர்ஜுனனும் பீமனுமே பிட்சைப் பொருட்களை பெற்று வந்து, அதைத்தான் குந்தி சமைத்து அவர்களுக்கு பரிமாறினாள்.

வாழ்வில் புயல் வீசும்போது எல்லாவித நிலைப்பாடுகளையும் சந்திக்க நேரிடும் என்பதற்கு பாண்டவர்களுக்கு நேரிட்ட இந்த துன்பங்கள் உதாரணம். ஏகசக்ர நகரத்தில் அவர்கள் தங்கியிருந்தபோதுதான் பீமனால் பகாசுர வதமும் நடைபெற்றது. பகன் என்னும் அசுரன் இந்த நகரத்தை ஒட்டிய மலையடிவாரத்தில் இருந்து கொண்டு ஊரில் உள்ள அவ்வளவு பேரையும் அடித்துக் கொன்று ஊரையே ரணகளமாக்கியிருந்தான்.

இதனால் பிராமணர்களால் நித்ய வேள்வி புரியவோ, அனுஷ்டானங்கள் செய்யவோ இயலவில்லை. செத்துச் செத்து பிழைக்க வேண்டியவர்களாக இருந்தவர்கள் இறுதியில் ஒன்று திரண்டு பகாசுரனை சந்தித்து ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி பகாசுரன் பசிக்கு உணவாக 'எள்ளு அன்னம், மூன்று வகையான பருப்பு உருண்டைகள், பொரி, அப்பம், கள், சாராயக் குடங்கள், கரடி, பன்றி மாமிசம், கறுப்பு நிறம் கொண்ட இரண்டு காளைமாடுகள், ஒரு நரனாகிய மனிதன்' என்று ஒரு பட்டியலை தயார்செய்து தினமும் வேளை தவறாமல் அனுப்பி வைப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தனர்.

அந்த ஒப்பந்தப்படி பாண்டவர்கள் தங்கியிருந்த வீட்டு பிராமணர் குடும்பம் அன்று பகாசுரனுக்கு உணவை

அனுப்பவேண்டும். கூடவே நரமாமிசமாக அவர்களின் புதல்வனையும் அனுப்ப வேண்டும். இப்படி உயிரோடு ஒரு அசுரனுக்கு இரையாக யாருக்கு மனம் வரும்? ஆனாலும் வாக்களித்துவிட்டபடியால் அதன்படி நடந்து கொண்டே தீரவேண்டும். இதன் காரணமாக அந்த பிரா மணரும் அவர் மனைவியும் கண்ணீர் விட்டபடி இருந்த னர். அதை அறிந்த குந்திக்கும் மனம் கசிந்தது.பலத்தில் ஆயிரம் யானைகளுக்கு நிகரான பீமனை எண்ணி குந் தியும் ஒரு முடிவுக்கு வந்தாள்.

அந்த பிராமணரிடம், "நீங்கள் உங்கள் பிள்ளையை அனுப்ப வேண்டாம். நான் என் மகனை அனுப்புகிறேன். இன்றோடு இந்த பிரச்னை தீர்ந்து இந்த நகரமும் துக்கம் நீங்கி செழிப்போடு சந்தோஷமாய் திகழட்டும்," என்றாள்.

அதைக்கேட்டு அந்த பிராமணரும் அவர் மனைவியும் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தனர். பீமனால் அந்த பகாசுரனை எதுவும் செய்ய முடியாது என்று கருதிய தோடு, இதனால் உங்கள் மகனைக் கொன்ற பாவம் எங்களை வந்து சேரும் என்று பெரிதும் வருந்தி மறுத் தனர். ஆனால், பீமன் வண்டி நிறைய உணவு இருக்க அந்த வண்டியை ஓட்டிக்கொண்டு மலையடிவாரத் துக்கு சென்று, பகாசுரனையும் யுத்தம் செய்ய அழைத்து அவனோடு மோதி, அவன் குடலை உருவி மாலையா கவே போட்டுக்கொள்கிறான்.

குடல் மாலையோடு பகாசுரனை தலைக்கு மேல் தூக்கி வந்து ஊர் எல்லையில் கொண்டுவந்து போட, ஊரே ஊர்வலம் போல வந்து இறந்துகிடந்த பகாசுரனைப் பார்த்து மகிழ்கிறது. பக வதம் செய்த பீமனையும் ஊரார் சுற்றி வந்து வணங்கினர்.

குந்தியும் பூரித்துப் போனாள். நாங்கள் தங்கியிருந்தது பிட்சை எடுத்து வாழ வழி செய்த பிராமணருக்கும் ஏக சக்ர நகருக்கும் பீமன் மூலமாக நன்றி காட்டிவிட்டதா கச் சொல்லி மகிழ்ந்தாள். இவ்வேளையில்தான் பாஞ் சால தேசத்தில் துருபதன் தீயில் பூத்த தன் மகளான திரவுபதிக்கு சுயம்வர ஏற்பாடுகளைச் செய்திருந்தான். அதைக் கேள்விப்பட்டு பல அரசர்களும் மகாரதர்களும் பாஞ்சால தேசம் நோக்கி செல்லத் தொடங்க தர்மரும், தம்பிகளுடன் பாஞ்சால தேசம் சென்று அந்த சுயம்வ ரத்தை பார்க்க சித்தமானார். திரவுபதிக்கான சுயம்வரத் தில் பங்கு கொள்ளும் முன், அர்ஜுனனுக்கு, அங்கார பர்ணன் என்ற கந்தர்வன் மூலம் ஒரு கந்தர்வாஸ்த்ரம் கிடைக்கிறது.

அங்காரபர்ணன், குபேரனுக்கு நெருங்கிய நண்பன். அதுமட்டுமல்ல... பொறாமையும் அகந்தையும் மிகுந்த இவன் பெரும் மாயன்... அங்க்ர வித்தை கற்றவன். பெரும் காமாந்தகனுமாவான்! கந்தர்வர்கள், இரவில் குறிப்பாக சந்திவேளை கழிந்த எண்பது வினாடிகளுக் கான கால கதியில், அதாவது முன்னிரவிலும், பின் பிரம்ம முகூர்த்த காலம் தொடங்கும் வரையிலான பின் னிரவுக் காலத்திலும்தான் ஆற்றில் நீராடுவார்கள். இது அவர்களுக்கு விதிக்கப்பட்ட சாபம். இக்கால வேளை யில் மானுடர்கள் நதிகளில் நீராடுவதில்லை. நதி நீரா டுவதற்கான சாத்திரங்களும் இதையே வழிமொழிகின் றன.

அங்காரபர்ணனும் தன் இச்சைக்குரிய கந்தர்வப்பெண் களுடன் பூமியில் பாயும் புண்ணிய நதியான கங்கை யில் அந்த இரவு வேளையில் நீராடிக் கொண்டிருந்தான். அங்கே பாண்டவர்கள் வந்து சேர்கின்றனர். களைப்பு

நீங்க கங்கையில் நீராட அவர்கள் மனம் எண்ணுகிறது. இரவின் கருமையை வெற்றிகொள்ள, அர்ஜுனன் கங்கைக்கரையில் தீ மூட்டுகிறான். அதன் வெளிச்சத்தில், அங்காரபர்ணன் ஜலக்ரீடை செய்தபடி இருப்பது கண்களில் படுகிறது.

அங்காரபர்ணனும் பாண்டவர்களைப் பார்க்கிறான். பிராமண வேடத்தில் அவர்கள் இருந்தமையால் அவனுக்கு அவர்கள் அற்ப மானிடர்களாக கண்ணுக்கு தெரிகிறார்கள். கோபமாக கரைக்கு வந்தவன் அர்ஜுனனைப் பார்த்து 'யார் நீங்கள்... இங்கே இவ்வேளையில் நீராட உங்களுக்கு உரிமையில்லை. இது கந்தர்வனாகிய என் போன்றோர் நீராடும் நேரம்' என்று அகங்காரமாக பேச, அர்ஜுனன் முகம் சிவக்கிறது.

அங்காரபர்ணன் தொடர்கிறான்.

"மானிடர்களான நீங்கள் முதலில் கந்தர்வர்களைக் கண்டால் வணங்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதிலும் நான் குபேரனுக்கு நண்பன். மாவீரன். என் போல அஸ்த்ரப் பயிற்சி பெற்றவர்களையே பார்க்க முடியாது!" என்று தற்பெருமை பேசுகிறான்.

அவனை அடக்க என்ன வழி என்று அர்ஜுனன் எண்ணும் போது, துரோணர் அவனுக்கு தந்த அக்னியாஸ்த்ரம் நினைவுக்கு வருகிறது.

"இதை மனிதர்களுக்கும், பூவுலகைச் சார்ந்த எந்த உயிர்களுக்கு எதிராகவும் மட்டும் பயன்படுத்தி விடாதே' என்று அவர் கூறியிருந்ததும் அவன் நினைவுக்கு வருகிறது. எதிரில் நின்று மார்தட்டும் இவனோ கந்தர்வன்.

இவனுக்கு எதிராக அதை எடுத்தால் தவறில்லை என்று தோன்ற, அர்ஜுனன் அக்னியாஸ்திரத்தை எடுத்து பிரயோகிக்க தயாரானான். அதைக்கண்ட கந்தர்வனும் தனது கந்தர்வாஸ்திரத்தை கையில் எடுத்தான்.

தனது அஸ்திரம் கொண்டு அர்ஜுனனோடு யுத்தம் செய்யத் தயாரான அங்காரபர்ணனை அர்ஜுனன்தன் அக்னியாஸ்திரத்தால் நொடியில் வீழ்த்த அங்காரபர்ணனின் உதிரம் ஆவியாகியது. அவனும் தன் எழில் எல்லாம் நீங்கப்பெற்ற நிலையில் துளியும் சக்தியற்றவனாகி கரியநிறம் கொண்டு பூமியில் விழுந்தான்.

அப்போது ஒரு பெண் புலம்பியபடியே ஓடிவந்தாள். அர்ஜுனன் அவள் யாரென்று பார்த்த நிலையில் அவள் அவன் காலில் விழுந்து கதறத் தொடங்கினாள்.

"மாவீரனே! நான் இந்த கந்தர்வனின் மனைவி. என் பெயர் கும்பீனஸி. உங்களை நான் சரணம் செய்கிறேன். அரை உயிரும் உடலுமாய் உள்ள இவரை மேலும் வதம் செய்யாமல் விட்டு விடுங்கள்," என்று கதறினாள்.

அவளது கதறல் குந்தியை, தர்மரை என்று சகலரையும் இரக்கங்கொள்ளச் செய்தது. தர்மரும் அர்ஜுனனிடம் இனி அஸ்திரத்தை தொடாதே என்பதுபோல பார்த்திட, அர்ஜுனனும் தன் அக்னியாஸ்திரத்தை அம்பறாதூளியில் கிடத்தினான். அங்காரபர்ணனும் அர்ஜுனின் வீரத்தை உணர்ந்தவனாக தள்ளாடியபடியே எழுந்து நின்றான்.

பின் "பிராமண வடிவில் இருக்கும் நீங்கள் யார்? நிச்சயம் நீங்கள் பிராமணரல்லர். உங்கள் முகத்து ராஜகளையும் நீங்கள் பிராமணரல்லர் என்றே கூறுகிறது," என்றான்.

அர்ஜுனனும் ஒப்புக்கொண்டு தாங்களே பஞ்சபாண்ட வர்கள் என்றிட அங்காரபர்ணனிடம் மகிழ்ச்சி.

"அர்ஜுனா...! கந்தர்வ மமதையால் ஆற்றில் குளிப்ப தில்கூட நான் விதிகளைப் பற்றி பேசிவிட்டேன். அது தவறு. கங்கையில் நீராட காலநேரமே இல்லை. எவர் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நீராட லாம் என்னும் உண்மையை இனி உலகறியட்டும். உன் னிடம் நான் தோற்றவன். தோற்ற எனக்கு இனி ரதமோ, ராஜ்ய சுகங்களோ தேவையில்லை. எனது ரதத்துக்கு சித்ரரதம் என்று பெயர். இது நினைத்த மாத்திரத்தில் தோன்றி நினைத்த இடத்துக்கு அழைத்துச்செல்ல வல் லது. அதற்கு இனி நீயே உரியவன்.

அதுமட்டுமல்ல. ஆறுமாதகாலம் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்து நான் ஒரு வித்தையை பெற்றுள்ளேன். அதன்படி மூன்று உலகங்களில் நான் எதைப் பார்க்க விரும்பினாலும் அது என் கண்ணில் படும். அந்த வித் தையை நான் உனக்கு தாரைவார்த்துதர விரும்புகி றேன். அது மட்டுமல்ல... எங்கள் கந்தர்வ லோகத்தில் பிறந்து வளர்ந்த நூறு குதிரைகளையும் நான் உனக்கு தர விரும்புகிறேன்.

இந்த குதிரைகள் இந்திரனின் வஜ்ராயுதத்துக்கு ஒப்பா னவை.

இம்மட்டில் ஒரு பிராமணனுக்கு அவனது கைதான் வஜ்ரம். க்ஷத்ரியனுக்கோ அவன் ஏறிச்செல்லும் ரதம் வஜ்ரம். வைசியர்களுக்கு அவர்கள் அள்ளித்தரும் கொடை வஜ்ரம். சூத்ரர்களுக்கு தொழில் வஜ்ரம். கந்தர்வர்களான எங்களுக்கு குதிரைகளே வஜ்ரம். இப்படிப்பட்ட இந்த குதிரைகள் உனக்கு பேருதவியாக இருக்கும்," என்றான் அங்காரபர்ணன்.

ஆனால், அர்ஜுனன் அவை எதையும் அங்காரபர்ணனிடம் இருந்து பெற விரும்பவில்லை.

"அங்காரபர்ணா! இப்போது நீ என் அடிமை. நான் நினைத்தால் உன்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு அடிமையிடம் இருந்து எதைப் பெற்றாலும் அது இழிவு. எனவே உன்னிடமிருந்து நான் எதையும் பெற விரும்பவில்லை," என்றான்.

அங்காரபர்ணனோ விடுவதாயில்லை. "அர்ஜுனா! என்னை அடிமை என்று இழிவுபடுத்தாது நண்பனாக்கிக் கொள். நண்பனாகி விட்டால் நாம் சமம். இருவரும் ஒருவருக்கொருவர் எதையும் தரலாம், பெறலாம்," என்றான். அதைக்கேட்டு அர்ஜுனனும் யோசிக்க இங்கே சகாதேவன் அர்ஜுனனிடம், "அண்ணா, இதனால் நலமே விளையும். சரி என்று சொல்லுங்கள்," என்றான்.

முக்கால ஞானியான சகாதேவனுடைய கருத்தை ஏற்று அர்ஜுனனும் அங்காரபர்ணனை நண்பனாக ஏற்று, அவன் மேல் விழுந்த அக்னியாஸ்திரத்தை திரும்பப் பெற்றான். அங்காரபர்ணனும் பூரண நலத்துடன் எழுந்து நின்றான். பின் இருவரும் தங்கள் அஸ்திரங்களை பரிமாறிக் கொண்டனர்.

இதன் மூலம் அர்ஜுனனிடம் கந்தர்வாஸ்திரம் வந்து சேர்ந்தது. இவ்வேளையில் அங்காரபர்ணன் பாண்டவர் களிடம் ஆழமான ஒரு கருத்தையும் கூறினான்.

"பாண்டு புத்திரர்களே! உங்களுக்கு அக்னியுமில்லை. ஹோமமுமில்லை நீங்கள் பிராமண வேடத்தில் இருக்கி றீர்கள். நிஜமான பிராமணர்கள் உங்கள் முன் இல்லை. இவ்வாறே நீங்கள் உங்கள் பயணத்தை தொடர்ந்தால் உங்கள் யட்சர்கள், ராட்சஷர்கள், பட்சிகள், நாகங்கள், பிசாசங்கள் என்று எவையும் எதுவும் செய்யும். ஒரு பிரா மணன் முன் இருக்க அவன் துணையோடு நீங்கள் செல்லும்போது இவை எதுவும் உங்களை எதுவும் செய் யாது. அது மட்டுமல்ல. பிரம்மசர்யம் ஒரு சிறந்த தர்மம்.

அதனாலேயே உன்னால் என்னை அடக்க முடிந்தது. எனவே பிரம்மச்சரியத்தை நீ நன்கு புரிந்துகொள். என் போன்றோர் ஒன்று பிரம்மச்சரியம் உள்ளவர்களுக்கு கட்டுப்படுவோம். இல்லையேல் பிராமணர்களுக்கு கட் டுப்படுவோம். நீங்கள் உங்களுக்கென்று ஒரு புரோகித பிராமணரை துணை கொள்ளுங்கள். அவ்வாறு செய் தால் அனைத்தும் உங்களுக்கு வெற்றி உறுதி!" என் றான்.

அங்காரபர்ணனின் கருத்தைக் கேட்ட தர்மர், "கந்தர் வனே! என் முன்னோர் வசிஷ்ட மகரிஷியை புரோகி தராய் கொண்டவர்கள். எனவே எங்களுக்கு பிராமண சகாயம் இல்லை என கருதவேண்டாம்," என்றார்.

அதைக்கேட்ட கந்தர்வன் சிரித்தபடியே, "உங்களுக்கு வசிஷ்ட மகரிஷி பற்றி தெரியுமா?' என்று கேட்டான். 'அவ ரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்

கீர்த்தி பற்றியோ, வல்லமை பற்றியோ தெரியாது. உனக்குத் தெரிந்தால் சொல்," என்றான் அர்ஜுனன். கந்தர்வனும் வசிஷ்டர் பற்றி சொல்லத் தொடங்கினான்.

'வசிஷ்டமகரிஷிபிரம்மதேவனுக்குமானஸபுத்திரர் பதிவிரதா தேவியான அருந்ததிக்கு கணவர்! காம குரோதங்களை ஜெயித்தவர். அதனால் அவை இரண்டும் தான் அவர் கால்களை - தினமும் பிடித்துவிடும். இந்திரியங்கள் அவ்வளவையும் வசப்படுத்தியவர் என்பதாலேயே அவருக்கு வசிஷ்டர் என்ற பெயர் உண்டானது. விஸ்வாமித்திரருக்கும் இவருக்கும் எப்போதும் ஏழாம் பொருத்தம். விஸ்வாமித்திரரால் பாதிக்கப்பட்ட போதெல்லாம் ஒரு நொடியில் அவரை அழிக்கும் வல்லமை இருந்தும் அதை பிரயோகிக்காமல் கட்டுப்படுத்திக் கொண்டார்.

இறந்துவிட்ட புத்திரர்களை நேரே எமனிடம் சென்று மீட்டுக்கொண்டுவரமுடிந்தும் இவர் அப்படிச் செய்யவில்லை. அப்படிச் செய்வது - தெய்வ நிந்தனையாகும். பரம்பொருளின் விதிப்பாட்டை மீறிய ஒழுக்கக் கேடாகும் என்று தெய்வமே வியக்கும் வண்ணம் தன்னை தவத்தால் கட்டுப்படுத்திக்கொண்ட மகா பிரம்மயோகி," என்று வசிஷ்டர் பற்றி கூறி முடித்தான் கந்தர்வனான அங்காரபர்ணன். வசிஷ்டரின் பெருமைகளை கேட்ட பாண்டவர்கள் மகிழ்ந்தனர்.

"இப்படிப்பட்டவர் உங்கள் வம்சத்தவர்க்கு குருவாக இருந்தார் என்று சொன்னீர்கள். உங்களுக்கும் இவர் போல் ஒருவர் குருவாக திகழ்வதே உத்தமம்!" என்று தொடர்ந்த அவனிடம் அர்ஜுனன் 'வசிஷ்டருக்கும்

விஸ்வாமித்திரருக்கும் எப்போதும் ஏழாம் பொருத்தம் என்றீர்களே! அது எப்படி?" என்று கேட்டான்.

அதைக்கேட்ட அங்காரபர்ணன் மென்மையாக சிரித்தான்.

எதற்காக இந்த சிரிப்பு?

"இருண்ட இந்த இரவில் கங்கை நதிக்கரையில் உங்களுக்கு நான் வசிஷ்ட புராணத்தை சொல்ல நேர்ந்ததை எண்ணினேன். நானே காம லோப் மாச்சர்யங்களில் மூழ்கி கிடக்கும் ஒருவன். ஆனால், இந்த கங்கையில் நீராடிய புண்ணியம் வசிஷ்டர் என்னும் புண்ணிய ஆத்மாவை பற்றி உங்களிடம் பேச எனக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளது. வசிஷ்ட புராணம் என்னும் அவர் கதையை பிறருக்கு உரைப்பதும் சரி, கேட்பதும் சரி பேரின்பம். அது ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னமளித்த புண்ணியத்தை தரும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களால் எனக்கு இப்போது அந்த புண்ணியம் சித்திக்கப் போகிறது," என்றான்.

பீடிகை போதும்... வசிஷ்ட புராணம் தொடங்கட்டும். கங்கா நதிக்கரையில் பாண்டு புத்திரர்கள் ஒரு கந்தர்வ ராஜனால் இப்புராணத்தை அறிந்தார்கள் என்று நாளை உலகும் சொல்லட்டும்," என்று பீமன் எடுத்துக் கொடுத்தான். வசிஷ்டரின் புராணத்தை அவரது ஆஸ்ரமத்துக்கு குசிக புத்ரனான கவுசிகன் வருவதில் இருந்து தொடங்குவோம். கவுசிகன்தான் விஸ்வாமித்திரராய் பின் பெயர் பெற்றவர். அவர் வேட்டைக்கு வந்த இடத்தில் ஒரு மானைத் தேடிக்கொண்டு வரப்போய் வசிஷ்டரின் ஆஸ்ரமம் கண்ணில் படுகிறது.

வழக்கமான ஆஸ்ரமங்கள் காய்ந்த வைக்கோலால் வேயப்பட்டு சுற்றிலும் பூச்செடிகள் இருக்க மான்களும் மயில்களும் சகஜமாக கண்ணில் படும். சில தடாகங்களில் அன்னப்பட்சிகள் கண்ணில் படும். மரங்களில் கிளிக்கூட்டம், கனிக்கூட்டம் மலர்க்கூட்டம் என்று எல்லாமே எண்ணிக்கைக்கு அடங்காததாக இருக்கும். வசிஷ்டரின் ஆஸ்ரமம் இதை எல்லாம் கடந்து சுகந்தப்புகை வாசத்தோடு நெய் மணமும் கமழக் கிடந்தது. உள்ளே கால் வைத்த மாத்திரத்தில் விஸ்வாமித்திரரின் வேட்டைக் களைப்பு காணாமல் போய், சொர்க்கத்துக்குள் பிரவேசித்த மாதிரி இருந்தது.

வசிஷ்டரும் தன்னை மறந்து வேள்வியில் மூழ்கியிருக்க ஆஸ்ரமத்து வட பாகத்தில் பொன் கொண்டு வேய்ந்தது போல ஒரு மண்டபம். அதனுள்ளே காமதேனுவாகிய நந்தினிப்பசு கம்பீரமாக காட்சி தந்தது. அதன் தோற்றம் விஸ்வாமித்திரரை அசர வைத்தது.

"அடேயப்பா...! என்ன ஒரு வெண்மை! பெரிய கரிய விழிகள், விடைத்த காதுகள், பூரித்த திமில், மதர்த்த உடல், சுழித்த பால்மடு, இளம்சிவப்பில் காலடிக்குளம்புகள்...!" விஸ்வாமித்திரரால் நந்தினியின் மேல் வைத்த பார்வையை எடுக்க முடியவில்லை.

அப்போது வசிஷ்டாஸ்ரமவாசி ஒருவன் அதன் முன் வந்து வணங்கியவனாக, "தாயே! பூஜை நிமித்தம் பாலும் தேனும் வேண்டும்" என்று கேட்ட மாத்திரத்தில் இரு குடங்களில் அவை இரண்டும் அதன் முன் தோன்ற அதை எடுத்துச் சென்றான்.

பின்னாலேயே வந்த இன்னொருவன் "தாயே! ஹோமத்தில் இட சந்தனமும் நெய்யும் வேண்டும்," என்றிட அவைகளும் வேகமாய் முன் தோன்றின. சில பெண்களும் வந்தனர். அதை வலம் வந்து வணங்கிய நிலையில் இந்திர லோகத்து பாரிஜாதத்தையும், பாற்கடல் நீரையும், கங்கை நீரையும், அபிஷேக நிமித்தம் வேண்ட அவை எல்லாமும் தோன்றின!

'இது என்ன மாயம்? இந்த பசு கேட்டதை எல்லாம் தருகிறதே!' என்று வியந்திருந்த கவுசிகன் அருகில் வந்தார் வசிஷ்டர்.

அவரை மன்னன் எனும் செருக்கோடு ஊருடுவினார் விஸ்வாமித்திரர். வசிஷ்டரும் ஊருடுவினார்.

'என்ன முனிவர் பிரானே...! நான் யாரென்று தெரியவில்லையா?'

"இக்கேள்விக்கு பதிலாக உன்னை நீ அறிமுகம் செய்து கொண்டிருக்கலாமே கவுசிகா..."

"பலே... என்னைத் தெரிந்திருக்கிறதே..."

"ஒரு பிரம்ம ரிஷியிடம் கேட்கக் கூடாத கேள்வி இது. அதிலும் இது நந்தினியாகிய காமதேனு உள்ள லட்சுமி விலாசமான இடம்..."

"உண்மைதான். அந்த நந்தினிப் பசுவிடம் அப்படி என்ன விசேஷம்?"

"பாற்கடல் அமிர்தக் கடையின் போது பரிசாய் வந்த வைகளில் இதுவும் ஒன்று. இன்று இந்த ஆஸ்ரமத்

தையும் இங்கு நடக்கும் கேள்விகளையும் காத்து வரு கிறது. இங்கே ஒரு சிறுதீய சக்தியும் பிரவேசிக்க முடி யாது. தேவசக்திகள் உட்புகுந்தாலே வெளியேற மனம் வராது. மொத்தத்தில் பூவுலகில் ஒரு கயிலாயமாக வும் வைகுண்டமாகவும் சத்யலோகமாகவும் ஸ்ரீபுரமாக வும் அமரபுரமாகவும் இந்த இடம் விளங்குகிறது என் றால் மிகையில்லை."

"ஆஹா அற்புதம்! அதனால் தான் என் களைப்பு பறந் தோடியதா?"

"அதிலென்ன சந்தேகம்? இந்த தெய்வீகச் சூழலில் இளைப்பாறும் பாக்கியம் உனக்கு உள்ளது. அதனால் தான் இளைப்பாறும் பாக்கியம் உனக்கு உள்ளது. அத னால் தான் இங்கு உன்னால் நுழைய முடிந்தது...

"அது சரி. இந்த பசுவிடம் இன்னும் என்ன விசேஷங்கள் உள்ளன?"

"மனித மனதின் அவ்வளவு விருப்பங்களையும் நிறை வேற்றித் தரும் ஆற்றலுடையது இது. இதை வேள்விக் காக மட்டும் பயன்படுத்துகிறோம். இது போக இங்கு வருவோர் பசியாறவும் இது எனக்கு கை கொடுக்கிறது."

"ஓ! உணவைக் கூட தருமா?"

"எதற்கு கேள்வி... விருந்துண்ணத் தயாராகு," வசிஷ்டர் சொன்ன மாத்திரத்தில் முல்லைப்பூ போல் அன்னத்தில் தொடங்கி, அப்பம், வடை, துவையல், பாயசம், அதிரசம், பதினாறு வகை காய்கறிகள், ஏழு வகை கனிவகைகள், ஆறுவகை பலகாரங்கள், சித்ரான்னங்கள் என்று ஒரு அணிவகுப்பே நடத்திவிட்டது நந்தினி.

விஸ்வாமித்திரர் மூர்ச்சிக்காத குறை. கூடவே அது தன் வசம் இருந்தால் எப்படி இருக்கும் என்கிற எண்ணம். அந்த விருப்பம் உடனே வெளிப்பட்டது.

"முனிவர் பிரானே... இப்படி ஒரு சக்திவாய்ந்த அதிசயம், ஒரு நாட்டை ஆளும் மன்னனிடம் அல்லவா இருக்க வேண்டும்? துறவியான உங்களுக்கு எதற்கு?" என்று கேட்கவும், வசிஷ்டருக்கு விஸ்வாமித்திரரின் உள் நோக்கம் புரிந்துவிட்டது.

"மன்னா! அளவோடு ஆசைப்படு," என்ற வசிஷ்டரிடம், "அனைத்திற்கும் ஆசைப்படும் க்ஷத்திரியன் நான். இந்த உலகம் எனது ஒரு குடையின் கீழ் சுழலவேண்டும் என் பது என் நிலை. அதற்கு இந்த நந்தினி உதவும்போல் தெரிகிறதே?" என்றான் கவுசிகன்.

"அதை உன் சுய எத்தனத்தால் அடையப் பார். நந்தினி தெய்வீகத்துணை. எனது வேள்விப்பாடுகளுக்கு மட் டும் அது பயன்படும் ".

"உங்கள் வேள்விக்கு துணை செய்ய பத்தாயிரம் பசுக் களை தானமாக தருகிறேன். அவைகளை பராமரிக்க ஒரு கூட்டத்தையும் தருகிறேன்."

"அதைவிட கோடிப் பசுக்களை நந்தினி தருவாள். எதற்கு உன் பத்தாயிரம்?" "ஒரு அரசனுக்கான பதில் இதுவல்லவே?"

"ஆண்டிக்கு அனைவரும் ஒன்று தான் மன்னா! "

"என் பலம் தெரியாமல் பேசுகிறீர்கள் நீங்கள்."

"வேண்டாம் மன்னா... இது வேள்விக்கூடம். இங்கே பேராசைப் பேச்சு வேண்டாம். நந்தினிப் பிரசாதத்தை ருசித்து உண்டுவிட்டு வந்த வழியே போய்க் கொண்டே யிரு."

வசிஷ்டரின் பதில் விஸ்வாமித்திரர் வரையில், ஒரு பெரும் போருக்கே வழி வகுத்து விட்டது. நாடு திரும் பின கவுசிகன் பெரும்படையை அனுப்பி நந்தினியைப் பிடித்து வர பணித்தான். ஆனால், அதுவோ தன்னுள் இருந்து

பல்கவர், திராவிடர், சகர், யவ்வனர், சபரர், பவுண்டார், கிராதர், ஸிம்ஹ லர், கசர், சிபுகர், புளிந்தர், சீனர், ஹீணர், கந்தர்வர் என்று சகல இன மாந்தர்களையும் பெரும் வீரர்களாக அனுப்பி, விஸ்வாமித்திர படையை விரட்டி அடித்து துவம்சம் செய்து விட்டது.

இறுதியாக நந்தினியை கைப்பற்ற வந்த கவுசிகனாகிய விஸ்வாமித்திரரும் தன் ரதம் முதல் கதாயுதம் வரை சக லத்தையும் இழந்து நிராயுத பாணியாக நின்றார். வசிஷ் டரும் பெரும் கோபத்துடன் பேசலானார்.

"ஏ க்ஷத்ரிய துர்புத்திக்காரனே! உன் புஜபலத்தால் படை பலத்தால் அற்பமானிடர்களை வெற்றி கொள்ளலாம். தேவ சக்தியிடம் உன்னால் துரும்பைக் கூட கிள்ளிப் போட முடியாது. நந்தினி க்ஷத்ரிய பலத்துக்கு வசப்படாது. தபோ பலத்துக்கே அன்பு காட்டும். புலன்களின் பிடியில் சிக்கி அதனால் அலைக்கழிப்படும் க்ஷத்ரியனே புலன டக்கமும் தவமும் தான் பெரும் பலம். ஆனால் உனக்கு அது சாத்தியமே இல்லை என்பதை புரிந்து கொள். இந்த தோல்வி உன்னை மனிதனாக்கட்டும்," என்றார்.

விஸ்வாமித்திரரிடம் வசிஷ்டரின் கருத்தால் பெரும் மன மாற்றம்.

"வசிஷ்டரே! உங்கள் வாயால் என்னை பிரம்மரிஷி என்ற சொல்ல வைப்பேன். க்ஷத்ரியனானாலும் புலன்களை ஒடுக்கிக் காட்ட முடியும் என்பதை நிரூபிப்பேன்," என்ற விஸ்வாமித்திரர் அடுத்த நொடியே வைராக்கியத்தோடு தவத்தில் இறங்கி விட்டார்.

விஸ்வாமித்திரர் ஏதோ உணர்ச்சி வேகத்தில் தவத் தில் இறங்கி விட்டதாகத் தான் வசிஷ்டரும் எண்ணி னார். ஆனால், விஸ்வாமித்திரர் சாதித்துக் காட்டிவிட் டார். நெடிய அவரது தவமும், திரிசங்கு சொர்க்கத்தை அவர் நிறுவியதும் அவரை பிரம்மரிஷியாக ஆக்கி விட் டது. அதேசமயம் வசிஷ்டர் மேல் உள்ள கோபம் மட்டும் தீரவே இல்லை...!

கந்தர்வன் அர்ஜுனனுக்கு வசிஷ்ட புராணம் சொன்ன தில் விஸ்வாமித்திரர் எப்படி பிரம்மரிஷியானார் என்பது புரிந்தது.

"இந்த கோபம் எதாவது மோசமான விளைவுகளை வசிஷ்டர் பிரானுக்கு செய்வித்ததா?" என்றும் கேட்டான் அர்ஜுனன்.

"ஆம்! பெரும் மோசத்தை விஸ்வாமித்திரர் வசிஷ்ட ருக்கு செய்து விட்டார்...

வசிஷ்டருக்கு நூறு புதல்வர்கள் இருந்தனர். இவர்க ளில் மூத்தவன் சக்தி. அப்பாவைப் போலவே சக்தி களை பெருக்கிக் கொள்ள தொடங்கினான். இவன் கானகத்தில் நீராடச் சென்ற போது இக்ஷ்வாகு வம்சத்

தைச் சேர்ந்த கல்மாஷபாதன் என்கிற அரசன் எதிரில் வந்தான். அது ஒற்றையடிப் பாதை.

கல்மாஷபாதன் சக்தியை விலகச் சொல்ல, சக்தி மறுத்தான்.

"இதுவனம்... உன் ராஜதிமிரை என்னிடம் காட்டாதே. நீ விலகு," என்றான் வசிஷ்ட புத்திரனான சக்தி. ஆனால், கல்மாஷபாதன் விலகாமல் சக்தியை அடிக்க தன்வசம் இருந்த சவுக்கைப் பயன்படுத்தவும் ரிஷியான சக்தி அடுத்த நொடியே ராட்சஷ புத்தியுள்ள நீ ராட்சஷனாகக் கடவது," என்று சபித்துவிட்டான்.

அப்போது யதார்த்தமாக அந்தப்பக்கம் வந்த விஸ்வாமித்திரர், தன் பங்குக்கு கல்மாஷ பாதனை சபித்தார்.

"கல்மாஷபாதா... நீ இனி நரமாமிசம் தின்னும் கொடிய நிலையை அடைவாய்," என்றார்.

இதுதான் சமயமென வசிஷ்டரின் நூறு புத்திரர்களையும் தின்று விடும்படி தூண்டினார். கல்மாஷபாதனும் தனக்கு சாபமளித்த சக்தியில் தொடங்கி வசிஷ்ட புத்திரர்கள் நூறு பேரையும் விழுங்கி ஏப்பம் விட்டான். தனது நூறு பிள்ளைகளையும் குறிப்பாக வேதம் முழுவதும் கசடறக் கற்று, தனக்கு இணையாக விளங்கிய தன் மகன் சக்தியை, விஸ்வாமித்திரரால் ஏவி விடப்பட்ட கிங்கரன் என்னும் பிசாசு கொன்று விட்டதை அறிந்த வசிஷ்டர் பெரும் புத்திர சோகத்திற்கு ஆளானார்.

வசிஷ்டர் ஒரு பிரம்மரிஷி... திரிகால ஞானி... வேதநெறி வழுவாதவர். இவரையே கர்மவினை புத்திர சோகமாய்

வந்து கவ்வியதை நாம் இங்கு எண்ணிப் பார்த்து மனதில் கொள்ள வேண்டும்.

பிறந்து விட்ட நிகழ்கால பிறப்பில், நாம் மகாத்மாவாகவே இருந்தாலும் கர்மவினை விடாது. இதற்கு திரேதாயுக காலமும் விதிவிலக்கில்லை. இப்படி புத்திர சோகத் துக்கு ஆட்பட்ட வசிஷ்டர் பெரும் ஞானியாக இருந்தும் தனக்கு ஏற்பட்ட துக்கத்தை தாங்கிக் கொள்ள முடியா மல் தடுமாறுகிறார். அந்த தடுமாற்றத்தில் அவர் எடுத்த முடிவு தான் ஆத்மஹத்தி எனப்படும் தற்கொலை! வசிஷ்டரா தற்கொலைக்கு முனைந்தார் என்று ஆச்சரி யம் தோன்றும்.

புத்திர சோகம் பிரம்மரிஷிகளைக் கூட விடாது என்ப தற்கு சான்று வேண்டுமே! தற்கொலைக்கு முனைந்த வசிஷ்டர் நேராக மேருமலை உச்சிக்கு செல்கிறார். அங் கிருந்து கூப்பிய கரங்களோடு குதித்து உயிரை விடப் பார்க்கிறார். ஆனால், மேரு அவர் உயிரை வாங்க மறுக் கிறது.

"பிரம்மரிஷி... உம் உயிரை நான் முடித்து எனது பவித் ரத்தை கெடுத்துக் கொள்ள வேண்டுமா?" என்றும் கேட் கிறது.

வசிஷ்டரின் புத்திர சோகத்தின் முன் அதன் குரல் எடு படவில்லை. தீ மூட்டி நெருப்பில் குதிக்கிறார். அக்னி பகவானும் அவிந்து போய், "மகரிஷி என்னையும் அழுக் காக்கி விடாதீர்கள்," என்று கதறுகிறான்.

வசிஷ்டர் விடுவதாயில்லை. கடலில் போய் குதிக்கிறார். கடலும் ஏற்க மறுக்கிறது. ஓடும் நதியில் பாறையைக் கட்

டிக் கொண்டு விழுகிறார். அந்தக் கட்டுக்களை நதியே அவிழ்த்து விட்டு வசிஷ்டரையும் ஜாக்கிரதையாக கரையில் சேர்க்கிறது.

"உங்கள் உயிரை வாங்கிய பாவம் எனக்கு வேண்டாம்," என்கிறது. கட்டவிழ்த்தலுக்கு 'விபாசை' என்று பெயர். வசிஷ்டரின் கட்டுக்களை அவிழ்த்த காரணத்தாலேயே அந்த நதிக்கு இன்றும் 'விபாசை' என்று பெயர்.

இந்த நதியில் மூழ்கி எழுபவர்களுக்கு துன்பக்கட்டு அகலும். நீண்ட ஆயுள் ஏற்படும் என்பது இதனாலேயே உண்டானது. வசிஷ்டருக்கோ புத்திரசோகம் தீரவே இல்லை.

"ஒன்றுக்கு நூறு மக்களைப் பெற்றும் நிர்கதியாகி விட்டேனே? ஒரு பாவமும் செய்யாதிருந்தும் கர்மவினை விஸ்வாமித்திரர் வடிவில் வந்து பழி தீர்த்துக் கொண்டு விட்டதே? இப்படிப்பட்ட மானிடப்பிறவியும் ஒரு பிறப்பா? இந்த பிறப்பில் பிரம்மரிஷி என்கிற பட்டத்துக்கும் பவிசுக்கும் மட்டும் குறையில்லை! இந்த பட்டத்தால் என்ன புண்ணியம்? இதனால், ஒரு பிள்ளையை எனக்காக மிச்சம் வைக்க முடிந்ததா? இப்படி ஒரு பிறப்பாளனாய் இருப்பதற்கு ஆத்மஹத்தி செய்து கொண்டு ஒரு வேதாளமாய் மாறி விடுவது எவ்வளவோ மேலாயிற்றே?" என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொள்கிறார் வசிஷ்டர்.

உலக மாயை அவரை அப்படி எல்லாம் கேட்க வைக்கிறது. இங்கே ஒரு விஷயத்தை அழுத்தமாக மனதில் கொள்ள வேண்டும். இத்தனை துக்கத்திலும் வசிஷ்டர் விஸ்வாமித்திரரை துளி கூட நிந்திக்கவில்லை. அவரால் தான்

பிள்ளைகள் அனைவரும் இறந்து பட்டனர். அப் படி நிகழ காலன், விஸ்வாமித்திரரை பயன்படுத்திக் கொண்டதாகத்தான் அவர் கருதினார். இந்நிலையில் என்ன செய்தால் உயிர் பிரியும் என்கிற கேள்வியோடு அவர் வனத்தில் நடந்து செல்கையில் அவரைப் பின் தொடர்கிறாள் அவரது மருமகளான சக்தியின் மனைவி அதிருஸ்யந்தி. அவளுக்குள் இருந்து வேதம் ஓதும் மழ லைக்குரல் ஒலிக்கிறது.

வசிஷ்டர் ஆச்சரியப்பட்டு அதிருஸ்யந்தியிடம், 'இது எப் படி சாத்தியம்?' என்ற கேட்க, "என் கருவில் வளரும் தங் கள் பேரன் தான் வேதம் ஓதிய படி உள்ளான். தங்களின் பிள்ளையான சக்தியின் வாரிசுக்குள்ளும், அவருடைய வேதக் கல்வி தொடர்கிறது. தங்கள் பிள்ளை, ஒவ் வொரு திசுக்குள்ளும் வேத சப்தம் அடங்கிக் கிடக்கும் வகையில், அதை உணர்ந்து பயின்றது தான் அதற்குக் காரணம்.

அதனாலேயே, அவரோடு கூடிய என்னுள்ளும் அவரது கருவாக வளரப் பெற்று, முழுவடிவமும் ஏற்பட்ட விட்ட நிலையில், வயிற்றுக்குள்ளேயே வேத முழக்கம் செய்யத் தொடங்கி விட்டது. இந்தக் குழந்தையை இனி பிரச விக்க வேண்டியது மட்டுமே என் கடன். நீங்கள் புத்திர சோகத்தால் தற்கொலை செய்து கொள்ளத் தேவை யில்லை. உங்களுக்கு வாரிசு உருவாகி விட்டது.

உங்களுக்கு வாரிசு உள்ளது. உங்கள் மூத்த மகன் 'சக் தி'யை காலம் பறித்துக் கொண்டாலும், அவர் வாரிசு உருவாகி விட்டது. எனவே, உங்கள் துக்கத்தை போக் கிக் கொண்டு நீங்கள் இந்தப் பேரப்பிள்ளையை

வளர்த்து ஆளாக்க ஜீவனோடு இருக்க வேண்டும்' என்று வேண்டுகிறாள் அதிருஸ்யந்தி.

வசிஷ்டரும் பெரிதும் மகிழ்ந்தார். தான் வாழ்வதில் ஒரு அர்த்தமிருப்பதாக கருதத் தொடங்கினார் அப்போது மீண்டும் சோதனையாக, அந்த காட்டில் கிங்கரப் பிசாசாக திரிந்து கொண்டிருக்கிற கல்மாஷபாதன் திரும்ப வந்தான். அவன் அதிருஸ்யந்தியை விழுங்கப் பார்த்தான். அதைக் கண்ட வசிஷ்டர் தன் தவசக்தியால் அவனைத் தடுத்ததோடு, அந்தச் சக்தியை அர்ப்பணம் செய்து கல்மாஷபாதனின் அசுரத்தன்மையை போக்கி விஸ்வாமித்திரர் ஏவி விட்ட கிங்கரப் பிசாசையும் விரட்டியடித்தார்.

கல்மாஷபாதன் ராமர் அவதாரம் செய்த சூரியவழியான இஷ்வாகு வம்சத்தில் வந்தவன். வசிஷ்டர் அவனுக்கு சாப விமோசனம் அளிக்கவும் பெரிதும் மகிழ்ந்து அவர் காலில் விழுந்து ஒரு வரம் கேட்டான்.

வசிஷ்டரும், "நீ கேட்கும் வரம் எதுவாக இருந்தாலும் அளிக்கிறேன்," என்றார்.

"வாக்கு கொடுத்து விட்டபடியால், நீங்கள் மாறவோ மறுக்கவோ கூடாது," என்றான்.

"நீ முதலில் வரத்தைக் கேள்," என்றார் வசிஷ்டர்.

"ஐயனே... பிரம்மரிஷிக்கு இலக்கணம் தாங்கள். பொறுமையில் இமயமாக திகழ்கிறீர். உங்களை துக்கத்துக்கு ஆளாக்கிய விஸ்வாமித்திரர் மேல் உங்களுக்கு துளியும் வருத்தமோ, கோபமோ இல்லை. நடப்பதை எல்லாம் வினைவழிச் செயல்பாடாக கருதி அப்படியே ஏற்றுக்

கொள்கிறீர். இதெல்லாம் உத்தம லட்சணங்கள். இதில் எதுவும் என்னிடமில்லை. ஆனால், எனக்கோ உங்களைப் போல ஒரு பிள்ளை வேண்டும் என்று என் மனம் விரும்புகிறது. எனவே, என் மனைவியோடு தாங்கள் கூடி எனக்கு உங்களைப் போல ஒரு பிள்ளையை தர வேண்டும். இஷ்வாகு குலமும் அதனால் மாண்பு பெற வேண்டும்," என வேண்டுகிறான் கல்மாஷ பாதன்.

சந்ததி விருத்திக்காக பிரம்மரிஷிகளிடம் கூடுவதை அன்றைய யுகதர்மம் ஏற்றுக் கொண்டிருந்தது. பிரம்ம ரிஷிகளும் அதை ஒரு வரமாகக் கருதி அளித்தனர். இங்கே அற்பமான காம சுகத்துக்கோ, கற்பு நெறிக்கு கேடோ இதனால் இல்லை. வசிஷ்டரும் கல்மாஷபாதன் கேட்ட வரத்தைத் தந்தார். காலநேரம் கணித்து அவளுடன் கூடினார்.

'அஸ்மகன்' என்னும் ஒரு ராஜரிஷி பிறந்தான்.

இவனாலே இஷ்வாகு குலம் தழைக்கத் தொடங்கியது. இந்த நேரத்தில், வசிஷ்டரின் மருமகளான அதிருஸ்யந்திக்கும் ஒரு பிள்ளை பிறந்தது. இந்த பிள்ளை தான் புகழ்பெற்ற பராசர மகரிஷி. இவரால் தான் இமய மலையின் வலது பாகத்தில் ஒரு அழியாத அக்னி இன்றும் எரிந்து கொண்டு இருப்பதாக கூறுவார்கள். 'வடவாக்னி' என்று இதற்கு பெயர். இதனால் தான், அங்கே வெந்நீர் ஊற்றுகள் உருவாகி ஓடியபடி இருக்கின்றன.

இந்த வடவாக்னி பராசரரால் எப்படி உருவானது தெரியுமா?

தனது பேரன் பராசர் மேல் மிகுந்த பாசத்தோடும் அன் போடும் இருக்கிறார் வசிஷ்டர். பராசரரும் வசிஷ்டரை தந்தையாகக் கருதி 'அப்பா' என்றே அழைக்கிறார். பரா சரரின் இந்தப் போக்கு, தாயான அதிருஸ்யந்தியை உறுத்துகிறது.

"மகனே பராசரா! இவர் உன் தந்தையல்ல... உன் தந் தையின் தந்தை. உனது பாட்டன். பாட்டனைத் தந்தை என்று அழைப்பது தகாது," என்கிறாள் அதிருஸ்யந்தி.

"அப்படியென்றால் என் தந்தை எங்கே?" என பராசரர் கேட்கிறார். அந்தக் கேள்விக்கான பதிலை அதிருஸ் யந்தியும் சொல்லி முடிக்கிறாள்.

அப்படி சொல்லும்போது, 'விஸ்வாமித்திரர் தான் குற்ற வாளி அவர் உன் தந்தையை மட்டுமல்ல, உன் தந்தை யோடு பிறந்த உடன்பிறப்புக்களையும் ஒருவர் விடா மல் அழித்து விட்டார். அவ்வளவு பேரும் நரமாமிசமாக ஆகிப் போனார்கள். வசிஷ்ட வாரிசுகள் ஒரு பிசாசுக்கு உணவாகிப் போவது எத்தனை பெரிய சாபக்கேடு?" என்று சொல்லி கண்ணீர் விடுகிறாள்.

உடனே, பராசரரிடமோ கோபாக்னி கொழுந்து விடத் தொடங்குகிறது.

"தாயே... இது கொடுமையிலும் கொடுமை. பிரம்மரிஷி எனப்படும் விஸ்வாமித்திரர் செய்திருப்பது மன்னிக்க முடியாத குற்றம். இப்படிப்பட்டவரை உயிரோடு நடமாட விடுவது கோழைத்தனமான செயல். அவரைக் கண்டிக் காமல் போற்றும் இந்த உலகையும் அழித்து விடுவதே சரியான செயல்பாடு. எனவே, என் தவத்தால் இப்பூ

வுலகம் மட்டுமின்றி எல்லா லோகங்களையும் சர்வநாச மாக்கி விட்டே இனி நான் அடங்குவேன்," என்று பராசரர் புறப்படுகிறார்.

'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காகி விட்டதை' அதி ருஸ்யந்தியால் உணர முடிந்தது.

"மகனே... கோபம் உனக்கு ஆகாது. விஸ்வாமித்திரர் செய்த தவறுக்கு உலகை நாசமாக்க துணிவது துளி யும் சரியல்ல..." என வாதிடுகிறாள். ஆனால், பராசர ரின் கோபத்தின் முன் அது எடுபடவில்லை. இறுதியில் வசிஷ்டரே பராசரரின் கோபத்தை தவிர்க்க முன்வருகி றார்.

'பெயரனே...! உன் கோபம் நியாயமானது. ஆனால், கோபம் மிகவும் பெரிய சத்ரு. அதனால், நன்மையை விட, தீமையே அதிகம். எனவே, உன் கோபத்தை அடக்கு. என்னாலும் கோபப்பட்டு விஸ்வாமித்திரரை அழித்திருக்க முடியும். ஆனால், அப்படிச் செய்வது அரச னுக்குரிய செயலாகும். ஒரு பிரம்மஞானி

காரணமில்லாமல் காரியமில்லை என்பதை உணர்ந்த வன். அந்த காரணமும் நம் பொருட்டே உருவாகியிருக் கும். அதை உணர பொறுமையும், ஞானமும் வேண்டும். அறிவினால் புலன்களுக்கு புலனாவதையே அறிய முடி யும்.

அந்த அறிவாகிய மனதை அடக்கி புலன்களை வென் றாலே ஞானம் வசமாகும். ஞானம் வசமானால் அனைத் துக்கும் காரணம் புரியும். காரணம் புரிந்து விட்டாலே மனது சமாதானமாகி விடும். நான் கூட சமாதான மற்

றும் தற்கொலைக்கெல்லாம் கூட துணிந்தேன். ஆத்ம ஹத்தி எத்தனை கொடிய பாவம் எனத் தெரிந்தும் அதற்கு முனைந்தேன். ஆனால், பிறகே ஒரு பிரம்மரி ஷியால் தற்கொலை செய்து கொள்ள முடியாது என்பது தெரிந்தது.

அந்த துக்கத்தில் நீ உன் தாயின் கருவில் இருப்பதை விட, நான் உணராது போய் விட்டேன். உனக்கு இப் போது புத்தி சொல்லும் என்னையே புத்திரசோகம் கண் களை மறைத்து விட்டது. எனவே, மானுடர்களை ஆட் கொள்ளும் மாயா உணர்வுகளை அடக்கி அதை வென் றிட முயல்வதே உத்தமம்," என்றார் வசிஷ்டர்.

"ஐயனே! தங்கள் உபதேசம் கேட்பதற்கு இனிதாக உள் ளது. ஆனால், நம்மை நாம் மேம்படுத்திக் கொள்வதற் காக, ஒரு தீமையை அதன் போக்கில் போக விடுவது எந்த வகையில் சரி! இதனால் தானே சிவா, விஷ்ணு, பிரம்மா என்னும் மும்மூர்த்திகளும் கூட கையில் ஆயு தங்களுடன் உள்ளனர்.

அன்பே வடிவான தெய்வத்துக்கு ஆயுதம் தேவை யில்லை. ஆனால், தெய்வங்களே ஆயுத பாணிகளாக இருக்கக் காரணம் அரக்கத்தை அழித்தால் மட்டுமே தேவத்தை வாழ வைக்க முடியும் என்பதால் தானே?" என்று பராசரர் திருப்பிக் கேட்கவும் வசிஷ்டரால் பதில் கூற முடியவில்லை. இருந்தும் அவருக்கு அவ்வேளை யில் அவுர்வர் நினைவு வந்தார். அவுர்வரின் கதை பராச ரரின் கோபத்தை தணிக்கும் என்று வசிஷ்டர் நம்பினார்.

"பெயரனே! உன்னைப் போல கோபாக்னி வசம் அகப் பட்ட அவுர்வர் என்ற ரிஷியின் வரலாற்றைச் சொல்கி

றேன் கேள். இதைக் கேட்டால் நிச்சயம் உன் சினம் தணியும்."

அவுர்வரின் கதையை ஆரம்பித்தார் வசிஷ்டர்.

பிருகு வம்சத்து அரசன் கிருதவீர்யன், தன் அவையில் இருந்த பார்க்கவ குலத்தவரைக் கவுரவப்படுத்தி ஏராள மாய் தானம் தந்தான். பார்க்கவர்கள் அதை சேமிப்பதற் காக புதைத்து வைத்தனர். இந்நிலையில் கிருதவீர்யன் இறந்து போனான். பின்னால், அரசபதவிக்கு வந்தவர்க ளுக்கு ஒரு கட்டத்தில் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட் டது.

எனவே, அவர்கள் பார்க்கவர்களிடம் திரும்பக் கேட் டனர். பார்க்கவர்களோ, தானமாய் தந்ததை திரும்பக் கேட்பது கேவலம் என்றனர். இதனால், கோபப்பட்ட பிருகுவம்ச அரசன் பார்க்கவ குலத்தை அழிக்க தீர்மா னித்தான். ஒரு கர்ப்பவதியைக் கூட விடாமல் அழிக்க முனைந்தான். அவர்களில் மிக அழகிய தொடை களை உடைய ஒருத்தி கர்ப்பமாக இருந்தாள். அவளை அழிக்க வீரர்கள் வரவும், அவள் கர்ப்பம் கலைந்து குழந்தை வெளியே வரப் பார்த்தது.

ஆனால், அவளோட அக்குழந்தையை வலிமையான அழகிய தொடையில் வாங்கித் தாங்கிக் கொண்டாள். அது ஒரு அபூர்வ கர்ப்பம்! அந்தக் குழந்தை தாயின் கர்ப்பத்தில் இருந்தபோதே, வேதம் சொன்னதோடு பிரம்ம தேஜசோடு விளங்கியது. அந்த பெண்ணும் அந்த குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்த குழந்தை தான் 'அவுர்வர்'. அந்த குழந்தை சூரியனைப் போல பிரகா சித்தது. அதைக் கொல்ல வந்த ராஜாங்கத்து வீரர்கள்,

குழந்தையின் தேஜசை (ஒளியை) பார்க்க முடியாமல் கண்களை இழந்து விட்டனர்.

கண் பார்வை இழந்த வீரர்கள், அவுர்வரிடமே கெஞ்சினர். ஆனால், அவர் மன்னிக்கத் தயாராக இல்லை. அவர் பிருகு வம்சத்தை மட்டுமல்ல, சர்வலோகங்களையும் அழிக்க தயாரானார். பிரம்மஞானியான அவர் கோபிக்கக்கூடாது என்று அவருக்கு சிலர் அறிவுரை வழங்கினர். அப்படி வெளிக்காட்டியே தீர வேண்டுமானால், அந்த கோபாக்னியை சமுத்திரத்தில் விடும்படியும், நெருப்பை நீர் விழுங்கி விடும் என்றும் கூறினர். அவுர்வரும் தன் கோபத்தை சமுத்திரத்தில் விட்டார்.

அது குதிரை தலை போலாகி, 'அஸ்வமுகாக்னி' என்ற பெயரில், சமுத்திரத்தை இன்றும் குடித்தபடியே இருக்கிறது," என்று வசிஷ்டர் அவுர்வர் வரலாற்றைக் கூறி முடித்தார்.

உடனே பராசரரும் தன் கோபத்தை இமயத்து பனியில் விட்டார். அதுவே அக்னி நீரூற்றுகளோடு கொதித்தபடி உள்ளது. அதுவே 'வடவாக்னி' எனப்படுகிறது. பராசரர் தன் கோபத்தை கைவிட்ட போதிலும், ராட்சஷர்களை அழிக்க 'ராட்சஷ ஸத்ரம்' என்னும் யாகம் செய்தார்.

அப்போது, புலஸ்தியர் என்னும் மகரிஷி அதை நிறுத்தச் சொன்னார்.

"உன் முன்னோர் அழிந்தது விதிப்பயன். இருப்பினும், அவர்கள் இப்போது சொர்க்கத்தில் உள்ளனர்," என்று சமாதானப்படுத்திய பிறகு தான் பராசரருக்கு கோபம் முற்றிலும் அடங்கியது.

இப்படியாக கந்தர்வன் அங்கராபர்ணன் துவக்கிய வசிஷ்டர் கதை, பராசரர் வரை வந்து நிறைவு பெற்றது. அங்கராபர்ணன் ஏற்கனவே சொன்ன ஆலோசனைப் படி, தாங்கள் செல்லும் வழியில் யட்சர்கள் முதலானோ ரிட மிருந்து தப்பிக்க தவுமியர் என்னும் அந்தணரை குருவாகக் கொண்டனர்.

இவர் கங்கைக்கு அப்பாலுள்ள உத்கோசம் என்ற இடத் தில் வசித்தார். இந்த சமயத்தில் துருபதன் தன் மகள் திரவுபதிக்காக சுயம்வரம் ஏற்பாடு செய்திருந்த தகவல் தவுமியருக்கு வந்தது. அதுபற்றி அவர் பாண்டவர்களி டம் கூற, அவர்கள் பாஞ்சால நாடு சென்றனர். துருப தன் இந்த சமயத்தில் ஒரு கணக்கு போட்டிருந்தான். தன்னை கட்டி இழுத்துச் சென்ற அர்ஜுனனின் வீரம் அவனை மிகவும் கலவரப்படுத்தியிருந்தது.

அதனால், அவனைப் போன்ற வீரர்கள் எதிரிகளாக வெளியே இருப்பதை விட தனக்கு உறவாக உள்ளே இருப்பது தான் உத்தமம் என்று தோன்றியது. இதற் காக போட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தான். ஒருவில் லும், சுழலும் பொறியும் அவனிடம் இருந்தது. வில்லைக் கொண்டு பொறியிலுள்ள கிளி பொம்மையை நேரில் பார்க்காமல், கீழேயுள்ள ஜலத்தில் உள்ள பிம்பத்தை வைத்தே வீழ்த்த வேண்டும்.

இதை அர்ஜுனனால் மட்டுமே செய்யமுடியும் என்பதை அவன் அறிந்திருந்தான். பாண்டவர்கள் அங்கு என்ன தான் நடக்கிறது என்று அறிய விரும்பியே சென்றிருந்த னர். அவர்கள் எதிர்பார்த்த படியே, பெரும் கூட்டம் வந் திருந்தது. திரவுபதியின் சகோதரன், திருஷ்டத்துய்மன்

அங்கு வந்திருந்தவர்களின் பெயர்களை வரிசையாகச் சொல்லத் தொடங்கினான்.

துரியோதனன், துர்விஷகன், துர்முகன், துஷ்பிரதர்ஷணன், விகர்ணன், ஸஹன், துச்சாதனன், வாயுவேகன், பீமவேகன், உக்ராயுதன், பலாகி, கனகாயு, விரோசனன், குண்டகன், சித்ரசேனன், கர்ணன் என்று கவுரவர்கள் பெயர்களை சொல்லி முடித்தான்.

சகுனி, வ்ருஷசன், அஸ்வத்தாமன், போஜன், பிருகந்தன், மணிமான், தண்டதாரராஜன், ஸஹதேவன், ஜயத்சேனன், மேகசந்திராஜன் என்று 20 பேர் பெயரை சொன்னான். அடுத்து துவாரகாதிபதி கிருஷ்ணன், பலராமன், ருக்மணி புத்திரனான பிரத்யும்னன், ஜாம்பவதி புத்திரனான சாம்பன், பிரத்யும்ன புத்திரனான அனிருத் என்று யாதவர்கள் பெயரை சொன்னான்.

அடுத்து மகாரதன் சல்லியன், சிந்து தேசாதிபதி தேத்ரதன், ப்ருஹத்ரதன், பாஹ்லீகன், உலூகன், சித்ராங்கதன், சுபாங்கதன், கோசல தேசாதிபதி சிசுபாலன், ஜராசந்தன் என்று எல்லார் பெயர்களைச் சொல்லி அவர்களது பிரதாபத்தைக்கூறிமுடிக்கவே, அரைநாளைக்கும் மேலாகி விட்டது.

அடுத்து என்ன நடக்கப் போகிறது.

ஒவ்வொரு அரசராக வந்தார்கள். அவர்களில் வில்லைக் கூட சிலரால் தூக்கிப்பிடிக்க முடியவில்லை! கித்தாப்பாக துரியோதனன் வந்தான். வில்லைப் பிடித்து நாணைக் கூட மீட்டிவிட்டான் ஆனால், அம்பு இலக்கைத் தாக்காமல் பின்னே சென்று தாக்கியது. அதைப்

பார்த்து அவையும் சிரித்தது. கூடவே திரவுபதியும் சிரித்தாள். இறுதியாக எல்லோராலும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கர்ணன் வந்தான்.

அர்ஜுனனுக்கு இணையானவன் என்று கருதப்பட்ட கர்ணன், வந்தவிதமும் சரி, வில்லை எடுத்து நாணைப் பூட்டிய விதமும்சரி! துருபதனையே அது வியக்க வைத்தது. ஒருவேளை கர்ணன் வென்று விடுவானோ என்றுகூட நினைக்கத் தோன்றியது. ஆனால், அவன் இலக்கும் தவறியது. அதேவேளையில் பிராமண வேஷத்தில் தவுமியரோடு வந்து ஒரு ஓரமாக நின்று சுயம்வரப் போட்டியைப் பார்த்தபடி இருந்த பாண்டவர்களில் அர்ஜுனனின் கைகள் பரபரத்தது.

அப்போது தர்மரும் பீமனும் தவுமியரிடம், "அர்ஜுனனுக்கு இந்த சுயம்வரத்தில் பங்கு கொள்ள அனுமதி உண்டா? என்று திருஷ்டத்துய்மனிடம் கேளுங்கள்," என்றனர்.

தவுமியரும் முன் சென்றார். மான்தோலால் ஆடை அணிந்த பிராமண கோலத்தோடு முன் வந்த அவர், "திருஷ்டத்துய்மா... இந்த சுயம்வரத்தில் க்ஷத்திரியர்களுக்கு மட்டும் தான் பங்கா? என் போன்ற பிராமணர்களுக்கு இடம் கிடையாதா?" என்று ஆரம்பித்தார்.

தவுமியருடைய கேள்வி அந்த மொத்த அவையையே ஆச்சரியப்படுத்தி விட்டது. தொடர்ந்து பலர் முகத்தில் கேலிப்புன்னகை சிலர் வாய்விட்டும் சிரித்தனர். ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கோபித்தார் தவுமியர்.

"இல்லை! ஆயகலை அறுபத்து நான்கையும் கற்ற க்ஷத்திரிய வீரர்களே கலகலத்துப் போய் நிற்கும் இந்த இடத்தில், வேதம் படித்து யோகத்தில் அமர வேண்டியவருக்கு இப்படி ஒரு ஆசையா என்று எண்ணினோம் அது தான் சிரிப்பு வந்து விட்டது." என்றார் ஒரு அரசர்.

"இந்த வியாக்யானமெல்லாம் தேவையில்லை! இந்த சுயம்வரம் க்ஷத்திரியர்களுக்கு மட்டுமா இல்லை எல்லோருக்குமா?" ஆணித்தரமாக கேட்டார் தவுமியர்.

அடுத்த நொடியே திருஷ்டத்துய்மன் துருபதனை பார்த்தான். துருபதனும் தன் ஆசனத்தில் இருந்து எழுந்தவனாக எனக்குத் தேவை இந்த வில்லில் நாணேற்றி குறியை வீழ்த்த முடிந்த ஒரு பராக்கிரமசாலி. அவர் யாராகவும் இருக்கலாம்," என்றான்.

"அப்படியானால் எனது சீடன் இந்த போட்டியில் பங்கேற்கலாமா?"

தவுமியர் கேட்க அர்ஜுனன் முன்வர அவையிடம் ஒரு அசாத்ய அமைதி. பிராமண வேடத்தில் அச்சு அசலாக மாறியிருந்த அர்ஜுனனை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை. போட்டி மீண்டும் தொடங்கியது. அர்ஜுனன் அவைப் பிரவேசம் செய்து வில்லருகே வந்து நின்ற கோலமே திரவுபதியை பெரிதும் கவர்ந்துவிட்டது.

அர்ஜுனன் வில்லை எடுத்தான். நாணை ஏற்றினான். பார்வை கீழே ஜலத்தாரையைப் பார்த்து மேலே சுழலும் பொறியில் உள்ள கிளிக்கு குறிவைத்தன. அவையிடம் அமைதியான அமைதி. திரவுபதி துடிக்கும் இதயத்தோடு அந்தக் காட்சியை பார்த்திட அர்ஜுன பாணத்

தால் கிளி பொம்மை தாக்கப்பட்டு விழுந்தது. அவை யில் வீரத்தை மெச்சும் நல்ல குணமுடையார் அடுத்த க்ஷணம் கைதட்டி ஆர்பரித்தனர். அதேசமயம் துரியோ தனன், சகுனி, சல்லியன், ஜயத்ரதன் உள்ளிட்ட அவ்வ ளவு பேரிடமும் பெரும் திகைப்பு ஆத்திரம்... ஒரு பிராம ணனிடம் இப்படி ஒரு வீரமா? என்கிற அந்த திகைப்பு.

அவர்களுக்கு மட்டுமல்ல... துருபதனுக்கும் தான். ஆனாலும் ஒரு பராக்ரமசாலி தான் தேவை என்று அறி வித்திருந்ததால் திரவுபதி அர்ஜுனனுக்கு மாலையிடுவ தையோ, அவன் மனைவியாளாக அவள் மாறியதையோ தடுக்க முடியவில்லை.

பாரதத்தின் இந்த சுயம்வரம் பற்றி எல்லோரும் தெரிந் திருக்கலாம். ஆனால் இதைத் தொடர்ந்து அர்ஜுன னுக்கு மாலையிட்ட திரவுபதி இதன்பின் பாண்டவர் கள் ஐவருக்கும் எப்படி மனைவியாகிறாள் என்பதுதான் நுட்பமாக தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு விஷயம். சுயம்வரப் பரிசாக அடைந்த திரவுபதியை தங்களோடு அழைத்துக் கொண்டு தாங்கள் தங்கியுள்ள குயவனு டைய குடிசைக்கு திரும்புகின்றனர் பாண்டவர்கள்.

அவர்களை திருஷ்டத்துய்மன் ஒருபுறமும் கிருஷ்ண னும் பலராமனும் கூட மறுபுறம் பின் தொடர்கிறார்கள். குடிசை வாசலில் திரவுபதியோடு அர்ஜுனன் பீமன் நகுல சகாதேவர்கள் நின்று விட தர்மர் மட்டும் உள்ளே செல் கிறார். குந்தியிடம் திரவுபதி பற்றிக் கூறி அவளாலேயே திரவுபதியை குடிசைக்குள் அழைக்க வேண்டும் என் பது அவர் எண்ணம்.

தர்மரை பார்த்த குந்தி, "வந்துவிட்டீர்களா... எங்கே மற்ற பிள்ளைகள்?" என்று கேட்கிறாள்.

"ஒரு அபூர்வமான பிக்ஷையோடு வந்திருக்கிறோம் அம்மா. அந்த பிட்சையோடு அவர்கள் வெளியில் நிற்கி றார்கள்," என்கிறார் தர்மர்.

"அபூர்வமான பிக்ஷையா? எதுவாக இருந்தால் என்ன? ஒற்றுமையாக நீங்கள் அதை புசிப்பது தான் உத்தமம். எங்கே அந்த பிட்சை?" என்று குந்தி கேட்க, அர்ஜு னன் திரவுபதியுடன் குடிசைக்குள் நுழைகிறான். குந்தி யும் அந்த அழகியைப் பார்த்து பூரித்துப் போகிறாள்.

அவள் கைகளை வாஞ்சனையுடன் பற்றியபடி, "இந்த பேரழகியையா பிக்ஷை என்றீர்கள் இவளை பிக்ஷையிட் டது யார்?" என்றும் கேட்கிறாள்.

"அம்மா! இவள்திரவுபதி! பாஞ்சால நாட்டு இளவரசி. இவளை அர்ஜுனன் சுயம்வரத்தில் வெற்றி கொண்டுள் ளான்" என்று தர்மர் கூறிட அங்கே தான் திரவுபதிக் கும் தான் மாலையிட்டது அர்ஜுனனுக்கு என்பது தெரிய வருகிறது.

அதேசமயம் குந்தியிடம் அதிர்ச்சி. காரணம் கேட்கிறார் தர்மர்.

"இவளை நேரில் பார்க்காமல் நீங்கள் ஐந்து பேரும் பிக்ஷை உணவை பிரித்து உண்பது போல் உண்ணுங் கள் என்று கூறி விட்டேன் அதை எண்ணியே கலங்குகி றேன்."

"அதனால் என்ன... அறியாமல் கூறியது எப்படி பிழை யாகும்? பிழையாகிவிடக் கூடாது என்பதே என் எண்ண மும் கூட... இந்த பிராமணவேடம் தற்காப்புக்கு போட் டுக் கொள்ளப்பட்டது என்ற போதிலும் அந்த அனுஷ் டானங்களில் தான் இப்போது நாம் உள்ளோம். இந்த நிலையில் வெளியே இருந்து கொண்டு வரப்படுவதை பங்கிட்டுத் தருவதே என் கடமை."

"தர்மா! நீயும் என்னிடம் இவளை பிட்சை என்றே குறிப் பிட்டாய். பிட்சை என்றாலே அது ஐவருக்குமானது தான். நீயும் பிட்சை என்றாய். நானும் பகிர்ந்து உண்ணுங்கள் என்று கூறி விட்டேன். இங்கோ அப்படி நடந்து கொள்ள இடமில்லாத ஒரு நிலை! தர்மா! உன் வார்த்தை... என் வார்த்தை என்று இரண்டும் பொய்யாவது தவறு தானே! அப்படி ஒரு தவறு இவள் வந்த நேரத்தில் நடந்து விட்ட தும் பெரிய தவறு தானே!"

குந்தி பெரிதும் கலங்கிடும் போது அங்கே கிருஷ்ண பல ராமர்களின் விஜயம் நடக்கிறது!

கிருஷ்ணரையும், பலராமரையும் பார்த்த குந்திக்கும் பாண்டவர்களுக்கும் அதிர்ச்சி... அதே சமயம் மகிழ்ச்சி. பாண்டவர்களைத் தொடர்ந்து வந்திருந்த திருஷ்டத் துய்மனும் ஒளிந்து கொண்டு குடிசைக்குள் நடப்பதை காணத் தொடங்குகிறான்.

கிருஷ்ணர் குந்தியை வணங்கி, "என்ன அத்தை... நலமா?" என்று கேட்க, "எங்களை எப்படி அடையாளம் கண்டீர்கள்?" என்று கேட்கிறார் தர்மர்.

"உங்களை நாங்கள் உணர்ந்தது போல், பிறர் உணர்ந் திருக்க வாய்ப்பில்லை. ஏன் என்றால் இந்த பிரா மண வேடம் அவ்வளவு அழகாக உங்கள் ஐவருக்கும் பொருந்தியுள்ளது" என்றார் பலராமர்.

அர்ஜுனன் ஏற்கனவே கிருஷ்ணன் பற்றி, துரோணர் சொல்லிக் கேட்டிருக்கிறான். மகாசக்தி மிகுந்த அக்னி அஸ்திரத்தை அர்ஜுனனுக்கு துரோணர் தந்தபோது, அவனைப் புகழ்ந்து பலவாறு பேசியிருந்தார்.

'யாதவ தலைவனான கிருஷ்ணனை நீ பார்க்கும் போது கெட்டியாக பிடித்துக் கொள். அவன் தோற்றத்தில் தான் அரசன். ஞானக்கண் கொண்டு பார்க்க முடிந்தவர்க்கு அவன் பரந்தாமன். இந்த கிருஷ்ண தோற்றம் ஒரு அவ தாரம். மறந்து விடாதே!" என்று அவர் அவனிடம் சொல் லியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

அந்த ஞாபகத்துடன் கிருஷ்ணன் அருகில் சென்றவன், தீர்க்கமான பார்வையுடன், "பரந்தாமனுக்கு என் வந் தனங்கள்" என்றான். கிருஷ்ணனும் தழுவிக் கொண் டான். இந்த தழுவலில் தொடங்கிய நட்பு, பாரத காலம் முழுக்க தொடர்ந்தது. திரவுபதியும் கிருஷ்ணனை வணங்கினாள். கிருஷ்ணனும் ஆசிர்வதித்தார்.

அப்படியே, "திரவுபதி ஒருவகையில் நீ எனக்கு சகோ தரி. நான் உனக்கு அண்ணன். உனது பிறப்பின் போது உனக்கு தேவர்கள் சூட்டிய பெயர் என்ன தெரியுமா?" என்று கேட்க திரவுபதியும், "கிருஷ்ணை தானே" என்று கேட்டாள்.

"கரிய கருப்பனான நான் கிருஷ்ணன். கருப்பியான நீகி ருஷ்ணை! ஆனால், தீயில் பூத்ததால் பொன்னிறப் பொலிவோடு திகழ்கிறாய்" என்றான் கிருஷ்ணன்.

"இப்பிறப்பில் உங்களை நான் அண்ணனாக அடைவ தில் மகிழ்ச்சி கொள்கிறேன் அண்ணா" என்றாள் திரவு பதி.

ஒருவரோடொருவர் பேசி மகிழ்வதை ஒளிந்து பார்த்த திருஷ்டத்துய்மனுக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

தன் சகோதரி சேர வேண்டியவனிடம் தான் சேர்ந்திருக் கிறாள்.அர்ஜுனன் மணக்க வேண்டும் என்பது தானே துருபதனுக்கும் விருப்பம்! அந்த விருப்பம் ஈடேறி விட் டது என உணர்ந்தான்.

அப்போது குந்தி கிருஷ்ணனிடம், "கிருஷ்ணா... சரியான நேரத்தில் தான் நீ வந்திருக்கிறாய். இங்கே இப்போது ஒரு குழப்பமான சூழல் உருவாகி விட்டது. நீ தான் அதை தீர்க்க வேண்டும்'' என்றாள்.

"என்ன குழப்பம் அத்தை?"

"திரவுபதியோடு என் புத்திரர்கள் ஒன்றாக வருவார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை. அப்படி வந்த நிலையில் தர்மன் என்னிடம் இன்று புதுவித பிட்சையுடன் வந்தி ருக்கிறோம் என்றான். அவன் பிட்சை என்று குறிப்பிட் டது திரவுபதியை... நானோ ஐவருமாக அதை புசியுங்கள் என்று கூறிவிட்டேன் "

"புரிகிறது அத்தை... திரவுபதியோ ஒருத்தி! உண்ணும் உணவுமல்ல அவள்... பாகம் போட்டு பிரித்திட... அதே

சமயம் சொன்ன சொல்லும் தவறி விடக் கூடாது என்று விரும்புகிறாய்..."

"ஆம்... என் வாக்கு கூட பிச்கலாம். தர்மன் வாக்கு தவறவே கூடாது. திரவுபதியை பிட்சையாக கருதுவது தர்மமா கண்ணா?" குந்தி கேட்டாள்.

"தாயே... இதற்காக வருந்தத் தேவையில்லை. திரவுப தியை பந்தயப் பொருள் போல, வென்றே அழைத்து வந் திருக்கிறேன். அதனால், 'பிட்சை ' என தர்மரண்ணா கூறியது நாப்பிசகு அல்ல" என்றான் அர்ஜுனன்.

"அர்ஜுனா... உன் கோணம் ஒரு விதத்தில் சரிதான். ஆனால், திரவுபதி யோனி வழி பிறந்த மானிடப் பிறப் பல்ல. யாகத் தீயில் வந்தவள். தெய்வீகத் தொடர்பு இருந்தாலன்றி இது சாத்தியமில்லை. அவளை பிட்சை என்பது எப்படி சரி?" இதை பலராமர் கேட்டார்.

அங்கே சர்ச்சை ஆரம்பமானது.

"பிட்சை என்றாலும் சரி இல்லாவிட்டாலும் சரி. திரவு பதி அர்ஜுனனால் அடையப்பட்டவள். எனவே, அவனே அவளுக்கு கணவன்" என்றான் பீமன்.

அர்ஜுனனோ அதைக் கேட்டு திகைத்தான்.

"என் சகோதரர்கள் நீங்கள் இருக்க எனக்கு திரும ணமா? நடக்காது... நான் வீரப்பரிசாக அடைந்த திரவு பதியின் விருப்பமே என் விருப்பம்" என்றவன் திரவுபதி யிடம், "நங்கையே... நீ அபூர்வமானவள். உன்னை அடி மையாக கருதுவது தவறு. உன் விருப்பத்தைச் சொல்" என்றான்.

திரவுபதியோ அதிர்ச்சி அடைந்தாள்.

"சுயம்வரத்தில் மாலையிட்ட போதே உங்களுக்கு உரிய வளாகி விட்டேன். எனக்கென தனி விருப்பமே கிடை யாது" என்றாள்.

"அப்படியானால் நீ தர்மரண்ணாவை மணந்து கொள். மூத்தவரான அவருக்கே முதலில் மணமாக வேண்டும்" என்றான் அர்ஜுனன்.

"அர்ஜுனா... நான் 'பிட்சை' என்று சொன்னேன். தாயோ புசிக்கச் சொல்லி விட்டாள். நாங்கள் இருவர் சொன்ன சொல்லும் பொய்யாவது பாவமாகி விடும். தவறோ சரியோ... சொன்ன சொல் நின்றாக வேண்டும். அதன் படி, எனக்கு மட்டுமல்ல! ஐவருக்கும் உரியவளே திரவு பதி" என்றார் தர்மர்.

"தர்மபுத்திரரே... இனி இதில் மாறுபாடில்லை. அர்ஜு னனும், அண்ணனான உமது சொல்லை வீண் பேச்சா கவோ, இல்லை... அவசரப் பேச்சாகவோ, சராசரி மனி தர்களின் பேச்சு போல ஆக விடமாட்டான். எனவே, அர்ஜுனனால் சுயம்வரத்தில் வெல்லப்பட்ட திரவுபதி ஐவர்க்குமே உரியவளாகிறாள். நீங்கள் தோற்றத்தில் ஐவராக தெரியலாம். ஆனால், ஒவ்வொரு வருக்குள் ளும் மற்ற நால்வரும் நீக்கமற இருப்பதால், உங்களை ஒருவராக கருதுவதில் தவறில்லை! அத்தை... நீயும் குழம்பாதே. திரவுபதி வந்த வேளை வெற்றிப் பொழு தாக அமையட்டும்," என்று கூறிய கிருஷ்ணனும் அதை ஆமோதித்த பலராமரும் விடைபெற்றனர்.

திரவுபதியும் பாண்டவர்களின் கால்களில் விழுந்து வணங்கினாள். இதை கவனித்த திருஷ்டத்துய்மன் அரண்மனைக்குச் சென்று பார்த்ததை அப்படியே கூறிட, துருபதனிடம் திகைப்பு.

"தந்தையே... ஏன் மவுனமாகி விட்டீர்?"

"எனக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. அர்ஜுனனே திரவுபதிக்கு மணாளனாக வேண்டும் என விரும்பினேன். என் விருப்பப்படியே நடந்து முடிந்தது. ஆனால், என் முடிவு இப்படி ஒரு பெரும் சஞ்சலத்தை தரும் என எதிர்பார்க்கவில்லை "

துருபதன் கலங்கினான். பாவம்... அவனுக்கு உண்மையில் திரவுபதி யாரென்பது அவனுக்குத் தெரியாது.

உண்மையில் அவள் யார்? பாண்டவர்களைப் பின் தொடர்ந்து சென்று அங்கு நடந்ததை எல்லாம் பார்த்தும், காதாரக் கேட்டும் திரும்பியிருந்த திருஷ்டத்துய்மன், தந்தையான துருபதனிடம் அவ்வளவையும் கூறிய நிலையில் துருபதனிடம் பெரும் குழப்பம். தன் மகளாகிய திரவுபதியை சுயம்வரத்தில் வெற்றி கொண்டவன் பிராமண வேடத்தில் இருந்த அர்ஜுனன்! அம்மட்டில், தான் எதிர் பார்த்ததும் அர்ஜுனனையே...

ஆனால், அதே அர்ஜுனன் திரவுபதியை தன் சகோதரர்கள் நால்வருக்கும் கூட மனைவியாக இருக்க எப்படி சம்மதிக்கலாம்? அவனைக் கூட விட்டு விடுவோம்... திரவுபதி இதற்கு எப்படி ஒப்புக் கொள்வாள்? உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்காதா? துருபதனுக்குள் இப்படியாக

பல கேள்விகள். இப்படியே புழுங்கிக் கொண்டிருந்தால் அதனால் பயனில்லை.

நாமே நேரில் அவர்களோடு பேசி இந்த குழப்பத்தில் இருந்து விடுபட வேண்டும் என்கிற முடிவுக்கு வரும் துருபதன், திருஷ்டத்துய்மனிடம் அவர்களை

அரண்மனைக்கு விருந்துக்கு அழைத்து வருமாறு கூறு கிறான். திருஷ்டத்துய்மனும் அவ்வாறே செய்கிறான். குயவனின் குடிசையில் தங்கி இருந்தவர்கள் முன் சென்று, பாண்டவர்களையும் குறிப்பாக குந்தியையும் வணங்கும் துய்மன், திரவுபதியோடு அரண்மனைக்கு வரும்படி வேண்டுகிறான்.

அத்துடன், அவர்கள் யார் என்பது தெரிந்து விட்டதை யும், துருபதன் மகிழ்ச்சியுடன் இருப்பதையும் கூறியே அவர்களை அழைத்துச் செல்கிறான் அவர்களும் அரண்மனையை அடைந்திட, துருபதனே அவர்களை எதிர்கொண்டு வரவேற்று, அவர்களை தன் அரண்ம னையில் விருந்தினர்களாக தங்கிடப் வேண்டுகிறான்.

பின், அவர்களுக்கு விருந்து உபச்சாரம் செய்து முடித்த நிலையில் அர்ஜுனனுக்கும் திரவுபதிக்கும் அரண்ம னையில் அக்னி வளர்த்து முறைப்படி திருமணம் செய்து தருவது பற்றி பேச்செடுக்கவும், தர்மர், "திரவுபதி அர் ஜுனனுக்கு மட்டுமானவள் அல்ல. எங்கள் ஐவருக்கும் அவளே பத்தினி," என்கிறார்.

அந்த பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்த துருபதனும் தர்மரிடம், "இது அடுக்குமா? நியாயமா? இதைக் கேள்

விப் படும் ஊர் சிரிக்காதா?" என்றெல்லாம் திருப்பிக் கேட்கிறான்.

தர்மபுத்திரரோ, "என் வாக்கினால் தான் இப்படி ஆகி விட்டது. நான் பொய் சொல்பவனல்ல. என் தாயும், திரவு பதி ஐவர்க்குமானவள் என்னும் பொருளில் தான் பேசி னாள். எனவே என் வாக்கும் சரி... என் தாயின் வாக் கும் சரி... பொய்யாகி விடக் கூடாது. இதுவரை எங்கள் வாக்கு பிசகியதில்லை. அது தர்மத்துக்கு எதிரானதை பேசினதுமில்லை. இனியும் அது பேசப் போவதில்லை," என்கிறார்.

"அப்படியானால் ஒரு பெண் ஐவர்க்கு பத்தினியாவது என்பது தர்மம் சார்ந்ததா?" என்ற துருபதனின் கேள் விக்கு, "தர்மசங்கடமான கேள்வி. ஆனால், எங்கள் வரையில் இது தர்மம் தான்..." என்றார் தர்மர்.

இவ்வாறு சொன்னாலும், துருபதனும் விடுவதாயில்லை.

"தர்மம் என்ன ஆளுக்கு தகுந்தாற்போல் மாறுமா? அனு சுயை, நளாயினி, அகலிகை என்று ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்த பத்தினிப் பெண்கள் வாழ்ந்த வாழ்வு பொய்யா...? கற்புக்கு இதில் எங்கே இருக்கிறது இடம்?" என்றான்.

இந்தக் கேள்விக்கு பதில் கூறத் தெரியாமல், தர்மரும்த வித்திட, மற்ற பாண்டவர்களும் அதே தவிப்பை காட்டு கின்றனர். குந்தியிடமோ கண்ணீர்...!

"என் வாயிலே ஏன் இப்படி ஒரு வார்த்தை வந்தது? இது என்ன சோதனை? தவறான ஒரு வார்த்தையை தவ றாகப் பேசி விட நான் சாமான்யமானவளா? இல்லை.

இதன் மூலம் நான் சாமான்யமானவளாக ஆகி விட் டேனா?" என்று தனக்குள் பலவாறு கேட்டுக் கொள்கி றாள்.

அப்போது அனைத்துக்கும் விடிவாக வியாசர் வருகிறார்.

திரிகால ஞானியான அவரை துருபதனும் வரவேற்று உபசரித்து, தனக்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டை விப ரமாகக் கூறி முடிக்கிறான். வியாசர் அதைக் கேட்டு நகைக்கிறார்.

தர்மரோ "வியாசரே... இது என்ன சிரிப்பு? துருபதன் கேட்பதில் நியாயம் இருக்கிறது. அதே சமயம், தர் மப் பிசகான ஒரு சொல்லையும் நான் உதிர்ப்பதில்லை. இந்த நிலையில் என் பேச்சு தான் தவறாகி விட் டதா? இல்லை... எங்கள் ஐவருக்கும் உரியவள் திரவுபதி என்று நான் சொன்னது தான் சத்யமா? நீங்களே இதற்கு ஒரு தெளிவினை ஏற்படுத்த வேண்டும்" என்கிறார்.

குந்தியும் அவ்வாறே விண்ணப்பித்திட, வியாசர் இருவ ரையும் பார்த்துப் பேசத் தொடங்குகிறார்.

"உங்கள் இருவர் வாக்கிலும் பொய்யில்லை. தர்மர் வாக்கு எந்த நாளும் பொய்யாகாது. திரவுபதி உங்கள் ஐவர்க்கும் உரியவளே. இதில் திகைப்படையத் தேவை யில்லை" என்கிறார்.

துருபதனோ விளக்கமாக எடுத்துரைக்கச் சொல்கி றான். வியாசரும் சொல்லத் தொடங்குகிறார்.

"நான் சொல்வதை கவனமாக கேளுங்கள். மானுட வாழ்வு என்பது விதிவழியே செல்கின்ற ஒன்றே. இந்த

விதிப் பாட்டைக் கூட அவரவர்கள் தங்கள் செயல்களா லேயே தான் எழுதிக் கொள்கின்றனர். நன்மை எது... தீமை எது என்று சான்றோர்களால் பிரித்து கூறப்பட்டு விட்ட நிலையில், எடுத்து விட்ட பிறப்பில், நன்மைகளை மட்டும் செய்து, தீமையை ஒதுக்கி வெற்றி கண்டு முக் தியை அடைய வேண்டும் என்பதே பிறப்பின் நோக்கம். ஆனால், நன்மைகளை மட்டுமே செய்து வாழாமல், மதி மயக்கத்தால் சில தீமைகளையும் செய்து விட நேர்கி றது. அதனால், அந்த தீமைகளுக்கான தண்டனையை அடைய ஏதாவது ஒரு வடிவில் திரும்ப பிறக்க வேண்டி யுள்ளது.

தீமைகளுக்கான தண்டனைக்காக மட்டும் பிறப்பு ஏற்ப டுவதில்லை. சில நன்மைகளைச் செய்து விட்டு அதற் கான பரிசினைப் பெற்று இன்பமாக வாழ்ந்திடவும் திரும்ப பிறப்பெடுக்கிறோம். அதாவது நன்மை, தீமை இரண்டுமே பிறவித்தளையை தொடரச் செய்கின்றன.

இதனால் தான் இரண்டையும் செய்யாமல் நடுவுநிலை யில் கல்லைப் போல் அமர்ந்து தவம் செய்து வரசித்தி யாக மோட்ச கதியை கேட்டுப் பெறுகின்றனர் சில ரிஷி கள். ஒரு பிரம்மரிஷியான நானும் கூட, செய்த நன்மை தீமையின் பொருட்டே பிறப்பெடுத்து அதை தொடர்ந்த படி இருக்கிறேன். இன்று உங்களை எல்லாம் சந்தித்து இது குறித்துப் பேச நேர்ந்ததெல்லாமும் கூட விதியின் ஏற்பாடே.

நீங்கள் எல்லாரும் கூட முற்பிறப்பில் செய்த செயல்பா டுகளின் தொடர்ச்சியாகவே இப்போது பிறப்பெடுத்துள் ளீர்கள். அந்த வகையில் நீங்கள் எதன் காரணமாக பிறப்பெடுத்திருக்கிறீர்கள் என்றும் தெரிந்து கொண்

டால் உங்களுக்கு இங்கே எந்த குழப்பமும் ஏற்பட்டிருக் காது. நான் இப்போது அதைக் கூறுகிறேன்.

முதலில் திரவுபதி யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங் கள். பிறகு பாண்டவர்களாகிய நீங்கள் ஐவரும் யார் என் பதைக் கூறுகிறேன். திரவுபதி இப்பிறப்பில் யாகநெருப் பில் பூத்திருக்கலாம்.

ஆனால் முற்பிறப்பில் அவள் 'நளாயினி' என்னும் பெரும் கற்புக்கரசியாவாள்" என்கிறார். நளாயினி என்று சொன்ன மாத்திரத்தில் அனைவரிடமும் இன்ப அதிர்வு. திரவுபதியே ஒரு விநாடி. சிலிர்த்துப் போனாள். வியாசர் தொடர்கிறார்.

"இந்த நளாயினியின் கணவர் யார் தெரியுமா?" என்று கேட்க, அனைவரும் வியாசரைக் கூர்ந்து பார்த்திட 'அவரே மவுத்கல்ய ரிஷி" என்கிறார்.

மவுத்கல்ய ரிஷி என்ற பெயரைக் கேட்ட அனைவ ரும் வியாசரை ஆச்சரியத்துடன் பார்த்தனர். வியாசரும் தொடர்ந்தார். "இந்த மவுத்கல்ய ரிஷி கர்மவினையின் காரணமாக தொழுநோய்க்கு ஆளாகியிருந்தார். அவ ரின் அருகே சென்றால் துர்நாற்றம் வீசும். இருந்தாலும், நளாயினி கணவருக்கு பணி விடை செய்து வந்தாள். குறிப்பாக, கணவர் போஜனம் செய்தபின், அவனது எச் சில் இலையில் மனைவி சாப்பிடுவது தான் கற்புடைய பெண்டிர் செயல்.

நளாயினியும் அவ்வாறே செய்தாள். ஒருமுறை, அவ் வாறு சாப்பிடும்போது மவுத்கல்யரின் அழுகிய சுண்டுவி ரல், இலையில் உதிர்ந்து விட்டது. அதைக் கண்ட நளா

யினி கண்ணீர் சிந்தினாள். அவளின் பதிபக்தியைக் கண்ட மவுத்கல்யர், "நளாயினி... என் மேல் கொண்ட பாசத்தை எண்ணி வியக்கிறேன்.

உன்போல் ஒரு பெண்ணை எங்கு தேடினாலும் காண முடியாது. முனிவனான எனக்கு, இது கர்ம வினையால் வந்த பரிசு. நான் இதை அனுபவிக்க விரும்பியே இவ் வாறு உள்ளேன். நீயும் என்னோடு கஷ்டப்படுவதை அனுமதிக்க முடியாது. உனக்கு விருப்பமான வரத்தைக் கேள், "என்றார்.

அவளோ, "எப்போதும் நான் உம்மை நீங்கக் கூடாது. ஐந்து பூதங்களின் சேர்க்கைதானே இந்த உடல். இதன் நசிவால் தானே உங்களுக்கும் இந்தப்பாடு? நீங்களோ, கர்மத்தை அனுபவித்து தீர்க்க விரும்புவதாக கூறுகிறீர் கள்.

உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள். அதே சமயம் ஒரு பத்தினியாக உங்கள் தேகத்துக்கு சுகமளிக்கக் கடமைப் பட்டவளாவேன். பஞ்சபூதங்களால் ஆன உங் களின் இந்த உடம்பின் பஞ்ச பாகங்களுக்கும் நான் சேவை செய்து சுகமளிக்கவும் விரும்புகிறேன்," என் றாள். மவுத்கல்ய ரிஷியும் அந்த வரத்தை உடனே தந் தார். அதன் பின் அவர் பல வடிவங்களை எடுத்தார். அவர் மரமான போது நளாயினி அதில் படரும் கொடி யானாள். மலையான போது அருவியாக மாறி ஓடினாள். ஒரு கட்டத்தில் மவுத்கல்யருக்கு காமத்தில் சலிப்பு வந் தது. நளாயினிக்கோ இன்பமே பெரிதாகத் தோன்றியது.

அதனால், அவர் கோபம் கொண்டார்.

"நளாயினி... இனி நான் உன்னோடு மவுத்கல்யனாக கூட மாட்டேன். காம நெருப்பால் விரகத்தில் இருக்கும் நீ, நெருப்பிலேயே மறு பிறப்பெடுக்கும் காலம் வரும். அப்போது ஐம்பூத பிரதிநிதிகள் போல, ஐவர் உன்னை அடைவார்கள். என்னால் கிடைக்காமல் போன இன்பம், அப்போது கிடைக்கட்டும்," என்று கூறிச் சென்று விட்டார்.

நளாயினியும் வருத்தத்துடன் சிவனைக் குறித்து பஞ்சாக்னியின் மத்தியில் தவமிருந்தாள்.

சிவன் அவள் முன் தோன்றி, "இஷ்டமான வரத்தைக் கேள்" என்றார்.

அப்போது நளாயினி, "உத்தமமானபதியை அடைய வேண்டும். அந்த பதி நிகரில்லாத வீரபதியாக, விவேகபதியாக, தர்மபதியாக, பலசாலி பதியாக, ஞானியான பதியாக விளங்க வேண்டும்," என்று கேட்டாள்.

"அவ்வாறே அருளினோம்," என்றார் சங்கரனும்.

"அதாவது ஐந்து பதிகளைக் கேட்டாய். அளித்து விட்டேன்," என்ற பிறகே திரவுபதிக்கு வரத்தை கவனமாக கேட்க வேண்டும் என்ற தெளிவு ஏற்பட்டது.

அதே சமயம், ஐவரோடு எப்படி கற்புக்கரசியாக வாழ முடியும் என்ற கேள்வியும் எழுந்தது. அந்த நாளில் பதிவிரதா தர்மம் எது என்பதை நன்கு வரையறை செய்திருந்தனர். அதாவது ஒரு பெண்ணானவள், ஒரு ஆடவனைத் தான் கூடலாம். அதே சமயம், அவனால் புத்திரபாக்கியம் இல்லாமல் போனால், அந்த ஆடவனின் அனுமதியோடு புத்திர பாக்கியத்திற்காக இன்னொருவ

னுடன் கூடலாம். இதை மீறி மூன்றாவதாக ஒருவனுடன் ஒருத்தி சேர்ந்தால் அது பாவம்.

ஆயினும், பிராயச்சித்தம் செய்து கொள்ளலாம். இதை யும் மீறி, நான்காவது ஆடவனோடு ஒருத்தி சேர்ந்தால், அவள் பதிதையாகிறாள். அதுவே ஐந்தாகும் போது விப சாரியாகிறாள். மேற்கண்ட விதிப்படி, திரவுபதி விபசாரி யாக ஆகிவிடும் ஆபத்து இருப்பதை உணர்ந்து சிவனி டம், "இதனால் நான் விபசாரியாக வாழும் ஆபத்து உள் ளதே," என்றாள்.

சிவனோ, "நீ ஒருவனை மனதில் நினைத்துக் கொண்டு, ஐந்து முறை கோரியதால் தான், ஐந்து கணவர்கள் என்ற வரசித்தி உண்டானது. என்னால் வரமாக அளிக்கப்பட் டதால் அவப்பெயர் எதுவும் உண்டாகாது," என்றார்.

இதற்கு பதிலளித்த திரவுபதி, "அப்படியானால் மகிழ்ச் சியே. அதே சமயம் ஐவருக்கும் நான் கன்னியாகி அவர் களோடு கூடிட எனக்கு அருள் வேண்டும் என்று கேட்க, சிவனும் அருள் புரிந்தார்.

"அந்த ஐவரே பஞ்ச பாண்டவர்கள். அவரிடம் வரம் பெற்ற நளாயினியே இப்போது திரவுபதி. இவளை உலகைப் பெண்டிரோடு பொருத்திப் பார்க்கத் தேவை யில்லை. தீயில் பிறந்த இவளை எவராலும் களங்கப்ப டுத்த முடியாது. ஆனால், இவள் நினைத்தால், எவரு டைய களங்கத்தையும் போக்க முடியும்," என்று முடித் தார் வியாசர். வியாசரின் இந்த விளக்கத்துக்கு பிறகே, துருபதனுக்கு தெளிவு பிறந்தது.

பாண்டவர்களும் மன அமைதி பெற்றனர். அதன்பின், துருபதனும் முதல் நாளில் தர்மபுத்திரருக்கும், மறுநாள் அர்ஜுனனுக்கும் என்று ஒவ்வொருநாளும் பாண்டவ ருக்கு திரவுபதியை மணம் முடித்தான். இந்த விஷயம் பாஞ்சால் தேசம் முழுதும் பரவியது. பாஞ்சாலி, நளாயி னியின் மறுபிறப்பு என்பதை அறிந்த மக்கள் அவளை வணங்கினர்.

துருபதனும் குதிரைகள் பூட்டிய நூறு ரதங்களையும், அம்பாரிகளோடு கூடிய நூறு யானைகள், நகைகள், நவரத்தினங்கள், தாதியர்களை அளித்து மகிழ்ந்தான். கிருஷ்ணன் அள்ளக் குறையாத நிதியைப் பரிசாகத் தந்தான். அவற்றை தர்மபுத்திரர் மகிழ்வோடு ஏற்றுக் கொண்டார். இனியும் பிராமண வேடம் தேவையில்லை என்று வேடத்தைத் துறந்தார். பாண்டவர்கள் தங்கள் தேசத்து மாப்பிள்ளையாகி விட்டதற்காக, பாஞ்சால தேசமே மகிழ்ந்தது. எங்கும் கொண்டாட்டம்! எல்லாரிட மும் உற்சாகம்! அதே சமயம் பாண்டவர்கள் உயிரோடு இருப்பதும், திரவுபதியை மணந்த செய்தியும் துரியோத னனுக்கும், திருதராஷ்டிரனுக்கும் தெரிய வந்தது.

திருதராஷ்டிரன்விதுரரிடம், "இப்போதுதான் எனக்கும கிழ்ச்சி! பாண்டவர்கள் அரக்கு மாளிகை நெருப்பில் இறந்து விட்ட துக்கத்தில் இருந்தேன். அது நீங்கியது," என்றார்.

ஆனால், துரியோதனன் புழுபோல துடித்திட, சகுனியும் அதை அதிகப்படுத்தினான்.

கர்ணனும் இவ்வேளையில், "பாண்டவர்களைச் சும்மா விடக் கூடாது," என்றான். ஆனால், சோமதத்தன் என்

பவன், "இந்த அவசரம் கூடாது... அரக்கு மாளிகை நெருப்பாலேயே விழுங்கப்பட முடியாத பாண்டவர்களை போரில் வெல்வது சாத்தியமில்லை," என்றான்.

பாண்டவர்களிடம் யுத்தம் புரிந்தே தீர வேண்டும் என் பதில் கர்ணன் குறியாக இருந்தான். கர்ணனின் கருத் தின் முன்னால் சோமதத்தன் கருத்து எடுபடவில்லை. கர்ணன் மட்டுமல்ல, துரியோதனாதியர்கள் அவ்வளவு பேருமே தப்புக் கணக்கு தான் போட்டனர். திரவு பதி திருமண விஷயத்தில், அர்ஜுனன் அவளைத் தன் சகோதரர்களுக்கும் சேர்த்து மணம் முடித்ததை துருப தன் நிச்சயம் விரும்பியிருக்க மாட்டான். எனவே, இவ் வேளையில் போர் தொடுத்தால் பாண்டவர்களுக்கு யாரும் உதவ வர மாட்டார்கள். அவர்களை சுலபமாக அழித்து விடலாம் என அவர்கள் எண்ணினர்.

போர் குறித்து, பீஷ்மர், துரோணர், கிருபர் போன்ற குரு நாதர்களிடமும் ஆலோசனை கேட்கவில்லை. திருத ராஷ்டிரனுக்கே போருக்கு கிளம்பும்போது தான் செய்தி கூறினர். விதுரர் மட்டும் துரியோதனனின் ஆத்திரத் தைப் புரிந்து கொண்டு, முன்னதாக பாண்டவர்களுக் குத் தகவல் தெரிவிக்கிறார். துரியோதனனின் பொறா மையை அறிந்த துருபதன், தன் பெரும்படையை பாண் டவர்கள் தலைமையில் தயார் செய்தான். யுத்தமும் நடந் தது. அதில், துரியோதனனின் சேனை சிதறிச் சின்னா பின்னமானது.

பாண்டவர்களுக்கு மீண்டும் வெற்றி. தங்களை ஆலோ சிக்காமல் படை எடுத்துச் சென்றதை பீஷ்மர் கண் டித்தார். வேறுவழியின்றி துரியோதனன் தலை குனிந்து நின்றான். இது தான் சமயம் என்று பீஷ்மர் பாண்டவர்

களுக்கான நியாயத்தை திருதராஷ்டிரனிடம் எடுத்துக் கூறத் தொடங்கினார்.

"திருதராஷ்டிரா! 'வாரணாவதம்' என்னும் பெயரில் பாண்டவர்களை அழிக்க முயற்சி நடந்தது. அதிலிருந்து மீண்டு வந்ததோடு, பாஞ்சால தேசத்தின் மாப்பிள்ளை கள் ஆகி விட்டனர். அவர்களுக்கு நாட்டில் பாதியைத் தருவது தான் அனைத்து தவறுக்கும் சரியான பரிகாரம். அப்படிச் செய்யாத பட்சத்தில், பாண்டவர்கள் அஸ்தி னாபுரத்தின் மீதே போர் தொடுத்தால் இந்த மொத்த நாட்டையும் நீ இழந்து விடுவாய்," என்று அவர் முத் தாய்ப்பாய் கூறவும், திருதராஷ்டிரன் தன் பிள்ளைக ளைச் சமாதானம் செய்து பாதி நாட்டைத் தர சம்மதித் தான்.

இச்செய்தி பாண்டவர்களை அடைய அவர்களுக்கு மகிழ்ச்சி.

"எல்லாம் திரவுபதி மருமகளாக வந்த நேரம்" என்கி றாள் குந்தி. அதன்பின் முறைப்படி ஏற்பாடுகள் நடந்தன. கிருஷ்ணனும் இதற்கு துணை செய்தான். ஆயிரம் பசுக் கள் தானம் அளிக்கப்பட்டன! ஆயிரம் யானைகள் அபி ஷேகத்திற்காககங்காஜலம் ஏந்தி வந்தன. நூறு கிரா மங்கள் பிராமணர்களுக்கு தானம் அளிக்கப்பட்டன.

ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு, தர்மர் பல்லக்கில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். பின், கங்கா ஜலத்தில் நீராட்டும் புரிந்தனர். - திருதராஷ்டிரன் ஆசீர் வதித்து தந்த ராஜகிரீடத்தை, பீஷ்மர் தர்மருக்கு அணி விக்க அவையே ஜெயகோஷமிட்டது. இந்த அற்புத

நிகழ்வுக்கு வியாசரும் வந்திருந்தார். அவரிடம் தர்மர் ஆசி பெற்றார். கிருஷ்ணனும் சீர்தந்து கவுரவித்தான்.

திரவுபதியுடன் பாண்டவர்கள் ரதங்களில் அஸ்தினா புர வீதியில், மக்கள் பார்க்க வலம் வந்தனர். குந்தியி டம் ஆனந்தக் கண்ணீர்! அதே சமயம் கிருஷ்ணனிடம் தீவிரயோசனை. பல ராமர் அதற்கு காரணம் கேட்டார். கிருஷ்ணன் அவரிடம், "அண்ணா... இன்று ஒரு நல்ல விஷயம் நடந்து முடிந்தது.

ஆனாலும், பாண்டவர்கள் விஷயத்தில் நடப்பதெல் லாமே விசித்திரமாக இருக்கிறது. அவர்களுக்கு எது வும் சுலபத்தில் கிடைப்பதில்லை. இப்போதும்கூட, திரு தராஷ்டிரன் முழு மனதோடு ராஜ்யத்தை தரவில்லை. பட்டாபிஷேகத்திற்கு துரியோதனன் எட்டிக் கூட பார்க்க வில்லை.

"எனக்கென்னவோ பாண்டவர்களின் பாதி ராஜ்யம் எந்த நிலையிலும் அஸ்தினாபுரத்தோடு இணைந்து இருப் பது நல்லதல்ல என்று தோன்றுகிறது," என்றான்.

" உன் யூகம் சரி தான் கிருஷ்ணா, நீ காரணமில்லா மல் காரிய சிந்தனை கொள்வதில்லை என்பதை நான் அறிவேன். இதற்கு உன் மாற்றுத் திட்டம் என்ன?" என்று கேட்டார் பலராமர்.

"வேடிக்கை பார்" என்றான் கிருஷ்ணன்.

இறுதியாக, திருதராஷ்டிரன் தர்மரை வாழ்த்திவிட்டு, "நான் தருவதாக சொன்ன பாதிராஜ்யம் என்பது 'காண் டவபிரஸ்தம்' என்னும் பட்டணத்தைக் கொண்டதாகும்.

"நீ அங்கே சென்று உன் அரசாட்சியை தொடங்கி சிறப்பாக வாழ்வாயாக," என்று வாழ்த்தினார்.

காண்டவபிரஸ்தம் என்ற உடனேயே தர்மரிடம் மட்டுமல்ல, பாண்டவர்கள் ஐவருக்கும் ஒரே திகைப்பு. ஆனால், அருகிலிருந்த கிருஷ்ணன் உடனேயே அதை ஆமோதித்தான்.

"திருதராஷ்டிரரே... தர்மனுக்கு நீங்கள் நல்ல வழியைத் தான் காட்டியுள்ளீர்கள். காண்டவ பிரஸ்தம் ஒரு சிறப்பு மிகுந்த பட்டினம். ஆயூ, புரூவரஸ், நகுஷன், யயாதி போன்றோர் ஆட்சி செய்த இடம். எனவே, அந்தப் பகுதி தர்மனைச் சேர்வது பொருத்தமே," என்றார்.

கண்ணனே வழிமொழிகிறான் என்றால் அதன் பின் அதை சந்தேகிக்கவே தேவையில்லை என்ற முடிவுக்கு பாண்டவர்கள் வந்தனர். அன்றே திருதராஷ்டிரன் வழங்கிய சதுரங்க சேனைகளோடு பாண்டவர்கள் காண்டவ பிரஸ்தம் நோக்கி புறப்பட்டனர். அப்போது ஒரு அதிசயமும் நடந்தது.

அஸ்தினாபுரத்து மக்களும் வண்டி கட்டிக் கொண்டு பாண்டவர்கள் பின்னால் காண்டவ பிரஸ்தத்துக்கு புறப்பட்டனர். மக்களின் இந்த போக்கை அறிந்த துரியோதனன், ஊர் எல்லையில் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். வேறு வழியில்லாமல், மக்கள் சோகத்துடன் பாண்டவரை வழியனுப்பினர். அவர்கள் காண்டவபிரஸ்தம் சென்ற வேளையில், அவ்வூர் பொலிவிழந்து கிடந்தது. பாண்டவர்கள் கால் வைத்ததும் அங்கு மழை பொழிந்தது.

நனைந்தபடியே அவர்கள் ஊருக்குள் நுழைந்த னர். அதனைத் தொடர்ந்து கிருஷ்ணன் இந்திரனை அழைக்க, அவன் ஓடி வந்தான்.

"இந்திரா... இந்த காண்டவ பிரஸ்தம் பொலிவு பெற வேண்டும். இதன் பொலிவைப் பார்த்து தேவலோக அம ராவதியோ என மக்கள் நினைக்கவேண்டும்," என்று கூறிட, இந்திரனும் விஸ்வகர்மாவை அழைத்து காண்ட வபிரஸ்தத்தை இந்திரபிரஸ்தமாக்கப் பணித்தான்.

அடுத்த நொடி நகர நிர்மாணம் தொடங்கியது. எட்டுத் திசையிலும் விண்ணை முட்டும் மதில்கள் எழுந்தன. அகழிகள் உருவாயின. தேர் புகுமளவு நாலாபுறத்திலும் வாயில்கள். ஆயிரம் யானைகள் நடந்து வரும் வகை யில் அகலமான தெருக்கள், இருபுறமும் மாளிகைகள், மையத்தில் அரண்மனை, ஊருக்குள்ளே 'மா, கடம்பு, ஆம்ரா, அசோகம், புன்னை, பலா, ஆச்சா, பனை, மகி ழம், தாழை, அருநெல்லி, பாதிரி, நீர் நொச்சில், தினி சம், அலரி, பாரிஜாதம்' என்னும் பல விதமான மரங்கள்... அதில் பத்துவகை ஊர்ப்பறவைகளும் கூடிக் கும்மாள மிட்டன.

இது போக, நந்தினி என்னும் நதியும் அங்கு பாயத் தொடங்கியது. பாண்டவர்கள் புதிய நகரைப் படைத்த விஸ்வ கர்மாவுக்கு நன்றி கூறினர். இது அனைத்துக்கும் காரணமான கிருஷ்ணனை, மகாவிஷ்ணுவாக பார்த்த குந்திதேவி, "கண்ணா உன் கருணையே கருணை" என்றாள்.

அப்படிப்பட்ட இந்திரபிரஸ்த நகருக்கு ஒருநாள் நாரதர் வந்தார். இவர் பிரம்மாவின் மானசபுத்திரர். நாராயண

மந்திரத்துடன் எல்லா உலகங்களையும் சுற்றி வருபவர். இவருக்கு மட்டுமே தேவர்களின் கதவும் திறந்தது, அசுரர்களின் கதவும் திறந்தது. இரு சார்புக்கும் பொதுவானவராக திகழ்ந்திட்ட இவரது செயல் யாவும் நன்மையில் தான் முடிந்தன.

இவரைக் கலகக்காரராக நினைப்பதும் பேசுவதும் பிழையாகும். ஒரு ரதம் போல நாற்புறமும் சென்றுவர முடிந்தவர் என்பதாலேயே நாரதர் எனப்பட்டார் என்பர். அப்படிப்பட்டவர் பாண்டவர்களைக் காண வருகிறார் என்ற உடனேயே, இந்திர பிரஸ்தமே அவரை எதிர் கொண்டு வரவேற்க தயாராகி விட்டது. துந்துபி வாத்தியம் முழங்க, பட்டத்து யானை மாலையிட நாரதர் வரவேற்கப்பட்டார்.

தர்மர் அவர் எதிரில் அமர்ந்து பேசுவது கூட மரியாதைக் குறைவு என்று நின்றபடியே பேசினார். பாஞ்சாலி அவரை வணங்கிச் சென்றாள். அவளைக் கண்ட நாரதருக்குள் ஒரு சிந்தனை! அதை தர்மர் கவனித்து விட்டார்.

"மகரிஷி... என்ன யோசனை?" என்றும் கேட்டார்.

"ஐந்து பேருக்கு ஒருத்தி பத்தினியாக திகழ்வ தென்பது அசாத்தியமான விஷயம். பாஞ்சாலியின் கற்பின் சக்தியை நான் அறிவேன். நீங்களும் அறிந்து ஒற்றுமையாக வாழ வேண்டும். வாழ்வீர்களென்றும் நம்புகிறேன்," என்றார் நாரதர்.

"மகரிஷி... உங்கள் நம்பிக்கை பொய்யாகாது. நாங்கள் உருவத்தில் தான் ஐவர். உள்ளத்தால் ஒருவரே! எங்களுக்குள் ஒருக்காலும் பிணக்கு ஏற்படாது."

"அதையும் அறிவேன். ஆனால், விதி வசத்தால் நீங்கள் பிரிய நேரிட்டால் அதனால் வரும் பாதிப்பு உங்களை விட பாஞ்சாலிக்குத் தான் அதிகம்! அதேசமயம் ஐவருக்கும் அவள் தாயாக இருந்து உணவிடலாம். தோழியாக இருந்து உதவிடலாம்! மந்திரியாக இருந்து ஆலோசனை கூறலாம். ஆனால், மனைவியாக ஒரே நேரத்தில் இருப்பது சாத்தியமில்லையே...?" நாரதர் கேட்ட கேள்வி அவர்களை சிந்திக்க வைத்தது.

"உண்மை தான்..." என்றார் தர்மர்.

கூடவே ஒரு பெருமூச்சு!

"இதற்கு தீர்வினை எப்படி காணப் போகிறீர்கள்?"

"நல்ல கேள்வி... சரியான தீர்வை - நாங்கள் கண்டாக வேண்டியதும் அவசியமே..."

"அப்படிக் காண்பதில் தான் உங்கள் எதிர்காலம் உள்ளது. இவ்வேளையில் உங்களுக்கு நான் 'சுந்தோப் சுந்தர்' என்னும் இரு அசுரர்கள் பற்றி கூற விரும்புகிறேன் "

"மிகவும் மகிழ்ச்சி. நீங்கள் அந்த அசுரர்கள் பற்றிச் சொல்வது நாங்கள் ஒற்றுமையாக இருக்க உதவும் என்றே நான் கருதுகிறேன்."

"ஆம்... நீங்கள் இப்போது ஒற்றுமையாகத் தான் உள்ளீர்கள். ஆனால், இரண்யகசிபுவின் பரம்பரையில், அவன்

புதல்வனான நிகும்பனின் புத்திரர்களான சுந்தோப் சுந்தர் போல ஒற்றுமையாக திகழ்ந்தவர்கள் எங்கும் இல்லை என்பது தான் உண்மை! "

" அப்படியா?"

"கருத்துடன் கேளுங்கள். சுந்தோப சுந்தர் என்று பெயரிலும் இருவரும் ஒன்றுபட்டிருந்தனர். அதாவது இந்த பெயர் இருவருக்கும் பொதுவானது. தனித்தனியே ஒரு பெயர் கிடையாது. ஆனால், நீங்கள் தனித்தனி - பெயரைக் கொண்டுள்ளீர்கள் என்றால், உங்களை விட அவர்கள் தானே ஒற்றுமையானவர்கள்...?"

நாரதரின் இந்தக் கேள்வி கேட்டு, பாண்டவர்கள் புருவங்களை விரித்தனர்.

"இருவருக்கும் ஒரே எண்ணம். ஒரே ஆசை. ஒரே இலையில் தான் சாப்பாடு. ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொள்வார்கள். அவ்வளவு பாசம்! "

"அசுரர்களுக்கு எதையும் அடக்கமாக வைத்திருக்க முடியாது. அதனால், தங்களின் ஒற்றுமையை வெளிக் காட்டிய படி இருந்துள்ளனர்," என்றான் அர்ஜுனன்.

அதைக் கேட்டு சிரித்த நாரதர், "இப்படிப் பட்டவர்கள் எப்படி பிரிந்தார்கள் என்பது தான் அறிய வேண்டிய விஷயம்," என்றார்.

"இவ்வளவு ஒற்றுமையாக இருந்தவர்களா பிரிந்தனர்?"

"பிரிந்தது மட்டுமல்ல... ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு உயிரையும் விட்டனர் ".

"நம்ப முடியவில்லையே... அப்படி என்ன தான் நடந்தது?"

"இப்படி நம்ப முடியாத விசித்திரம் நிறைந்தது தான் வாழ்வு! "

"மகரிஷி அவர்கள் எப்படி உயிரை விட்டனர் என்று முதலில் கூறுங்கள் ".

"அருமைப் பாண்டவர்களே! அந்த சுந்தோபசுந்தர் இருவருக்கும் சாகா வரம் வேண்டும் என்பது தான் நோக்கமாக இருந்தது. இமயம் சென்று தவத்தில் ஆழ்ந்தனர். தவத்தின் நெருப்பு பிரம்மாவின் சத்யலோகத்தைச் சுட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்..."

"பிறகு?"

"பிறகென்ன...? வரமளிக்க பிரம்மாவும் தயாராகி விட்டார்! அதே சமயம் சாகா வரத்தை அளிக்க முடியாது. ஆனால், அதற்கு இணையாக வேறு வரத்தை பெற்றுக் கொள்ளச் சொன்னார்..."

"இணையான வேறு வரமா... அது என்ன?"

"சுந்தோப சுந்தர் இருவரும் நெடுநேரம் சிந்தித்தபின், தாங்கள் இருவர் உயிரும் தங்களில் ஒருவரால்லன்றி வேறு எவராலும், எதனாலும், எக்காலத்திலும் பிரியக் கூடாது என்று கேட்டனர்."

"சுந்தோப் சுந்தர் புத்திசாலிகள்! "

"வரம் பெறவும் அவர்களுக்கு மமதை தலைக்கேறி யது. எங்கெல்லாம் யாகம் நடக்கிறதோ, அங்கெல்லாம் முனிவர்களைக் கொல்லத் தொடங்கினர். முனிவர்கள் பயந்து பிரம்மாவிடம் சென்று வருந்தினர். அவர் படைப் புக்கு தளபதியான விஸ்வகர்மாவை அழைத்தார்..."

"அழைத்து...?"

"உலகிலேயே இவளை விட ஒரு அழகி இல்லை என்று கூறும் விதத்தில் ஒரு பெண்ணைப் படைக்க கட்டளை யிட்டார்.

அவரும் உருவாக்க பிரம்மாவும் அதை கண்டு சொக்கிப் போனார். அதற்கு உயிரும் தந்தார்..."

"பிரம்மனே சொக்கும் ஒரு அழகியா?"

"பிரம்மா மட்டுமல்ல. மகாலட்சுமியும் கூட அவள் நடந்து வந்த அழகைப் பார்த்து பொறாமைப்பட நேர்ந்து விட் டது..."

"அடேயப்பா... அப்படி ஒரு அழகா?"

"ஆம்... அழகென்றால் அழகு... அப்படி ஒரு அழகு...! லட்சுமியையே அந்த அழகு ஆட்டி வைக்கவும் தான், விஸ்வகர்மாவுக்கே தான் பரீட்சையில் தேறி விட்டோம் என்று தோன்றியது... தானியங்களில் மிகச் சிறிய எள். அதை 'திலம்' என்பர். அந்த திலமளவுக்குக் கூட அவ ளிடம் பழுதில்லை. அதனால், என் தந்தை பிரம்மாவும் 'திலோத்தமை' என்று பெயரிட்டார்! "

திலோத்தமை என்ற அ பெயரைக் கேட்டதும் பாண்டவர்களிடம் பெருவியப்பு! "சரி...! அந்த திலோத்தமை என்ன செய்தாள்?"

நாரதர், பாண்டவர்களிடம் திலோத்தமையைப் பற்றிக் கூறினார்.

"திலோத்தமையும் அசுரர்களின் முன்தோன்றி நடமாடத் தொடங்கினாள். அதுவரை ஒற்றுமையாக இருந்த 'சுந்தோப் சுந்தர்' இருவரும் திலோத்தமைக்காக போட்டி போட்டனர். திலோத்தமைக்கும் அவர்கள் அழிந்து போக வேண்டும் என்பது தானே விருப்பம்!

அது நிகழத் தொடங்கியது. ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். ஆளுக்கொரு வாள் கொண்டு சண்டையிட்டு இருவரும் உயிரையும் விட்டனர்! திலோத்தமையை என் தந்தையான பிரம்மதேவர் உருவாக்கிய நோக்கமும் ஒரு வழியாக ஈடேறியது" நாரதர் கூறி முடித்தார்.

பாண்டவர்களிடம் ஒரு ஆழ்ந்த அமைதி. 'சுந்தோப சுந்தர்' கதையை நாரதர் கூறியது ஏன் என்பதும் அவர்களுக்குப் புரிந்தது. அவ்வளவு ஒற்றுமையானவர்களையே, ஒரு பெண்ணின் அழகு பலி வாங்கி விட்டது.

இங்கும் பாஞ்சாலி பேரழகி! இவளால் ஒற்றுமை சிதையாது என்று எப்படி கூற முடியும்? இருந்தும் பாண்டவர்களிடம் பெரிய சலனமோ சஞ்சலமோ இல்லை.

தர்மர் நாரதர் எதிரில் உடனடி தீர்வாக சில முடிவினை அறிவித்தார்.

"மகரிஷியே! சுந்தோபசுந்தர் போல நாங்கள் அடித்துக் கொள்ளுதல் ஒருக்காலும் நேராது. அதே வேளை யில், விதிவசம் என்று ஒரு கருத்தை மறுப்பதற்கில்லை. அதை உத்தேசித்து சில முடிவுகளை எடுத்துள்ளேன். அதன்படி, பாஞ்சாலி எங்கள் ஒவ்வொருவருடனும் தனித்தனியே ஒரு வருடம் வாழ்வாள். அப்படி அவள் ஒருவரோடு வாழ்ந்திடும் நாளில் மற்றவர்கள் பிரம்மச்சர் யம் காப்பவர்களாவோம். அப்படி வாழும் நாளில் இருவ ரையும் பார்க்க நேர்ந்தால், பரிகாரமாக ஒரு வருடம் வன வாசம் மேற்கொள்வோம். இதன் மூலம் நாங்கள் இறுதி வரை ஒற்றுமையுடன் வாழ முடியும் என்று கருதுகிறேன்," என்றார்.

மற்ற நால்வரும் அதை மகிழ்வோடு ஏற்பதாக கூறினர்.

நாரதருக்கும் அவர்களுக்கு ஒரு நல்லவழியை காட்டி விட்ட நிறைவு!

பஞ்ச பாண்டவர்களின் இந்த கட்டுப்பாடான வாழ்க் கையில், அதிக சோதனை நேர்ந்தது அர்ஜுனனுக்குத் தான்... நாரதரால் ஏற்பட்ட உடன்படிக்கைப்படிதர்மபுத் திரரும், பாஞ்சாலியும் தனியே வாழ்ந்து வரும் நாளில் ஒரு பிராமணனால் அர்ஜுனனுக்கு சோதனை ஏற்பட் டது. அந்த பிராமணன் ஒரு பசுக்கூட்டத்தை வைத்து வாழ்ந்தான். அவனது பசுக்களை கள்வர் கவர்ந்து விட் டதால், அரசவைக்கு வந்து பசுக்களை மீட்டுக் கொடுக் கும்படி கண்ணீர் விட்டான்.

பசுக்களை சிலர் திருடுவதை அறிந்த அர்ஜு னன், தானே அவர்களை அடக்கி, பசுக்களை மீட்க முனைந்து வெற்றியும் பெற்றான். இந்த நேரத்தில்

எதிர்பாராமல் அர்ஜுனன் தர்மரையும், பாஞ்சாலியை யும் பார்த்து விட நேர்கிறது. உடனே, உடன்பாட்டின்படி வனவாசம் மேற்கொண்டு விடுகிறான். வனவாசத்திலும் அர்ஜுனனுக்கு விசித்ரமான அனுபவங்கள். கங்கைக்க ரையில் வனம் ஒன்றில் வசித்த அவன் ஒருநாள் கங்கை யில் நீராடும் போது பார்த்த உலூபி என்னும் நாககன்னி காதல் கொள்கிறாள். தந்திரமாக அவனை நாகலோகத் திற்கு அழைத்துச் செல்கிறாள். தன் காதலை ஏற்கச் சொல்லி வற்புறுத்துகிறாள். அர்ஜுனனோ சகோதரர் கள் தங்களுக்குள் செய்து உடன்படிக்கையால் அவள் காதலை ஏற்க மறுக்கிறான். உலூபி அதை மறுத்துப் பேசுகிறாள்.

"உங்கள் உடன்படிக்கை திரவுபதிக்கு ஊறு நேராமல் தடுப்பதற்காகத் தான். அதில் நீ பிரம்மச்சரியத்தோடு இருப்பது அவசியமற்றது. இந்திரபிரஸ்தத்தில் இருக்கும் போது தான் அது பொருந்தும். இது நாகலோகம். எனக் கும் பிற்காலத்தில் ஆதரவாகவும், பித்ரு காரியம் செய்ய வும் ஒரு புத்திரன் தேவைப் படுகிறான். அவனுக்காகவா வது நீ ஒரு உதவியைப் போல இதைச் செய்தாக வேண் டும்," என்று கெஞ்சுகிறாள்.

அர்ஜுனனின் மனம் இரங்கியது. அன்றே உலூபி கருக் கொள்கிறாள். மறுநாள் உலூபி அவனை கங்கைக்க ரைக்கு கொண்டு வந்து விட்டாள். தனக்கு செய்த உத விக்காக எவராலும் வெல்லப்படாத ஒருவரத்தை அர்ஜு னனுக்கு அளித்தாள். உலூபிக்கு, அர்ஜுனனால் பிறந்த பிள்ளைதான் அரவான்!

அர்ஜுனனின் வனவாசப் பயணம் தொடர்ந்தது.

கலிங்கம், விராடம், காந்தாரம் என்று பல நாட்டின் வனப் பகுதியில் அலைந்து தென்பகுதிக்கு வருகிறான். மகேந் திர மலையில் தங்குகிறான். பின் கோதாவரி, காவிரி போன்ற நதிகளில் நீராடுகிறான். இவன் பயணத்தில் பாண்டிய நாட்டின் தலைநகரான மணலூரை அடைகி றான். மணலூருக்குப் பிறகே இந்திரனால் மதுரை உரு வானது. அர்ஜுனன் மணலூர் சென்ற போது, சித்ரவாக னன் என்பவன் அரசாண்டு வந்தான்.

இவன் மகள் சித்ராங்கதை! இவள் மூலமாகப் பெறும் புத்திரனைக் கொண்டு தான், தன் பிள்ளையில்லாக் குறையை சித்ரவாகனன் போக்கிக் கொண்டாக வேண் டும். ஆனால், மகள் வழிப் பேரனை இன்று கூட சொந் தம் கொண்டாட முடியாது என்பதே யதார்த்தம். இருப் பினும், இதற்கு இசைவாக ஒரு நல்ல மாப்பிள்ளை அமைய வேண்டுமே!

ஜலத்திலும், இந்த வேளையில் தான், சித்ரவாகனன், அர்ஜுனனைக் காண்கிறான். அர்ஜுனனும் சித்ராங்க தையைக் கண்டு அவளது அழகால் ஈர்க்கப்படுகிறான். சித்ராங்கதைக்கும், அர்ஜுனனுக்கும் பிறப்பவனே பப்ரு வாகனன். இவனாலேயே பூரு' என்னும் வம்சமும் விருத் தியடைந்தது.

அர்ஜுனனின் பயணம் மேலும் தொடர்ந்தது. தீர்த்த யாத்திரை புரியத் தீர்மானித்தான். தீர்த்தயாத்திரைக்கு தனிச்சிறப்பு உண்டு. இதில் மட்டுமே ஒரே நேரத் தில் இரு நல்ல விஷயம் நிகழ்கின்றன. பாவம் நீங் குவதோடு புண்ணியமும் சேர்கிறது. அர்ஜுனன் பாரத தேசத்தின் எல்லா தீர்த்தங்களிலும் நீராடுகிறான். அந்த நாளில் தென் சமுத்திரக்கரையில் ஐந்து தீர்த்தங்கள்

ரிஷிகளால் ஒதுக்கப் பட்டிருந்தது. அகத்திய, சவுபத்ர, பவுலோம், காரந்தம், பரத்வாஜ் தீர்த்தங்களே அவை. அவற்றில் வசிக்கும் ஒரு முதலை, நீராட வருபவர்களை விழுங்கப் பார்த்தது.

ஒருவர் கூட நீராடவில்லை. இதை அறிந்த அர்ஜுனன், சவுபத்ர தீர்த்தமடுவில் இறங்கினான். முதலையும் அவனை உணவாக்கப் பாய்ந்தது. அவனோ, அதை அப்படியே தூக்கி வெளியில் வீசினான். நீரை விட்டு நீங்கியதும், அழகிய அப்சர கன்னியாக மாறி நின்றது. அவள் அர்ஜுனனை வணங்கினாள்.

"நான் ஒரு அப்சர கன்னிகை. சாபத்தால் இப்படி ஆனேன். என் பெயர் வர்க்கை. குபேரனின் ஆசைக்கு உரியவள்," என்று தன்னை பற்றிக் கூறி விட்டு, மற்ற தீர்த்தங்களிலும் சபிக்கப்பட்ட அப்சர கன்னியர் முதலையாக இருப்பதைக் கூறிட, அவர்களுக்கும் சாபவிமோசனம் உண்டானது.

இப்படி அர்ஜுனனின் வனவாசம், தீர்த்த யாத்திரையால் அவனுக்குப் பலர் அறிமுகமாயினர். அர்ஜுனன் தான் தொடங்கிய யாத்திரையில், மேற்கு திசையிலுள்ள ஒரு தீர்த்தத்தைக் கூட விடவில்லை. அனைத்திலும் நீராடியவனாக பிரபாச தீர்த்தம் என்னும் தீர்த்தத்தை அடைந்தான். தீர்த்தங்களில் நீராடுவதை ஒரு லட்சிய கடமையாகவே கருதினான். காரணம், குருநாதராகிய துரோணர் அவனுக்கு வித்தையை புகட்டியபோதே பல அறக்கருத்துக்களையும் உபதேசம் செய்திருந்தார்.

அதனால் "அர்ஜுனா! பஞ்ச பூதங்களில் சூரியன் சொரூபங்களைக் காட்டுபவன். அப்படி காட்டுவதை பார்ப்ப

தனாலேயே மனம் உருவாகும். வேறெந்த ஜீவராசியிட மும் இல்லாத அற்புதமே மனித மனம். இந்தபிறப்பில் மனம், வாக்கு, உடலால் நன்மை மட்டும் ஏற்படுவ தில்லை. அறிந்தும் அறியாமலும் தீமையும் ஏற்படுகின் றன. தீமையை தவத்தால் விலக்கிக் கொள்ளலாம்.

அதற்கு வழியில்லாத நிலையில் தீர்த்த யாத்திரை மேற் கொள்வது தான் ஒரே வழி. ஓடும் நீரில் நீராடுவ தால் பாவங்களை விடுக்கிறோம். குளத்திலோ புண் ணியத்தை எடுத்துக் கொள்கிறோம். இந்தச் செயல் பாடு எப்போதும் உன்னை ஒளியோடு வைத்திருக்கும்," என்று கூறியிருந்தார்.

துரோணர் சொன்னதில் பிரதானமான கருத்து, 'ஒரு நல்ல ஞானமுள்ளவன் இந்த மண்ணில் ஓடும் ஒரு நீரையும் விட மாட்டான்' என்பது தான். அதை அர்ஜு னன் உறுதியாகப் பற்றிக் கொண்டான்.

அந்தவகையில் அறுபதுக்கும் மேலான தீர்த்தங்களில் நீராடியவனாக, பிரபாச தீர்த்தத்துக்கு வந்தான் இங்கே கதன் என்பவனைச் சந்திக்கிறான். அவன் யாதவ குலத்தவன். துவாரகாதிபதி கிருஷ்ணனின் தங்கை யான சுபத்ரை பற்றி அர்ஜுனனிடம் சொல்லி மாய்ந்து போனான்.

எந்த "பாண்டவ வீரரே! உங்களை முப்பத்து இரண்டு லட்சணங்களும் உடையவர் என்று எல்லாரும் சொல் லக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், எங்கள் மன்ன வரான கிருஷ்ணரின் சகோதரி சுபத்ரை, உங்கள் லட் சணங்களை எல்லாம் விழுங்கி ஏப்பம் விடும் பேரழகி. பார்த்தால் நீங்கள் உருகிப் போவது நிச்சயம். அவள்

தோற்றத்தில் லட்சுமியை விஞ்சியவள்," என்று கதன் சொல்லச் சொல்ல, அர்ஜுனனுக்குள் அவள் மீது காதல் வந்து விட்டது.

அதே சமயம் சுபத்ரை யாரோ அல்ல! கிருஷ்ணரின் தங்கை. கிருஷ்ணனோ அர்ஜுனனுக்கு ஆத்ம குரு. குரு துரோணரே அர்ஜுனனிடம், கிருஷ்ணரைக் காணும் சமயம் கெட்டியாக பற்றிக் கொள்ளச் சொன்னது நினைவுக்கு வந்தது. எனவே, சுபத்ரை குறித்த எண்ணத்தை மானசீகமாய் கிருஷ்ணனிடம் கூறி விடுவதே சரி என்று தியானத்தில் அமர்ந்து விடுகிறான் அர்ஜுனன்.அர்ஜுனனின் எண்ணம் கிருஷ்ணனின் திவ்ய ஞானத்தில் சென்று சேர்ந்தது.

அதை எண்ணி கிருஷ்ணனும் புன்னகை பூத்தான், அருகில் இருந்த பாமா, ருக்மிணி இருவரும் அதற்கான காரணம் கேட்டனர்.

"தேவியர்களே... என் அத்தை மகனான அர்ஜுனன், நம் சுபத்ரையை எண்ணி ஏங்கத் தொடங்கி விட்டான். அதே சமயம், என்னை மீறி எதுவும் செய்ய தயாரில்லை. சர்வம் கிருஷ்ணார்ப்பணம் என்று தியானிக்கத் தொடங்கி விட்டான்," என்றான்.

பாமா ருக்மிணி இருவரும், "நாங்கள் பாண்டு புத்திரனான அர்ஜுனனை காண ஆவலாக உள்ளோம். அவன் விருப்பத்திற்கு சுபத்ரையும் உடன்பட வேண்டுமே," என்றனர்.

சர்வ சாமுத்ரிகா லட்சணன். சுபத்ரையும் அவனுக்கு பொருந்தும் அழகினை உடையவள். எனவே, எல்லாம் இனிதாகவே முடியும்," என்று சொல்லி புறப்படுகிறார்.

கிருஷ்ணன் அர்ஜுனனை பிரபாச தீர்த்தத்தில் சந்தித்து, அவனை ஒரு சந்நியாசியாக மாற்றி, துவாரகைக்கு அழைத்து வருகிறார். அர்ஜுனனை பலராமரும் ஒரு பூரண சந்நியாசியாக எண்ணி உபசரிக்கிறார். துவாரகைக்கு வரும் சந்நியாசிகளை கன்னிமாடத்தில் தங்க வைத்து, அங்குள்ள திருமணமாகாத கன்னியர்களைக் கொண்டு சேவை செய்யச் செய்வது அவர்களின் மரபு. இவ்வாறு செய்தால், அந்த கன்னியருக்கு சந்நியாசிகளின் பூரண ஆசியுடன் மனம் போல மணவாழ்வு அமையும் என்பது தான் இதற்கு காரணம்.

அர்ஜுனனுக்கும், கன்னிமாடத்தில் இருக்கும் சுபத்ரைக்கும் சந்திப்பு நிகழ்கிறது. எல்லாம் கண்ணனின் உள்கணக்கு. அந்த 'கிருஷ்ண கணக்கு' வீண் போகவில்லை. சுபத்ரை அர்ஜுனன் இருவருக்குள்ளும் காதல் ஏற்படுகிறது. இவ்வேளையில் துவாரகையை ஒட்டியுள்ள கடல்தீவில், மகாதேவபூஜை உற்ஸவம் நடக்கிறது. துவாரகையிலுள்ள அவ்வளவு யாதவர்களும் கப்பல்களில் ஏறி அந்த தீவுக்குச் சென்று 34 நாட்கள் தங்கி இருந்தனர். இதன் பின்னே அர்ஜுனன் சாத்திர சிந்தனையை சுபத்ரைக்கும் உருவாக்கினான்.

அர்ஜுனன் "சுபத்ரா! தந்தையால் கன்னிகாதானமாக அளிக்கப்படுபவள் பத்தினி! ஒரு ஆண் தன்னைக் காப்பாற்ற வேண்டி மணக்கும் பெண் பார்யை! சாத்திரப்படி கன்னிகா தானம் செய்யப்படுபவள் தாரம்! தன் விருப்பப்படி எதிர்கால வாரிசுகளை வேண்டி திருமணம்

செய்து கொள்பவள் பிரஜாவதி! இந்த நால்வரும் அக்னி சாட்சியாக திருமணம் புரிபவர்கள்.

ஆனால், காந்தர்வ விவாகத்திற்கு எந்த கிரியையும் இல்லை. எப்போதும் திருமணத்திற்கு மாதங்களில் வைகாசியும், பட்சங்களில் வளர்பிறையும், கரணத்தில் பவமும், லக்னத்தில் மகரமும் சிறந்தவை. எல்லாவற்றுக்கும் மேலாக மைத்ரம் என்னும் முகூர்த்தமும் விவாகத்திற்கு உகந்தது. இவை அனைத்தும் இன்று இரவு வருகிறது. இப்படி ஒருநாள் வாய்ப்பது அரிது. இந்த நாளில் நமக்கு திருமணம் நடப்பது இனியது," என்றான் அர்ஜுனன்.

சுபத்ரையும் அதை விரும்பினாள். இதுவும் கண்ணனின் திருவுள்ளமே! அர்ஜுனன் விருப்பம் இந்திரபிரஸ்தத்தில் அரசாண்டு வரும் தர்மர் மற்றும் சகோதரர்கள், குந்தி, திரவுபதிக்கும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், தந்தையான வசுதேவர், சகோதரனான கிருஷ்ணர், பலராமர் என்று யாரும் இல்லாமலா? சுபத்ரையின் எண்ணம் அர்ஜுனனுக்கு புரிந்தது.

உடனேயே தனக்கு ஆத்ம தந்தையான இந்திரனை எண்ணி தியானித்தான். அது நாரதரோடு, இந்திர லோகத்தையே அங்கு வரவழைத்து விட்டது கிருஷ்ணரும் பலராமரை விட்டு விட்டு, மற்றவர்களுடன் துவாரகைக்கு வந்து விட்டான். வசுதேவரிடம் இந்திரனே, அர்ஜுனனுக்காகப் பெண் கேட்க அவரால் மறுக்க முடியவில்லை.

திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்க இந்திரனோடு வந்த நாரதர், விவாக காரியங்களைத் தொடங்கலாம்

என்றார். கஷ்யப மகரிஷி ஹோமம் செய்தார். அஷ்ட திக்கு பாலகர்கள் அர்ஜுனனை சந்நியாச கோலத்திலி ருந்து மாப்பிள்ளை கோலத்திற்கு மாற்றினர். அதன்பின் திருமணம் இனிதாக நடந்தேறியது. சுபத்ரை ஒரு இடை யர் குலப்பெண்ணாக திரவுபதியைச் சந்தித்து, 'தீர்க்க சுமங்கலியாக வாழ்வாயாக' என ஆசி பெற்ற பிறகே, தான் சுபத்ரை என்பதை அவளுக்கு உணர்த்தியிருந் தாள்.

அர்ஜுனன் சுபத்ரைக்கு அபிமன்யு பிறந்தான். 'அபி' என் றால் பயமற்றவன். 'மன்யு' என்றால் கோபமுள்ளவன். அநீதியை பயமின்றி எதிர்ப்பவன் அவன். சுபத்ரை அபி மன்யுவைப் பெற்றதைப் போலவே, திரவுபதியும் ஐவருக் கும் ஐந்து பிள்ளைகளைப் பெற்றாள். அவர்கள் யார் தெரியுமா?

திரவுபதியும் சிவபெருமானிடம் பெற்றிருந்த வரசித் தியின்படி, பாண்டவர்கள் ஐவரோடும் தனித்தனியே வாசம் செய்து, முதலில் தர்மருக்கு என்று ஒரு பிள் ளையை பெற்றுத் தந்தாள். அவனது பெயர் பிரதிவிந்தி யன். 'விந்திய மலைக்கு ஒப்பானவன்' என்பது பொருள். பின், பீமசேனனுடன் வாழ்ந்து 'சுதசோமன்' என்னும் பிள்ளையை பெற்றாள். 'சந்திர சூரியருக்கு ஒப்பானவன்' என்பது பொருள். இப்படி ஒரு பிள்ளை வேண்டி, பீம னும் சோமரசம் பிழிந்து யக்ஞம் செய்திருந்தான். மூன்றா வதாக அர்ஜுனனுக்கு 'சுருதகர்மா' என்னும் பிள்ளை யைப் பெற்றாள். 'தீர்த்தயாத்திரை செய்து அதன் பய னால் பெற்ற பிள்ளை ' என்பது பொருள்.

அடுத்து நகுலனோடு வாழ்ந்து, 'சதானீகன்' என்னும் புத்திரனைப் பெற்றெடுத்தாள். சதானீகர் என்றொரு

ராஜ ரிஷி, கவுரவ வம்சத்தில் வந்த ஒரு மகாத்மாவாக வாழ்ந்தவர். எனவே, தன் பிள்ளைக்கு அவர் பெயரை வைத்த நகுலன், தன் பிள்ளையும் ஒரு மகாத்மாவாக எல்லோராலும் போற்றப்பட வேண்டும் என்று விரும்பினான்.

இறுதியாக சகாதேவன்! இவனுக்கென சுருதசேனன் என்னும் மகவைப் பெற்றாள். அக்னி தேவதையின் திரு நட்சத்திரமான கிருத்திகையில் பிறந்த காரணத்தால், அக்னி போல பிரகாசமாக திகழ வேண்டி 'சுருத' என்னும் பதமும், சேனை போல பலத்துடன் திகழ வேண்டி 'சேனன்' என்பதும் சேர்த்து வைக்கப்பட்டது.

திரவுபதியின் இந்த பிள்ளைகள் ஆண்டிற்கு ஒருவராக பிறந்தனர். ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையே ஒரு வயது வித்தியாசம் இருந்தது. இவர்களுக்கு தவும்யர், குருவாக இருந்தார். நாட்கள் வேகமாக நகர்ந்தன. தர்மபுத்திரர், காண்டவ பிரஸ்தம் என்னும் இந்திர பிரஸ்தத்தை ஆட்சி செய்தார். ஒருநாள் சபைக்கு நாரத முனிவர் வந்தார். அவரை கர்ம சிரத்தையாக வரவேற்றார் தர்மர்.

உபசாரங்கள் முடிந்தன. விசாரிப்புகள் ஆரம்பமாயின. தர்மபுத்திரரோடு அர்ஜுனன் உள்ளிட்ட சகோதரர்கள் ஒருபுறமும் அவர்களோடு குந்தி, திரவுபதி, சுபத்ரை உள்ளிட்டோரும் இருக்க நாரதர் அவர்களோடு உரையாடினார்.

"நாரதரே! நீங்கள் சர்வலோக சஞ்சாரி. ஆனால், நாங்களோ பூலோக வாசிகள். உங்கள் வாயிலாக மற்ற லோகங்களை அறிய விரும்புகிறோம்" என்றார் தர்மர்.

நாரதரும் இந்திரனுடைய அமரலோகமும் இந்திர சபை யினது சிறப்பையும் கூறத் தொடங்கினார்.

"தர்மா! இந்திரனது சபை நூறுயோஜனை அகலமும், நூற்றைம்பது (யோஜனை நீளமும், ஐந்து யோஜனை உயரமும் கொண்டது. இங்கு யாருக்கும் மூப்பு, துன்பம், களைப்பு, அச்சம் ஏற்படாது. இங்கே தான் கற்பக விருட் சம் முதல், ஐராவதம் வரை எல்லாம் இருக்கின்றன. இந்திரன் இங்கே சசி, மகேந்திராணி, ஸ்ரீலட்சுமி, ஹரி, கீர்த்தி, காந்தி என்னும் பெண்களுடன் சபையில் வீற்றி ருக்கிறான். இவர்களோடு பராசரர், பர்வதர், ஸாவர்ணி, காலவர், ஏகதர், த்விதர், தரிதர், சங்கர், லிகிதர், கவு சிரஸ் முனிவர், துர்வாசர், ச்யேனர், தீர்க்கதமஸ், பவித் ரபாணி, ஸரவர்ணி, யாக்ஞவல்கியர், பாலுகி, உத்தால கர், சுவேத கேது, தாண்டர், பாண்டாயினி, ஹவிஷ்மான், கரிஷ்டர், அரிச்சந்திரன், ஹ்ருத்யர், உதர சாண்டில்யர், வியாசர், க்ருஷிவலர், வாதங்கந்தர், விசாகர், விதாதா, காலர், காராலதந்தர், த்வஷ்டா, விஸ்வகர்மா, தும்புரு ஆகிய கர்ப்பத்தில் பிறந்த மற்றும் பிறவாதவர்கள் உள்ள னர்.

இவர்களோடு வால்மீகி, சமீகர், பரசேதஸ், மேதாநிதி, பரமதேவர், புலஸ்தியர், புலஹர், க்ரது, மருத்தர், மரீசி போன்றோரும் இருக்க, 27 நட்சத்திரங்கள், இந்திராக் னிகள், தருணன், யக்ஞ புருஷர்கள் ஆகியவர்களும் உள்ளனர். ரம்பை, ஊர்வசி, மேனகை, க்ருதாசி, பஞ்ச சூடை, விப்ரசித்தி முதலான அப்சர கன்னியரும், வித் யாதரர்கள், கந்தர்வர்கள் என்று இந்திர சபையே ஒரு கோலாகல சபையாகும்.

இங்கே பிருகுவும், சப்தரிஷிகளும் நினைத்த மாத்திரத்தில் வந்து போவர். இந்திர சபைக்கு புஷ்கரமாலினி என்றும் பெயருண்டு' என்று கூறி முடித்தார்.

"அடேயப்பா!... எத்தனை சான்றோர்கள். ஒருமுறையாவது இந்திர சபைக்கு சென்று அத்தனை பேரிடமும் ஆசி பெற வேண்டும்" என்றான் சகாதேவன்.

"தம்பி! உன் நினைப்பு மகத்தானது" என்றார் தர்மர்.

'சகாதேவா... அடுத்து யமலோகம் பற்றி கூறுகிறேன். அச்சப்படாமல் கேள்..." என்ற பீடிகையோடு தொடங்கினார் நாரதர்.

"இந்த எமசபை விஸ்வகர்மாவினால் செய்யப்பட்டது. நூறு யோஜனை நீள அகலம் கொண்டது. இங்கே தண்ணீருக்கு இணையாக வெந்நீர் இருப்பதை அறிவாயாக! இங்கு யயாதி, நகுஷன், பூரு, மாந்தாதா, சோமகன், நருகன், திரசதஸ்யு என்னும் ராஜரிஷி இவர்களுடன் கிருதவீர்யன், சுருதஸ்வரன், அரிஷ்டநேமி, சித்தன், கிருதவேகன், கிருதி, நிமி, ப்ரதர்த்தனன், சிபி, அம்பரீசன், பகீரதன் ஆகியவர்களோடு, மத்ஸ்ய ராஜர்கள் நூறுபேர், திரதராஷ்டிரர்கள் நூறுபேர், ஹயர்கள் ஜனமேஜயர்கள் எண்பது பேர், பிரம்மதத்தர்கள், வீரிகள், ஈரிகள் நூறு நூறு பேர், இது போக நாணல், தர்பை இவைகளுக்கும் எமலோகத்தில் தான் மதிப்பான இடம். இங்கே பொய்யே கிடையாது.

எமசபைக்கு தெற்கில் தான், யமகிங்கரர்களாலான தண்டனைக் கூடம் உள்ளது. இங்கே தான் பாவிகளுக்கான யாதனா சரீரம் என்னும் 'அழிக்க அழிக்க மீண்டும்

உருவாகும் சரீரங்களும் உள்ளன. இதனுள் பாவிகளின் ஆத்மாக்களை புகுத்தி, அவற்றை வலிக்குள்ளாக்கி, பின் வலிமைக்கு மாற்றுவதே எமனின் திவ்ய நோக்கம்," என்று எமசபையைப் பற்றி கூறிய நாரதர் மேலும் தொடர்ந்தார்.

"எமசபை இந்திரசபைக்கு துளியும் குறைந்ததில்லை. இந்திர நிர்வாகம் போன்றதே எம நிர்வாகமும். இருவரும் பெருந்தேவர்களாக பூஜிக்கப்படுபவர்கள். தேவலோகத்து மாலைகள், எம் லோகத்துக்குத் தான் சென்று சேரும். ரிஷிகளும், மகாமுனிவர்களும், நல்ல எண்ணம் உள்ளோர் அனைவரும் இருசபையையும் சமமாகவே கருதுவர்' என்றும் நாரதர் முடிக்க,

"வருணசபை எப்படிப்பட்டது?" என்ற கேள்வியை எழுப்பினான் பீமன்.

"வருணனின் சபையும் எமசபை போல விஸ்தாரமானதே. இது நீருக்குள் அமைந்த சபை என்பதால் குளிர்ச்சியாக இருக்கும். வருணன் இங்கே வாருணி என்னும் தன் மனையாளுடன் வாசம் செய்கிறான். இங்கே நாகர்கள் அதிகம். வாசுகி, தக்ஷகன், ஐராவதன், கிருஷ்ணன், லோசிதன், பத்மன், மணிமான், கார்க்கோடன், தனஞ்ஜயன், மூஷிகாதன், ஜன்மேஜெயன் ஆகிய நாகர்கள் தத்தம் கொடிகள் பறக்க இங்கே உள்ளனர்.

இதுபோக தர்மார்த்த கர்மங்களுடன் அஷ்டவசுக்களும், கபிலமுனிவரும் இங்கே உள்ளனர். நாகராஜரான ஆதிசேஷனுக்கும் இங்கே தான் இடம். மேலும் பெயர் பெற்ற கங்கை, யமுனை, விதிசை, வேணை, நர்மதை, வேக

வாகினி, விபாசை, சதத்ரு, சந்திரபாகா, சரஸ்வதி, இராவதி, விதஸ்தை போன்ற புண்ணிய நதிகளுடன் தேவ நதிகளான சிந்து, கோதாவரி, கிருஷ்ணவேணி, காவேரி,கிம்புனை, விசல்யை, வைதரணி, த்ருதீயை, பரணி, ஜ்யேஷ்டிலை, மகாநதி, சரயு, வாராவதி, கோமதி நதிகளும், ஏனைய தீர்த்தங்கள், தடாகங்களும், ஜலஜந்துக்கள் அனைத்தும், தேக வடிவெடுத்து வருணனைத் தான் துதிக்கின்றன," என்று வருணசபை பற்றியும் கூறி முடித்தார்.

அடுத்து குபேரசபை! "இது நூறு யோஜனை நீளமும், எழுபது யோஜனை அகலமும் உடையது. வெண்மை நிறமுடையது. இது குபேரன் தன் தவத்தினால் சம்பாதித்தது. இங்கே யட்சர்கள் வைத்ததே சட்டம்! குபேரன் இங்கே சித்தி என்னும் தன் மனைவியோடு வசிக்கிறான். இங்கேயும் நூற்றுக்கணக்கான யட்சர்கள் உள்ளனர். இவர்களுடன் கிம்புருஷர்க்கு அரசனான யட்சர்கள் உள்ளனர். இவர்களுடன் கிம்புருஷர்க்கு அரசனான மகேந்திரன், கந்தமாதனன் போன்றோரும் குபேரனை உபாசிக்கின்றனர். இங்கே தான் ராவண சகோதரனான, தர்மாத்மா விபீஷணரும் உள்ளார்.

குபேர சபைக்கு பிரதான சிறப்பே அவ்வளவு பர்வதங்களும் (மலைகள்) அதன் ராஜாதி ராஜாக்களும் குபேர சபையில் இருப்பது தான். நந்திகேஸ்வரர், மகாகாலன், காஷ்டன், குடீ முகன், தந்தி, விஜயன், தபோதிகன், சங்குகர்ணன் போன்ற சிவகணங்களும் குபேரனை அடுத்து வருகின்றனர்," என்று குபேர சபையைப் பற்றிக் கூறிய நாரதர் அடுத்து தனது தந்தையான பிரம்ம தேவனைத் தொட்டு பிரம்ம சபையின் சிறப்பைக் கூறத் தொடங்கினார்.

"பாண்டு புத்திரர்களே! எனக்கு பிரம்மபுத்திரன் என்றொரு பெயர் உண்டு. நான் பிரம்மதேவரின் மானசபுத்திரன். அந்த வகையில் பார்த்தால் பிரம்ம சபை என் உரிமைக்கு உட்பட்டது. ஆனால், என்னாலேயே சூரியனின் தயவும், ஆயிரம் ஆண்டு தவமும் இல்லாமல், பிரம்மசபைக்குள் நுழைய முடியவில்லை என்றால் பிரம்மசபையில் நித்யசூரியாக திகழ்வது எவ்வளவு கடினமென்பதும், அது எத்தனை பெரிய பாக்கியம் என்பதும் உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்," என்று பலமான பீடிகையுடன் கூறத் தொடங்கினார்.

"நான் சந்தித்த சபைகளிலேயே என்னையே பிரமிக்க வைத்த சபை பிரம்மசபை என்பேன். அங்கு நிலவும் தட்பவெப்பமும் அலாதியானது. பசி, தாகம், களைப்புக்கு அங்கே இடமே இல்லை. பூமியில் பிரம்மவேளை என்று சூரியோதய பொழுதைச் சொல்வார்கள். மிக உற்சாகமான ஒரு கால் கட்டம் அது. அங்கிருந்த வரை அந்த பிரம்மவேளையின் தன்மையை நான் உணர்ந்தேன். எங்கும் சபைகளை தூண்கள் அல்லவா தாங்கி நிற்கும்! ஆனால், பிரம்மசபையில் தூண்களே இல்லை. எப்போதும் சுகந்த நறுமணம் வீசியபடி இருக்கும். அங்கே, தக்ஷர், பிரசேதஸ், புலஹர், மரீசி, காஸ்யபர், பிருகு, அத்ரி, வசிஷ்டர், கவுதமர், அங்கீரஸ், புலஸ்தியர், க்ரது, பிரகலாதர், கர்த்தர் என்று 14 சிருஷ்டி கர்த்தாக்கள் உள்ளனர்.

அதர்வாங்கிரசர், வாலகில்லியர், மரீசிபர் என்னும் திவ்ய பிரம்ம ரிஷிகளும் இருந்தனர். பெரும் மகிமையுள்ள அகத்தியர், மார்க்கண்டேயர், ஜமதக்னி, பரத்வாஜர், ஸம்வர்த்தர், சியவனர், துர்வாசர், தர்மிஷ்டரான ரிஷ்ய சிருங்கர், ஆசாரியரான சனத் குமாரர், அஸிதர், தேவ

லர், தத்துவஞானியான ஜைகீஷவ்யர் இவர்களோடு எட்டு அங்கங்கள் கொண்ட ஆயுர்வேதம் தேகமெடுத்துக் கொண்டு நிற்கிறது.

கூடவே சூரியசந்திரர்கள், மனம், ஆகாயம், வித்தைகள், வாயு, தேயு, நீர், நிலம், சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், காந்தம், மூலப்பிர கிருதி, விகாரங்கள் என்று பூமியின் பிரதானங்களும் அங்கே இருக்க கண்டேன். நான்கு வேதம், சாஸ்திரம், இதிகாசம், உபவேதம், துன்பங்களைக் கடத்தி வைக்கும் சாவித்திரி, கற்பனை, ஞாபகசக்தி, சொல்வன்மை, திரிகால நோக்கு, உலக அறிவு, புகழ் பொறுமை என்னும் ஏழின் வடிவமான சரஸ்வதி தேவியும் உள்ளனர்" நாரதர் இப்படி சொல்லிக் கொண்டே போகப் போக பாண்டவர்களின் பிரமிப்பும் ஆச்சரியமும் அதிகரித்தது.

"அடேயப்பா! பிரம்மசபையில் மானுட உலகின் சர்வ அம்சங்களும் இருப்பது புலனாகிறது. பிரம்மதேவர் சதா தியானத்தில் தனிமையில் படைப்பு குறித்து சிந்தித்தபடி இருப்பார் என்று எண்ணியிருந்தோம்," என்றான் சகாதேவன்.

நாரதர் சிரித்தார்.

"நான் இப்போது சொன்ன பட்டியலில் பிரம்மச்சாரி ரிஷிகள் எண்பத்தி எண்ணாயிரம் பேரையும், சந்ததிகள் உள்ள ரிஷிகள் ஐம்பதினாயிரம் பேர்களையும் சேர்த்துக் கொள். நான் குறிப்பிட்ட அவ்வளவு பேரும் விரும்பும் சமயம், பிரம்ம சபைக்கு வந்து பிரம்மதேவனை ஆராதிக்க முடிந்தவர்கள். பிரம்மாவும் இவர்களை எல்லாம் தேவைக்கு ஏற்ப அழைத்து ஆசீர்வதிப்பார்..." என்ற

நாரதர், "இத்தனை சபைகளைச் சொன்ன நான் உன்னுடைய சபையைப் பற்றியும் கூற வேண்டும். இந்த சபையே மானிடலோக சபைகளில் சிறந்த சபை," என்றும் பாண்டவர் பூரித்துப் போகும் வண்ணம் கூறினார்.

அதைக் கவனமாகக் கேட்ட தர்மர், நாரதரிடம் ஒரு முக்கிய கேள்வியைக் கேட்க விரும்பினார்.

"தர்மா... நீ எதையோ கேட்க விரும்புகின்றாய் என்பது உன் முகக்குறிப்பில் புலனாகிறது. எதுவானாலும் கேள்" என்றார் நாரதர்.

"சுவாமி... சகல சபைகளையும் அதன் கீர்த்தியையும் அறிந்தோம். இவைகளில் உறைந்திருக்கும் மகானுபாவர்களையும் அறிந்தோம். நீங்கள் எல்லோரைப் பற்றியும் கூறியபடி வந்தபோது, இந்திரசபையில் அரிச்சந்திரன் இருப்பதாக குறிப்பிட்டீர். இந்த மண்ணில் மானுடப் பிறப்பெடுத்த பெருவாழ்வு வாழ்ந்த ரவிகுல அரசனான அரிச்சந்திரன் தன் காலம் முடிந்த நிலையில் இந்திரசபைக்கு எவ்வாறு செல்ல முடிந்தது? இது என் முதல் கேள்வி... எங்கள் தந்தையான பாண்டு, இப்போது பிதுர் லோகத்தில் உள்ளாரா... இல்லையேல் அவர் எங்கு உள்ளார்? அவரை நீர் சந்தித்தீரா?" என்று தர்மன் கேட்க, நாரதரும் பதில் கூறத் தொடங்கினார்.

"தர்மா... அரிச்சந்திரன், விஸ்வாமித்திரரால் பேணப்பட்ட திரிசங்குவின் புத்திரன் ஆவான். சத்தியத்தை பூலோகத்தில் தன் உயிரைக் கொடுத்து காப்பாற்றியவன் இவன். பொய்யே சொல்லாத புண்ணியன். ஆனால், இதனால் எல்லாம் அரிச்சந்திரன் இந்திரலோகத்தில் இந்திரனுக்கு இணையாக அமர்ந்து விடவில்லை. அவ

னுக்கு அந்த சிறப்பைக் கொடுத்தது 'ராஜசூயம்' என்னும் வேள்விதான் உன் தந்தையாகிய பாண்டுவை நான் - பிதுர்லோகத்தில் சந்தித்தபோது அவரும் இந்த ராஜசூயம் பற்றி என்னிடம் கூறினார். அதாவது, நீங்கள் பூவுலகில் ராஜசூய யாகத்தை நிகழ்த்தினால், பாண்டுவும் இந்திரலோகம் சென்று, அரிச்சந்திரன் அருகில் அமரும் பாக்கியம் பெறுவார். நாரதர் அவ்வாறு சொன்ன நொடியே, பாண்டவர்களுக்குள் அந்த வேள்வியை எப்படியாவது செய்து விட வேண்டும் என்ற எண்ணம் தோன்றி விட்டது.

கிருஷ்ணனிடம் ஆலோசனை கேட்க முடிவெடுத்தனர். பாண்டவர்களின் இன்றைய இருப்புக்கு காரணமே அவர் தானே! கிருஷ்ணனும் தர்மரின் விருப்பத்தைக் கேட்டான்.

"தர்மா... ராஜசூயம் செய்து இந்த பாரில் வெல்லப்பட முடியாதவனாக வாழ வேண்டும் என்கிற விருப்பம் உனக்கு எதனால் ஏற்பட்டது?" என்றான்.

"கிருஷ்ணா... ஏகபோக சக்கரவர்த்தியாவது என் எண்ணம் இல்லை. எங்கள் தந்தைக்கு இந்திர சபையில் மதிப்பான இடம் கிடைக்க வேண்டும். அரிச்சந்திர மகாராஜா போல் அவரும் நித்யசூரியாக திகழ வேண்டும். இதுவும் கூட என் விருப்பம் அல்ல. அவர் விருப்பமே... நாரதர் மூலம் இது எனக்கு தெரிய வந்தது," என்றான் தர்மன்.

கிருஷ்ணன் பலத்த சிந்தனையில் ஆழ்ந்தான்.

"கண்ணா... என்ன யோசனை? எங்களுக்கு அதற்கு தகுதி இல்லை என்று நினைக்கிறாயா?" என்று அர்ஜுனன் இடையிட்டான்.

"நிச்சயமாக இல்லை "

"பின் என்ன யோசனை?"

"அது எவ்வளவு சுலபமில்லை..."

"திரவுபதி சுயம்வரம் கூட சுலபமில்லை தான். ஆயினும் நான் வெல்லவில்லையா?"

"அதைப் போல இது பல மடங்கு கடினமானது "

"எந்த வகையில்?"

"எல்லா வகையிலும்..."

"விளக்கமாக சொல்ல முடியுமா?"

"ஒரு வார்த்தையிலும் சொல்லமுடியும்..."

"அந்த வார்த்தை?"

"ஜராசந்தன்! "

கிருஷ்ணன் கூறிட அனைவரிடமும் திகைப்பு.

ஜராசந்தன் என்கிற பெயரை கிருஷ்ணன் சொன்ன மாத்திரத்தில் எல்லோரிடமும் திகைப்பு. அதே வேளையில் ஜராசந்தன் பற்றி பாண்டவர்களுக்கும் பெரிதாக தெரிந்

திராத நிலை. எனவே, ஜராசந்தனைப் பற்றி கிருஷ்ணனே பாண்டவர்களுக்கு கூறத் தொடங்கினான்.

"மகதநாட்டு மன்னன் பிருகத்ரதன் என்பவனின் புத்திரன் தான் ஜராசந்தன். கிரிவ்ரஜம் என்பதே இவர்களின் தலைநகரம். ஆரம்பத்தில் பிருகத்ரதனுக்கு புத்திரப் பேறு இல்லை. சண்டகவுசிகர் என்னும் முனிவரை ஒரு வனத்தில் சந்திக்கப் போய், அவரது தவசக்தியால் பிறந்தவனே ஜராசந்தன். சண்டகவுசிகர் தன் தவசக்தி எல்லாம் திரட்டி ஒரு மாங்கனியாக்கி, அதை பிருகத்ரதனுக்கு அளித்திருந்தார். பிருகத்ரதனுக்கு இரு பத்தினிகள். எனவே, அவனும் அந்த மாங்கனியைச் சமமான இரு துண்டுகளாக ஆக்கி தன் பத்தினிகளுக்கு கொடுத்தான். இருவருமே கர்ப்பம் தரித்தனர். பிள்ளையும் பிறந்தது... எப்படி தெரியுமா...?" கிருஷ்ணர் ஒரு இடைவெளி விட்டார்.

பாண்டவர் கூட்டம் கவனமாகக் கேட்டது.

"இருவருமே ஜராசந்தனின் உடம்பின் சரிபாதி பகுதியை மட்டுமே பெற்றெடுத்தனர். மாமிசப் பிண்டமாக பிறந்த அந்த பிள்ளையிடம் உயிரும் இல்லை. மாம்பழத்தை வெட்டியதால் நேர்ந்த தவறு இது என புரிந்தது. பிண்டங்களை எடுத்துச் சென்ற ஏவலர்கள், 'ஜரை' என்னும் பூதம் வசிக்கும் சந்தியில் போட்டு விட, அதை எடுத்த பூதம் அந்த பிண்டத்தை இணைத்து உயிர் கொடுத்தது. உயிர் கொடுத்த பூதத்தின் பெயரால் 'ஜராசந்தன்' என்று பெயர் வந்தது. பூதம் வளர்த்த பிள்ளை என்பதால் ஜராசந்தன் அரக்க குணத்துடன் வளர்ந்தான்.

இவன் பிறப்புக்கு காரணமான சண்டகவுசிகர், 'போரில் எந்த அரசனாலும் உன்னை வெல்ல முடியாது' என்ற வரமும் அளித்தார்" என்ற கிருஷ்ணனிடம், அர்ஜுனன் பெருமூச்சுடன், "அதனால் தான் கிருஷ்ணா நீ அவனை விட்டு வைத்திருக்கிறாயா?" என்றான்.

"சரியாகச் சொன்னாய்... ஜராசந்தன் என் மீதும் படை எடுக்கத் துணிந்தான். நான் அதனாலேயே மகத நாட்டை விட்டு வெகுதூரம் வந்து துவாரகையை நாடாக கொண்டேன்," என்றான் கிருஷ்ணன்.

"அந்த சண்ட கவுசிகர் இப்படி கூடவா வரம் தருவார்?" என கேட்டான் பீமன்.

"கவலைப்படாதே... அவர் வரம் உன்னைத் தடுக்காது," என்ற கிருஷ்ணனைப் பார்த்து, "எப்படி?" என்றான் பீமன்.

"அவர் வரத்தின்படி, யோனி கர்ப்பம் கொண்டவன் அல்லவே நீ..."

"கண்ணா! நான் எப்படிபட்டவனாக இருந்தாலும் சரி... ஜராசந்தன் போன்ற அசுரசக்தியை அழித்தே தீர வேண்டும்," குமுறினான் பீமன்.

"சரியாகச் சொன்னாய். அவனை அழிக்காமல் ராஜசூய யாகத்தை தர்மனால் நடத்தவே முடியாது."

"அப்படியானால் ஜராசந்த வதம் நடந்தால் தான் ராஜசூயமா?" தர்மர் மெலிந்த குரலில் கேட்டார்.

"ஆம்... இல்லாவிட்டால் யாகத்தை மறந்துவிடு." என்றான் கிருஷ்ணன் பலத்த குரலில்.

"அதை விட வேறு அவமானம் வேறில்லை" என்று கோபித்தான் நகுலன்.

"கண்ணா! ஜராசந்தனிடம் பீஷ்மரை விட்டுப் பேசச் சொல்லட்டுமா?" என்று கேட்டாள் குந்தி.

கண்ணன் சிரித்தபடி, "அத்தை... நீ கருணை மிகுந்தவள். அதனால், இப்படித் தான் பேசுவாய். ஜராசந்தன், 'கிரீவ் ரஜத்' என்னும் குகையில் 84 ராஜாக்களை ஒரு காரணமும் இல்லாமல் சிறை வத்திருக்கிறான். இன்னமும் 14 ராஜா தான் மீதம் உள்ளனர் நூறு என்ற கணக்கிற்கு! இப்படிப்பட்டவன் எப்படி ராஜசூயம் நடத்த அனுமதிப்பான்?"

கிருஷ்ணன் இப்படி கேட்ட பிறகே, இதிலிருக்கும் சிக்கல் அவர்களுக்குப் புரிந்தது.

ஆனால், பீமன் தன் கதாயுதத்தை தூக்கிக் கொண்டு, "அண்ணா... நான் ராஜசூயத்துக்காக இல்லாவிட்டாலும், 84 ராஜாக்களை மீட்பதற்காகவாவது ஜராசந்தனை அழித்தே தீருவேன்" என்று சபதம் செய்தான். ஜராசந்தனோடு யுத்தம் தொடங்கியது. பாரதத்திலேயே இரண்டு பேர் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்ளும் மிக நீண்ட யுத்தமாக இந்த யுத்தம் கருதப்படுகிறது. போரில் கிருஷ்ணன் ஒரு உத்தியால் ஜராசந்தனைக் கொல்ல வழி செய்தான். அதன்படி ஒரு கோரைப் புல்லை எடுத்து, இரண்டாக கிழித்துப் போட்டு குறிப்பால் பீமனுக்கு உணர்த்தினான். அவ்வாறே பீமனும் ஜராசந்தனின் உட

லைக் கிழித்துப் போட்டான். ஆனால், இருபாதியும் உடனே ஒன்று சேர்ந்து ஜராசந்தன் எழுந்து நின் றான். பலமுறை இப்படியே நடந்தது. கிருஷ்ணன் மீண் டும் ஒரு புதிய உத்தியைக் கையாண்டான். கோரைப் புல்லை இரண்டாகக் கிழித்து வலக்கரத்தில் இருப்பதை இடது பக்கமும், இடக்கரத்தில் இருப்பதை வலப்பக்க மும் தூக்கிப் போட, பீமனும் ஜராசந்தன் உடலை அவ் வாறே தூக்கிப் போட்டான். அந்த உடல்களால் மீண்டும் ஒன்று சேர முடியவில்லை. எப்படியோ கிருஷ்ணனின் மதி யூகம், பீமனின் அபாரபலம் ஜரா சந்தனை வெற்றி கொண்டது. 84 அரசர்களும் சிறையிலிருந்து விடுவிக் கப்பட்டனர்.

இனி ராஜசூயம் தொடங்க தடையேதும் இல்லை. ஜரா சந்தனையே பீமன் வதம் செய்ததால், துரியோ தனாதி யர்கள் வாயை மூடிக் கொண்டு நடப்பதை வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு வழியற்றுப் போயினர். ராஜ சூயத்தின் முக்கிய அம்சம் எட்டுத்திக்கும் திக்விஜயம் செய்து அரசர்களிடம் கப்பம் பெற்று வருவது என்பது தான். இதற்காக அர்ஜுனன், பீமன், நகுலன், சகாதே வன், கடோத்கஜன் என்று ஒவ்வொருவரும் திக்விஜயம் புறப்பட்டனர்.

முன்னதாக தர்மர் தன் சகோதரர்களுடன் திருதராஷ் டிரனை சந்தித்து ஆசி பெற்றார். அப்போது ராஜசூயத் துக்கு கவுரவர்கள் நூறு பேருக்கும் அழைப்பு விடுத்தார். அதேசமயம் இந்த யாகம் நல்ல விதமாக நடந்து விடாத படி தடுக்க இன்னொரு அரசனும் இருப்பதை தர்மபுத் திரர் முதல் பாண்டவர் வரை ஒருவரும் உணரவில்லை. அவ்வளவு ஏன் கிருஷ்ண பரமாத்மாவே அதை உணர்ந் ததாக தெரியவில்லை. அந்த ஒருவன் தான் சிசுபாலன்!

ஜராசந்த வதத்தை தொடர்ந்து, ராஜசூய யாகத்தின் ஒரு அம்சமான திக்விஜய நிகழ்வு நடந்தது. அர்ஜுனன் வடக்கிலும், பீமன் கிழக்கிலும், நகுலன் மேற்கிலும், சகாதேவன் தெற்கிலும் பயணம் மேற்கொண்டனர். தர்மர் காண்டவபிரஸ்தத்தில், தன் சகோதரர்கள் திக்விஜயம் செய்து வரும் வரை காத்திருந்தார். திக்விஜயத்தில் எதிர்த்த அரசர்களை எல்லாம் அர்ஜுனனும், பீமனும் அடக்கி வெற்றி கண்டனர். இப்படி எதிர்த்தவர்களில் சிசுபாலனும் ஒருவன். பீமனின் வீரத்துக்கு கட்டுப்பட்ட சிசுபாலன், ஒரு நிபந்தனை மட்டும் விதித்தான்.

"தர்மபுத்திரர் ராஜசூய யாகம் நடத்துவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், யாகத்தில் தகுதியில்லாதவருக்கு முதல் மரியாதை தருவது கூடாது" என்றான்.

பீமன் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அதில் தான் பெரும் சிக்கல் உருவாகப் போவதை அவனால் உணர முடியவில்லை. திக்விஜயம் முடிந்து வெகு விமரிசையாக ஆயிரம் குண்டங்களோடு பிரதான மேரு குண்டம் அமைத்து, தர்மபுத்திரர்யாகத்தைத் தொடங்கினார். அக்னியில் ஆறு வகைகள் உண்டு. ஆரம்பணியம், ஷத்திரம், த்ருதி, வியுஷ்டி, த்விராத்திரம், தசபேயம் என்பதே அவை. இந்த ஆறாலும் யாகம் நிகழ்வது சிறந்த முறை. இதற்கு யாக விதியும் அனுமதிக்க வேண்டும். இதற்கு ராஜசூய யாகத்தில் இடம் இருந்தது.

நாரதரும் யாகத்தில் பங்கு கொண்டார். பெரும் முனிவர்கள், ரிஷிகள், அரசர்கள் பங்கு கொண்ட யாகத்தின் நிறைவில் அனைவருக்கும் மரியாதை செய்யும் ஐதீகம் தொடங்கியது. இவ் வேளையில் முதல் மரியாதையாருக்கு என்ற கேள்விபிரதானமாக எழுந்தது. திரி

கால ஞானியான நாரதர், கிருஷ்ணனை விஷ்ணுவாகக் கண்ட நிலையில், கிருஷ்ணன் உள்ள இடத்தில் வேறு யாரும் பெரிதாக இருக்க வாய்ப்பில்லை என்பதை புரிந்து கொண்டார். முதல் மரியாதை கிருஷ்ணருக்கே என்று முன்மொழிந்தார். அனைவரும் அதை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டனர். ஆனால், சிசுபாலன் மட்டும் ஏற்க மறுத்து ஆட்சேபித்தான்.

சிசுபாலன் சேதிராஜன் புதல்வன். பிறக்கும்போதே நெற்றியில் ஒரு கண்ணும், நான்கு கைகளும், கழுதையின் குரலும் கொண்டவன். இவன் அருகில் வரவே, எல்லோரும் பயந்தனர். அதே சமயம் சேதிநாட்டு அரசனுக்கு பதிலாக அசரீரி ஒன்று ஒலித்தது.

"அரசனே... இந்த பிறப்புக்கு காரணம் ஒரு வரமே! தேவனாக இருந்தும் அசுர புத்தியோடு நடந்து கொண்டதால் வந்த வினை. இதன் தொடக்கம் வைகுண்டம். இதன் முடிவும் வைகுண்ட பதியால் தான்! இவனை சம்ஹாரம் செய்யப் போகிறவன் மடியில் இவன் கிடத்தப்படும் போது இவனது நெற்றிக் கண்ணும், கூடுதலான இரு கரங்களும் நீங்கி விடும்," என்றது அந்த அசரீரி.

அதைக் கேட்ட சிசுபாலனின் தாய் தவித்தாள். தன் புதல்வனுக்கான காலன் யார் என்பதைத் தெரிந்து கொள்ளவும், அவனது விகார ரூபம் நீங்கவும், அவள் மிகவே முயன்றாள். அதன் பொருட்டு அந்த விகாரப் பிள்ளையை, பார்ப்பவர் மடியில் எல்லாம் கிடத்த தொடங்கினாள். அந்த வகையில் சேதி நாட்டுக்கு ஒரு யாத்திரையாக கிருஷ்ண பலராமர்கள் வரவும், அவர்கள் மடியில் பிள்ளையை விட்டாள். அதில் கிருஷ்ணன் மடியில் குழந்தை விழுந்த நொடி, நெற்றிக் கண்ணும், கரங்

களும் நீங்கி எல்லோரையும் போல மாறி குழந்தை அழத் தொடங்கியது.

அதைக் கண்ட சேதி நாட்டு ராணி கண்ணீர் உகுத்தாள். கிருஷ்ணனுக்கு காரணம் புரிந்தது. கண்ணீர் விடும் சேதிநாட்டு ராணி (சிசுபாலனின் தாய்) கிருஷ்ணனுக்கு அத்தை உறவு.

எனவே, கிருஷ்ணனும், "அத்தை அழாதே... உன் பிள்ளைக்கு என்னால் தீங்கு நேராது. உன் பொருட்டு, அவன் என்னிடம் பகை பாராட்டினாலும், அவன் பகையை குறிப்பாக தீய செயல்களையும், பேச்சையும் நான் ஒருமுறை அல்ல. நூறு முறை மன்னிப்பேன். ஆனால், அதற்கு மேல் போனால் என்னாலும் இயலாது," என்று கூறிட, "இது போதும் கிருஷ்ணா... இது போதும்," என்றாள் அந்த தாய்.

இப்படி பிறக்கும்போதே, கிருஷ்ணனே தனக்கான சத்ரு என்பதை தெரிந்து கொண்ட சிசுபாலனும் கிருஷ்ணனை வெறுத்தான். இடையன், மாடு மேய்ப்பவன், கருப்பன், குழலூதி, வெண்ணெய் திருடி, பெண்களோடு சரசம் புரிபவன்," என்று பார்ப்பவர்களிடம் எல்லாம் கூறி வந்தான். அந்த நூறு என்கிற கணக்கு தடுத்தபடியே வந்தது. ஆட்சேபம் தெரிவித்த சிசுபாலனை பீஷ்மர் கண்டித்தார். கிருஷ்ண பரமாத்மா யார்? என்பதை தெரிவித்தார். மகாவிஷ்ணுவே கிருஷ்ணராக அவதரித்து வந்திருப்பதை எடுத்துக் கூறினார்.

"சான்றோர்களே! நாராயணரே, சுயம்புவாக தோன்றியவர். தன் நாபிக்கமலத்தில் பிரம்மனைத் தோற்றுவித்தார். பிரம்மன், நாரணர் துணையுடன் உலகைப் படைத்

தான். இந்த பிரபஞ்சத்தில் எல்லா உயிர்களுமே நாராய ணரின் அங்கத்தைச் சேர்ந்ததே. அவரே மகாயோகி, பர மாத்மா, பரபிரம்மம்... யோகநித்திரையில் அவர் இருந் தாலும், அவரிடமிருந்தே அழிவில்லாத பிரகிருதியானது உற்பத்தியாகி, பிரிந்து பிரிந்து, நான், நீ, நாம் என்று ஆகி யுள்ளது. இந்த சிசுபாலனும் அதில் ஒருவன். இவன் இகழ்ச்சியும் அதில் ஒன்று. பொலிவான உடம்பில் உருவாகும் வியர்வை போல் உருவாகும் இவர்களை, வியர்வை வழிப்பது போல வழிப்பதும் அழிப்பதும் அறச் செயலே! அப்படியே, நாராயணன் அவதாரங்கள் எடுத்து வந்து மது, கைடபரில் தொடங்கி கம்சன் வரை வதம் புரிந்துள்ளார். அதன் தொடர்ச்சியில் இந்த சிசுபாலனும் வதமாவது உறுதி." என்று முடித்தார்.

சிசுபாலனும் அதற்கேற்பவே நடந்து கொண்டான். விதி யும் அவனை கிருஷ்ணரைத் தூற்றும்படி பேச வைத் தது. ஏச்சும் பேச்சும் நூறைக் கடந்தது. கிருஷ்ண சக் கரம் சிசுபாலனின் சிரசை வெட்டி வீழ்த்தி, அவனு யிரை தன்னோடு இணைத்துக் கொண்டது. பாண்டவர் கள் யாகத்தை நிறைவு செய்து, வழி காட்டியாக இருந்த கிருஷ்ணனை இருகரம் கூப்பி வணங்கினர்.

மகாபாரதத்தில் நாம் இதுவரை தெரியாத பல பாத்திரங் களை பற்றி அறிந்து கொண்டோம். தொடர்ந்து அந்த காவியத்தில் இருக்கும் மற்ற பாத்திரரங்கள் பற்றியும், கிளைக் கதைகளையும் தெரிந்து கொள்ள இருக்கி றோம்.

நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது கலியுகத் தில்... இந்த யுகத்தில் பிறப்புகள் யோனி வழியா கவே நிகழ்ந்தாக வேண்டும். இவ்வாறு பிறவாதவர்களை

'அயோனிஜர்' என்பர். பாண்டவர்கள் வாழ்ந்த துவாபர யுகத்தில் யோனி மட்டுமின்றி, யோக வழியிலும் கருக் கொள்ள இடமளிப்பதாய் இருந்தது. இந்த யோகவழி எப்படிப்பட்டது. இதனால் கருவுறுதல் எப்படி சாத்தி யம் என்ற கேள்விக்கான விடையை அறிவியலோடு பொருத்திப் பார்ப்பது சிரமமே.

ஆனால், மகாபாரத காலத்தில் யோகவழியில் பலர் பிறந் திருக்கின்றனர். பாண்டவர்கள் பிறப்பே யோகவழி முறை தான்! கர்ணனும் அந்த வழியில் காதைக் கருவறையாக கொண்டு பிறந்தவன். பின் அதுவே காரணப் பெயரா கிவிட்டது. 'கர்ணம்' என்றால் 'காது' என்று பொருள். துரியோதனன் உள்ளிட்ட அவன் சகோதர, சகோதரி கள் நூறுபேரும் கூடயோக சக்தியாலே மண் கலயத்தில் உயிர்ப்பிக்கப்பட்டனர். திரவுபதியின் தந்தையான துரு பதன் கூட பத்துமாத சிசுவாக வளராமல் மிக குறுகிய காலத்தில் 'துரு' என்ற மரத்தின் நிழலில், இரு பாதங் களுக்கு கீழே குழந்தையாக உருவெடுத்து வந்த கார ணத்தால் 'துருபதன்' என்றானவனே!

இன்றைய நம் பகுத்தறிவுக்கு பிடிபடாத ஒரு நிலையில் இந்த யோகவழி கர்ப்பம் அன்று இருந்தது. அது தான் ஒரு இரவில் அர்ஜுனனையும் அரவானுக்கு அப்பனாக் கியது. யோகம் என்பதற்கு 'வழிமுறை, அதிர்ஷ்ட ம், நிக ரற்ற பயம், சேர்க்கை' என்று பல பொருள் உண்டு.

யோகவழிகர்ப்பத்துக்கு இந்த பொருள் செறிவு அவ் வளவும் பல கோணங்களில் பொருந்துகிறது. எனவே, பாரத பாத்திரங்களை அறிந்து கொள்வதோடு புரிந்து கொள்ள விழைகின்றவர்கள் நதி மூல, ரிஷி மூல விஷ

யங்களை பொருட்படுத்தக் கூடாது. சூட்சும அறிவால் மட்டுமே இவைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வகையில் அரவான், அர்ஜுனனின் வேட்கையி னாலோ, பிள்ளை வேண்டும் என்ற விருப்பத்தினாலோ உருவாகவில்லை. ஆனால், இந்த இரண்டும் உலூ பிக்கு இருந்தது. அதற்கு அர்ஜுனன் பயன்பட்டான். நாகலோக தர்மப்படி இதைத் தவறாகவும் கருத இட மில்லை. அர்ஜுனன் போன்ற அங்கலட்சணம் பொருந் திய மாவீரர்கள் ஒரு சராசரி வீரனுக்கு உண்டான விளைவுகளை மட்டும் உருவாக்குபவர்கள் அல்ல... அவர்களால் பலவிதமான விளைவுகள் ஏற்பட்டன. இம் மட்டில், அர்ஜுனனே விரும்பினாலும் இந்த விளைவு களை தடுத்து நிறுத்த முடியாது என்பதே யதார்த்தம். இதற்கு ஏற்பவே அர்ஜுனனால் இன்னொரு புத்திரன் உருவாகும் ஒரு சூழல் ஏற்பட்டது.

உலூபியின் விருப்பத்தை நிறைவேற்றிய பின், அர்ஜு னன் கங்கைக் கரையை திரும்ப அடைந்து தன் பய ணத்தை தொடர்ந்தான். அங்கிருந்து இமயமலை சார லுக்குச் செல்ல ஆரம்பித்தான். அங்கு நைமிசாரண் யத்தை அடைந்தபோது, உத்பிலினி, நந்தா, அபரநந்தா, கவுசிகி, கயா, மகாந்தி போன்ற புண்ணிய நதிகளில் எல்லாம் நீராடினான். அப்படியே அங்கு வசிக்கும் அந்த ணர்களின் காலில் விழுந்து ஆசி பெற்றான். அவர்களின் தேவைக்கு ஏற்ப தானமும் செய்தான். பின் அங்கம், வங் கம், கலிங்கம் என்னும் தேசங்களில் உள்ள புண்ணிய நதிகளில் நீராடி விட்டு, கோதாவரி தீரத்துக்கு வந்தான். அதை தொடர்ந்து மகேந்திரகிரி என்னும் மலைப் பகுதி யையும் கடந்து, காவிரி பாயும் பூம்புகாரை கடல் வழியாக அடைந்தான்.

அங்கிருந்து, ராமேஸ்வரம் வழியாக மதுரை அருகி லுள்ள மணலூரை அடைந்தான். இந்த மணலூரே அந்த நாளில் பாண்டிய நாட்டின் தலைநகராக இருந் தது. அப்போது பாண்டிய மன்னனாக இருந்தவன் சித் ரவாகனன். அவனுடைய ஒரே மகள் சித்ராங்கதை. இவள் ஒரு ஆண்மகனைப் போல வளர்க்கப்பட்டி ருந்தாள். நடை, உடை, பாவனை என சகலத்திலும் ஆணுக்குரியவளாக இருந்தாள். உச்சபட்சமாக சித்ர வாகனன் தன் மகளை 'சித்ராங்கி' என்றோ, 'சித்ராங் கதை' என்றோ அழைக்காமல் 'சித்ராங்கா' என்று ஆண் பால் பெயராலேயே அழைத்தான்.

அர்ஜுனன் மணலூர் வந்த நிலையில் சித்ரவாகனனை சந்தித்த சமயம் அவன் மகளை மகனாகக் கருதுவது ஏன் என்று கேட்டான்.

சித்ரவாகனனும் அர்ஜுனனிடம் தங்களின் பரம்பரை வரலாற்றை பகிர்ந்து கொள்ள தொடங்கினான்.

"பாண்டுபுத்திரரே! பாண்டிய நாட்டுக்கு வந்த உங்கள் வரவு நல்வரவாகட்டும். உங்கள் திருவடிகள் பட்டதால் எம் பாண்டிய நாடும் பெரும் பெயர் பெறட்டும். என் முன்னோர்கள் அவ்வளவு பேருக்குமே ஒரு சாபத்தால் இது நாள் வரை ஒரே ஒரு ஆண் வாரிசு மட்டுமே உருவாகிற்று. அந்த வகையில் ஆண்வாரிசே தொடர்ந்து வந்தது. முதல் முறையாக சித்ராங்கதை பெண்ணாக எனக்குப் பிறந்து விட்டாள். தோற்றத்தில் பெண்ணாக இருந்தாலும், மகனாகவே கருதி வளர்த்து விட்டேன். அதே சமயம் இவள் மூலம் பிறக்கும் வாரிசு என் வாரி சாக இருக்க வாய்ப்பில்லை என்பதை எண்ணி கவலை யோடு இருக்கிறேன்," என்றான்.

மன்னனின் கவலையை அறிந்த ராஜரிஷி அதை தீர்க்க ஒரு வழியைக் காட்ட முன் வந்தார்.

"சித்ரவாகனா உன் மகளுக்கு பிறக்கும் புத்திரனை உன் பிள்ளையாக்கிக் கொள்ள சாஸ்திரத்தில் இடமுண்டு. இதற்கு 'புத்திரிகா புத்திரன்' என்று பெயர். இதை அடைய வேண்டுமானால், நீ உன்மகளைகன்னிகாதானம் செய்யும்போதே சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். இதற்கு மாப்பிள்ளையாக வருபவனும் சம்மதிக்க வேண்டும். அதற்கு பதிலாக மாப்பிள்ளை விரும்பும் பொன்னை அளிக்க வேண்டும்" என்றார்.

மன்னன், "ராஜரிஷியே! இதற்கு யாரும் சம்மதிக்க மாட்டார்களே!" என வருந்தினான்.

அவரோ அர்ஜுனனைப் பார்த்தவராக, "அர்ஜுனா! நீ மனம் வைத்தால், சித்ரவாகனனின் மனக்குறையைப் போக்கலாம். தீர்த்த யாத்திரை மூலம் புண்ணியத்தை சேர்க்கும் நீ இந்த பாண்டியனுக்கு ஒரு வாரிசைத் தந்து இன்னும் புண்ணியத்தை சேர்க்கலாம். இது ஒன்றும் தவறு ஆகாது. ஏனென்றால் உன் போன்ற சாமுத்ரிகா லட்சணம் உள்ளவர்கள் விதிப்பாடே வேறானது," என்றார்.

அர்ஜுனனும் சம்மதித்து சித்ராங்கதையை மணந்து அவளோடு சில காலம் கழித்தான். இந்த காலத்தில் அவன் அழகர்மலை மீதிருக்கும் நூபுர கங்கையில் நீராடியதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் சித்ராங்கதைக்கும், அர்ஜுனனுக்கும் 'பப்ருவாகனன்' என்னும் மகன் பிறந்தான். அர்ஜுனன் மகனாக பப்ருவாகனன் பிறந்த நிலையில், பப்ருவாகனனை பாண்டிய

மன்னன் சித்ராங்கதனுக்கு முறைப்படி அக்னிபூர்வமாக தாரை வார்த்துக் கொடுத்து, சித்ராங்கதனின் வாரிசு சிக்கலை தீர்த்தவனாக அர்ஜுனன் தன் வனவாசத் தைத் தொடர்கிறான்.

இதன் தொடர்ச்சியில் அர்ஜுனனுக்கு ஏராளமான அனுபவங்கள் ஏற்படுகின்றன. பாவம் போக்கி புண்ணி யம் சேர்க்கும் ஐந்து தீர்த்தங்களில் ஐந்து அப்சர கன் னியர்கள் ஒரு பிராமணன் சாபத்தால் முதலைகளாக கிடக்கின்றனர். அதில் குளிக்க இறங்குபவர்கள் தான் அவர்களின் உணவு. அந்த கன்னியரின் சாப நிவர்த்தி அர்ஜுனனின் வீரத்தால் ஏற்படுகிறது. அந்த கன்னியர் 'வர்க்கை, சவுரபேயி, சமீசி, புத்பதை, லதா' என்ற பெய ருடைய குபேரனின் ஆசை நாயகிகள் ஆவர்.

அர்ஜுனனின் வனவாச பயணம் அடுத்த கட்டமாக 'பிர பாச தீர்த்தம்' என்னும் புண்ணியப் பகுதியில் ஈடேறி யது. இங்கே தான் 'கதன்' என்னும் யாதவன் அர்ஜு னனுக்கு நண்பனாகிறான். இவன் மூலம் பேரழகியான 'சுபத்ரை' பற்றி கேள்விப்படுகிறான். கிருஷ்ண, பலரா மனின் சகோதரியான சுபத்ரையை 'ரைவதகபர்வதம்' என்னும் இடத்தில் ஒரு பெரிய உற்ஸவம் நடக்கும் சமயம் பார்த்து, அவள் அழகில் மனதைப் பறி கொடுக்கி றான். பின் கிருஷ்ணனிடமே தன் விருப்பத்தைக் கூறிட, கிருஷ்ணனும் சுபத்ரைக்கு அர்ஜுனனை விட மேலான கணவன் கிடைக்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்து இருவருக்கும் திருமணம் நிகழ என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்கிறான்.

இதன்பின் அர்ஜுனனும், கிருஷ்ணனும் 'மாப்பிள்ளை மைத்துனன்' என்னும் உறவுக்குரியவர்களாகவும்

ஆகின்றனர். இவர்களை மற்றவர்களும் 'கிருஷ்ணார்ஜுனர்கள்' என்று சேர்த்தே அழைக்கத் தொடங்குகின்றனர். இந்த வனவாச யாத்திரையில் தான் அர்ஜுனன் இணையில்லாத குதிரைகள் பூட்டிய ஒரு ரதத்தையும், பலம் பொருந்திய எல்லா அஸ்திரங்களையும், பூட்டக் கூடிய வில்லையும், வற்றாத அம்புகள் கொண்ட அம்பறாத் துாளியையும் அக்னி தேவனிடம் இருந்து பரிசாகப் பெறுகிறான்.

கிருஷ்ணனும் அக்னி தேவனிடம் இருந்து பெரும் வல்லமை படைத்த சக்கரம் ஒன்றையும், எவரையும் வீழ்த்தி விடும் கதாயுதத்தையும் பெறுகிறான். இவ்வாறு இவர்கள் இந்த இணையில்லா அஸ்திரங்களையும், காற்றினும் வேகமாகச் செல்ல முடிந்த குதிரைகள் பூட்டிய ரதத்தையும் அடையக் காரணம் 'சுவேதகி ராஜன்' என்பவனே!

யார் இந்த சுவேதகி ராஜன்?

இவனால் எப்படி கிருஷ்ணார்ஜுனர்கள் அக்னியிடம் அதிசயப் பரிசுகளை பெற்றனர் என்பதன் பின்னே ஒரு பெரும் கதையே ஒளிந்திருக்கிறது.

சுவேதகி ராஜன் தேவலோகத்து இந்திரனுக்கு இணையான அரசனாவான். இவன் வேத சாஸ்திரங்களை உயிராகக் கருதியவன். அதனால், இவன் அரசாட்சி செய்த சமயத்தில், நாள்தோறும் வேதபாராயணம் முதல் யக்ஞங்கள் வரை அனைத்தையும் தவறாமல் செய்து வந்தான். இதனால், இவனைச் சுற்றி எப்போதும் வேத வித்தகர்களும், பிராமணர்களும் மிகுந்து காணப்பட்டனர். ஒரு சமயம், இவர்கள் அரசனிடம் இருந்து சற்று

விலகி தீர்த்த யாத்திரை மேற்கொள்ள விரும்பினர். இதனால், அரசன் பக்கத்து நாட்டிலுள்ள பிராமணர் களை அழைத்து வந்து தன் நித்யவேள்வி கடமையைத் தொடர்ந்தான். ஒரு கட்டத்தில் அவர்களும் தங்களுக் கென தங்கள் நாட்டில் செய்ய வேண்டிய கடமைகள் உள்ளன. அதைச் செய்தாக வேண்டும். ஆகையால், நாங்கள் விடை பெறுகிறோம் என்று விலகினர்.

இதனால் சுவேதகி ராஜனின் நித்ய வேள்விக்கு தடை உண்டானது. அதை எப்படியும் போக்க அவன் விரும்பி னான். அப்போது அவன் மீது நல்ல எண்ணம் கொண்ட வர்கள் ஆலோசனை கூறினர். 'தினம் தோறும் செய்யும் நித்ய வேள்வியை விட, நூறு வருஷம் தொடர் வேள்வி செய்த பலனைத் தரும் 'சத்ரயாகம்' நடத்தினால் நல் லது," என்று கூறினர். ஆனால், இந்த யாகத்தை நடத்த எந்த பிராமணனும் முன் வரவில்லை.

அந்த பரமேஸ்வரனாகிய 'ருத்ரன்' என்னும் அம்சத்தா லேயே யாகம் முடியும் என்ற தகவல் மட்டும் கிடைத்தது. ருத்ரனை தன் வசப்படுத்த தவம் செய்யத் தொடங்கி னான் மன்னன். 12 ஆண்டு தவம் செய்ததன் விளை வாக பரமேஸ்வரனும் காட்சியளித்து, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, யாகத்தை தாங்களே உடனி ருந்து ஈடேற்றித் தர வேண்டும் என்று வேண்டிக் கொண் டான்.

பரமேஸ்வரர் ஒரு நிபந்தனை விதித்தார். "சத்ர யாகம் நடத்த அக்னி பெரிதும் துணை நிற்க வேண்டும். ஆகை யால், அக்னி பகவானை நித்ய வேள்வியால் நெய் விட்டு வளர்த்து கொழுந்து விட்டு எரியச் செய்ய வேண்

டும். இவ்வாறு செய்யும் போது அக்னி மிகவும் மகிழ்ச்சி அடைவான்.

இதனை நீ பிரம்மச்சர்ய விரதத்தோடு பன்னிரண்டு ஆண்டுகள் செய்ய வேண்டும். ஒருநாள், ஒரு பொழுது, ஒரு நாழிகை அளவு கால கதி கூட இடைவெளியின்றி பசும் நெய்யால் நீ அக்னியை வளர்த்தால் அக்னிக் குப் பூரண திருப்தி உண்டாகும். அதற்குப் பிறகே யாகம் நடத்த நான் துணை செய்வேன்," என்று கூறி மறைந் தார்.

சுவேதகி ராஜன் அடுத்த நொடியே அக்னி வளர்த்து தன் வேள்வியை தொடங்கிவிட்டான். அவனே வேள்விக் கான அக்னி குண்டம் முன் அமர்ந்து நெய் விட்டு அக் னியை மட்டுமே துதி செய்து அக்னி வேள்வி புரிந்தான். இந்த வேளையில் இவனது மந்திரிகளும், உடன் பிறந்த வர்களும் ஆட்சிப் பொறுப்பை தங்கள் கையில் எடுத்துக் கொண்டனர்.

சுவேதகி ராஜனின் பிரம்மாண்ட தவவேள்வியும், பன்னி ரெண்டு ஆண்டுகள் இடைவெளியின்றி நடந்து முடிந் தது. இதனால், அக்னிதேவன் பெரும் மகிழ்வும், வலி மையும் கொண்டவனாக ஆனான். பரமேஸ்வரனும் பிரத்யட்சமாகி அவனைப் பாராட்டியதோடு சத்ரயாகம் நடத்த, தன் பிரதிநிதியாக துர்வாச மகரிஷியை அனுப்பி வைத்தார்.

இதற்குப் பிறகு சுவேதகி ராஜனின் சத்ர யாகம் நல்ல முறையில் ஈடேறியது. இது சுவேதகி ராஜனுக்கு நித்ய சொர்க்கத்தில் வாழக் காரணமாகி விட்டது. ஆக மொத் தத்தில் சுவேதகி ராஜன் என்பவன் வேள்விகளுக்

கும், அக்னிக்கும் ஒரு இலக்கணம் போலாகி விட்டான். ஆனால், இதனாலும் ஒரு பின்விளைவு உருவானது. அது மிக வினோதமானதும் கூட... என்ன அது?

சுவேதகிராஜன் 12 ஆண்டுகள் புரிந்த அக்னிவேள்வி ஆனது அக்னி தேவனுக்கு பெரும்பசியை உருவாக்கி விட்டது. வேள்வி முடியவும் தன் பொலிவு குறைந்து, சக்தியும் குறைவது போல் அக்னி உணர்ந்தான். செக்கச் சிவந்த அவனது வண்ணம் மெல்ல வெண்ணிறத்துக்கு மாறி விட்டது. இதைக் கண்டு அக்னிதேவனே கலக்க முற்றான். அக்னி தேவனைப் பார்த்த மற்ற தேவர்களும் அஷ்டதிக் பாலகர்களும் அவனை ஒரு நோயுற்றவன் போல உணர்ந்தனர்.

அக்னியும் ஒரு முடிவுக்கு வந்து பிரம்மாவிடம் சென்று தனக்கேற்பட்ட தளர்ச்சியைச் சொல்லி வருந்தினான். பிரம்மா அக்னியின் நிலையைப் புரிந்து கொண்டார். "பன்னிரண்டு வருட காலம் இடையறாது விழுந்து நெய்யையும், அவிசையும் உண்ட காரணத்தால் ஏற்பட்ட தளர்ச்சி இது. இது காலத்தால் சரியாகி விடும்! உரிய வேளையில் நானே அதற்கு வழி செய்வேன்," என்றார்.

அக்னியோ, "பிரம்ம தேவனே... என் உபாதை இப்போதே சரியாக வேண்டும். என் சோர்வு நீங்கி, நான் என் பழைய பொலிவைப் பெற நீங்கள் இப்போதே வழிகாட்ட வேண்டும்" என்று மன்றாடினான். இதைத் தொடர்ந்து பிரம்மாவுக்குள் நினைவுக்கு வந்தது காண்டவ வனம் தான்!

காண்டவ வனத்தில் உயிரினங்களில் மிகுந்த கொழுப்பை உடைய பிராணிகள் பலவற்றோடு தேவர்க

ளுக்கு எதிரான சத்ருக்களும் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் அக்னிக்கு இரையாகும் பட்சத்தில் அக்னி புதிய பொலிவை அடைவதோடு காண்டவ வனமும் கொடியசூழலில் இருந்து விடுபடும். வனத்துக்குள்ளே ஒன்றைச் சார்ந்து ஒன்று பிழைப்பதே வனதர்மம். சிறுபூச்சியை தவளை விழுங்கும், அந்த தவளையை பாம்பு விழுங்கும். பாம்பை பருந்து விழுங்கும். புல்லை மானும், மானைப் புலியும், புலியை முதலையும் விழுங்கி உயிர் வாழும். இது ஒரு வட்டச் சுழற்சி!

நடத்த ஒன்றுக்குள் ஒன்று இரையாகி, இரையானதன் இனத்தில் மீண்டும் பிறக்கும். இவை அவ்வளவும் ஒரு சமயம் அக்னிக்கு இரையாகும். அபூர்வமாக பிரளயத்தில் நீருக்கு இரையாகும். அக்னிக்கு இரை ஆகிறவை மண்ணோடு கலந்து பின் தாவரமாய், நீரினமாய்ப் பிறக்கும். இந்த மாற்றம் சிருஷ்டியின் மாறாத அம்சமாகும். அப்படிப்பட்ட மாற்றம் காண்டவ வனத்தோடு தேவைப்படுவதை வைத்தே, பிரம்மா அந்த வனத்தை இரையாக்கிக் கொள்ளச் சொன்னார். அக்னியும் ஒரு புதிய தெம்போடு காண்டவ வனம் நோக்கிப் புறப்பட்டான்.

அகன்று விரிந்து பசுமையுடன் காட்சி தந்த அந்த வனத்தில் ஆங்காங்கே நீர்ச்சுனைகளும், மடுக்களும் காணப்பட்டன. அவைகளில் தான் ஆயிரக்கணக்கான யானைகள் தாகசாந்தி செய்து கொண்டிருந்தன. காட்டு எருமைகளோ மடுக்களில் மூழ்கி தங்களை மறந்து கிடக்க, அவைகளை விழுங்க மலைப்பாம்புகள் தருணம் பார்த்துக் கொண்டிருந்தன.

இந்நிலையில் அக்னி அங்கே வந்து தன் சிவந்ததீ நாக்குகளால் அந்த வனம் முழுக்க பரவி அப்படியே மொத்த

வனத்தையும் அழிக்க முற்பட்டான். இதை சற்றும் எதிர் பாராத யானைகள் அலறி ஓடி சுனைகளிலுள்ள நீரை உறிஞ்சி வந்து எரிகின்ற நெருப்பின் மேல் பீறிடச் செய்து கொடிய அக்னியை அணைக்க முயன்றன.

அக்னியின் செயலைவாயுவும் விரும்பாததால் அவ னும் தன் பங்குக்கு வேகம் கொண்டு எரியும் நெருப்பை அணைத்தான். இதனால், அக்னியால் வேக மாக செயல்பட முடியவில்லை. ஒருமுறைக்கு ஏழுமுறை அக்னி முயலவும் காண்டவ வன மிருகங்களும், வாயு வும் ஒன்று கூடி அக்னியை செயல் இழக்கச் செய்தனர். இதனால், மனம் வருந்திய அக்னி மீண்டும் பிரம்மாவிடம் தஞ்சம் புகுந்தான்.

பிரம்மாவும் நடந்ததை ஞான திருஷ்டியால் உணர்ந்த வராக சில காலம் பொறுத்திருக்கச் சொன்னார். அவர் சிலகாலம் என்று குறிப்பிட்டது பூவுலகில் கிருஷ்ண னும், அர்ஜுனனும் பிறந்து கிருஷ்ணார்ஜுனர்கள் என்று இணைபிரியாதவர்களாக அழைக்கப்படும் காலத்தைத் தான்... அப்படி ஒரு காலமும் வந்து கிருஷ்ணார்ஜுனர் களும் காண்டவ வனத்துக்கு அருகில் ஒன்றாக இருந்த தருணத்தில் தான், அக்னியும் பிரம்மாவின் ஆலோச னைப்படி அவர்களின் உதவியை நாடி வந்தான்.

ஒரு க்ஷத்திரியனிடம், பிராமணன் ஒருவன் வந்து யாசகம் கேட்கும் போது அவன் கேட்கும் யாசகத்தை எப்பாடு பட்டாவது கொடுக்கவே பார்ப்பான். அல்லாத பட்சத் தில் பிராமணனுக்கு இல்லை என்று சொன்ன தோஷத் தோடு, உதவி செய்தால் கிடைக்கும் புண்ணியமும் கிடைக் காமல் போகும். இதனாலேயே யாசகம் பெற்று விடத் துடிப்பவர்கள், பிராமண - வேடத்தில் செல்வதை

ஒரு தந்திரமாகக் கருதினர். இங்கே அக்னியும் அப்ப டியே வந்து தான் காண்டவ வனத்தை எரிக்கும் போது நீராலும், காற்றாலும் தான் பரவுவது தடைபடக் கூடாது என்று வேண்டிக் கொண்டான்.

இருந்தும் வந்திருப்பது அக்னி என்பதை கிருஷ்ணனும், அர்ஜுனனும் - தெரிந்து கொண்ட நிலையில், போர்க் களத்தில் வேகமாகச் செல்லும் ரத்தத்தை கேட்க, அக் னியும் தர சம்மதித்தான். இதன் பிறகு அக்னி வனத் தையே கபளீகரம் செய்யத் தொடங்கினான். இதை இந் திரன் துளியும் விரும்பவில்லை. வருணனை அழைத்து மழை பொழியச் செய்தான். கிருஷ்ணார்ஜுனர்கள் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்ற, தங்கள் பங்கிற்கு அஸ்திரங்களை கையில் எடுத்தனர். அவை மிருகங் கள் வனத்தை விட்டு தப்ப முடியாத படி தடுத்து நிறுத் தின. அந்த வனத்தில் தட்சகன் என்னும் பாம்பு அரசன் வசித்து வந்தான். காண்டவ வனம் எரிந்த போது, அவன் குருக்ஷேத்திரம் போயிருந்தான்.

அவன் பிள்ளை அசுவசேனனைக் காக்கும் நோக்கில், அவன் தாயானவள் அப்படியே அவனை விழுங்கியவ ளாக வானத்தில் பறந்தாள். ஆனால், அர்ஜுன்பாணம் அவளை மூன்று துண்டாக்கியது. அசுவசேனனை மட் டும் உமிழ்ந்து தப்பிக்கச் செய்த நாகராணியான அவள் மாண்டு போனாள். இதைக் கண்ட இந்திரன் ஐந்திராஸ் திரத்தை ஏவினாலும், அர்ஜுனன் தகர்த்து எறிந்தான். வனமே முழுமையாக அக்னிக்கு இரையானது. வனத் தில் ஒளித்திருந்த மயன் என்னும் தேவசிற்பியை அர் ஜுன் பாணம் துரத்தத் தொடங்கியது.

புத்திசாலியான மயன், கிருஷ்ணார்ஜுனர்களை வெல்ல முடியாது என்பதை உணர்ந்து 'சரணம் சரணம் அபயம் அபயம்' என்று கத்தியபடி அவர்களின் காலில் விழுந்தான். அவனை அர்ஜுனன் ஏதும் செய்யாமல் விட்டான்.

இறுதியில் வனத்தில் அசுவசேனன் என்னும் நாகனும், சிற்பி மயனும் மட்டும் உயிர் பிழைத்திருக்க, நான்கு சாதகப்பறவைகள் வானில் பறந்து உயிர் தப்ப முயன்றன. அவைகளை அர்ஜுனன் வீழ்த்த முயன்றபோது, அக்னி தேவனே தடுத்தான்.

"அர்ஜுனா... அந்த பறவைகளை விட்டு விடு! அவைகளுக்கு எந்த காலத்திலும் என்னால் ஆபத்து நேராது என்னும் வரத்தை நான் வழங்கியுள்ளேன். அவைகள் மந்தபால ரிஷி என்னும் மகாஞானியின் பிள்ளைகள். அவருக்கு நான் வரம் அளித்துள்ளேன்," என்றான்.

அர்ஜுனன் ஆச்சரியத்துடன், 'யார் அந்த மந்தபாலரிஷி? அவருக்கு சாதகப்பறவைகள் வடிவில் பிள்ளைகள் எப்படி?" என்று கேட்பது போல அக்னியைப் பார்த்தான்.

இந்த பாலரிஷி என்னும் முனிவருக்கு சாதகப் பறவைகள் வடிவில் நான்கு பிள்ளைகள்! அந்த நான்கு பறவைகளையும் அக்னி எதுவும் செய்யவில்லை. எதனால் அப்படி என்ற அர்ஜுனனின் கேள்விக்கு அக்னியே பதில் கூறினான்.

"பார்த்திபனே! மந்த பாலரிஷி பெரும் தவசி. பல யோகங்களையும் செய்தவர். வேதத்தில் கரை கண்டவர். மானுட வாழ்வை முடித்ததும் விண்ணுலகை அடைந்

தார். ஆனால், முக்தி உலகக் கதவும் மூடப்பட்டே இருந்தது.

இவர் நிமித்தம் அது திறக்கவேண்டும். ஆனால், திறக்கவில்லை. இதனால், வெகுண்டமகரிஷிஎமலோகம் சென்று தன்வருத்தத்தை தெரிவித்தார். எமலோகத்தில் எமனோடு இருந்த தேவர்கள் மந்தபாலரிஷிக்கு பதில் அளித்தனர்.

"மகரிஷி அவர்களே! நீங்கள் பெரிய தவசீலர். உங்களுக்குத் தெரியாததல்ல. சாஸ்திரப்படி நடந்தீர். பாவமேதும் செய்யவில்லை. ஆனால், திருமணம் கைகூடி புத்திரப்பேறு இல்லாமல் போய் விட்டது. சந்ததி என்று ஒன்று ஏற்பட்டு அந்த சத்புத்திரன் உங்கள் கர்மங்களை தொடர்ந்தாலே இங்கே மோட்சக்கதவு திறக்கும். அல்லாத பட்சத்தில் 'புத்' என்னும் நரகத்தை அடைந்து துன்புற வேண்டும்.

'புத்' என்னும் நரகில் இருந்து பிதாவைக் காப்பவன் என் பதாலேயே ஆண் குழந்தைகளை 'புத்திரன்' என்கிறோம். பிரம்மச்சர்யமும் அதன் தொடர்பான சன்யாசமும் பூவுலகில் ஞானம் தரும். பெரும் புண்ணிய பயன்களையும் தந்திடும். அதே வேளையில் அந்த பயன்களை அனுபவித்திட திரும்பவும் பிறப்பைத் தரும். அவ்வாறு பிறவாமல் சொர்க்கத்தில் வசித்திட நம் பொருட்டு கர்மங்களைத் தொடர வாரிசுகள் முக்கியம். அவர்கள் செய்யும் பிதுர் கர்மங்களால் இங்கே தேக விடுதலை கிடைக்கும். இதுவே வாழ்வின் யதார்த்தம்," என்றனர்.

மந்த பாலரிஷியும் அப்போதே தன் பொருட்டு பிள்ளைகள் உருவாக விருப்பம் கொண்டார். வேகமாகவும், அதி

கமாகவும் புத்திரப்பேறு உண்டாவது என்பது பறவை இனத்தில் தான்! எனவே, மந்தபாலரும் தன் தவசக்தி யால் 'சார்ங்க பட்சி' வடிவம் எடுத்தார். 'ஜரிதை' என் னும் பெண் சார்ங்க பட்சியிடம் தொடர்பு கொண்டார். நான்கு புத்திரர்கள் உருவாயினர். இந்நிலையில் தான் நான் உங்கள் உதவியோடு காண்டவ வனம் முழுவதை யும் எரித்து விட எண்ணவும், மந்தபால ரிஷி என்னை துதித்து தன் புத்திரர்களை ஏதும் செய்யக்கூடாது என்ற வரத்தையும் பெற்றார்," என்றான் அக்னி.

அர்ஜுனனும், கிருஷ்ணனும் அக்னியால் பூவுலகில் ஒரு மனிதனுக்கு புத்திரப்பேறு என்பது எத்தனை அவ சியமானது என்பதைப் புரிந்து கொண்டனர். இதன் பிறகு காண்டவ வனமும் எரிந்துமுடிந்திடஅக்னி பழைய பொலிவைப் பெற்றான். அப்படியே அர்ஜுனன்வரமாகக் கேட்ட அனுமன் கொடி பறக்கும் குதிரைகள் பூட்டிய ரதத்தையும், பாணங்கள் வற்றாத அம்பறாத் தூளியோடு காண்டீபம் என்னும் வில்லையும் வழங்கினான். அதே போல சக்ராயுதத்தை கிருஷ்ணனிடம் வழங்கி வணங்கி நின்றான்.

"அவதார புருஷரே! உங்களால் உண்டானதே இப்போது என் மூலம் உங்களைத் திரும்ப அடைந்துள்ளது. இந்த மானுட ஜென்மத்தில் இந்த சக்கரம் கொண்டு தாங் கள் சாதிக்கப் போகும் விஷயங்கள் பல உள்ளன. அந்த திருவிளையாடலின் போது இதன் மகிமையை நானும் கண்டு மகிழ்வேன். என் குறை தீர்த்த உங்களுக்கு என் னால் ஆனதைச் செய்த நிறைவோடு விடை பெறுகி றேன்," என்று அக்னி புறப்பட்டான்.

மொத்தத்தில் அர்ஜுனனின் வனவாசம் அவனுக்குத் தந்தையாகும் வாய்ப்பை மட்டுமின்றி இப்படி ரதம், அஸ்திரம் அடையவும் வழி செய்தது. கிருஷ்ணனோடு அர்ஜுனனின் உறவு நட்பு நிலை கடந்து, மைத்துனன் என்ற உறவு நிலையை எட்டி, அதற்கும் மேலாக குரு சிஷ்ய பாவனை கொண்டதாகவும் மாறியது. கிருஷ்ணனும், அர்ஜுனனும் ஒத்த கருத்தோடும் மிகுந்த பற்றோடும் இருந்த இந்த வேளையில், காண்டவ வனம் எரிந்த போது கொல்லப்படாமல் மன்னிக்கப் பெற்ற மயன் என்பவன் அர்ஜுனனுக்கு நன்றி கூற வந்தான்.

அசுர குலத்தின் வழி வந்த மயனே விஸ்வகர்மா என்னும் பெயர் பெற்றவன். கலைப்படைப்புகளுக்கெல்லாம் அதிபதி. ஆலயங்கள், கோட்டங்கள், நகர நிர்மாணங்கள், மாட மாளிகைகள் எல்லாம் இவன் துணை இருந்தாலே, சிறப்பாக உருவாகி விடும். ஆகையால், நன்றியைக் காட்டும் விதமாக ஒரு எழில் மிகுந்த மணி மண்டபம் கட்டித் தருவதாக அர்ஜுனனிடம் கூறினான். ஆனால், அர்ஜுனன் மறுத்து விட்டான்.

"உன்னைக் கொல்லாமல் விட்டதற்கான பயனை நான் பெறுவது என்பது ஒரு காரியத்தை எதிர்பார்த்துச் செய்ததற்கு சமமாகி விடும். அது எனக்கு இழுக்கைத் தரும். நீ எனக்கு எதுவும் செய்ய வேண்டாம். எப்போதும் என்பால் அன்பும் மரியாதையும் கொண்டிருந்தால் போதும்," என்று கூறி விட்டான். ஆனால், மயன் கேட்பதாக இல்லை. கிருஷ்ணனிடம் தன் பிரார்த்தனையைத் தொடர்ந்தான்.

"பிரபோ! தாங்கள் தான் அர்ஜுனனைச் சமாதானம் செய்து என் வேண்டுகோளை ஏற்கச் சொல்ல வேண்

டும்," என்றான். கிருஷ்ணனோ மயனைப் பார்த்து, "நீ அர்ஜுனனுக்குக் காட்ட விரும்பிய நன்றியைத் தர்மபுத் திரருக்கு காட்டு. இரண்டும் ஒன்று தான். இதுவரை நீ செய்த சபைகளிலேயே இது போல் ஒரு சபை இல்லை என்று காண்போர் வியந்து பாராட்ட வேண்டும். அதை உருவாக்கிக் கொடு. அதுவே என் வேண்டுகோள்," என்றான் கிருஷ்ணன்.

மயனும் மகிழ்வோடு சபை அமைக்கத் தயாரானான். அர்ஜுனனின் வனவாசம் முடிந்து காண்டவ பிரஸ்தம் என்னும் தங்கள் நாட்டை அடைந்தான். வனப் பிர வேசத்தில் நேரிட்ட அனுபவங்களை தங்கள் சகோத ரர்களிடம் பகிர்ந்து கொண்டான். கிருஷ்ணனின் கட்ட ளைக்கு ஏற்ப மயனால் ஒரு சபை உருவாகப் போவதை யும் குறிப்பிட்டான்.

பாண்டவர்கள் அதைக் கேட்டு மகிழ்ந்திட, மயனும் பணியைத் தொடங்கினான். இந்த தருணத்தில்தான்ம யன், பீமனுக்கு வலிமை மிகுந்த கதாயுதத்தையும், அர் ஜுனனுக்கு மகா சங்கு ஒன்றையும் பரிசாகத் தர நேர்ந் தது. கைலாச கிரிக்கு வடக்கே மைந்தாக பர்வதத்தை சேர்ந்த 'பிந்து சரஸ்' என்னும் பொய்கை அருகில் அழகிய சபை ஒன்று முன்பு உருவாக்கப்பட்டிருந்தது. ராமபிரானின் மூதாதையர்களில் ஒருவரான 'மாந்தாதா' என்னும் அரசன், அந்த சபையில் உக்ரமான கதாயுதம் ஒன்றையும், வருணனால் பயன்படுத்தப்பட மகாசங்கு ஒன்றையும் வைத்திருந்தான்.

அந்த கதாயுதம் ஆயிரம் கதாயுதங்களின் வலிமை உடையது. அந்த மகாசங்கு முழங்கினால் அது முழங் குமிடத்தில் வெற்றி நிச்சயம். இதையறிந்த மயன், பிந்து

சரசிற்கு வந்து, அந்த கதாயுதத்தையும், மகா சங்கினை யும் எடுத்துக் கொண்டதோடு, அங்கே நிர்மாணிக்கப் பட்டிருந்த சபையை அப்படியே பெயர்த்து எடுத்து வந்து காண்டவப் பிரஸ்தத்தில் நிறுவி, அதைத் தன் வலி மையால் கிருஷ்ணன் கூறியது போல சிறப்புக்கெல்லாம் சிறப்பு கொண்டது போல ஆக்கி கட்டி முடித்தான். பின் அதைதர்மர்வசம் ஒப்படைத்தபோது, பீமனிடம் மாந்தா தாவின் கதாயுதத்தையும், அர்ஜுனனிடம் வெற்றிச் சங் கையும் ஒப்படைத்தான்.

மயன் என்னும் தேவலோகச் சிற்பி பாண்டவர்களுக் கான காண்டவ பிரஸ்தத்தில் தன் சாதுர்யத்தைக் காட்டி உருவாக்கிய அற்புதசபையைதர்மரிடம் ஒப்ப டைத்தான். கூடவே மகாபலம் பொருந்திய கதை என் னும் கதாயுதத்தை பமனுக்கும், அற்புதச் சங்கு ஒன்றை அர்ஜுனனுக்கும் பரிசாக வழங்கி விட்டு விடை பெற்றுக் கொண்டான்.

இதன் பிறகு பாண்டவர்களின் மதிப்பு உலகளவில் உச் சத்தைத் தொட்டது. துரியோதனனும் அவன் சகாக் களும் மனம் புழுங்கினார்கள். அழித்து ஒழித்து விட எண்ணியவர்கள், அதற்கு நேர்மாறாக ஒரு கம்பீர மான வாழ்க்கை வாழும் போது பொறாமைதோன்றுவது இயற்கை தானே! இப்படி ஒரு சூழலில் தான் பாண் டவர்கள் ராஜசூய யாகம் செய்யும் நிலை உருவானது. எவனொருவன் ராஜசூய யாகம் செய்கிறானோ அவனே உலகில் நிகரற்ற அரசனாவான். மற்ற நாட்டவரும் அரசர் களும் இவனுக்கு கட்டுப்பட்டவர்களாவர்.

அதற்கு அத்தாட்சியாக ஆண்டிற்கு ஒருமுறை கப்பம் கட்ட வேண்டும். தவறினால் அந்த அரசனைக் கொன்று

விடவோ, சிறையில் அடைக்கவோ செய்யலாம். வேறு ஒரு அரசனை யாகம் நடத்திய சக்கரவர்த்தி நியமித்துக் கொள்ளலாம். இது தவிர, பாண்டவர்களின் தந்தை யான பாண்டு, எமலோகத்தில் இருந்து சொர்க்கலோ கம் செல்லவும் இந்த யாகம் நடத்த வேண்டியிருந்தது. எல்லா அரசர்களிடமும் யாகம் நடத்துவதை தெரிவித்து சம்மதம் பெற்று வர அர்ஜுனன், பீமன், நகுலன், சகாதே வன் ஆகிய நால்வரும் தயாராயினர். சம்மதிக்க மறுப்ப வர்களை போரிட்டு அடக்கி சம்மதிக்க வைக்கலாம்.

இதன் பொருட்டு அர்ஜுனன் குபேரனுக்குரிய வடதிசை நோக்கி பயணம் தொடங்கினான். அக்னிதேவன் வழங் கிய ரதத்தில், அவன் வழங்கிய வற்றாத அம்புகள் தோன் றும் அம்புறாத்துாளியோடும், மயன் வழங்கிய வெற்றிச் சங்குடனும் புறப்பட்டான்.பீமன் கிழக்கு நோக்கி புறப்பட் டான். இவனும் மயன் வழங்கிய ஆயிரம் யானை பலம் கொண்ட கதாயுதத்துடன் புறப்பட்டான். தெற்கு நோக்கி சகாதேவனும், மேற்கு நோக்கி நகுலனும் சென்றனர். இதில் சகாதேவனுக்கே உரிய கணித அறிவு(ஜோதிடம்) அவனுக்கு பெரிதும் உதவியாக இருந்தது.

தருணம் அறிந்து நாம் ஒரு செயலைச் செய்யும் போது அது வெற்றி பெற்றே தீரும் என்பது நியதி. எப்படி மேல் நோக்கி வீசப்படும் கல்லானது எறிந்த வேகத்திற்கு ஏற்ப கீழ் நோக்கி திரும்ப வருகிறதோ அதைப் போன்ற ஒரு புவிசார் விஷயம் இது. இதை சகாதேவன் அறிந்து வைத்திருந்தான். பொழுதுகளில் எப்படி இரவும், பகலும் இருக்கிறதோ அப்படியே செயல்பாடுகளில் வெற்றிக்கு ரியது, அதற்கு எதிரானது என்னும் இரண்டு உண்டு. அதே சமயம், நாம் இரவைக் கழிக்கையில் வெளிச் சத்தை நெருப்பு கொண்டு உருவாக்கி கொள்கிறோம்.

பகல் பொழுதில் தேவையின் பொருட்டு மறைவை உரு வாக்கி நிழலை ஏற்படுத்துகிறோம். இதை எல்லாம் அமைதியாக அமர்ந்து சிந்தித்தால் அழுத்தமாகவே புரிந்து கொள்ளலாம். இதில் நட்சத்திரங்கள் குறித்த அறிவு நமக்கு சேரும் போது, புரிதல் திறன் மேலும் பல மாகும்.

நட்சத்திரம் என்றால் 'ஜொலித்தல்' என்று பொருள். ஒவ் வொருவரும் ஏதோ ஒரு நட்சத்திரத்தின் ஜொலிப்போடு இருப்பவரே... அதன் ஜொலிப்புத் திறன் தான் வெற்றி! அதற்கு மாறானதெல்லாம் தோல்வி. எவ்வளவு தூரம் ஜொலிக்கிறது? எப்போது அது மறைவுக்கு உள்ளாகி றது என்பதை அறிந்து கொள்ள கணித அறிவு வேண் டும். அந்த அளவில் சகாதேவன் ஒரு விஞ்ஞானியாக திகழ்ந்தான்.

தெற்கு நோக்கி பயணித்த சகாதேவன், தன் புத்தியைப் பயன்படுத்தி, வெற்றி தரும் நேரத்தில் அரசர்களைச் சந் தித்தான். தர்மர் நடத்தவிருக்கும் ராஜசூயம் யாகம் பற்றி கூறியதுமே, அத்தனை பேரும் கப்பம் செலுத்த சம்மதித் தார்கள். அவர்களில் பாண்டியன் சித்ராங்கதன் முதன் மையானவன். மேற்கு நோக்கி சென்ற நகுலன் அஸ்திரம் குறித்த அறிவில் ஞானியாக இருந்தான்.

அஸ்திரம் என்றால், 'கோடானுகோடி சக்தி அணுக்க ளின் சேர்க்கை' என்று பொருள். இந்தசக்தி, பஞ்ச பூதங் களில் இருந்து உருவாவதோடு, அதன் துணையோடு செயலாற்றுகிறது. எந்த அஸ்திரத்தைப் போட்டால் எது அழியும் என்பதைநகுலன் துல்லியமாகத் தெரிந்து வைத்திருந்தான். அஸ்திரம் என்பது ஆயுதமாகத் தான்

இருக்க வேண்டும் என்றில்லை. அதை சொற்களாலும் உருவாக்க முடியும்.

நகுலன் சிவந்த நிறமுடைய மக்கள் வசிக்கும் பாஹ்லீகர்கள் (ஐரோப்பியர்களாக இருக்கலாம்) அரசனிடம் சென்று, அஸ்வமேத யாகம் புரிவதால் உலகுக்கே நன்மை விளையும். மழை நிரம்ப பெய்யும் என்பதை தெரிவித்தான். அந்த அரசன் நகுலனிடம் கப்பம் அளித்ததோடு, ஒரு கப்பல் நிறைய தேக்கு, செம்மரங்களையும் வாரி வழங்கினான்.

பீமன் கிழக்கு திசையில் கதாயுதத்தோடு புறப்பட்டான். ஆலமரத்தையே பிடுங்கி எறிந்திடும் வீரன் என்பதால் அவனுடைய பலமே காரியத்தை சுலபமாக்கி விட்டது. அவன் சந்தித்த அரசர் அனைவருமே கப்பம் கட்ட சம்மதித்தனர். அர்ஜுனனின் வடக்கு நோக்கிய பயணம் நெடியதாக இருந்தது. வியாசரின் குறிப்புகளில் இருந்து அன்று இருந்த நாடு, மக்கள், இனம் குறித்து அறிய முடிகிறது.

அர்ஜுனன் அக்னி அளித்த ரதத்தில் ஏறிக் கொண்டு அந்தர்க்கிரி, பஹிர்க்கிரி, உபகிரி என்னும் மலைநாடுகளை வென்றான். பின் உலூக தேசம் சென்று பிருகந்தன் என்னும் அரசனோடு போரிட்டு பணிய வைத்தான். பின் கிரீடி, பஞ்ச கணம் என பயணம் செய்தான். பவுரவ அரசன் விஷ்வக்சுவையும், உற்சவ சங்கேதர்கள் எனப்படும் ஏழு கூட்டத்தாரையும் வென்றான். இதன்பின் திரிகர்த்தர், தார்வர், கோகந்தர் என்னும் இனத்தார்களை சந்தித்து கப்பம் பெற்றான். உரகாபுரி அரசன் ரோஷமான் என்பவனை அடக்கினான்.

சோழ, சிம்ம, தரத, காம்போஜ, தஸ்யுக் ஆகிய தேசங்களை எல்லாம் வென்று ரிஷிக தேசத்தை (ரஷ்யாவாக இருக்கலாம்) அடைந்தான். ரிஷிகர்கள் முதலில் பணிய மறுத்தனர். பின் போரிட்டுப் பணிய வைத்தான். இங்கே கிளியின் வயிற்று வர்ணமும், மயிலின் வர்ணமும் கொண்ட குதிரைகளே அர்ஜுனனுக்குக் கப்பமாக கிடைத்தன.

எப்படியோ அர்ஜுனனின் திக்விஜயம் பெரும் வெற்றியோடு முடிந்தது. அர்ஜுனனைப் போலவே பீமன், நகுலன், சகாதேவனும் தங்கள் பட்ட திக்விஜயங்களை வெற்றிகரமாக முடித்து திரும்புகின்றனர். இதில் சேதி நாட்டு அரசனான சிசுபாலனை பீமன் வென்றது முக்கியமானது.

சகாதேவன் இலங்கை சென்று நித்ய சிரஞ்சீவியான விபீஷணரிடம் கப்பம் பெற்றதும் குறிப்பிடப்பட வேண்டியது. சகாதேவனுக்கு கடோத்கஜன் துணை நிற்கிறான். இப்படி நான்கு திசைகளிலும் சென்றவர்கள் யாகத்திற்கு வர அத்தனை பேருக்கும் அழைப்பு விடுத்து திரும்பிய நிலையில் தர்மரும், கிருஷ்ணனின் வழிகாட்டுதலோடு ராஜசூய யாகத்தை நிறைவு செய்தார்.

இந்த யாகத்தின் போது தர்மர், முதல் மரியாதையை கிருஷ்ணருக்குத் தர முடிவெடுத்த போது அதை சேதி நாட்டு அரசனான சிசுபாலன் ஆட்சேபிக்கிறான். இதனால் சிசுபாலனுக்கும், கிருஷ்ணனுக்கும் போர் மூண்டது. அதில் சிசுபாலன் பாத கொல்லப்படுகிறான். ராஜசூய யாகம் நிறைவேறிய பின், அனைவரும் நாடு திரும்புகின்றனர். துரியோதனனும் ஹஸ்தினாபுரத்திற்கு திரும்

புகிறான். அவனால் யாகத்தையொட்டி நடந்த எந்த ஒரு விஷயத்தையும் ஜீரணிக்க முடியவில்லை.

அவன் தந்தையான திருதராஷ்டிரன் துரியோதனனை அழைத்து, 'வேள்வி எப்படி நடந்தது?' என்று கேட்கிறான்.

துரியோதனனும் பெருமூச்சோடு நடந்தவைகளை கூறத் தொடங்குகிறான். தன் தந்தையான திருதராஷ்டிரனை இந்த நேரத்தில் 'தந்தையே' என்று அழைத்துப் பேசவில்லை. மாறாக 'பாரதரே!' என்று அழைக்கிறான். உண்மையில் இந்த நேரத்தில், 'பாரதன்' என்ற பட்டத்திற்குரிய தகுதி படைத்தவன் தர்மன் தான் ஏனைய நால்வரும் கூட தகுதி படைத்தவர்களே... ராஜசூய வேள்வி மூலம் இந்த தகுதியை அவர்கள் பெற்று விட்டார்கள். ஆனால், அதை துரியோதனனின் மனம் ஏற்கவில்லை என்பது தெளிவாகிறது.

திருதராஷ்டிரனும்,காந்தாரியும் நொடியில் துரியோதனனின் மனநிலையைப் புரிந்து கொள்ள மேலும் விஷயத்தை விவரிக்கத் தொடங்குகிறான்.

துரியோதனன் தான் கண்டதை எல்லாம் கூறும் இந்த இடத்தில் தான், மகாபாரத காலத்தில் பூவுலகில் எந்தெந்த மன்னர்கள் எல்லாம் ஆட்சி செய்தனர் என்ற செய்தியை நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. ஒரு வகையில் உலக வரைபடத்தைப் பார்த்துக் கொண்டு எந்தெந்த நாடு எங்கிருக்கிறது என்பதை தெரிந்து கொள்வது போன்றது இது.

துரியோதனன் தன் தந்தையிடம் சொல்வதைக் கேளுங்கள். "பாரதரே! அங்கே நடந்ததை நான் இமைக்கக் கூட மறந்து பார்த்துக் கொண்டிருந்தேன். தர்மனை இந்த பூவுலகில் சக்கரவர்த்தி என்று ஒப்புக் கொண்டு வரிசையில் நின்று கொண்டு அரசர் பெருமக்கள் எல்லாம் கப்பங்களைச் செலுத்தினர். அப்படி நின்ற அரசர்களின் வரிசை ஒருபுறம், அவர்கள் கொண்டு வந்த கப்பப் பொருட்களின் வரிசை மறுபுறம்... அவைகளை நான் இருந்த இடத்தில் இருந்து முழுமையாகப் பார்க்க முடியவில்லை. குறிப்பிட்ட தூரம் வரை தான் என்னால் பார்க்க முடிந்தது.

இந்த கப்பச் சடங்கிற்காகவே ஒரு பெரிய மைதானத்தை நகுலனும், சகாதேவனும் தேர்வு செய்திருந்தனர். அந்த மைதானம் முழுவதும் பந்தல் அமைத்திருந்தனர். யதுகுலத்து கண்ணன் மேற்பார்வை செய்து, பலருக்கும் கட்டளை பிறப்பித்த வண்ணம் இருந்தான். அர்ஜுனன் தர்மன் அருகில் இருந்து கொண்டு கப்பம் கட்ட வந்த மன்னர்களை எல்லாம் அறிமுகம் செய்து வைக்க, எனது அருமைச் சித்தப்பாவும், பாண்டவர்களின் பாசத்திற்குரியவருமான விதுரர், அர்ஜுனனுக்கு துணையாக உதவி செய்து கொண்டிருந்தார்.

ஆடுகளின் ரோமம், பெருச்சாளி, பூனைகளின் தோல் கொண்டு பொன்னாலான ஜரிகையால் நெய்யப்பட்ட போர்வை, சால்வைகளை காம்போஜராஜன் கொடுத்தான். அடுத்த திரிகர்த்த தேசத்தார் 300 குதிரைகளையும், 400 ஒட்டகங்களையும் பரிசளித்தான்.

குவிந்தன் என்னும் பிராமணன், ஒரு அபூர்வ சங்கினை தர்மனிடம் தர அர்ஜுனன் அதை வாங்கி உற்சாக

மாக ஊதினான். அந்த முழக்கம் என்னை மூர்ச்சிக்க வைத்து விட்டது. பிராமணனுக்கு தர்மனும் தன் பரிசாக 500 ரிஷப காளைகளைப் பரிசாக அளித்தான். அடுத்து காஷ்மீர தேசத்து மன்னன் திராட்சை ரசம், அபூர்வ பழ

வகைகள், கம்பளிகளையும் அளித்தான். யவனர்கள் மலைநாட்டு குதிரை, விலையுயர்ந்த சால்வைகளை அளித்தனர்.

கலிங்க மன்னன் 'ச்ருதாயு' என்பவன் முத்து, ரத்தினங் களை குவித்து வைத்தான். அங்க நாட்டரசன் அழகிய பணிப்பெண்களை பரிசாக்கினான். வங்க நாட்டு மன் னன் பொற்காசுகளை கொட்டிவைத்தான். பாண்டிய மன்னன்96பார அளவிற்கு சந்தனக் கட்டைகளையும், பொற்காசுகளையும் வழங்கினான்.

சோழராஜன், கேரள மன்னர்கள் தன் பங்கிற்கு சந்த னம், முத்துக்களை வழங்கினர். அச்மக ராஜன் குடம் குடமாக பால் தரும் 10,000 பசுக்களை கொடுத்தான். சிந்து நாட்டரசன் 20,000 குதிரைகளையும், ஸௌவீர - தேசத்து மன்னன் 300 யானைகளையும், அவந்தி நாட்ட ரசன் 14,000 பணியாளர்களையும் அளிக்க வெகுநேரம் காத்திருந்தனர்.

தசார்ண தேசம், சூரசேனம், விதேகம், கோசலம், பாரு கச்சம் ஆகிய தேச மன்னர்களும், திருமர், பாரதர், காசி யர், கிராதகர் போன்ற அரசர்களும் வெள்ளாடு, செம்மறி யாடு, பசு, கோவேறு கழுதை, ஒட்டக மந்தைகளை கப் பமாக அளிக்க காத்திருந்தனர்.

பிராக் ஜ்யோதிஷ மன்னன் பகதத்தன், பீமனுடன் மோதி தோல்வி கண்டதால், உண்டான காயம் கூட ஆறாத நிலையில் நின்றது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இவர்கள் போக, அயல் தேசத்தவரான பர்ப்பயேர், சைலேயர், சீனர், ஹூனர், கஷர், காசர், பிராக்கோடர், நாடகேயர், நாபிதர், ரோமகர், ஊருமகர், துஷாரர் போன்றவர்கள் அவரவர் நாட்டு விளைபொருளோடு அணிவகுத்து நின்றது கண்ணுக்குள்ளேயே இருக்கிறது.

உண்மையில் குபேரன் வந்தால் கூட நடந்ததைக் கண்டு மூர்ச்சையாகி இருப்பான். அங்கு குவிந்த பரிசுப் பொருட்களில் அபூர்வமானவற்றையும் கண்டேன். எறும்புகள் புற்றில் இருந்து கொண்டு வரும் 'பிபீலதம்' என்னும் அபூர்வ தங்கத்தை, தீர்க்கவேணு என்னும் அரசன் மரக்காலில் அளந்து கொடுத்தான். கறுத்த, வெளுத்த வால் கொண்ட கவரிமான்கள், இமயமலையில் விளைந்த தேன், கைலாயத்துக்கு வடக்கில் விளையும் அபூர்வ மூலிகையை வியூடமால்யர்கள் என்பவர்கள் வாரி வழங்கினர். துரியோதனன் சொல்வதைக் கேட்ட அவர்கள் பிரம்மித்து நின்றனர்.

களைத்துப் போன துரியோதனனோ பழரசம் பருகினான். பின் மீண்டும், திரவுபதியின் தந்தை துருபதன் 14,000 தாசிகளையும், 26 யானைகள் பூட்டிய தேரையும் வழங்கியதை விட்டு விட்டேனே!' என்று சொல்ல, காந்தாரி குறுக்கிட்டு, "கண்ணன் கப்பமாக என்ன கொடுத்தான்?" எனக் கேட்டாள்.

கிருஷ்ணன் என்ன கொடுத்தான்?' என்ற கேள்வியைத் தொடர்ந்து துரியோதனன் அந்தக் காட்சியை மன

தில் எண்ணிப் பார்த்தான். பதினான்காயிரம் யானைகள், பாகன்களையும் துவாரகையில் இருந்து வருவித்து அவற்றை நெற்றிப் படாகத்துடன் வழங்கிய காட்சி அவன் கண்களில் மின்னியது. அதை அப்படியே விவரித்தான்.

முடிவில் "தந்தையே... இந்தராஜசூய வேள்வி குறித்த எண்ணம் உங்களுக்குத் தோன்றாமல் போனது மிக வருத்தத்திற்குரிய விஷயம். சகுனி மாமா... எதை எல்லாமோ பேசினார்! இப்படி ஒரு விஷயம் பற்றி அவர் பேசவே இல்லை. அப்படிப் பேசியிருந்தால் நான் முந்திக் கொண்டிருப்பேன். இன்று தர்மன் காலில் விழுந்த அவ்வளவு பேர்களும் என் காலில் விழுந்து வணங்கி என்னையே இந்த பூவுலகின் சாம்ராஜ்யாதிபதியாக, ஏக சக்கரவர்த்தியாக கருதும் நிலை வந்திருக்கும். அதை நான் இழந்து விட்டேன்," என கைகளைப் பிசைந்தபடியே மனம் புழுங்கினான்.

இதை அறிந்த சகுனி சதித்திட்டம் தீட்டினான். "துரியோதனா... வீணாகக் கவலைப்படாதே... தர்மனையும், அவன் தம்பியரையும் நமது அடிமைகளாக ஆக்கி, இந்த நாட்டை விட்டே துரத்த முடியும்! இந்த வேள்வி நடத்தி சக்கரவர்த்தி என மார்தட்டிக் கொள்வது பெரிய விஷயம் அல்ல. சக்கரவர்த்தியாக தொடர்ந்து சாதிப்பது தான் சிறந்தது. அப்படி வாழும் விதிப்பாடு பாண்டவர்களுக்கு இல்லை," என்றான்.

இது துரியோதனனுக்கு ஆச்சரியத்தை மட்டுமல்ல, ஆறுதலையும் அளித்தது.

"எப்படி மாமா அது சாத்தியம்?" என்று கேட்டான்.

இப்படி கேட்ட இடத்தில் சகுனி சொன்னது தான் சூதாட்ட விஷயம்.

"பாண்டவர்களோடு இணக்கமாகி விட்டது போல் நடித்து, அவர்களை விருந்துக்கு அழைப்பது போல அழைத்து வா. தர்மன் எதிரில் சூதாட அமர்ந்தால் போதும். மற்றதை நான் பார்த்துக் கொள்வேன்," என் றான்.

இறுதியில் அவன் நினைத்தபடியே நடந்து முடிந்தது. சூதாட்டத்தில் தர்மன் நாடு, நகரத்தோடு, திரவுபதியை யும் இழந்தான். துச்சாதனன் திரவுபதியின் துகில் உரிய முயன்றான். கிருஷ்ணனின் உதவியால் அவள் அவ மானத்தில் இருந்து தப்பினாள். அவள் கவுரவர்களை அழித்திடுவதாக சபதமிடுவதைக் கண்ட திருதராஷ்டி ரன் அவளுக்கு வரம் தருவது போல இழந்த நாடு, நகரங்களை திரும்பக் கொடுத்தான். இதை துரியோ தனனும், சகுனியும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பாண்டவர்களும் தங்களின் விடுதலையை ஒரு வெற்றி யாகவோ, நல்ல விஷயமாகவோ கருதவில்லை. திருத ராஷ்டிரன் போட்ட பிச்சை போலத் தான் உணர்ந்தனர்.

இந்நிலையில் தான் திரும்பவும் சூதாட அழைத்தான் துரியோதனன். இம்முறை தூண்டி விட்டதும் சகுனி தான். இதற்கு திருதராஷ்டிரன் மறுத்தான். உடனே சகுனி, திருதராஷ்டினுடைய பிள்ளைப் பாசம்' என்ற பல வீனத்தை ஆயுதமாக எடுத்து, அதைக் கையில் வைத் துக் கொண்டு பேசினான்.

"அரசே! பாண்டவர்கள் துரியோதனாதியர்களைப் பழி வாங்காமல் விட மாட்டார்கள். பாஞ்சாலி நமது சபையில்

போட்ட சபதத்தை, ஒருபோதும் விட்டுத்தரமாட்டாள். அப்படிப்பட்டவர்கள் ராஜாக்களாக இருப்பது அவர்களுக்கு கூடுதல் பலம். நமக்கு அது எப்போதும் எச்சரிக்கை..." என்றெல்லாம் பேசி திரும்பச் சூதாட சம்மதம் பெற்று விட்டான். இந்த இரண்டாம் முறை சூதாட்டத்திற்கு தர்மன் சம்மதித்தது தான் எல்லோராலும் பெரும் தவறாகப் பார்க்கப்பட்டது. ஆனால், தர்மன் காண்டவப் பிரஸ்த மாளிகைக்கு, நாரதர் விஜயம் செய்த போது சொன்ன கருத்துக்களினால் தான் மறுமுறையும் சூதாட சம்மதித்தான் என்பது புதுத்தகவல்.

"13 ஆண்டுகள் கழிந்து வரும் 14ம் ஆண்டில் பாண்டவர்கள் மற்றும் கவுரவர்கள் என்னும் இரு சாராரில், ஒரு சாரார் மட்டுமே உயிரோடு இருப்பீர்கள். மற்றவர்கள் முற்றாக அழிந்து போவார்கள். அதற்கான யுத்தம் எந்த ஒரு காரணம் கொண்டும் உருவாகலாம்" என்று நாரதர் கூறியிருந்தார்.

அவர் கூறிய கருத்து தர்மனை வதைத்தது. இதனால், தோற்போம் என்று தெரிந்தே தர்மன் சூதாடச் சென்றான். தர்மன் தங்கள் எல்லோருடைய நலனையும் உத்தேசித்தும், துரியோதனன் விருப்பப்படி அவனை விட்டு ஒதுங்கவும் எண்ணம் கொண்டே இரண்டாம் முறை சூதாட சம்மதித்து சகலத்தையும் திரும்பவும் இழந்தான்.

சூதாட்ட விதிப்படி 12 ஆண்டு வனவாசம், 13ம் ஆண்டு அக்ஞாதவாசம் மேற்கொள்ளப்படவேண்டும் அக்ஞாதவாசத்தில் பாண்டவர்கள் மறைந்து வாழ வேண்டும். இவர்களை துரியோதனன் கண்டுபிடித்து விட்டால் மீண்டும் வனவாசம் செல்ல வேண்டும். பாண்டவர்கள் தலையெடுத்து விடக்கூடாது என்பதே துரியோ

தனனின் எண்ணம். வியாசர் போன்ற சான்றோர்கள், துரியோதனனின் போக்கைக் கண்டித்தனர். அவர்களல் குறிப்பிடத்தக்கவர் மைத்ரேய மகரிஷி.

தவசீலரான அவர் வனவாசத்தில் பாண்டவர்களைச் சந்திக்கிறார். நாடாள வேண்டியவர்கள் காட்டில் காய், கனிகளை உண்டு வாழ்வதைக் கண்டு வருந்துகி றார். துரியோதனனின் அநீதியான செயலைக் கண்டிக்க அஸ்தினாபுரம் வருகிறார். திருதராஷ்டிரன் அவருக்கு பாதபூஜை செய்து ஆசி தரும்படி வேண்டுகிறான். மைத் ரேயரோ அதைக் கேளாதவராக அவையில் வீற்றிருக் கும் பீஷ்மர், துரோணர், கிருபர் உள்ளிட்ட சகலரையும் பார்த்து, 'நான் தீர்த்த யாத்திரை சென்ற சமயம் காம்யக வனத்தில் பாண்டவர்களைப் பார்க்கக் கூடாத கோலத் தில் கண்டேன். அவர்கள் சூதாட்டத்தில் அனைத்தை யும் இழந்து வனவாசியானதை அறிந்து கொண்டேன். இது அநீதி. சான்றோர்கள் இருக்கும் இந்த இடத் தில் சூதாடக் கூடாது. அதுவும் ஒரு முறைக்கு இரு முறை நடந்துள்ளது.உண்மையில் பாண்டவர்கள் தோற் கவில்லை. அவர்கள் சூதாட்டத்தை சாக்காக வைத்து ஒதுங்கி வாழ்கின்றனர். அவர்கள் திரும்பி வந்தால் இந்த நாடு தாங்காது...," என்று சொல்ல துரியோதனன் கொதித்தான்.

"முனிவரே... உங்களுக்கு எதற்கு இந்தப் பேச்சு? பாண்டவர்கள் விஷயம் முடிந்த கதை. நீங்கள் வந்த வேலையை மட்டும் பாருங்கள்," என்றான். துரியோ தனா... நான் வந்திருப்பதே உன்னை எச்சரிக்கத் தான் பாண்டவர்களைச் சமாதானப்படுத்து. இல்லாவிட்டால் நீ வாழவே முடியாது..."

"என்ன மைத்ரேயா... பயமுறுத்துகிறாயா?"

"ஆணவத்தில் தவறாக பேசாதே துரியோதனா... திரும் பவும் சொல்கிறேன். இந்தத் தவறு நீடித்தால் நீங்கள் பூண்டோடு அழிந்து போவீர்கள்."

"நான் எதற்கும் அஞ்சாதவன்" என்று அரியாசனத்தில் இருந்து எழுந்து தன் தொடையைத் தட்டினான் துரி யோதனன்.

"துரியோதனா... நான் உன்னைப் போல ஒரு க்ஷத்திரிய வீரன் இல்லை. புலனை அடக்கிய துறவி. என்னிடமே தொடை தட்டுகிறாயா?"

"உம்மிடமென்ன... எவரிடமும் தட்டுவேன். என் தொடை... என் கரம் "

"அத்தனை ஆணவமா உனக்கு? இப்போது சொல்கி றேன் கேட்டுக் கொள். நீ எந்தத் தொடையைத் தட்டி சவால் விடுவது போல் பேசினாயோ, அதன் வழியாகவே உன் உயிர் பிரியும்," என மைத்ரேயர் சபிக்க அவையே திடுக்கிட்டது.

திருதராஷ்டிரனுக்கோ தலையில் இடியே விழுந்த மாதிரி இருந்தது. சாபம் கொடுத்து விட்ட நிலையில் மைத்ரேயர் கோபமாக அவையைவிட்டுப் புறப்படதிருத ராஷ்டிரன் அவரைத் தடுத்தான்.

"மகரிஷி... நில்லுங்கள்... உங்களை நான் கெஞ் சிக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி நீங்கள் சபித்தது என்னை கலக்கமுறச் செய்து விட்டது. துரியோதனன் பக்குமில்லாதவன். அவன் பேச்சைத் தாங்கள் பொருட்

படுத்தியிருக்கக் கூடாது. தயவு செய்து இந்த சாபத்திற்கு விமோசனமளியுங்கள். உங்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்," என்றான்.

விதுரனும் எழுந்து அதை வழி மொழிந்தான்.

"மைத்ரேயரே! தங்களைப் போன்ற மகரிஷிகள் வரத் தையே அருள் வேண்டும். சாபமிட்டு இப்படியா தங்கள் அருட்சக்தியை குறைவுபடுத்திக் கொள்வது? அருள் கூர்ந்து சாபத்திற்கான விமோசனத்தைக் கூறுங்கள்!" என்றான்.

மைத்ரேயரும் தயங்கி நின்றார். அவர் என்ன சொல்லப் போகிறாரோ என சபையே எதிர்பார்த்து நின்றது.

"கவுரவர் தலைவா! நீதிநெறிக்கு வித்தான விதுரா! நீங்கள் இருவரும் பணிவோடு கேட்டுக் கொண்டதால் ஒருவிஷயம் சொல்கிறேன். பெரிய மனதோடு பாண்ட வர்களுடன் துரியோதனன் சமாதானமாகப் போக முற் பட்டாலே போதும். என் சாபம் பலிக்காது. அவ்வாறு இல் லையெனில் என் சாபம் நடந்தே தீரும்," என்ற மைத்ரே யர் புறப்பட்டார்.

அவரை தடுத்த விதுரர், "முனி சிரேஷ்டரே! சமாதானம் தான் தீர்வா?"

"ஆம்... அது மட்டுமே தீர்வு. எந்த நிலையிலும் பாண்ட வர்கள் வஞ்சிக்கப்படக் கூடாது. இந்த சபையில் அறம் தெரிந்த சான்றோர்களுக்கு நான் சொல்வதன் அர்த்தம் புரிந்திருக்கும். அவர்கள் கவுரவர்களிடம் செஞ்சோற் றுக் கடன்பட்டு விட்டதால் வாய் மூடி மவுனியாகி விட் டனர். ஆனால், நான் அப்படிப்பட்டவன் அல்ல. என்

விருப்பப்படி சமாதானம் இல்லையென்றால், துரியோதனன் தொடை பிளவுபட்டு துர்மரணம் நிகழ்வது நிச்சயம். அவனது மரணம் அசுர சகோதரர்களான பகாசுரன், கீர்மீரன் ஆகியோரின் மரணத்தை விடவும் கொடியதாக இருக்கும் என்பது ஞாபகமிருக்கட்டும். இனி என்னைத் தடுக்க வேண்டாம்" என்ற மைத்ரேய மகரிஷி அந்த அவையை விட்டே சென்று விட, விதுரன் கலக்கத்துடன் துரியோதனனைப் பார்த்தான்.

உடனே சகுனி," என்ன விதுரா... சாபத்தை எண்ணி கலங்குகிறாயா?"

'நீ கலங்கவில்லையா சகுனி...?"

"முனிவர்களின் சாபமெல்லாம் சாதாரணமான கர்மப்பிறப்பு எடுத்தவர்களுக்குத் தான். கலயத்தில் நூறுபேர் சூழப் பிறந்த துரியோதனனை எதுவும் செய்யாது..."

"ஹூம்... இப்படி ஒரு எண்ணமா உனக்கு? அப்படி பார்த்தால் பகாசுரன், கீர்மீரன் இருவரும் அசுரகுடியில் மாயாவிகளாகப் பிறந்தவர்கள். அவர்களைப் பீமன் பந்தாடி விட்டான். அதனால், துரியோதனன் தூசுக்குச் சமம் என்பதை மறந்திடாதே..." பகாசுரன், கீர்மீரன் குறித்து விதுரன் பேசவும் திருதராஷ்டிரனுக்கு பகீர் என்றிருந்தது.

"விதுரா... பகாசுரனை நான் அறிவேன். அவன் அழிந்த விபரமும் அறிவேன். அது யார் கீர்மீரன். அவன் எப்படி பீமனால் கொல்லப்பட்டான்?" என்று கேட்டான்.

விதுரனும் சொல்லத் தொடங்கினான்.

"அரசே...! காம்யகம் என்னும் கொடிய வனத்தில் பகாசுரனின் சகோதரனான கீர்மீரன் இருந்தான். அதிக பலம் கொண்ட அவன் ஒரு மாயாவி. பெரிய மலையாக, சிறிய மடுவாக எப்படி வேண்டுமானாலும் காட்சியளிப்பான்.

மடுவாக இருக்கும் போது யானைகளும், எருமைகளும் தண்ணீர் குடிக்க வரும். அப்போது அவைகளை அப்படியே அள்ளி விழுங்கி விடுவான். அவனுக்குப் பசித்தால் ஒரு வேளைக்கு பத்து யானையும், பத்து எருமையும் தேவைப்படும். அதுபோக ஒரு கிணறு கொள்ளும், தண்ணீரும் தேவை. இந்த கீர்மீரனைத் தான் பீமன் போராடிக் கொன்றான். தன் சகோதரனான பகாசுரனைப் பீமன் கொன்று விட்டான் என்ற கோபத்தில் இருந்தான் கீர்மீரன். பாண்டவர் ஐவரும்

திரவுபதியோடு காம்யகவனத்தில் அவனிடம் வசமாகச் சிக்கிக் கொண்டனர். பழி வாங்கும் உணர்வோடு மூன்று நாள் யுத்தம் நடந்தது. பெரிய மரங்களை எல்லாம் வேரோடு பிடுங்கி ஆயுதமாகப் பயன்படுத்தினான் பீமன்.

பீமனுக்குத் துணையாக அர்ஜுனன் வந்தபோது, "தம்பி... இவனை என் கையால் கொன்றால் தான் திருப்தி," என்று கூறி, மலை போல நின்ற கீர்மரனின் கால்களைப் பற்றி நூறு முறை சுழற்றி எறிந்தான். கீர்மீரன் வதம் நடந்தபின் அங்கிருந்த ரிஷிகளும், ரிஷி பத்தினிகளும் பாண்டவர்களை மனதார வாழ்த்தினர். மைத்ரேயர், கீர்மீரனோடு துரியோதனனை ஒப்பிட்டதை நானே எதிர்பார்க்கவில்லை," என்று முடித்தான் விதுரன்.

விதுரனின் விளக்கம் துரியோதனனையே கலங்கச் செய்தது.

அப்போது சகுனி, "துரியோதனா... அச்சப்படாதே! பகாசுரன், கீர்மீரன் என்று சொல்லி விதுரன் உன்னை மிரட்டப் பார்க்கிறான். பீமன் பலசாலி தான். ஆனால், அவனை விட நீயே பெரும் பலசாலி... அதுவுமில்லாமல், அஞ்ஞாதவாசத்தின் போது பாண்டவர்களை நாம் அடையாளம் கண்டு விட்டால் தீர்ந்தது சிக்கல். அதன் பின் இன்னொரு 12 ஆண்டுகள் வனவாசிகளாகத் திரிந்தாக வேண்டும். எனவே கவலையை விடு," என்றான்.

சகுனியின் பேச்சு துரியோதனனுக்கு பாப்பா ஆறுதலாக இருந்தது. இதனிடையே அசுரவதம் முடிந்ததால், காம்யக வனம் ரிஷிகள் தவம் செய்ய ஏற்ற இடமாக மாறியிருந்தது. அங்கு தற்காலிக குடில் அமைத்து பாண்டவர்கள் வசிக்கத் தொடங்கினர். அங்கு ஒருநாள் திரவுபதி சோகமாக மரத்தடியில் அமர்ந்திருந்தாள்.

தர்மர் அவளிடம், "திரவுபதி... இங்கே தனிமையில் என்ன செய்கிறாய்?"

"ஒன்றுமில்லை... நடந்தவற்றை எல்லாம் அசை போட்டுப் பார்த்தேன். எல்லாமே கனவு போலிருக்கிறது."

"நடந்தவை எப்படியிருந்தால் என்ன... இனி நடக்க வேண்டியது நல்லதாக அமைந்தால் அது போதும்."

"நானும் அது குறித்தே சிந்தித்தபடி இருக்கிறேன். குறிப்பாக நமக்கு இந்த கதி நேர்ந்ததற்கு, நாம் கிருஷ்ணப்பிரபுவை மறந்ததும் ஒரு காரணம்!" என்றாள் திரவுபதி.

அதைக் கேட்ட தர்மர் திகைத்தார். அவள் சொன்ன உண்மை தர்மரை மவுனமாக்கியது.

அவள் மேலும், "துரியோதனன் தனக்குப் பதிலாக சகுனியை சூதாடச் செய்தான். அதைப் போல நாமும் உங்களுக்குப் பதிலாக கிருஷ்ணபிரபுவை அழைத்திருக்கலாம். இது தோன்றாமல் போனது கூட விதிப்பாடு தானோ?" என்று கேட்கவும் தர்மரும் தலையசைத்தார்.

"அந்த துவாரகாபதி கிருஷ்ணன் அருகில் இருந்தால் நிச்சயம் நல்லதே நடந்திருக்கும். அவருக்கும் நம் துன்பம் தெரியாமலேயே போய் விட்டது," என்ற நேரத்தில் "திரவுபதி... திரவுபதி..." என கிருஷ்ணனின் குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள். அங்கே - ரதத்தில் இருந்து கிருஷ்ணன் வந்து கொண்டிருந்தான். கிருஷ்ணன், "தர்மா! நடந்ததை நான் அறிவேன். திரவுபதி வருந்துவது போல - நீங்களும் என்னை அழைக்கவில்லை. என்னாலும் உங்களை நினைக்க முடியவில்லை. இதற்கு காரணம் யார் தெரியுமா?" என்று கேட்ட கிருஷ்ணனே "சால்வன் தான்" என்று பதிலும் சொன்னான்.

'சால்வன்' என்ற பெயரை கிருஷ்ணன் உச்சரித்ததும் தர்மர் உள்ளிட்ட பாண்டவர்கள் முகத்தில் ஒரு அதிர்வு! ஏனென்றால், இந்த சால்வன் தான், ராஜசூய யாகத்தின் போது கிருஷ்ணனுக்கு முதல் மரியாதை செய்யக் கூடாது என்று சொன்ன சிசுபாலனின் சகோதரன்! சிவனிடம் பல வரங்களைப் பெற்றவன். தன் அண்ணனைக் கொன்ற கிருஷ்ணனைக் கொல்லத் துணிந்து, துவாரகை மீது போர் தொடுத்தவன்.

அந்த சமயத்தில், கிருஷ்ணன் துவாரகை அருகிலுள்ள ஆனர்த்தம் என்னும் இடத்தில் இருந்தார். சால்வன் துவாரகை சென்று, 'எங்கே கிருஷ்ணன்?' என்று முழக் கமிட்டான். சால்வனின் சேனாதிபதிகளான க்ஷேம தூர்த்தி, வேகவானன், விவிந்தியன் ஆகியோர் அசுரப லத்துடன் துவாரகையை நாசம் செய்யத் தொடங்கினர்.

அசுரர் என்றாலும், தேவர் என்றாலும் யுத்தம் என்று வந்து விட்டால் அதற்கென நடைமுறை உள்ளது. அதைப் பின்பற்றியே தீர வேண்டும். யுத்தத்தில் இருந்து பின் வாங்கக் கூடாது. மார்பில் குத்து வாங்கி உயிர் விட் டால் வீர சொர்க்கம் கிடைக்கும். சரணடைந்தவர்களை கொல்லக் கூடாது. குழந்தை, பெண்கள், முதியவர், ஆயு தம் இல்லாதவர், தலைமயிர் அவிழ்ந்தவர் ஆகியோ ருக்கு தீங்கு செய்யக் கூடாது. ஆனால், சால்வனுடன் வந்தவர்கள் இதைப் பின்பற்றாமல் மதயானை போல துவாரகையை அழிக்க முற்பட்டனர்.

கிருஷ்ணரின் பிள்ளைகளான சாம்பன், பிரத்யும்னன் இருவரும் சால்வனுடன் போர் புரியத் தயாராயினர்.சாம் பன் கிருஷ்ண பத்தினியான ஜாம்பவதியின் புதல்வன். பிரத்யும்னன் ருக்மணியின் புதல்வன். இருவருமே பால கர்கள். ஆனால், துணிவுடன் போர் செய்யத் தொடங்கி னர். சால்வன் அவர்களைப் பாலகர் என்று கூடப் பார்க் கவில்லை. அவர்களைத் தாக்கி ஓட ஓட விரட்டினான்.

இதை அறிந்த கிருஷ்ணர் ஆனர்த்த பாகத்தை விட்டு வேகமாகத் திரும்பினார். டசால்வனோடு மோதி னார். சால்வன், கிருஷ்ணரிடமே மாயையை காட்டியது விந்தையாக இருந்தது. சால்வனின் மாயாஜாலத்தை உணர்ந்த கிருஷ்ணனும் சக்கராயுதத்தை ஏவி விட்

டார். அக்னி தகிப்போடு பிரகாசமாகக் கிளம்பிய சக்கரத்தைக் கண்டதும் சால்வன் ஓடத் தொடங்கினான். துவாரகாவாசிகள் கைகொட்டிச் சிரித்தனர். அவனை வீழ்த்தி விட்டு கிருஷ்ணரிடமே வந்து நின்றது.

ஒருவாரமாக நடந்த யுத்தம் முடிவுக்கு வந்தது. இவ்வேளையில் தான் தர்மரும், சகுனியோடு சூதாடி அனைத்தையும் இழந்து விட்டார். இந்த விஷயங்களை கிருஷ்ணர் தர்மரிடம் சொல்லி முடித்தார்.

முத்தாய்ப்பாக, "தர்மா... திரவுபதி... நீங்களும் என்னை அந்த வேளையில் நினைக்கவில்லை. என்னாலும், அப்போது உங்களை நினைக்க முடியவில்லை. இதைத் தான் விதி என்கிறோம். உங்களை இப்படி வனத்தில் தேசாடனர்களாக பார்க்க வேண்டும் என்றாகி விட்டதை என்னவென்று சொல்வது? இனி நடக்க இருப்பதையாவது நல்ல முறையில் எண்ணி, அடுத்து ஆக வேண்டியதைப் பாருங்கள்," என்றார்.

"ஆம்... சூதாட்டவிதி எங்கள் ஐவரை மட்டுமே கட்டுப்படுத்தும். எங்களோடு மாதா குந்திதேவியார், சுபத்ரை உள்ளிட்ட எங்கள் புத்திரர்கள் கஷ்டபடத் தேவையில்லையே," என்று சொல்லிய தர்மர் அவர்களை எல்லாம் கிருஷ்ணரோடு அனுப்பி வைக்க முடிவு செய்தார். அந்த வகையில் திருஷ்டத்யும்னன், திரவுபதி புத்திரர்கள், திருஷ்டகேது, நகுலனின் மனைவி ரேணுமதி, சுபத்ரை, அபிமன்யு அனைவரையும் தன்னோடு அழைத்துக் கொண்டு கிருஷ்ணர் புறப்பட்டார். பாண்டவர்கள் திரவுபதியுடன் வனவாசத்தை தொடர்ந்தனர்.

அப்படி அவர்கள் வனவாசம் புரிவதிலும் ஒரு கட்டுப்பாடு இருந்தது. எந்த நிலையிலும் மக்கள் வந்து செல்லும் வனமாக அது இருக்கக் கூடாது. ஆள் நடமாட்டமே இல்லாத வனத்தில் தான் அவர்கள் இருக்க வேண்டும் என்பது சூதாட்ட விதிகளில் ஒன்றாக இருந்தது. ஆனால், அதற்கு எதிராக பாண்டவர்களைக் காண வேண்டும் என்ற ஆவலில் காண்டவபிரஸ்தத்தில் இருந்து மக்கள் வரத் தொடங்கினர்.

இதனால், தர்மர் அர்ஜுனனிடம், வேறொரு வனத்திற்குச் செல்ல வேண்டும் என்று கூறினார்.

"அண்ணா... நான் தீர்த்தயாத்திரை சென்ற போது என் காலடி படாத வனமே இல்லை என்பேன். அந்த யாத்திரை அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். 'த்வைத வனம்' தான் நமக்கு மிகவும் உகந்தது," என்றான்.

"த்வைத வனமா?"

"ஆமாம். த்வதை வனமே தான்... சோகம், மோகம் இரண்டையும் போக வைக்கும் வனம் என்பது பொருள். நாம் இனி நாட்களை அங்கே தான் கழிக்க வேண்டும்," என்றான் அர்ஜுனன்.

அதன் பின், அவர்கள் ஆறு பேரும் த்வைத வனத்தை அடைந்தனர். அங்கு குடில் அமைத்து வாழ்வு நடத்தினர். அபூர்வமான மார்க்கண்டேய மகரிஷி அவர்களைக் காண வந்தார். மார்க்கண்டேய மகரிஷி தலைசிறந்தவர். மரணத்தை வென்று யுகங்கள் கடந்து வாழ்ந்து வருபவர். அவரது வருகை பாண்டவர்களுக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் தந்தது. அவர்களை வனவாசிக

ளுக்குரிய ஆடையில் பார்த்த மகரிஷி புன்னகைத்தார். அதைக் கண்ட பீமனுக்கு வருத்தம் ஏற்பட்டது.

"மகரிஷி... எங்களைப் பார்த்து உங்களால் எப்படி புன்னகை செய்ய முடிகிறது? சூதாட்டத்தால் இப்படி ஒரு நிலைக்கு ஆளாகி விட்டோமே என்ற ஏளனமா?" என்று கேட்டான்.

மார்க்கண்டேயர் மறுப்புடன் பார்த்து விட்டு பதிலளித்தார். "பீமா... என் சிரிப்பின் பொருளே வேறு. அதன் காரணத்தைக் கூறினால், உனக்கும் அர்த்தம் புரியும். உங்களை எப்படி இந்த வனத்தில் பார்த்தேனோ அதே போலவே, முன்பு

ராமச்சந்திர மூர்த்தியை, லட்சுமணர், சீதாதேவியுடன் கண்டேன். ராமச்சந்திரபிரபு சர்வ வல்லமை பொருந்தியவர். ஆனாலும் கூட ஒரு சாமான்ய மனிதனைப் போல வனத்தில் திரிந்தார். ஒரே காரணம் தான் தந்தைக்கு கொடுத்த வாக்குறுதி. - கைகேயி தாயாரின் பட விருப்பத்தை நிறைவேற்றல்... இதுவே அவர்களை வனத்துக்கு அனுப்பியது. இன்று உங்களையும் காலம் அனுப்பியுள்ளது. தர்மநெறியில் வாழ்பவர்களுக்குச் சோதனை ஏற்படுவதை என்னவென்பது? அதை நினைத்தேன், சிரித்தேன்."

மார்க்கண்டேயர் ராமனைத் தரிசித்தவர் என்பதை அறிந்த பாண்டவர்கள் மனம் நெகிழ்ந்தனர்.

வணங்கியபடி, "மகரிஷியே... தாங்கள் எங்களை ஸ்ரீராமனோடு ஒப்பிட்டதை எண்ணி சிலிர்த்துப் போகிறது நெஞ்சம். நாங்கள் புண்ணியசாலிகள்" என்றார் தர்மர்.

"உண்மை தான் தர்மா! இந்த நொடியே நீயும் உன் சகோ தரர்களும் துரியோதனனையும், அவன் சார்ந்த சகல ரையும் அழித்து விட சபதம் செய்தால் அவர்கள் இல் லாமல் போவது உறுதி. ஆனால், உன் தர்ம சிந்தை அதற்கெல்லாம் ஆசைப்படவில்லை. மாறாக, நீ ஒரு கர் மயோகியாக வாழ்ந்து வருகிறாய். உன்னைப் பாராட்ட என்னிடம் வார்த்தைகள் இல்லை," என்றார்.

இதன்பின், பாண்டவர்கள் வடக்குத் திசை நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

மார்க்கண்டேய மகரிஷி பாண்டவர்களை ஆசிர்வதித்து விட்டுச் சென்ற நிலையில், பீமனுக்குள் ஒரு எண்ணம் தோன்றியது. அதை அவன் திரவுபதியிடம் தான் முதலில் பகிர்ந்து கொண்டான்.

"திரவுபதி... நாம் இப்போது 12 வருஷம் என்னும் கணக் கிற்கு உட்பட்ட வனவாசிகள். இனி இந்த காடு தான் நமக்கு நாடு, இந்தக் காட்டில் விளைவதே நமக்கான உணவு. அதே சமயம் நம்மை நம்பி காண்டவ பிரஸ்தம் என்று ஒரு நாடும், அந்த நாட்டுக்கென மக்களும் உள் ளனரே... அவர்களை நாம் மறந்து இப்படி வனத்தில் திரி வது சரியா?" என்று கேட்டான்.

"சரியான கேள்வியைத் தான் கேட்டிருக்கிறீர்கள் அன் பரே...ஆனால் இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று தான் எனக்குத் தெரியவில்லை..."

"எனக்கென்னவோ இப்படி விதிக்கு கட்டுப்பட்டு வன வாசம் புரிவது புத்திசாலித்தனமாகப் படவில்லை.

இதற்கு நாம் ஏன் துரியோதனனோடு போரிட்டு அவனை அழிக்கக் கூடாது?"

"நாம் இப்போது அடிமைகள்... பலமற்றவர்கள்... எப்படி அது சாத்தியம்?"

"சூதினால் அடிமையாவதைக் கூட ஒப்புக் கொள்வேன். பலமற்றவன் என்றுகூறாதே திரவுபதி... இப்படி காட்டில் வாழ்வதை விட, போராடிச் சாவது மேல் அல்லவா?"

பீமனிடம் கோபம் சீற்றமாக வெளிப்பட அதைக் கேட்ட படி வந்த தர்மரும், மற்ற சகோதரர்களும் பீமனை தேற்ற முயன்றனர்.

அப்போது வியாச முனிவர் வந்தது தான் ஒரு நல்ல விஷயம்! வியாசர் பீமனின் எண்ணத்தை அறிந்து புன்ன கைத்தபடியே, அவர்களுக்கு வழிகாட்டும் நோக்கத்தில் பேசலானார்.

"பாண்டவர்களே! உங்கள் வீரத்தில் எந்த குறை யுமில்லை. ஆனால், இன்னமும் விவேகம் உங்க ளுக்கு வேண்டும். அந்த விவேகம் இருந்திருந்தால் ஒருமுறைக்கு இருமுறை சூதாட்டமே நடந்திருக்காது. ஆனால், எதிலும் ஈடுபட்டு நாடோடிகளாகவும் ஆகி விட்டீர்கள். நீங்கள் இப்போது நாடோடிகளானாலும், தர்மவான்களாகவே கருதப்படுகிறீர்கள். அஸ்தினாபு ரத்துக்கு அரசனாக துரியோதனன் விளங்கினாலும் அவனை குற்ற முள்ளவனாகவே எல்லாரும் பார்க்கின் றனர். எங்கே இருக்கிறோம் என்பதை விட, எப்படி பார்க் கப்படுகிறோம் என்பதே முக்கியம். அந்த வகையில், உங்களுக்கு இருக்கும் நற்பெயர் அங்கே கவுரவர்க

ளுக்கு இல்லை. அடுத்து அங்கே விதிவசத்தால் துரோ ணர், பீஷ்மர், அஸ்வத்தாமன், கிருபர் ஆகியோர் உள்ள னர். இவர்களை எல்லாம் வெல்வது சுலபமில்லை" என் றார்.

அதைக் கேட்ட அர்ஜுனன், "வியாசமுனிவரே! யுத்தம் எங்கள் நோக்கமல்ல. ஆனால், யுத்தம் மட்டுமே துரியோ தனனை வீழ்த்தும் என்பது தான் எல்லோரின் கருத்தா கவும் உள்ளது," என்றான்.

இதற்கு பதிலளித்த வியாசர், "ஆம்... என் கால ஞானம் கூட யுத்தம் நிகழ வாய்ப்பிருப்பதையே உணர்த்துகிறது. அப்படி யுத்தம் வரும் போது, அங்கே வீரம் தான் பேசப் பட வேண்டும். வேறு உணர்வுகளுக்கும் அந்த களத்தில் இடம் கிடையாது," என்றார்.

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?"

"இந்த வனவாச காலத்தை உங்களை வலிமைப்படுத் திக் கொள்ளும் காலமாக மாற்றிக் கொள்ளுங்கள்..."

"எப்படி?"

"புலன்களை அடக்கி ஆள்பவனாலேயே புவனங்க ளையும் அடக்கியாள முடியும்...""அதற்கு என்ன செய்ய வேண்டும்?"

"புலனடக்க யோகம் வசப்பட வேண்டும்."

"தவம் புரியச் சொல்கிறீர்களா?"

"ஆம்... உங்கள் அவ்வளவு பேரையும் சொல்லவில்லை. உங்களில் ஒருவர் தவம் புரிந்தாலும் போதும்."

"அது யார்?"

"அதை தர்மன் தீர்மானிக்கட்டும். நான் இந்த வேளையில் புலன்களை அடக்கப் பயன்படும் மந்திரத்தை தர்மனுக்கு குருவாக இருந்து உபதேசிக்கிறேன். அதன்பின் அவன் உங்களுக்கு வழிகாட்டுவான்."

வியாசர் அப்போதே தர்மனைத் தன் முன் மண்டியிடச் செய்து யோக மந்திரத்தை உபதேசித்தார். பின்னர் விடை பெற்றார். தர்மன் இப்போது புது தெளிவுடன் அர்ஜுனனைப் பார்த்தான். அவனுக்குப் புரிந்து விட்டது.

"அர்ஜுனா... நீ வில் வித்தையில் உச்சம் தொட்டவன். உனக்கு அஸ்திரங்கள் வசப்படுவது தான் சரியானது. அதனால், வியாசர் உபதேசித்த மந்திரத்தை உனக்கு உபதேசிக்கிறேன். வியாசர் நம் ஐவருக்கும் உபதேசிக்கும் பொருட்டே எனக்கு உபதேசித்தார். ஆனால், பீமா... நீ சரீர பலம் கொண்டவன். அஸ்திர பிரயோகம் உனக்கு அவசியமில்லை. நகுல, சகாதேவர்களே... உங்கள் பலங்களும் அஸ்திரங்களுக்கு ஏற்றதில்லை. அர்ஜுனனே அஸ்திரப் பிரயோகத்திற்குத் தகுந்தவன். எனவே, உங்களின் ஒப்புதலோடு அவனுக்கு மந்திரத்தை உபதேசிக்கப் போகிறேன்..." என்றான்.

மந்திரம் மூலம் புலன்களை அடக்கி, இந்திரனை நோக்கி தவமிருக்கச் சொன்னான்.அர்ஜுனனும் அதன் நிமித்தம் ஒரு யோகியாக தன்னை மாற்றிக் கொண்டு, இமயமலையிலுள்ள இந்திர நீலமலை என்னும் இந்திர

னுக்குரிய இடம் நோக்கி நடந்தான். அங்கு சென்று தவச் சுடராகவே மாறினான். சுடரொளி இந்திரனை தேவச பையில் இருந்து இழுத்து வந்தது.

இந்திரன் பிரசன்னமாகி, "புத்திரனே! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, இந்திரன் வசமுள்ள அஸ்திரம் அத்தனையும் தனக்கு வேண்டும்," என கேட் டான் அர்ஜுனன். "தருகிறேன். ஆனால், அதற்கு இந்த தவவலிமை போதாது. முக்கண்ணரான சிவபெருமா னைத் தரிசிக்கும் அளவுக்குரிய தவத்தை மேற்கொண் டால் என் அஸ்திரங்கள் உனக்கு கிடைக்கும்," என் றான்.

அர்ஜுனனும் சிவனை நினைத்து தவத்தில் ஆழ்ந்தான். தவம், உக்கிரமாகி கால் கட்டை - விரலால் மட்டும் தரை யில் நிற்கும் அளவுக்குச் சென்றது. இப்படி உடல் பளு அவ்வளவையும் கட்டைவிரலில் சுமந்து தவம் செய்வது முனிவர்களுக்குக் கூட அரிதான செயல். இந்த தவம் குறித்த விஷயம் துரியோதனனை அடைந்து தவிக்க லானான். ஏதாவது சதி செய்து தவத்துக்கு இடையூறு செய்ய எண்ணினான். அர்ஜுனன் புரிந்த தவம் சிவபெ ருமானை எட்டியது. அவனோடு திருவிளையாடல் புரி யும் எண்ணம் கொண்டார். அப்படியே துரியோதனனின் சதியை முறியடிக்கத் துணிந்தார். அதற்காக தன் தேவி யான உமையவளுடன் வேடன், வேடுவச்சி கோலம் பூண்டு புறப்பட்டார்.தவம் செய்யும் இடத்தை அடைந் தார்.

முன்னதாக, அங்கே மூகன் என்னும் ஒரு அசுரன் பன்றி வடிவில் நடமாடிக் கொண்டிருந்தான். அவன் அர்ஜு னனை கண்டு விழுங்க முற்படவும், அர்ஜுனன் தவம்

கலைந்து எதிரில் தெரிந்த பன்றியைக் கண்டு கோபம் கொண்டான். அந்த அசுரப்பன்றியை துரியோதனன் ஏவி விட்டான் என்பதே உண்மை!அதைக் கொல்லும் பொருட்டு காண்டீபம் என்னும் தன் வில்லைக் கையில் எடுத்தான். இந்த நேரத்தில் சிவபெருமானும் வேடுவ னாக அங்கு வர, தன் கையில் இருந்த வில்லை எடுத்து அம்பு தொடுத்தார். உண்மையில் அர்ஜுனனைக் காப் பதும், மூகாசுரனைக் கொல்வதுமே பரமசிவனாரின் விருப்பம். இருவர் தொடுத்த அம்பும் மூகனைத் தாக்கிட, இடி இடித்தது போல் சப்தமிட்டபடி உயிரை விட்டான்.

அப்போது அவனது அசுர உருவம் வெளிப்பட்டது. அருகே சிவனும், தேவியும் வேடன், வேடுவச்சியாக வந்து நின்றிருக்க, அர்ஜுனனும் வந்து, "யார் நீங்கள்?" என்பது போல் புருவத்தை உயர்த்தினான். பரமன் திரு விளையாடலைத் தொடங்கினார்.

" நான் குறி வைத்துக் கொன்ற அசுரப் பன்றியை நீ எப்படி யப்பா பாணம் கொண்டு தாக்கலாம்," என ஆரம்பித்தார்.

"நீங்கள் குறி வைத்து கொன்றீர்களா... வேடிக்கையாக இருக்கிறதே... இது என் பாணத்தால் தான் வீழ்ந்தது "

"அப்படியானால்... ஒரே இடத்தில் என் பாணம் எப்படி வந்தது?"

"அது நீங்கள் செய்த பிழை... நான் குறி வைத்ததை நீங் கள் குறி வைத்தது உங்கள் தவறு."

"அப்படி என்றால், உன் பாணத்தால் தான் இந்த பன்றி அசுரன் உயிர் போனதா?"

"அதில் என்ன சந்தேகம்?"

"நான் கூறுகிறேன். என் பாணம் தான் இந்த அசுரனைக் கொன்றது..."

"தவறு... முதலில் பார்த்தவன் நான்... பாணம் போட்ட வன் நான்..."

" நீ சொல்வது தான் தவறு... வேடுவன் நான்... பாணம் போடுவது என் தொழில். உன்னைப் பார்த்தால் தவசி போல் இருக்கிறது. தவசிக்கு எதற்கு இந்த வில்?"

"நீ உன்னை வேடுவன் என்கிறாய்... ஆனால், வேடுவன் போல் பேசாமல் என்னை எடை போடுகிறாய்... என் னோடு மோதாமல் வந்த வழியே செல்..."

"அது எப்படி? கொன்றது நான் தான் என்பதை ஒப்புக் கொள். செல்கிறேன்..."

"எந்த நிலையிலும் என் வீரத்தை தாழ்வாகப் பேசுவதை என்னால் ஏற்க முடியாது. என் குறி என்றும் தப்பிய தில்லை..."

ஈசனுக்கும், அர்ஜுனனுக்குமான விவாதம் சூடேறிக் கொண்டே போனது. தன் எதிரில் வேடுவன் வடிவில் இருப்பது பரமன் எனத் தெரியாமல் கோபத்தோடு பேசி னான் அர்ஜுனன்.

"இது என்னால் வீழ்ந்த பன்றி. இதைக் கொன்றது நான் தான் என்று நீ நினைத்தால் நினைத்து விட்டுப் போ. ஒரு பன்றிக்காக உன்னோடு நான் மோத விரும்பவில்லை.

என் வரையில் நீ சாதாரண வேடன். நான் அப்படி யல்ல..."

அர்ஜுனன் பேச்சில் அரசகுமாரன் என்னும் செருக்கும் வெளிப்பட்டது. அதை வேடுவப் பரமனும் ரசித்தார்.

"நீ மட்டுமே மாவீரன். நானெல்லாம் சாமான்யன் என்கி றாயா?" என்று அவனைத் தூண்டத் தொடங்கினார்.

"நான் அப்படிப் பேசவில்லை. என்னை நீ தான் பேச வைக்கிறாய் "

"எதற்கு வீண் பேச்சு! நீயும், நானும் மோதிப் பார்த்து விடு வோமா?" என்று பரமன் கேட்டார்.

"என்ன தைரியம் உனக்கு... வம்புக்கு வந்து வாயாடிய தோடு, என்னையே மோதலுக்கும் அழைக்கிறாயா? "

"இப்போதாவது தெரிந்து கொள்... நான் தைரியசாலி மட்டுமல்ல... பராக்கிரமசாலியும் கூட..."

"போதும் நிறுத்து... முடிவாக என்ன சொல்லுகிறாய்?"

"நீ வீரன் என்றால் என்னோடு மோது. என் அஸ்திரத் திற்கு பதில் சொல்..."

"அஸ்திரமா... உன்னிடமா?" அர்ஜுனன் மிக ஏளனத் தோடு கேட்டான்.

மிருக வேட்டைக்காரர்களிடம் அம்புகள் மட்டுமே இருக்கும். அம்புகள் அஸ்திரங்களாகாது... அஸ்திரத்

திற்கு மந்திர சக்தி உண்டு. ஒரு மலையையே அவற்றால் தகர்க்க முடியும். அந்த எண்ணம் அர்ஜுனனிடம்...

சிவபெருமானும் அர்ஜுனனின் வீராவேசத்தை ரசித்தார். "என்னிடம் இருப்பது சாதாரண அம்புகள் என்பது உன் எண்ணமா? பாதகமில்லை... என் அம்புக்கு நீ பதில் சொல்போதும்..."

அர்ஜுனன் பொறுமையிழந்தான்.

"இனி உன்னோடு பேச்சில்லை. உன்னை வீழ்த்தி விட்டே மறுவேலை" என்றான்.

அது வரை மவுனமாக இருந்த வேடுவச்சியாகிய பார்வதி, "பாவம் இந்த பாலகனை விட்டு விடுங்கள்..." என்றாள். அது அர்ஜுனனை மேலும் கோபப்படுத்தியது.

"இனி ஒரு வார்த்தை கூட பேசப் போவதில்லை. என் பாணங்களே இனி பேசும்." என்று சொல்லி அக்னி தேவன் வழங்கிய வற்றாத அம்பறாத்தூளியில் இருந்து பாணம் எடுத்து தொடுத்தான். பரமனும் பதிலுக்கு பாணம் தொடுத்து தடுத்தார். அதுவே அர்ஜுனனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அதன் பின் பாணங்களின் சக்தியும் கூடிக் கொண்டே போனது. எல்லாம் ஒடிந்து விழத் தொடங்கின. ஒரு பாலகனிடம் விளையாடும் உணர்வோடு தான், பரமனும் எதிர் கொண்டார்.

ஒருகட்டத்தில் அக்னியாஸ்திரத்தையே தொடுத்தான். ஆனால், அது பரமனைச் சுற்றி வந்து விழுந்தது. 'எதிரில் நிற்பவன் வேடு வன் அல்ல' என்று எண்ணம் அர்ஜுனனுக்கு உண்டானது. அக்னி அளித்த அம்பறாத்தூளியும் வற்றிப் போனது. வேடுவச் சிவனும் சிரிக்கத் தொடங்

கினார். அர்ஜுனனுக்குப் புரிந்து விட்டது. அவனுக்கு கோபம் அடங்கிப் போனது.

இந்த வேடுவனை வீரத்தால் கட்டுப்படுத்த முடியாது என்ற ஞானம் எழுந்தது. கூர்ந்து பார்த்தான். வேடுவ னாகிய பரமனும், வேடுவச்சியாகிய பார்வதியும் நெருக்க மாக நின்றனர். அந்த நொடியே மனக்கண்ணில் பார்வதி பரமேஸ்வரராகத் தெரிந்தது. கைகூப்பி வணங்கியவன் கண்ணீரும் பெருக்கினான்.

"சர்வேசா! இது என்ன சோதனை... எதற்காக இந்த நாடகம்? என்னைப் பெரும்பாவியாக்க எண்ணலாமா?" என்றான்.'

'அர்ஜுனா! நீ செய்த தவம் என்னை வரவழைத்தது. அஸ்திரங் கள் வேண்டிய உன் தவத்தின் நோக்கமே தற்காப்புதான். தற்காப்பு என்று வரும்போதே நம்மைக் காப்பவன் இறைவன் என்கிற எண்ணம்பின்செல்ல, 'நான்' என்ற எண்ணம்முன்வந்து விடுகிறது. அசுரர்களி டம் இந்த குணம் அதிகம். உன் வீரம் எப்படி என்று பார்ப்பதோடு, உனக்கு இதை உணர்த்தவுமே இத்திரு விளையாடல் புரிந்தேன்," என்றார் ஈசன்.

"சர்வேசா... என்னை மன்னித்து விடுங்கள். எதனாலும் என் வீரம் சிறுமைப்படுவதை என்னால் ஜீரணிக்க முடிய வில்லை."

"ஒரு க்ஷத்திரியனுக்கு இந்த உணர்வு தேவை. அதை யும் கடந்து நீ பணிந்ததில் தான் சிறப்பு இருக்கிறது. 'பாசுபதம்' என்னும் அஸ்திரத்தை தருகிறேன். இதை தரிப்பது, விடுப்பது, மீட்பது என்னும் மூன்றுக்கும் பெரும்

சக்தி வேண்டும். உன்னிடம் அது இருக்கிறது. இச் சக்தி இந்திரன், எமன்,குபேரன், வருணன், வாயு, அக்னி ஆகியோரிடம் கூட கிடையாது. அரிதான இந்த அஸ்தி ரத்தை சாமான்ய மனிதர்களிடம் பயன்படுத்தி விடாதே. இது மனம், வாக்கு, வில் என்னும் மூன்றும் சார்ந்தது. 'நினைத்து, பேசி, தொடுத்து' என்னும் விதத்தில் இயங் குவது இது..." என்று கூறிய பரமன் அர்ஜுனனின் சிர சைத் தொட்டு ஆசீர்வதித்தார்.

அவன் காதில் பாசுபத அஸ்திர மந்திரத்தை உபதேசித் தார். அந்த நொடியில் பூலோகம் எங்கும் குலுங்கியது போல் அதிர்ச்சி ஏற்பட்டது. அஸ்தினாபுரத்தில் உறக் கத்தில் இருந்த திருதராஷ்டிரன் முதல் துரியோதனன் வரை சகலரும் எழுந்து கொண்டனர். 'உலகமே எதன் பொருட்டு நடுங்கியது'?" என்று அனைவரும் தங்களுக் குள் பேசிக் கொண்டனர். மந்திரோபதேசம் முடிந்த நிலையில், "இந்த அஸ்திரத்தைப் பெற்றவனுக்கு சொர்க்கத்தின் கதவுகள் திறக்கும். இந்திரன் அவனை உப இந்திரனாக்குவான். உன் வரையில் இதெல்லாம் நிகழும்," என்ற சிவன் பார்வதியோடு அந்தர்யாமியாகிட (மறைந்து விட), அவரின் வாக்குப்படியே அடுத்தடுத்த விஷயங்களும் நடக்கத் தொடங்கின.

வரிசையாக குபேரன், வாயு, யமன், வருணன் என்று தேவாதி தேவர்கள் அர்ஜுனன் முன் பிரசன்னமாகி, அவன் கேளாமலேயே தங்களின் அஸ்திரங்களை அவ னுக்கு அளித்தனர். இறுதியாக இந்திரனும், இந்திராணி யும் வந்தனர். அவர்கள் ஐராவதம் என்னும் வெள்ளை யானை மேல் அமர்ந்து, வெண்கொற்றக்குடை பிடித்து எழிலுற வந்தனர். அர்ஜுனன் தனது தவம் இப்படி தேவாதி தேவர்களைக் காண வைத்து, அவர்களாக

அஸ்திரங்களை அள்ளித் தர வைக்கும் என்று கனவி லும் எண்ணவில்லை.

இந்திரன் அர்ஜுனனை வாழ்த்தினான்.

"என் விருப்பப்படியே மகாதேவரை நினைந்து தவம் செய்து நீ பெரும் அஸ்திரத்தை பரிசாகப் பெற்று விட் டாய். நானும் என் வாக்கைக் காப்பாற்ற வேண்டும். என் வசமுள்ள அஸ்திரங்கள் அவ்வளவையும் நான் உனக்கு தருவேன். அதன் பொருட்டு எனது அமரலோகத்தில் இருந்து உன்னை அழைத்துச் செல்ல 'மாதலி' என் பவன் வருவான். அவனுடன் நீ ரதத்தில் வந்து சேர். அங்கே உன்னை உரிய முறையில் கவுரவிப்பேன்," என் றான்.

அதேபோல, அன்னபட்சி போன்ற ரதத்துடன் மாதலி வந்திட, அர்ஜுனனும் அதில் ஏறிக் கொண்டு அமரலோ கத்தில் புறப்பட்டான். வழியில் நட்சத்திர மண்டலங்கள் கண்ணில் பட்டன. மாதலி அவற்றைக் காட்டி விளக்கம் அளிக்கத் தொடங்கினான்.

"அர்ஜுனரே! இங்கே நட்சத்திரங்களாக ஜொலிப்ப வர் கள் பூமியில் வாழ்ந்த நாளில் பெரும் புண்ணியச் செயல் களைச் செய்தவர்கள். இவர்களை நித்யசூரிகள் என்று சொல்வார்கள். இவர்களே விண்ணில் இருந்தபடியே மண்ணில் மகான்களாகவும், சாதுக்களாகவும் போற்றப் படுகின்றனர். இவர்கள் எண்ணிய மாத்திரத்தில்

இவர்களோடு தொடர்பு உண்டாகி நம்மை வந்தடை கின்றன. இதுபோக, சொர்க்கத்தில் இன்புறுபவர்கள் மீண்டும் பிறக்கும் வண்ணம் கர்மவினை செய்தவர்கள்,

நரகத்தில் வேதனைப்படத் தக்கவர்கள், மனிதர் அல்லாமல் இன்னுயிர்களாக பிறப்பெடுக்கப் போகிறவர்கள் என்று பல பிரிவுகள் உண்டு. அவர்களையும் இப்போது நீர் காணலாம்" என்றிட அவர்கள் அர்ஜுனனின் கண்களில் பட்டனர்.

அர்ஜுனன் இந்த அரிய காட்சியைக் கண்டு, "இன்றே நான் மிகத் தெளிந்தேன். இறந்த பின் உயிர்கள் என்னாகிறது என்னும் கேள்விக்கு விடை கிட்டி விட்டது. எத்தனை அற்புதமான இயக்கம் இது" என்று வியந்தான்.

இந்திர சபையும் வந்தது. இந்திரன் அர்ஜுனனை அழைத்துச் செல்ல தேவலோக கன்னியர் மலர் தூவி வரவேற்றனர். வழியில் விஸ்வதேவர்கள், அஸ்வினி தேவர்கள், ஆதித்தியர்கள், வசுக்கள், ருத்திரர்கள், பிரம்மரிஷிகள், ராஜரிஷிகள், திலீபன் என்னும் அரசன், தும்புரு, நாரதர், 'ஹாஹா' 'ஹீஹீ' என்னும் இரு கந்தர்வர்கள் என்று எல்லோரும் வணங்கி வரவேற்றனர்.

அர்ஜுனனை இந்திரன் தன் அரியணை வரை அழைத்துச் சென்று அமர்த்தினான். இப்படி இந்திரன் அருகில் ஒரு வீரன் அமர்வது அபூர்வமானது. இந்திரனுக்குச் சமமான அவனை 'உபேந்திரன்' என்பர். அர்ஜுனன் அன்று உபேந்திரன் ஆனான். அவன் புரிந்த தவம் அந்த நிலைக்கு உயர்த்தியது.அரியணையில் அவர்களைக் கண்டவர்கள் முகம் மலர்ந்தனர்.

அமரலோகவாசிகள் வரையில் அது ஒரு அபூர்வ காட்சியாக இருந்தது. பூவுலகில் பிறந்த மனிதன் அமரலோகத்தை அடைந்து, இந்திரனாலேயே இந்திரனாக ஆக்கப்படுவது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல... இந்த

அரிய காட்சியைக் கண்ட கந்தர்வர்கள், சாம வேதத் தால் பாடி மகிழ்ந்தனர்.

மேனகை, ரம்பை, பூர்வசித்தி, ஸ்வயம்பிரபை, க்ருதாசி, ஊர்வசி, மிஸ்ரகேசி, தண்டகவுரி, வரூதினி, கோபாலி, சகஜன்யை, - கும்பயோனி, ப்ரஜாகரை, சித்ரசேனை, சித்திரலேகை, சஹை என்ற தேவ மாதர்கள் ஒன்று கூடி நாட்டியமாடினர். மொத்தத்தில் அர்ஜுனனின் வரவால் இந்திரசபை பொலிவோடு விளங்கியது.

தேவரிஷியான பிரகஸ்பதி இந்திரனிடம், "உன் புத்தி ரன் இவன். உன்னைப் போலவே முனைப்பு கொண்டு இங்கே வரும் வல்லமையை பெற்று விட்டான். வாரி சோடு உன்னைப் பார்க்கும் போது உள்ளம் பூரிக்கி றது," என்றார். ஆட்டம், பாட்டம் முடிவுக்கு வர, இந்திரன் அர்ஜுனன் வந்த நோக்கத்தை கவனிக்கத் தொடங்கி னான். சித்ரசேனன் என்ற இசை வல்லானை அழைத்து வாத்யம், நர்த்தனம் ஆகிய இரண்டையும் முதலில் கற் பிக்கச் சொன்னான்.

அர்ஜுனன், "தேவதேவா... எனக்கு இதையெல்லாம் விட அஸ்திரங்களே பெரியவை..." என்றான்.

'புரிகிறது புத்திரா! அஸ்திரங்கள் இங்கே பயிற்சியால் மட்டும் அடையப்படுபவை அல்ல. அது ஒரு கல்வி. பாடம் போல் கற்பிக்கப்பட்டே உபதேசிக்கப்படும். சித் ரசேனன் அதற்கு பொறுப்பேற்று உபதேசம் செய்வான். முன்னதாக ஆயகலைகள் அறுபத்து நான்கும் கற்பிக் கப்படும். இதற்கு ஐந்து ஆண்டு காலம் பிடிக்கும். நீ அவ் வளவு காலமும் இங்கே தங்கியிருந்து கற்றுத் தெளிந்து பின் பூலோகம் செல்வாய்," என்றான். அதைக் கேட்ட

அர்ஜுனனுக்கு சற்று அதிர்வு ஏற்பட்டது. பூவுலகில் தன்னைக் காணாமல் தர்மன் பீமன் உள்ளிட்ட தன் சகோதரர்கள் வருந்துவார்களே..." என்றான் அர்ஜுனன்.

"கவலைப்படாதே...அவர்களுக்கு உரிய முறையில் நீ இங்கே பயிற்சி பெற்றிடும் விஷயம் கூறப்படும்," என்றான் இந்திரன்.

அதற்கேற்ப லோமசர் எனும் முனிவர் இந்திர லோகத்துக்கு விஜயம் செய்தார். அவர் அர்ஜுனனை அங்கே பார்த்துப் பெரிதும் வியந்தார். பூவுலகில் அவதரித்த ஒரு மானிடன் இந்திரலோகத்தில் நடமாடுவது என்பது அசாத்தியம் என்பதை உணர்ந்திருந்த அவரிடம், இந்திரன் அர்ஜுனனின் தவத்தைக் கண்டு மகிழ்ந்த சிவன் பாசுபத அஸ்திரத்தை வழங்கியது பற்றிக் கூறினான். லோமசரும் அர்ஜுனனின் புலனடக்கத்தை எண்ணி வியந்து ஆசிர் வதித்தார். அப்போது அர்ஜுனும், கிருஷ்ணனும் முற்பிறவியில் நரநாராயண ரிஷிகளாக இருந்ததை பார் அர்ஜுனன் லோமசரிடம் தெரிவித்தான்.

லோமசர் காம்யக வனம் சென்று அங்கிருந்த பாண்டவர்களிடம் அர்ஜுனன் அமரலோகத்தில் கல்வி கற்பதைக் கூறச் சித்தமானார். ஒருபுறம் இது போன்ற சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணமிருக்க, அர்ஜுனனுக்கு சில சோதனைகளும் ஏற்பட்டன. அவனைக் கண்ட தேவமாதர்கள் காதல் வயப்பட்டனர். அதில் ஊர்வசி முக்கியமானவள். விரக தாபத்தால் ஏங்கத் தொடங்கினாள்.

ஊர்வசி போன்ற தேவமாதர்கள் எழில் கொண்டவர்கள் மாத்திரமல்ல, அவர்கள் இந்திர லோகத்தை அடையும் தகுதி படைத்தோருக்கு அவர்கள் விரும்பும் இன்பங்

களை எல்லாம் தர கடமைப்பட்டவர்களும் கூட... மானு டர்களுக்கு உண்டான கற்பு நெறிக்கும் அவர்களுக்கும் பெரிய சம்பந்தமோ, அதற்கான தேவையோ அவர்களி டமில்லை. இதனால், முனிவர்கள், சாரணர்கள், ரிஷிகள் கூட காமத்தை அவர்கள் மூலம் தணித்துக் கொள்வ துண்டு.

அப்படிப்பட்ட ஊர்வசி சித்ரசேனனிடம், அர்ஜுனனை தன் மனைக்கு அனுப்பச் சொல்ல சித்ரசேனனும், 'அவன் உன்னிடமே ஜதி சொல்லப் பழகப் போகிறான். அப்போது நீ உன் விருப்பங்களை அவனிடம் ஈடேற்றிக் கொள்," என்றான். ஊர்வசியும், அர்ஜுனனுக்காகவழி மேல்விழிவைத்துக் காத்திருக்க அந்த நாளும் வந்தது. சித்ரசேனன் அர்ஜுனனை ஊர்வசியின் ரத்னகலா மண் டபத்தில் விட்டுச் சென்றான். அர்ஜுனனும் ஊர்வசியை பணிவாக வணங்கி நின்றான். அவனுக்குள் அவள் எழி லார்ந்த மேனி எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

இது ஊர்வசியை மேலும் பாதித்திட, "சுந்தரா... என்னை ஏற்றுக் கொள்..." என்று அணைக்க முன் வந்தாள். ஆனால், அர்ஜுனன் மறுத்தான். அதிர்ச்சியையும் முகத் தில் காட்டினான்.

"சுந்தரா... என்ன இது? நானே அழைத்தும் என்ன தயக் கம்...?

"தயங்க வேண்டியதற்கு தயங்கத் தானே வேண்டும் தாயே?"

"என்ன... தாயா? நானா?"

"ஆம்... நான் உன்னை அந்த இடத்தில் வைத்தே பார்க்கிறேன். நீ என் தந்தைக்கு இணையான இந்திரனுக்கு உரியவள். அப்படி என்றால் எனக்கு நீ தாய் என்பது தானே சரி!"

"அர்ஜுனா... உன் மானுட வழக்கத்தை இங்கே பின்பற்றத் தேவையில்லை. இங்கே மகிழ்வோடு வாழ்வது ஒன்றே நோக்கம். இன்பத்தை தருவதே என் கடமையும் கூட..."

"இருக்கலாம். ஆனால், நான் இங்கே தற்காலிகமாக வாசம் புரிபவன். இந்த அமர உலகின் நித்யவாசி நானல்ல. ஆகவே, - எனக்கான தர்மத்தை நான் பின்பற்றியே தீருவேன். அதுவே எனக்கு அழகு..."

"அப்படியே வைத்துக் கொண்டாலும் நீ அரச லட்சணம் கொண்டவன். ஒரு பெண் மானசீகமாக உன்னை விரும்பும் போது நீ தடை போடக்கூடாது.

"போதும். அந்த நியாயத்தைச் சொல்லி இருவர் என்னை இரு பிள்ளைகளுக்கு தந்தையாக்கி விட்டனர். பூவுலகில்... இங்கும் அது தொடர்வதை நான் விரும்பவில்லை..."

"விஜயா... என்ன இது...? இப்படி எல்லாம் சிந்திக்கும் நேரமில்லை. நவரசங்களில் ஒன்றான சிருங்கார ரசம் என் உதடுகளில் இருப்பது உனக்குத் தெரியவில்லையா?"

"நான் அதை பூவுலகில் வாழும் என் பத்தினியர்களிடம் அறிந்து விட்டேன். இங்கே என் நோக்கம் மோகம் அல்ல... அஸ்திரம் மட்டுமே!"

"என் மோகமும் ஒரு அஸ்திரம் தான்..."

"உண்மையே... அது என்னை தகர்ப்பதை நான் அனும திக்க மாட்டேன்..."

"அஸ்திரம் என்று கூறி விட்ட நிலையில், நானும் அதைக் கொண்டு உன்னை கட்டாமல் விட மாட்டேன்..."

"ஊர்வசி... வேண்டாம் இந்த பிடிவாதம்..."

"இது பிடிவாதம் அல்ல... ஒரு நரன் என்னை அலட்சி யப் படுத்துவதை என்னால் சகிக்க முடியாது. இம்மட்டில் நீ காமுற இடமிருந்தும் அதற்கு இடம் கொடாது பேசிய தால் அதற்கு முற்றிலும் இடம் இல்லாத அரவாணியாக திகழக் கடவாய்..." எனச் சற்றும் எதிர்பாராத வகையில் சாபமிட்டாள் ஊர்வசி.

அர்ஜுனன் இதை எதிர்பார்க்கவில்லை. அஸ்திரம் பெற வந்த அமர உலகில் தனக்கு இப்படி ஒரு சாபமா என கலங்கி நின்றான்.

ஊர்வசி சாபமிட்டதும், அர்ஜுனன் கலங்கிப் போனான். இப்படி அரவாணியாகும்படி சபித்து விட்டாளே என்ப தற்காக அல்ல... 'தான் ஒரு நெறியோடு வாழ ஆசைப் பட்டும் அதனால் இப்படி சாபம் விளைகிறதே?' என்பதே அவன் வருத்தமாக இருந்தது. பின்னர், அவன் சாபம் பெற்ற சம்பவம் இந்திரனுக்குத் தெரியத் தொடங்கியது.

இவ்வேளையில் இந்திரன் அர்ஜுனனை பெருமிதமே கொண்டான். அவனை அழைத்து ஆறுதலாக பேசவும் செய்தான்.

"விஜயா! உன் நேரிய செயலை எண்ணி பெருமிதம் கொள்கிறேன். ஒரு தேவமாதுவின் பேரெழிலை நீ துச் சமாகக் கருதியது உன் ஆண்மையைக் காட்டுகிறது. அதே சமயம் அவளை ஒரு தாயாகக் கருதி, நீ அவ ளைப் பணிந்த செயல் உன் ஞானத்தின் விளைவாகும். உன்னை நினைக்க எனக்கு பெருமிதம் மட்டுமல்ல... பிரமிப்பும் ஏற்படுகிறது," என்றான்.

அருகில் இருந்த இந்திராணியோ அர்ஜுனனுக்கு திருஷ்டி கழித்தாள்.

பின் இந்திரனிடம், "இவனது சாபமே வரமாகிட செய்ய வேண்டியதைச் செய்யுங்கள். அஸ்திரப் பயிற்சி பெற வந்த மாணவன் அர்ஜுனன். இந்திரலோகத்தில் அவன் சாபத்திற்கு ஆளானான் என்று நாளை யாரும் பேசக் கூடாது" என்றாள்.

இந்திரனும் அதற்கேற்ப அர்ஜுனனின் சாபத்தில் ஒரு திருத்தம் செய்தான்.

"விஜயா...ஊர்வசி அளித்த சாபம் உனக்கு பெரும் நன்மை யாக மாறிடும். அக்ஞாத வாசத்தின் போது அர வாணித் தன்மை எதிரியிடம் இருந்து காத்து நிற்கும். அந்தக் காலம் முடியும் போது இந்த சாபமும் நீங்கி நன்மை உண்டாகும்," என்றான்.

இந்திர லோகத்தில் இவ்வாறு இருக்க, பூவுலகில் துவைத வனத்தில் பாண்டவர்களில் மற்ற நால்வர்கள் தங்களின் வனவாச காலத்தைக் கழித்தபோது அர் ஜுனன் இந்திரலோகம் சென்றதே தெரியாதவர்களாக இருந்தனர். அவர்களைக் காண லோமசர் என்னும் ரிஷி

வந்தார். இவர் சர்வலோகங்களுக்கும் சென்று வரும் வல்லமை படைத்தவர். மனத்தால் நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்திற்குச் செல்லக் கூடியவர். இந்திர லோகத்தில் அர்ஜுனன் இருக்கக் கண்ட அவர் மூலமே, விஷயம் பாண்டவர்களுக்குத் தெரிய வந்தது. இதை எண்ணி தர்மன், பீமன், நகுலன், சகாதேவன், திரவுபதி எல்லோரும் பூரித்து போனார்கள்.

இங்கே பூரிப்பு என்றால் அஸ்தினாபுரத்தில் நேர் எதிரான நிலை! சஞ்சயன் மூலமாக அர்ஜுனன் தவம் புரிந்து பசுபதாஸ்திரம் பெற்றது முதல் இந்திரலோகம் சென்றது வரை சகலத்தையும் தெரிந்து கொண்டான் திருதராஷ்டிரன். துரியோதனன் கூட, பாண்டவர்களை வனவாசம் அனுப்பியதே தவறோ எனக் கருதினான். இப்படி இருந்த சூழ்நிலையில், ஒருநாள் தர்மர் உள்ளிட்ட நால்வரையும் பிருகதஸ்வர் என்னும் மகரிஷி சந்திக்க வந்தார். அவரை பாத பூஜை செய்து வரவேற்றனர். பிரகதஸ்வர் மனம் குளிர்ந்தார்.

"வனவாசம் எப்படியிருக்கிறது?' என்று கேட்டார்.

தர்மர் புன்னகையோடு, "நாங்கள் இங்கே ஒரு குறையுமின்றி இருக்கிறோம்," என்றான்.

ஆனால், பீமன் அதைக் கேட்டு முகம் சுளித்தான். நகுலனும் சகாதேவனும் கூட அதையே எதிரொலித்தனர். சகாதேவன் ஒரு படி மேலே போய் பேசினான்.

"மகரிஷி... தாங்கள் திரிகால ஞானி! இங்கே நாங்கள் தண்டனையை அனுபவித்தபடி இருப்பது தெரிந்தும், இந்த வனவாசம் எப்படியிருக்கிறது? என்று கேட்

டால் எப்படி?தர்மர் அண்ணா தகிக்கும் தீக்குள் இருக்கும் போதும் நலமாக இருப்பதாகவே எண்ணுவார். அதையே கூறவும் செய்வார். நாங்கள் அப்படியல்ல! நாங்கள் பட சூதினால் பாதிப்புக்குள்ளானவர்கள். அரசபோகத்துக்குவிதியிருந்தும் இந்த காட்டின் காய்கனியை உண்டு ஜீவிப்பவர்கள். மாவீரர்களாக இருந்தும் அதனால் ஒரு புண்ணியமுமில்லை. எங்களால் பாவம்... இதோ இந்த திரவுபதியும் பாடாய் படுகிறாள்..." என்றான்.

"சகாதேவன் கருத்தை நான் அப்படியே வழி மொழிகிறேன். எத்தனைதான் அருள் சார்ந்தவர்கள் எங்களுக்காக வருந்தினாலும் பேசினாலும் அதனால் ஒரு பயனுமில்லை. விதி வலியது என்பதற்கு நாங்கள் உதாரணமாகி விட்டோம். மதியும் அதன் தர்மச் செயல்பாடுகளும் எதற்கென்றே தெரியவில்லை..." என்றான் நகுலன்.

பீமனோ தன் வருத்தத்தை அருகிலுள்ள மரத்தண்டில் ஆவேசமாக குத்திக் காட்டினான்.

இதையெல்லாம் கண்ட பிரகஸ்தவர், "உங்கள் வேதனை எனக்குப் புரிகிறது. நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் நிலையைச் சொல்லி விட்டீர்கள். ஆனால், நீங்கள் படும் துன்பத்தை விடவும் அதிக துன்பம் அனுபவித்த அரசன் ஒருவன் இந்த உலகில் வாழ்ந்தான். அவன் வரலாற்றைக் கேட்டால் உங்கள் துன்பம் ஒன்றுமேயில்லை என்பதை உணர்வீர்கள்..." என்று பீடிகை போட்டார்.

அனைவரும் அவரைக் கூர்ந்து பார்த்தனர்.

"என்ன பார்க்கிறீர்கள்...? மானுட வாழ்வு என்பது கோடானுகோடி வண்ணம் கொண்டது. அதில் வெகு சிலர் வாழ்வோ அந்த வண்ணம் அவ்வளவையும் கொண்டதாகி விடுகிறது. அப்படி ஒருவன் தான் அந்த அரசன்! கஷ்டப்பட்டாலும் ஆறுதல் கூறிக் கொள்ள நீங்கள் ஒருவருக்கு ஒருவர் இருக்கிறீர்கள் உங்களுக்கெல்லாம் ஆதார சக்தியாக திரவுபதி கூடவே இருக்கிறாள்.

ஆனால், அந்த அரசன் பாவம்...! ஒருவர் துணையுமின்றி துன்பப்பட்டான். கல் நெஞ்சமும் அவன் கதை கேட்டால் கரைந்து விடும். அதைக் கேட்பது உங்களுக்கு நன்மையளிக்கும். ஏனென்றால், அந்த அரசனின் சரிதம் சொல்லவும், கேட்கவும் உகந்தது. பரிகாரம் செய்த பலனைக் கொடுக்கும். அப்படி ஒரு வரமும் அவன் பெற்றான்," என்றார்.

" மகரிஷி அவர்களே... அதை முதலில் எங்களுக்கு கூறுங்கள்," என்று வேகமாக மண்டியிட்டு அமர்ந்தாள் திரவுபதி.

"மகரிஷி அந்த அரசன் யார்? முதலில் கூறுங்கள்..." என்றான் பீமன்.

பிரகதஸ்வரும் கூறத் தொடங்கினார்.

"தர்மா... பீமா... நகுல சகாதேவா! தாயே திரவுபதி... அந்த அரசன் தான் நளன்! நளச்சக்கரவர்த்தி என்றால் ஒரு காலத்தில் பூவுலகமே திரும்பிப் பார்க்கும். நிஷித தேசத்து மன்னரான வீர சேனனின் புத்திரன் அவன்.

ஆயகலைகள் அறுபத்து நான்கும் கற்றிருந்தான். அதி லும் குதிரையேற்றம், சமையல்கலை இரண்டிலும் உச் சத்தை தொட்டவன் அவன்."

இவ்வாறாக, பிரகதஸ்வர் சொன்ன நளசரிதத்தில் அவர் கள் மூழ்கத் தொடங்கினர்.

தன்னை விட ஒரு பாவியோ, தன்னை விட துக்கமுள்ள ஒருவனோ இந்த உலகில் இருக்க முடியாது இருக்க வும் கூடாது' என்பது போல் தர்மன் பிரஹஸ்தவர் முன் பேசிட, அதற்குப் பதிலாக அவரும் உன்னை விட துக்க மும், வேதனையும் கொண்ட ஒருவனும் இந்த உலகில் வாழ்ந்திருக்கிறான் என்று நளதமயந்தியின் வரலாற்றை கூறத் தொடங்கினார்.

நளோபாக்யானம் என்னும் பெயரில் ஏனைய கூறிய நள தமயந்தி வரலாறு தர்மனுக்கும், ஏனைய நால்வருக்கும் ஆச்சரியத்தோடு, நம்பிக்கையையும் உருவாக்கியது.

நிடதநாட்டு அரசனான வீரசேனனின் மகன்தான் நளன். இவன் இந்திரனுக்கு ஒப்பான அழகன் வீரமும், விவே கமும் நிறைந்தவன். விதர்ப்ப தேசத்து அரசன் வீமன். அவனுடைய மகள் தமயந்தி தேவகன்னிகைகளை எல் லாம் பொறாமைப்படச் செய்யும் அழகுடையவள். வீம னுக்கு தமயந்தி வரமாக வந்து பிறந்தவள். பிள்ளைப் பேறு இன்றி வீமன் தவித்த நிலையில், 'தமனர்' என்ற ஒரு பிரம்மரிஷி வீமனுக்கு பிள்ளை வரம் தந்தார். அத னால், ஒன்றுக்கு நான்கு

பிள்ளைகள் பிறந்தனர். தமன், தாந்தன், தமனன், தமயந்தி என்பதே அவர்களின் பெயர்கள். ஒருநாள்

நளன் வேட்டைக்குச் சென்ற இடத்தில் ஒருதடாகத்தில் பொன்மயமான சிறகுகள் கொண்ட அன்னங்களைக் கண்டான். அவைகளில் ஒரு அன்னத்தை பிடித்து விட்டான். அந்த அன்னமோ அதிசயமாக மனிதர்கள் போல நளனிடம் பேசத் தொடங்கியது.

"சக்கரவர்த்தி என்னை எதுவும் செய்து விடாதே. அபூர்வ அன்னப்பிறப்பு என்னுடையது... என்னை நீ விடுவித்தால் உனக்கொரு சகாயம் செய்வேன்," என்றது.

ஆச்சரியப்பட்ட நளனிடம், "சக்கரவர்த்தி! நீ ஆண்களே பொறாமைப்படும் அழகன். உன்னைப் போல பெண்களே பொறாமைப்படும் அழகி ஒருத்தி தமயந்தி. அவளைக் கண்டால் மயங்கி விடுவாய். அவளிடம் உன்னைப் பற்றிக் கூறி, மணம் முடிக்க உதவி செய்வேன்," என்றது அன்னம்.

நளனும் விடுவிக்க, விதர்ப்ப தேசம் சென்று அந்தப்புரத்தில் இருந்த தமயந்தியின் மடியில் அமர்ந்தது. நளனைப் பற்றியும் சொல்லி முடித்தது.

தமயந்தி அதனிடம், "நான் முன்பே அவர் குறித்து கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது நீ தூதாக வந்து விட்டாய். நானும் அவர் நினைவாகவே இருக்கிறேன்" என்றாள். அந்தச் செய்தியோடு நளனிடம் புறப்பட்டது. இதனூடே தமயந்தியின் விரகத்தையும், தனிமையில் அவள் மூழ்கிப் போவதையும் வைத்து அரசனான வீமன் ஒரு சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்தான். அதில் பூவுலக அரசர்கள் மட்டுமில்லாமல், இந்திரன் உள்ளிட்ட தேவர்களும் கலந்து கொள்ள நேர்ந்தது.

இந்திரன் அமர லோகத்தில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான். அதில் பங்கேற்க நாரதர் சென்றிருந்தார். விருந்துக்குப் பெரிதாக யாரும் வராதிருப்பதைக் கண்ட இந்திரன் கோபம் கொண்டான்.

நாரதர், "எல்லோரும் தமயந்தியை மணப்பதற்காக விதர்ப்ப தேசம் சென்று விட்டனர்" என்றார்.

உடனே இந்திரனும், அக்னி, வாயு, வருணன், எமன் போன்ற தேவர்களும் சுயம்வரத்தில் பங்கேற்க முடிவு செய்தனர். அவர்கள் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டனர். சுயம்வரத்தில் தமயந்தி தங்களில் யாருக்கு மாலை சூட்டினாலும் சரி, மற்றவர்கள் அனுசரணையாக ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்பதே அந்த ஒப்பந்தம். அதே சமயம் பூமியிலுள்ள மனிதர்களான அரசர்களுக்கு சமமாக சுயம்வரத்தில் பங்கு கொள்ளும் போது, தமயந்தி தங்களில் ஒருவரை ஏற்காமல் பூவுலகின் அரசன் ஒருவனுக்கு மாலையிட்டு விட்டால் அதை விடக் கேவலம் வேறில்லை என்றும் கருதினர். தாங்களே வெற்றி பெற என்ன செய்யலாம் என்று எண்ணிய நிலையில், அன்னப்பறவை நளனை நோக்கி செல்லும் காட்சியைக் கண்டனர். நளனுக்கு தமயந்தி மீது காதல் உருவாக இருப்பதைப் புரிந்து கொண்டனர்.

தமயந்திக்கும், நளன் மேல் காதல் என்பதை அறியாத அந்த ஐவரும் நேராக நளன் முன் சென்று நின்று தங்களையும் அறிமுகம் செய்து கொண்டனர். நளனும் இந்திரன் உள்ளிட்ட தேவர்களை நேரில் சந்தித்தமைக்காக மகிழ்ந்தான். "என்ன செய்ய வேண்டும்?" என்றும் கேட்டான்.

அவர்களும். "எங்களுக்காக தமயந்தியிடம் நீ தூது செல்ல வேண்டும்,' என்றனர். நளன் திடுக்கிட்டான்.

"தேவர்களே... நானும் உங்களைப் போல ஒரு வேட் பாளன். அப்படிப்பட்ட என்னிடமே நீங்கள் தூதுக்குரிய விஷயங்களைக் கூறி இப்படி அனுப்புவது கொஞ்சமும் நாகரிகமல்ல. என்னை மன்னியுங்கள்," என்றான்.

அவர்கள் விடுவதாக இல்லை. "நளனே... நீ ஒரு நரன்! ஆனால், நாங்கள் அப்படியல்ல. தேவாதி தேவர்கள்...! தமயந்தி எங்களை மணந்தால் தேவலோகப் பெண் ணாகி விடுவாள். சற்று யோசித்துப் பார்" என்றனர்.

"உண்மை தான். ஆனால், தமயந்தி இதை ஏற்று உங் களை மணக்க சம்மதிக்க வேண்டுமே...?" என்றான் நளன்.

"நீ தூது போய் எங்கள் பிரதாபங்களை வஞ்சனையின் றிக் கூறு. அவள் மனம் மாறுவதைப் பார்ப்பாய்..." என் றான் இந்திரன். மேலும், எவர் கண்களிலும் படாதபடி தமயந்தி முன் சென்று வருவதற்காக ஒரு மேலாடை யைக் கொடுத்து நளனுக்குத் தந்து அதை அணிந்து கொள்ளச் சொன்னான். அதை தோள் மேல் போர்த்திக் கொண்டு சென்ற நளனை விதர்ப்ப தேசத்தில் ஒருவர் கூடப் பார்க்கவில்லை. தமயந்தியை நளன் சந்திப்பதும் சுலபமாக இருந்தது. அதேசமயம் இந்திரனிடம் எமனும், அக்னியும் நளன் குறித்து சந்தேகத்துடன் பேசினர்.

"பிரபு... இந்த நளன் நம்மைப் பற்றி தமயந்தியிடம் பிர தாபத்தோடு பேசுவானா... இல்லை தன் பிரதாபத்தை

முன்னிறுத்தி, நாம் சுயம்வரத்தில் கலந்து கொள்ளப் போவதையே மறைத்து விடுவானா?" என்றான் அக்னி.

"ஆம்... எனக்கும் சந்தேகமாக உள்ளது. திருடனிடமே சாவியைக் கொடுத்து விடுவது போல இருக்கிறது," என்றான் எமன்.

இந்திரன் சிரித்தான்.

"தேவாதி தேவர்களே! இது நளனுக்கு நான் வைக்கும் பரிட்சை. போகப் போகப் பாருங்கள்..." என்றான்.

அங்கோ நளன் எவர்கள் கண்ணிலும் படாது, தமயந்தி முன் பிரசன்னமாகி தன்னை அறிமுகம் செய்து கொண் டான்.

"தமயந்தி... நானே நளன்! "

"அறிவேன்... தாங்கள் என் இதயத்தில் இருப்பவரும் கூட..."

"நீ கூறுவதைக் கேட்க மகிழ்வாக உள்ளது. ஆனால், நான் இப்போது தேவர்களின் தூதுவனாக நிற்கிறேன்..."

'புரியும்படி கூறுங்கள்" என்ற தமயந்தியிடம் நளனும் நடந் ததைக் கூறினான். தமயந்தி முகத்தில் சலனம். இருந் தும் தீர்மானமாகக் கூறினாள்.

" தேவர்கள் அல்ல... மும்மூர்த்திகள் வந்தாலும் கூட, நீங்களே என் மணாளர்... நீங்கள் அச்சமின்றி சுயம்வரத் துக்கு வாருங்கள். அங்கே நான் யாருக்கு மாலையிடுகி றேன் என்பதே இறுதியானது," என்றாள்.

நளனும் தேவர்களிடம் திரும்பினான். "தமயந்தி என்னையே விரும்புகிறாள். சுயம்வரத்திலும் என்னைப் பங்கேற்கச் சொல்லி விட்டாள். உங்கள் சார்பிலும் என் கடமையைச் சரியாகச் செய்து விட்டேன். இனி நடப்பதற்கு நான் பொறுப்பில்லை..." என்றான் நளன்.

அதைக் கேட்ட இந்திரனும் மற்ற மூவரும் உடனேயே வடிவம் மாறி, நளன் போலவே காட்சியளிக்கத் தொடங்கினர். நளன் அதைப் பார்த்து அதிர்ந்தான்.

எதிரில் தன் வடிவிலேயே நிற்கும் இந்திரன், வருணன், அக்னி, எமன் ஆகிய நால்வரையும் பார்த்து விக்கித்தான் நளன். அவர்கள் தங்களுக்குள் மர்மமாய் சிரித்தனர்.

பின் "சுயம்வரத்திலும் நாங்கள் இதே ரூபத்தில் தான் தமயந்தி முன் தோன்ற உள்ளோம்!" என்றனர்.

நளன் முகம் வேகமாய் மாறியது.

"தேவர்களே... இது தங்களுக்கு உகந்த செயல் தானா?" என்று கேட்கவும் செய்தான்.

"நளச் சக்கரவர்த்தி சுயம்வரம் என்பதே அதில் பங்கு கொள்வோர் தங்கள் பிரதாபங்களைக் காட்டத் தான்! இப்படி நாங்கள் தோன்றுவது எங்கள் பிரதாபம்... தமயந்தி உன்னை உளமாற நேசிப்பது சத்தியம் என்றால் அவள் நரனான உன்னைத் தன் மனம் வாக்கு மற்றும் பிரேமை உணர்வால் கண்டுபிடித்து மாலையிடட்டும். அப்படி அவள் எங்களைக் கடந்து உன்னைக் கண்டறிந்து மாலையிட்டு விட்டால் அதில் எங்களுக்கு யாதொரு ஆட்சேபமும் இல்லை. மாறாக, நாங்கள்

உனக்கு எங்களின் மேலான வரங்களையும் தருவோம்," என்றான் இந்திரன்.

நளனும் அதற்கு மேல் அவர்களை எதிர்த்து பேச முடியாதவனாகிப் போனான். சுயம்வர நாளும் வந்தது. விதர்ப்ப ராஜன் வீமனின் அரண்மனை கல்யாணக்களை பூண்டு அரசர் பெருமக்களால் சூழப் பெற்றது. எங்கு பார்த்தாலும் ரதங்களும், குதிரைகளுமே கண்ணில் பட்டன.

தமயந்தியும் கையில் மாலையோடு தயாரானாள். அவள் மனதில் நளன் மட்டுமே நிரம்பியிருந்தான். அவைக்கு வந்த நளன் ஆசனத்தில் அமர்ந்தான். அவனையொட்டி இந்திரன், அக்னி, வருணன், எமன் ஆகியோர் அமர்ந்திருந்தனர். தமயந்தியின் பார்வைக்கு மட்டும் நளன் உருவில் காட்சியளித்தனர். தமயந்தி அந்தக் காட்சியை கண்டு முதலில் கலங்கிப் போனாள். அந்த நொடியே தேவர்கள் தங்களின் மாயாசக்தியால் குழப்பம் ஏற்படுத்துவதை உணர்ந்து கொண்டாள்.

தமயந்தியின் பட்டறிவு தேவர்களுக்கான இலக்கணங்களை நன்றாகத் தெரிந்து வைத்திருந்தது. அவர்களுக்கு வியர்க்காது, அவர்களாக விரும்பினால் அன்றி பசியும் எடுக்காது, தாகமும் அவர்களுக்கு ஏற்படாது அவர்களின் மேனி மானிடர்களில் இருந்து பெரிதும் மாறுபட்டிருக்கும். அடுத்து அவர்களது நிழல் கீழே விழாது. அவள் இந்த தேவாம்சங்களை மனதிற்குள் எண்ணியபடி நின்றாள். வியர்த்தபடி தமயந்தியைத் தவிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த நளனைச் சரியாக இனம் கண்டு மாலை சூட்டினாள்.

இந்திரன் அதைக் கண்டு மகிழவே செய்தான். அவை முன் தன் உண்மைத் தோற்றமுடன் தோன்றியவன் அனை வரும் பார்த்திட மணமக்களை வாழ்த்தினான். பின் தான் கூறியது போலவே, நளனுக்கு இரண்டு வரங் களை அளித்தான்.

"நளச்சக்கரவர்த்தி... நீ யாகம் புரியும் போது தேவர்களை நேரில் காணமுடிந்தவனாக இருப்பாய்! உன் பூவுலக வாழ்வு எப்படி அமைந்தாலும் அதன் முடிவு உனக்கு சொர்க்கபதவி தருவதாகவே இருக்கும்" என்றான்.

இந்திரனைத் தொடர்ந்த அக்னி நளன் விரும்பும் இடத் தில் தான் தோன்றுவேன் என்பதோடு அக்னிக்கு ஒப் பாக ஒளிரும் உலோகங்களை வழங்குவதாகக் கூறி னான். அப்படியே தன் துணையின்றி சமைக்கும் ஆற்ற லையும் தந்தான்.

அடுத்து எமன், "நீ தர்மத்தை உறுதியாக பின்பற்றும் மன வலிமையுடன் திகழ்வாய்," என்றான்.

வருணனோ, மணம் மிகுந்த மாலைகளை வழங்கிய தோடு, குதிரைகளை ஆட்டிப் படைக்கும் அஸ்வ மந்தி ரங்களையும் கூறினான்.

விதர்ப்ப ராஜனான வீமனும், மற்றுமுள்ள அரசர் பெரு மக்களும் இந்திரன், அக்னி, எமன், வருணன் உள்ளிட்ட நால்வரும் அளித்த வரங்களை எண்ணி ஆச்சரியமும், மகிழ்வும் கொண்டனர். அனைவரின் முன்னிலையில் நளதமயந்தி திருமணம் விமரிசையாக நடந்தது. நளன், தமயந்தி வாழ்வு இனிதாகவே அமைந்தது. -

அதே வேளையில், கலி என்பவன் வடிவில் விதி தன் விளையாட்டைத் தொடங்கியது. கலிபுருஷன், துவாபரன் என்பவர்கள் தமயந்தியின் சுயம்வரம் பற்றி கேள்வியுற்று அதில் பங்கேற்க வந்து கொண்டிருந்தனர். எதிரில் தேவர்கள் வந்ததைக் கண்டு நலம் விசாரித்தனர். தேவர்களின் மூலம் தமயந்தியின் திருமணம் முடிந்த விஷயத்தை அறிந்து கொண்டனர். துவாபரன் அதற்காக அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால், கலிபுருஷனுக்கு மிகுந்த வருத்தம்.

இந்திரனிடம், "தமயந்தியைத் தான் எப்பாடுபட்டாவது அடைந்தே தீருவேன்," என்றான்.

"சரி எல்லாம் தான் முடிந்து விட்டதே!" என்றான் எமன்.

"உங்கள் வரையில் வேண்டுமானால், எல்லாம் முடிந்திருக்கலாம். நான் தமயந்தியை அடையாமல் திரும்பமாட்டேன்" என்று சொல்லிப் புறப்பட்டான். இந்திரன் அதைக் கேட்டு வருந்தினான்.

"கலிபுருஷனே! நாங்களும் உன் போலவே அவனை அடைய எண்ணினோம். சில சூழ்ச்சிகளும் செய்தோம். ஆனால், தமயந்தியின் திடசித்தத்தால் அவளின் உண்மைக்காதல் வெற்றி பெற்று விட்டது. எங்கள் தந்திரம் அவள் முன் எடுபடாமல் போனது," என்றான்.

"ஜெயிக்கும்படியாக சூழ்ச்சி புரிய உங்களுக்குத் தெரியவில்லை. நான் அப்படியில்லை. எப்படி ஜெயிக்கிறேன் என்று அமர உலகில் இருந்த படியே பாருங்கள்... "கலிபுருஷன் ஆவேசமாகப் புறப்பட்டான்.

நளனின் அரண்மனையில் மறைந்திருந்து, கண்கொத்திப் பாம்பு போல் சரியான தருணத்திற்காகக் காத்திருந்தான்.

தர்மம் தவறாதவனாக நளன் கடமைகளைச் சரிவரச் செய்து வந்தான். நித்ய சந்தியாவந்தனம், விசேஷ தினங்களில் ஹோமம், எல்லா உயிர்கள் மீதும் அன்பு, சத்தியம், தர்மம் என வாழ்ந்த நளனை எந்த நிலையிலும் கலிபுருஷனால் பீடிக்க முடியவில்லை. நல்லதற்கு நேர் எதிரான கலிபுருஷனை மையமாகக் கொண்டே மாயை செயல்படுகிறது. அப்படிப்பட்ட அவனே, நளனைத் தமயந்தியிடம் இருந்து பிரிக்க 12 ஆண்டு வரை காத்திருக்க நேரிட்டது.

இதற்குள் நளதமயந்திக்கு இந்திரசேனன் என்னும் புத்திரன், இந்திரசேனை என்னும் புத்திரி பிறந்து விட்டனர்.

ஒருநாள் கலிபுருஷனுக்கு நளனைப் பிடிக்க சந்தர்ப்பம் அமைந்தது. ஒழுக்கத்துடன் ஆசார சீலனாகவும், தர்மவானாகவும் வாழ்ந்த நளன் சந்தியாவந்தனம் செய்வதற்காக கால்களைக் கழுவினான். அப்போது ஒருகால் சரியாக கழுவப்படாமல் நீசம் படிந்த நிலையில் இருந்தது. அதைக் கவனிக்காமல் நான் சந்தியாவந்தனம் செய்ய ஆரம்பித்தான். கலிபுருஷனும் இதுவே தருணம் என்று அவனுக்குள் புகுந்து கொண்டான்.

கால்களைச் சரியாக கழுவாத நளனைக் கலிபுருஷன் கவ்விப் பிடித்தான். இந்த வேளையில் கால்களைக் கழுவுவது என்பது முக்கியமான ஒன்றா? இதற்கும் கலிபுருஷனுக்கும் என்ன சம்பந்தம் என்றெல்லாம் கேள்வி எழலாம். ப் புராண நூல்களில் சமஸ்காரம் என்ற

பெயரில் கடமைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இதில் பிராமணன், அரசன், வைசியன் ஆகியோருக்கான கடமை என பிரிவுகள் உண்டு. நீராடுவது, பெரியவர்களை வணங்குவது, வீட்டில் விளக்கேற்றுவது, வாசலில் கோலமிடுவது, நெற்றியில் திலகமிடுவது என விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இதில் வீட்டைவிட்டு வெளியே சென்று திரும்பும் போது கால்களைச் சுத்தமாகக் கழுவிக் கொள்வது என்பதும் ஒன்று. இதனால், அசுத்தம் நீங்கி சுத்தமாகிறோம் என்பது விஞ்ஞானப் பார்வை. இதைக் கடந்து கண்களுக்குப் புலனாகாத நிலையிலுள்ள சக்திகள் நடந்து வரும் சமயம் எளிதாகக் காலைத் தொற்றிக் கொள்ளும் வாய்ப்பு மிகுதி.

சரியாக கழுவாத நிலையில், தொற்றிய சக்தி தென்னை மரத்தில் ஏறுபவன் போல விறுவிறுவென நம்முள் ஏறி விடும். சரியாக கழுவாத நிலைப்பாடு என்பது மேலோட்டமாகப் பார்த்தால், கவனக்குறைவு என்று சாதாரணமாகத் தெரியும். தீய காலம் என்பது இந்தக் கவனக்குறைவு மூலமாகவே செயல்படத் தொடங்கும். முதலில் இது மனதை ஆக்கிரமிக்கும். இதனால் விழிப்புணர்வு குறையும். அக்கறையின்மை உண்டாகும். செயல்பாடுகளில் அரைகுறை தன்மையைத் தோற்றுவிக்கும். இப்படிப்பட்டவர்களை, மாயை நிறைந்த கலிபுருஷன் ஆக்கிரமித்துக் கொள்வான்.

இந்த உலகில், அமிர்தம் மட்டுமில்லை விஷமும் உள்ளது. பூக்களோடு முட்களும் இருக்கவே செய்கின்றன. எப்படி இரவும், பகலுமாக காலகதி நடக்கிறதோ அப்படித்தான் எல்லாமே... நன்மை செய்யும் தேவர்களைப் போலவே, அதற்கு எதிரான செயல்பாடுகள் கொண்டவர்களும் இருக்கவே செய்கிறார்கள். அவர்களில் ஒரு

வன் தான் கலிபுருஷன். இவன் எப்படிப்பட்டவன் என்று குறிப்புகள் உள்ளன. இவன் மனிதர்கள் செய்யும் பாவத்தையே உடம்பாக உடையவன். கோரமான முகமும், பற்களும் அருவருப்பைத் தரும். துவாபர யுகத்தின் முடிவில் பிறந்த இந்த கலிபுருஷனால் வழி நடத்தப்படுவதே கலியுகம்.

இவனது படைப்புகளே பாவம், அதர்மம், பொய், ஜம்பம், இம்சை, கருமித்தனம் ஆகியவை. இந்த தீய குணங்களில் ஒன்று நம்மிடம் இருந்தாலும், கலி நம்மை ஆட்டி வைப்பான்.குடி, கூத்து, சூதாட்டம், புணர்ச்சி இவையே இவனுக்கு விருப்பமானவை. ஆசையும், கோபமும் இவனது பிள்ளைகள். இவனால் உருவாக்கப்பட்டதே நரகம். இவனது மனைவி யாதனை. இவளோடு கூடி பெற்ற பிள்ளைகளால் தொடங்கப்பட்டதே கலியுகம். சஞ்சல புத்தி, ஆசாரமின்மை, பெண்கள் மேல் ஆசை, தற்பெருமை, சுயநலத்துடன் பெற்றோரைப் புறக்கணித்தல், தீயவர் நட்பு என கலிபுருஷனால் உலகில் பரவிய தீமைகள் ஏராளம்.

கலியின் முதல் பாதத்தில், 16வயதுக்குள் பிள்ளை பெறுதல், குலமாதர் குணம் - திரிதல், ஆண்கள் மதுவுக்கு அடிமையாதல் போன்றவை நிகழும். கலியின் இரண்டாம் பாதத்தில் சிறு தெய்வ வழிபாடு, அந்தணர்கள் வியாபாரியாக மாறுதல், தாய்மொழிப்பற்று குறைதல், அன்னிய மோகம் ஏற்படும். மூன்றாம் பாதத்தில் ஜாதிகள் அழிதல், சிவ, விஷ்ணு மறைந்து எல்லோரும் ஒன்றாதல், கொடிய நோய்களால் மரணம் ஏற்படுதல், தங்கம் போல தண்ணீர் விலை ஏறுவது போன்றவை உருவாகும்.

இப்படி கலிபுருஷன் ஆட்சி பற்றிய குறிப்புகள் உள்ளன. அந்த கலிபுருஷனே, கால் கழுவாத ஒரு மந்தமான தருணத்தில் நளனை ஆக்கிரமித்தான். அந்த நொடியே நளனிடம் பெரிய மனமாற்றம் ஏற்பட்டது. உருவத்திலும் கருப்பு நிறம் படரத் தொடங்கியது. முதன் முதலாக நளனுக்குள் சூதாடும் எண்ணம் ஏற்பட்டது (ஏற்படுத்தப்பட்டது). அதற்கேற்ப புஷ்கரன் என்பவனுடன் நளன் சூதாடினான்.

நாடு, நகரம், மாடு, மனை, பொன், பொருள் எல்லாம் இழந்தான். மகன், மகள் இருவரையும் தேர்ப்பாகனான வார்ஷணேயனிடம் ஒப்படைத்து, தமயந்தியின் தந்தையிடம் அனுப்பினான். எல்லாம் இழந்தபின், புஷ்கரன் சூதாட்டத்தில் வைக்க தமயந்தி இருப்பதை சுட்டிக் காட்ட, நளன் அதை ஏற்கவில்லை. 'இனி ஒரு வினாடியும் இங்கு இருக்க மாட்டேன்' என்று சொல்லி உடுத்திய ஆடையோடு நாட்டை விட்டு வெளியேறினான்.

கணவனோடு பட்ட வாழ்பவளே உத்தமி ' என்ற தமயந்தியும் அவனைத் தொடர்ந்தாள். நளனைக் கண்ட மக்கள் வருந்தினர். மூன்று நாட்களாக நடந்த நளனும், தமயந்தியும் களைத்துப் போய் ஓரிடத்தில் அமர்ந்தனர். மனைவியைப் பார்க்க சக்தியற்ற நளன் தலை கவிழ்ந்தான். ஆனாலும் தமயந்தி, "பிரபு... துன்பத்திற்காக வருந்தாதீர்கள். எதுவும் நிரந்தரமற்ற இந்த வாழ்வில் அடுத்து என்ன செய்யலாம் என யோசியுங்கள்," என்றாள்.

நெகிழ்ச்சியுடன் நளன், "அன்பே ஆபரணம் ஏதும் இல்லாமல் இருக்கும் உன்னைக் கண்டால் மனம் வருந்து

கிறது. உன்னிடம் மன்னிப்பு கேட்கும் அருகதை கூட எனக்கில்லை," என்றான்.

அப்போது அவர்களுக்கு மேல் மரக்கிளையில் ஐந்தாறு பறவைகள் அமர்ந்தன. அவற்றின் சிறகுகள் தங்கம் போல் மின்னின. அவைகளைப் பிடிக்கும் என்ற ஆசை நளனுக்கு வந்தது. பாவம் நளன்...! இன்னும் மோசமான நிலைக்கு ஆளாக இருப்பதை அறியாமல் இருந்தான்.

பிரம்மரிஷி பிரஹதஸ்வர் நளனின் வரலாற்றைத் தொடர்ந்தார்.

"நளன் பொன் சிறகு கொண்ட பறவைகளைக் கண்டு அவைகளைப் பிடிக்க ஆசைப்பட்டான். கலிபுருஷனால் அனுப்பப்பட்ட அப்பறவைகள்..." என்று அவர் சொல்லி நிறுத்த, தர்மர் உள்ளிட்ட பாண்டவர்களிடம் திகைப்பு.

"இது என்ன கொடுமை... கட்டிய துணியோடு காட்டுக்கு வந்தவனிடமுமா சோதனை?" என்று பிரஹதஸ்வரிடம் கேட்டான் தர்மன்.

"அது தானப்பா கலியின் தன்மை...! நெருப் பென் றால் தன்னுள் விழுவதை எல்லாம் எரித்து சாம்பலாக்க வேண்டும். மழை வெள்ளம் என்றால் வழியில் இருப் பதை எல்லாம் அள்ளி எடுத்துக் கொண்டு ஓடியாக வேண்டும். அதுபோல, கலிபுருஷன் என்றால், அவன் இறுதி வரை துன்பம் தந்து கொண்டே இருக்க வேண் டும் என்பதே அவனுக்கான விதிப்பாடு..."

'அப்படியானால், கலிபுருஷன் வசம் ஒருவன் சிக்கினால், கடைத்தேறவே வழியில்லையா... அவர்கள் நாசமாகித் தான் தீர வேண்டுமா?"

"ஆம்... யானை வாய் அகப்பட்ட கரும்பு சாற்றினை இழந்து, சக்கையாகிப் பின் அதுவும் சாணமாவது போன்றது தான் கலி மாயாவின் ஆற்றலும்..."

"என்ன மகரிஷி இப்படிச் சொல்கிறீர்கள்? "நளப்பிரபு ஒரு பாவமும் செய்யாத நிலையில், அவரைக் கலிபுருஷன் ஆட்டி வைப்பது ஒருபுறம் இருக்கட்டும். இதை எல்லாம் வேடிக்கை பார்ப்பவரா இந்த கலி புருஷனையே படைத்த அந்த பரமாத்மாவான மாதவர்?" என்று கேட்டான் நகுலன்.

"நல்ல கேள்வி கேட்டாய் நகுலா... இது போன்ற சோதனை எல்லோருக்கும் வருவதில்லை. சிலருக்கே இது போல நிகழும். முடிவில் என்னாகிறது என்பது தான் இதில் முக்கியம்..."

"முடிவு என்னாயிற்று?"

"அதை அறிய நளனின் கதையை நான் தொடர்கிறேன். தர்மா... இப்போதே உனக்கு நேரிட்ட இழப்பெல்லாம் பெரிய இழப்பே அல்ல என்ற எண்ணம் தோன்றியிருக்கும் என எண்ணுகிறேன்."

"இல்லை மகரிஷி! நளன் இத்தனை துன்பத்திற்கு இடையிலும், தன் மனைவியான தமயந்தியை சூதாட்டத்தில் பணயம் வைக்கவில்லை.

"ஆனால், நானோ பணயம் வைத்து விட்டேனே...?"

"உண்மை தான்! ஆனால், பணயம் வைத்திருந்தால் கூட பரவாயில்லை என்று நினைக்கும்படி, அவன் தமயந்தி

யைப் பொறுத்த வரையில் நடந்து கொண்டது தான் பெரிய கொடுமை."

"அது என்ன?"

நளன் அந்த பொன் சிறகு கொண்ட பறவைகளை ஒரு சேர பிடிக்க விரும்பினான். அபூர்வமான அவற்றை, நக ரத்திற்கு சென்று விற்றால் பணம் கிடைக்கும். அதன் மூலம் பசியாறவும், துணிமணி வாங்கவும் உதவியாக இருக்கும் என கருதியவன் அந்த பறவைகளைப் பிடிக்க, உடுத்தியிருந்த உத்தரியம் என்னும் வேட்டியை அவிழ்த்தான். அந்த நொடியே நிர்வாணமாகி விட்டான். அப்போது தமயந்தி தாகம் தணிய தடாகத்திற்குச் சென் றிருந்தாள்.நளன் வேட்டியை வலை போல வீசி, பறவை களைப் பிடிக்க முயன்றான். ஆனால், அவை ஒன்றாகக் கூடி அந்த வேட்டியுடன் வானில் ஏறிப் பறக்கத் தொடங் கின.

நளன் திகைத்து நிற்க, தமயந்தி ஆடையில்லாமல் நின் றவனைக் கண்டு மனம் பதைத்தாள். பின் புடவையின் முந்தியைக் கிழித்துக் கொடுத்தாள். அதையே துண்டு போல அவனும் கட்டிக் கொண்டான். பின் அங்கிருந்து இருவரும் நடந்தனர். ஓரிடத்தில், பல வழி பாதைகள் குறுக்கிட்டன. ஒன்று அவந்தி நகருக்கும், இன்னொன்று ருஷவான் மலை வழியாக தென்னாட்டிற்கும், மூன்றா வது விதர்ப்ப தேசத்திற்கும், நான்காவது கோசல தேசம் நோக்கியும் செல்வதாக இருந்தன.

அந்த கூட்டுச் சந்திப்பில் நின்ற நளன், ஆண்டியான தன்னோடு தமயந்தி வருவதை விரும்பவில்லை.

"அன்பே! நீ இந்த பாதை வழியே உன் தேசத்திற்குச் செல். உன் தந்தை ஒரு குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்வார். என்னோடு வந்து கஷ்டப்படாதே. விதியின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும் எனக்கு, ஆடை கூட சொந்தமில்லை. விதிப்பாவை எட்டுத் திக்கும் என்னை உதைத்து உருட்டி விளையாடுகிறாள். நீயாவது சந்தோ ஷமாயிரு," என்றான்.

ஆனால், தமயந்தி அதை ஏற்க மறுத்தாள்.

"பிரபோ... என்னை விலக்கி வைக்க, எப்படி உங்க ளால் முடிகிறது? மனைவி என்பவள் இன்ப, துன்பத்தில் பங்கு கொள்பவள்தானே? அதிலும், இப்போதிருக்கும் நிலையில், நான் பிரிந்து சென்றால் என்னை விட ஒரு பெரும்பாவி யாருமில்லை. மறந்தும் இப்படி பேசாதீர்கள். அதைத் தாங்கும் சக்தி எனக்கில்லை," என்றாள்.

நளனால் ஏதும் பேச முடியவில்லை. மனைவி அருகில் இருக்கிறாள் என்ற ஆறுதலும் கூட அவனுக்கு இருக்க கூடாது என்பது தான் கலிபுருஷனின் விருப்பம். அதை நிறைவேற்றும் நேரமும் வந்தது.அன்று இரவு ஒரு காட் டுக்குள் மரத்தடியில் இருவரும் படுத்திருந்தனர். நள் ளிரவில் விழித்த நளன், சந்திர ஒளியில் தமயந்தியைக் கண்டான். அவள் தேவதை போலத் தென்பட்டாள். கண்ணீரோடு பார்த்த அவன், மனதிற்குள் மன்னிப்பு கேட்டவனாக, நடுக்காட்டில் அவளை விட்டுப் பிரிந் தான். பொழுது புலர்ந்தது. தமயந்தி நளனைக் காணா மல் மனம் துடித்தாள்.

"எங்கே போய் விட்டீர்கள்?" என்று காடு முழுவதும் தேடி னாள். நளனைக் காணவில்லை. மாறாக, அவளை ஒரு

மலைப்பாம்பு வெறித்துப் பார்த்தது. கோரப் பசியோடு கிடந்த அதற்கு, தமயந்தி அறுசுவை அன்னமாகத் தெரிந்தாள். அவளும் அறியாதபடி, வாலினால் வளைத்துப் பிடித்தது. பின், அவளை விழுங்கவும் முயன்றது. பாம்பின் வாயில் சிக்கிய அவள் அலறினாள்.

அப்போதும் உயிர் விடுவதை எண்ணிக் கவலைப் படாமல், "பிரபோ... தங்களைப் பிரிந்த நான் இந்த உலகையும் பிரியும் நேரம் வந்து விட்டதே! உங்களுக்கு உதவி செய்ய முடியாமல் போனதே... என்று வருந்தினாள். அப்போது கையில் வாளோடு வந்து கொண்டிருந்த வேடன் ஒருவன், பாம்பு தமயந்தியை விழுங்குவதைக் கண்டு விக்கித்துப் போனான்.

அந்த வேடன், தமயந்தியை விழுங்க முனைந்த பாம்பை, தன் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி கொன்றான். தமயந்தியும் பிழைத்தாள். அவளது அழகைக் கண்ட வேடன் மயங்கிப் போனான். அவன் பார்வையே தவறாக இருப்பதை தமயந்தி புரிந்து கொண்டாள்.

"வேடுவனே! என்னை அப்படி பார்க்காதே... என்னைக் காப்பாற்றிய உனக்கு கோடி வணக்கங்கள். எனக்கு முடிந்தால் அபயம் கொடு. இல்லாவிட்டால் விலகிச் செல். மாறாக, தவறான எண்ணத்துடன் பார்க்காதே... இது பாவம்!" என்றாள். அவன் காதில் அவளின் பேச்சு விழவே இல்லை.

தமயந்தி கைகளைக் கூப்பியபடி, "வேடுவனே! நீ எனக்கு உயிர் தந்து தந்தையாகி விட்டவன். உன் மகள் போன்ற என்னிடம் தவறாக நடக்காதே..." என்று அவனுக்கு தர்மத்தை எடுத்துச் சொன்னாள்.

ஆனால் அவன் அதைக் கேட்கவே இல்லை. அவளை அணைக்க முயன்றான்.

இதுவரை பரிதவிப்புடன் பேசிய தமயந்தி, அப்ப டியே ஆவேசம் கொண்டாள். "அடேய் நில்! என்னை யாரென்று நினைத்தாய்? தேவர்கள் என்னை தேவியாக் கக் கொள்ள எண்ணி வந்த போதும், மனதில் வரித்த மணாளனையே கணவனாக எண்ணி அவரையே மணம் செய்து கொண்டவள். அவரையன்றி வேறொரு வரை கற்பனையிலும் - நான் எண்ணியதில்லை. தேவ னுக்கு ஒப்பான நளச்சக்கரவர்த்தியின் அப்பழுக்கு இல் லாத பதிவிரதை என்பது சத்தியமானால், எந்த காமாக் னியால் என்னைத் தீண்ட எண்ணுகிறாயோ, அதனா லேயே நீ அழிந்து போவாய்" என்று சபித்தாள்.

அங்கே அதிசயம் நிகழத் தொடங்கியது. அந்த வேடன் மேல் விண்ணில் இருந்து ஒரு மின்னல் அவன் மீது பாய்ந்தது. - அதில் அவன் கருகிச் சாம்பலா கிப் போனான். தமயந்தி அடுத்த நொடி ஆகாயத்தைப் பார்த்து வணங்கியபடி, "தர்மதேவனுக்கு என் நன்றிகள்! இந்த வனத்தில் எனக்கு நீங்கள் என்பதியை அடை யும் வழியையும் காட்டுவீர்களாக..." என்று பிரார்த்தனை செய்த படி நடந்தாள்.

அதுவோ மிகக் கொடிய வனம். கல்லும், முள்ளும் அன் னம் போன்ற தமயந்தியின் கால்களை வருத்தின. அவள் ஆடை பல இடங்களில் கிழிந்திருந்தது. நல்ல வேளை யாக, சேதி நாட்டுக்குப் போகும் வணிகர்கள் கூட்ட மாகச் சென்றனர். அவர்களோடு சேர்ந்து கொண்டாள். நளன் தன் கண்ணில் படமாட்டானா என்று தத்தளித் தாள். அந்த வணிகர்கள் ஒரு காட்டாற்றின் கரையில்

இரவுப் பொழுதைக் கழிக்க, கூடாரம் அமைத்து தங்கினர். ஆனால், அன்று இரவு அவர்களுக்கு யானை வடிவில் சோதனை காத்திருந்தது. கூட்டமாக வந்த யானைகள் வணிகர்களின் கூடாரத்தைக் கிழித்து வீசியதோடு, அவர்களை மிதித்துக் கொன்றது. சிலர் தப்பி ஓடினர். தமயந்தியும் ஓடினாள்.

ஓரிடத்தில் தபோவனம் அவளுக்குத் தென்பட்டது. அதில் மகரிஷிகள் தவம் செய்து கொண்டிருந்தனர். தமயந்திக்கு அடைக்கலம் கொடுத்து, உண்பதற்கு கனிகளைக் கொடுத்தனர். காலமெல்லாம் இவர்களோடு இருக்கலாமா என்று எண்ணினாள். காரணம்...? அந்த தபோவனத்தின் அழகு. ஒருபுறம் பூத்துக் குலுங்கும் வாசமலர்கள், மறுபுறம்பழமரங்கள், இன்னொருபுறம் அன்னங்கள் தவழும் பொய்கை, மயில்கள், மான்கள் கூடித் திரியும் பசுமைப் புல்வெளி...

அந்த நாளில் தமயந்தி, அரண்மனையின் அந்தப்புரத்தில் வாழ்ந்த காலம் நினைவுக்கு வந்தது. இந்நிலையில், அங்குள்ள மகரிஷிகள் அவள் யார் என்பதை கேட்டுத் தெரிந்து கொண்டு ஆசியளித்தனர்.

"அம்மா! இது சோதனையான காலம் விரைவில் இந்த காலம் கழிந்து நல்ல காலம் பிறக்கும். உன் கணவனோடு சேர்ந்து நல்வாழ்வு பெறுவாய். நளன் மீண்டும் மன்னராக ஆட்சி நடத்துவான். நம்பிக்கையோடு இரு," என்றனர்.

பொழுது புலர்ந்தது. வனத்தில் தமயந்தி மட்டும் ஓரிடத்தில் கிடக்க, தபோவனம், மகரிஷிகள், மலர்ச்செடிகள் அனைத்தும் காணாமல் போயிருந்தன. 'தான் கண்டது

கனவு என தெரிந்து கொண்ட தமயந்தி அங்கிருந்து நடந்தாள். கண்டது கனவு என்றாலும், எல்லாம் நன்மை யாக முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஒருவழியாக அவள் சேதி நாட்டை அடைந்தாள். வளம் மிகுந்த அந்த நாட்டில், எல்லோரும் நல்ல ஆடை உடுத்தி மங்களகர மாக இருக்க, தமயந்தி மட்டும் ஆடை கிழிந்த கோலத் தில் பைத்தியம் போல இருந்தாள். தெருவில் விளையா டும் பிள்ளைகள் கூட அவளைச் சுற்றி வந்து கற்களை வீசி துன்புறுத்தத் தொடங்கினர்.

தமயந்தி இதைச் சற்றும் எதிர் பார்க்கவில்லை. பிரஹஸ் தவர் நளோபாக்யானத்தை இப்படி ஒரு இக்கட்டான கட்டத்தில் விட்டு விட்டு, பாண்டவர்களைப் பார்த்தார். திரவுபதியின் கண்களில் கண்ணீர் பீறிட்டு வந்தது. மற்ற வர்கள் முகத்திலும் கலக்கம் தெரிந்தது.

தர்மன் திரவுபதியின் கண்ணீரைத் துடைத்தவனாக, "அழாதே! குலமகள் அழக்கூடாது. எதையும் தாங்க வேண்டும்!" என்றான்.

"தமயந்தியின் நிலை என்னை கலக்கி விட்டது பிரபு! நளனை விரும்பி மணந்ததற்கு 12 ஆண்டுக்கு பிறகு, அவளுக்கு இப்படி ஒரு இழிவா? கலிபுருஷன் என்பவன் இத்தனை இதயம் இல்லாதவனா... ச்சே!" என்று அவ ளிடம் சலிப்பும் வெளிப்பட்டது.

"முனிவரே! நளோபாக்யானத்தை நீங்கள் பாதி கூட கூற வில்லை. ஆனால், இதற்கே நாங்கள் கலங்கி விட்டோம். இன்னமும் சம்பவங்கள் உள்ளதா? இல்லை. தமயந்தி சேதிநாட்டில் கண்டு கொண்டாளா?" என்று கேட்டான் பீமன்.

"பீமா... இனி தான் பெரிய சோதனை நடந்தது. பாவம் நளன். தமயந்தியைப் பொறுத்தவரையில் அவன் நினைத்தது ஒன்று... நடந்தது வேறொன்று..."

"வேகமாக கூறுங்கள். உருக்கமான நள வரலாறு எங்களுக்கு ஒரு பாடமாகட்டும்..." என்றான்

நகுலன். "சொல்கிறேன்... சேதி நாட்டு வீதியில், தமயந்திக்கு தற்காலிகமான ஒரு விடிவு காலம் பிறந்தது.

சேதி நாட்டு மன்னன் சுபாகுவின் மனைவி பல்லக்கில் வந்து கொண்டிருந்தாள். அவளின் பார்வை தமயந்தி மீது பட்டது. தமயந்தியும் ஒரு பட்டத்தரசி தானே? அதற்கான லட்சணம் இல்லாமல் போகுமா என்ன? ராணியின் மனம் தமயந்தியைக் கண்டு உருகியது. தன்னுடன் அழைத்துச் சென்று நடந்ததையெல்லாம் விசாரித்தாள். ஆனால், தமயந்தி ராணியிடம் தான் விதர்ப்ப நாட்டு மன்னன் பீமனின் மகள் என்றோ, நிடத நாட்டு மன்னன் நளனின் மனைவி என்றோ உண்மையைச் சொல்லவில்லை.

கணவனைத் தேடி அலையும் அபலை என்று மட்டும் கூறினாள். அவளது தன்மானம், அங்கே முழுமையாக அறிமுகம் செய்து கொள்ளத் தடை செய்தது. ராணி தமயந்தியை அடைக்கலமாக ஏற்றதோடு, தன் மகள் சுனந்தாவின் தோழியாகவும் இருக்கும்படி கூறினாள். தமயந்தியும் சம்மதித்தாள். இருந்தாலும், சில நிபந்தனைகளை விதித்தாள். அவை சற்று விசித்திரமானவை...!

ஜமாதாவிடம் தமயந்தி விதித்த நிபந்தனைகள் அவள் எப்படிப்பட்டவள் என்பதைக் காட்டுவதாக இருந்தது.

"எக்காரணம் கொண்டும் எச்சிலை உண்ண மாட்டேன். எவருடைய கால்களையும் கழுவிடும் தாதிப்பணியை செய்ய மாட்டேன். மூன்றாவதாக அந்தணர்கள் அல்லாத ஆண்மக்கள்எவரோடும் நான் பேச மாட்டேன்" என்றாள்.

இந்த நிபந்தனைகள் ராஜமாதாவை சற்று சிந்திக்க வைத்தன. உயர்ந்த குலத்தில் பிறந்த பெண்கள் தான், இப்படிப்பட்ட கோட்பாடுகளை கொண்டிருப்பார்கள். ஒருவேளை இவளும் உயர்குடியில் பிறந்தவளாக இருப்பாளோ என்று எண்ணினாள். அதேவேளை தமயந்தி தன் நிபந்தனைகள் இன்னமும் முடியவில்லை என்பது போலத் தொடர்ந்தாள்.

"ராஜமாதாவே! நான் இப்படி நிபந்தனை விதிப்பதால், என்னை செருக்குள்ளவள் என்று எண்ணி விடாதீர்கள். உண்மையில் நானொரு துர்பாக்கியசாலி. கணவனைத் தொலைத்து விட்டு அலைபவள். என் சிந்தை முழுக்க அவரைப் பற்றிய எண்ணங்களே நிரம்பியுள்ளன. எனவே, நான் பிற ஆடவர்களிடம் எக்காரணம் கொண்டும் பேச விரும்பவில்லை. நான் இவ்வாறு இருப்பது புரியாமல், யாராவது என்னிடம் பேச முற்பட்டு, தகாத முறையில் நடக்க முனைந்தால் தண்டனை நிச்சயம். அந்தணர்களிடம் மட்டும் நான் பேசுவேன். காரணம், என் கணவரைக் கண்டுபிடிக்க அவர்களிடமே உதவி கேட்க எண்ணி இருக்கிறேன். மற்றபடி பொன், பொருள் மீதெல்லாம் சிறிதும் ஆசையில்லை."

இவ்வாறு சொன்ன தமயந்தியை, ராஜமாதா இம்முறை புரிந்து கொண்டாள். அதே நேரம், வாழ்நாளில் இதற்கு

முன் எப்போதே தமயந்தியைப் பார்த்தது போலவும் ஒரு உள்ளுணர்வு!

தன் மகள் சுனந்தாவுக்கு தமயந்தி உற்ற தோழியாகத் திகழ்வாள் என்றும் அவள் நம்பினாள். எது எப்படியோ...?

தமயந்தி சேதி நாட்டின் அடைக்கல உயிர் என்றாகி விட்டாள். இதற்கிடையில், தமயந்தியை பிரிந்து சென்ற நளன், காட்டுவழியே நடந்து கொண்டிருந்தான். உதவி கோரி ஒரு அவலக்குரல் காதில் விழுந்தது.

"ஐயோ... என்னைக் காப்பாற்ற ஒருவரும் இல்லையா? வாருங்களேன்," என்றது.

நளன் அதிர்ந்தான்.சப்தம் கேட்ட திசையைப் பார்த்தான். சற்று தொலைவில் திகுதிகு என காட்டுத்தீ! தீக்குள் இருந்து தான் அவலக்குரல்... நளன் முன்பே இந்திரன், எமன், அக்னி, வருணன் ஆகியோரிடம் பெற்றிருந்த வரங்களில், தீயால் அவனுக்கு ஏதும் நேராது என்பதும் ஒன்று. எனவே, அச்சமின்றி அந்த தீக்குள் சென்று பார்த்தான். அதன் நடுவில் ஒரு பெரிய பாம்பு தான், மனிதக்குரலில் கத்திக் கொண்டிருந்தது. நளன் ஆச்சரியப்பட்டான்.

அது இரையாக எதையும் விழுங்கக் கூடியது என்பது தெரிந்து கூட, அதைக் காப்பாற்றவே எண்ணினான். அதன் வாலைப்பிடித்து இழுத்தான். அப்போது அதன் வடிவம் கையில் பிடிக்க முடிந்த அளவுக்கு சிறிதானது. அதன்பின், அதைக் காப்பாற்றுவது நளனுக்கு சுலபமாகி விட்டது.

அந்த பாம்பு நன்றியுடன், "என்னைக் காப்பாற்றிய உனக்கு என் அனந்த கோடி வணக்கங்கள். நிச்சயம் நீ நளமகாராஜா வாகத் தான் இருக்க வேண்டும். உண்மை தானே?" என்று கேட்டது.

நளனும் ஆச்சரியமுடன் ஆமோதித்தான்.

"நான் தான் நளன் என்று உனக்கு எப்படித் தெரியும்? நீ பேசுவது எனக்கு வியப்பை அளிக்கிறது" என்றான்.

"அரசே... என் பெயர் கார்கோடன். நாகலோகம் என் இருப்பிடம். நாரத மகரிஷியின் சாபத்தால் இந்த வனத் தில் அசையக்கூட சக்தியற்றவனாக படுத்துக் கிடந் தேன். நளன் என்னும் அரசன் எப்போது தீண்டுகி றானோ அப்போது பழைய வடிவம், இழந்த சக்தி இரண் டும் கிடைக்கும் என்று நாரதரே கூறியிருக்கிறார். அத னால் நீயே நளன் என்பதை அறிந்து கொண்டேன்," என்றது பாம்பு.

நளனிடம் வியப்பு... கூடவே பெருமூச்சு.

"எதற்காய் இந்த பெருமூச்சு?"

"என் விதியை எண்ணினேன். தானாகப் பெருமூச்சு வந்து விட்டது. நானே ஒரு பாவி... நாடு, நகரம், வீடு, மனைவி, மக்கள் என்று சகலரையும் இழந்த நிலையில் வனம் புகுந்த ஒருவன். ஆனால், இந்த நிலையிலும் என் னால் உனக்கொரு நன்மை ஏற்பட்டது தான் விந்தை...! அதை எண்ணியதும் பெருமூச்சு வந்து விட்டது கார் கோடகா..." என்றான் நளன்.

நளனைக் கூர்மையாகப் பார்த்தான் கார்கோடகன்.

"என்ன அப்படி பார்க்கிறாய்?"

"இத்தனை விரக்திக்கு காரணமான அந்த கலிபுருஷனை எண்ணியே அப்படிப்பார்த்தேன். கோரமானவன் அவன் நீ அவன் வசப்பட்டது கொடுமையானது. ஆயினும், இதிலிருந்து விடுபட வாய்ப்பு இருப்பதாகவே தோன்றுகிறது..."

"என்ன... கலியிடமிருந்து நான் விடைபெற வாய்ப்பு உள்ளதா?"

"ஆம்... சாபம் என்று ஒன்று இருக்க முடியுமானால், விமோசனம் என்ற ஒன்றும் இருந்து தானே தீர வேண்டும் என்றால் அதற்கான வழியைக் கூறு முதலில்..."

"அதற்கு ஒரே வழி தான் உள்ளது. நீ கோர வடிவெடுத்தால் உன்னைக் காண எல்லோரும் தயங்குவர். எனவே, நீ கோர வடிவமாக முதலில் மாறி விடு அடுத்து விமோசனத்திற்கான வழியை நான் கூறுகிறேன். முன்னதாக, நீ என்னைப் பார்த்து 'கடி' என்று சொல்" என்றது கார்கோடகன். நான் தயங்கினான்.

"தயங்காதே... சொல்..."

"அப்படி சொன்னால் நீ என்னைக் கடிப்பாயா?"

"ஆம். பிறரை நானாக ஒருபோதும் கடிக்க மாட்டேன். சொன்னால் தான் கடிப்பேன். இது என்னுடைய தர்மம்..."

"எதற்காக என்னைக் கடிக்க விரும்புகிறாய்... அதனால், என் உயிர் போய் விடாதா?"

"போகாது. அது மட்டுமல்ல... என் விஷத்தால் உனக்கு தீங்கும் நேராது"

"உண்மையாகவா?"

"ஆம்... காலம் தாழ்த்தாதே..."

"சரி... என்னைக் கடி..."

நளன் அப்படிச் சொன்னதும் கார்கோடகன் தீண்டியது. நளன் உடம்பு கருநிறமாக மாறியது.

அப்போது ஆடை ஒன்றை நளனுக்கு அளித்த பாம்பு, "நளனே... உன் தோற்றம் கண்டு வருந்தாதே! அதுவே உனக்கு கவசம் போலாகும். அதேசமயம், என்னை நினைத்து இந்த ஆடையை அணிந்தால், பழைய வடிவம் வந்து விடும். அயோத்தி நகருக்குச் சென்று, சூதாடுவதில் வல்லவனான ருதுபர்ணனிடம் சூதாட்ட வித்தையைக் கற்றுக் கொள். அதைக் கொண்டு இழந்த செல்வத்தை அடைவாயாக. எல்லாம் உன் மனம் போல நடந்தேறும்," என்று ஆசியளித்தது. நளனும் அயோத்தியில் ருதுபர்ணனின் குதிரை லாயத் தலைவனாகி, பின் தேர் சாரதியானான். இதற்கிடையில், தமயந்தியின் தந்தை பீமராஜன் மகளைக் கண்டறியும் பணியை அந்தணர்களிடம் ஒப்படைத்தான். அவர்களும் கூட்டமாகப் புறப்பட்டனர். நளதமயந்தி பற்றிய தகவலோடு வந்தால் அவர்களுக்கு ஒரு கிராமமும், ஆயிரம் பசுக்களும் பரிசாகக் காத்திருந்தது.

பீமராஜனால் அனுப்பப்பட்ட அந்தணர்களில் ஒருவர் 'சுதேவன்'. இவர் சேதி நாட்டு அரண்மனைச் சடங்கில் பங்கேற்க வந்த போது, அரசன் மகளான சுநந்தாவோடு

தமயந்தி இருப்பதைக் கண்டார். தமயந்தி தன்னை அடையாளம் தெரியாத அளவு வைத்துக் கொண்டிருந்த போதும், சுதேவன் அவளை இனம் கண்டு விசாரிக்கத் தொடங்கினார்.

அங்கிருந்த பணிப்பெண்ணும், 'அவள் சமீபத்தில் அடைக்கலம் புகுந்தவள்' என்று கூற, சுதேவனுக்குள் நம்பிக்கை பலமானது. தமயந்தியிடம் எதிர்பாராத விதமாக, 'அம்மா தமயந்தி! நலமாக இருக்கிறாயா?' என்று கேட்டார். தமயந்தியும் தன்னை அறியாமல், 'நலமாக உள்ளேன்' என்று கூறிய பிறகே, சுதேவன் தன்னை உணர்ந்து கொண்டதை அறிந்தாள். சுதேவன் தமயந்தி என்றழைத்தது இளவரசி சுனந்தா காதிலும் விழுந்தது.

"அம்மா... இது என்ன கோலம்... பிறப்பால் நீ ஒரு ராஜ குமாரி. நிடத நாட்டுக்கே அரசகுமாரி. அப்படிப்பட்ட நீயா பணிப்பெண்ணாக இங்கு இருப்பது?" என்று அவர் கேட்கவும் சுனந்தா விக்கித்துப் போனாள்.

"தோழி... நீ ஒரு ராஜகுமாரியா... பெயர் தமயந்தியா! அப்படியானால், நீ எனக்கு சகோதரி முறை" என்றாள் சுனந்தா.

தமயந்திக்கு ஆச்சரியம்... பிறகு தான் சுனந்தாவின் தாயும், தமயந்தியின் தாயும் சகோதரிகள் என்பது தெரிந்தது. ராஜ மாதாவும் அங்கு வந்து தமயந்தி யார் என்பதை தெரிந்து கொண்டாள்.

"தமயந்தி... நானும், உன் தாயும் தசார்ண தேசத்து அரசனான 'சுதாமா' என்பவரின் மகள்கள். நான் என் சகோதரியுடன் இருக்கும் போது தான் நீ பிறந்தாய். நீ

பிறந்தபோது, நெற்றி மேல் ஒரு சிவந்த மச்சம் இருந்தது" என்று கூறியவளாக தமயந்தியின் நெற்றியில் மச்சத்தைப் பார்த்தாள். இதனால், ராஜமாதா மட்டுமல்ல, தமயந்தியிடமும் எல்லையில்லாத மகிழ்ச்சி.

ராஜமாதாவிடம், தமயந்தி தன்னைப் பற்றி ஏன் முன்பே கூறவில்லை என்றும் கேள்வி.

"மாதா... நான் யார் என்று கூற நேரும் போது, என் பதியான நளராஜன் குறித்து நீங்கள் வருத்தப்படுவீர்கள். அதனால், என்னைப் பற்றி மறைக்க நேர்ந்தது" என்று கூறவும் ராஜமாதா சமாதானம் ஆனாள். அதன் பிறகு சுதேவனுடன் தமயந்தி விதர்ப்ப நாட்டுக்கு அனுப்பப் பட்டாள். சுதேவன் தமயந்தி குறித்த தகவலோடு தான் வருவார் என பீமராஜன் கருதிக் கொண்டிருந்தான். ஆனால், தமயந்தியையே அழைத்து வந்ததில் இன்ப அதிர்ச்சி! ஆயிரம் பசுக்கள், பத்து கிராமங்கள், நகைகள் எல்லாம் தானமாகக் கொடுத்தான்.

இந்த நேரத்தில், காட்டில் நளனோடு இருந்த போது கிழிந்து போன புடவையை எடுத்து அணிந்து கொண்டவள், தன் தந்தையிடம், "என் கணவரைக் கண்டுபிடித்த பின்னரே தாங்கள் எதையும் செய்ய வேண்டும்" என்று அன்புக் கட்டளை இட்டாள்.

"அதற்காக நீ ஏனம்மா இந்த புடவையை உடுத்தினாய்?" என்று பீமராஜன் கேட்க, "இது தானப்பா அவரை நான் பிரியும் போது அணிந்திருந்த ஆடை... இதன் ஒரு பாகத்தைக் கிழித்து, அவர் அணிந்த கொண்ட நிலையில் தான் அவர் என்னை விட்டு விலகினார். ஒரு சாம்ராஜ்ய அதிபதியாக வாழ்ந்த என் கணவர் சூதாட்

டத்தில் எல்லாம் இழந்த நிலையில், யாரும் அறியாத படி மாறுவேடத்தில் தான் இருப்பார். இது என் யூகம் தான். இப்படி ஒரு நிலையில் அவரைத் தேடிப் பிடிப்பது சிரமமான செயல். அவரைக் காணும் வரை இப்படியே இருக்க விரும்புகிறேன். அவரைத் தேடிச் செல்வோர் என் நிலையை எடுத்துக் கூறினால் கூட போதும். இரக் கம் கொண்டு தன்னை வெளிப்படுத்திக் கொள்வார்.

ஒரு கூட்டத்தைக் காண நேர்ந்தால் கூட அவர்களிடம், ' ஒரு பெண் உறங்கும் போது, ஆடையில் பாதியைக் கிழித்து அணிந்து கொண்டு கொடிய காட்டில் தவிக்க விட்டுச் சென்ற உத்தமர் இங்கே யார்? இப்போதும் அந்த அபலை இப்போதும்அந்த ஆடையுடன் இருக்கிறாள்' என்று கூறினால் போதும். அவர் என்னைப் பற்றிக் கேட் பார். அதன் மூலம் அவரை நாம் கண்டறிந்து விடலாம்," என்றாள்.

உடனடியாக சுதேவன் நளனையும் கண்டுபிடிக்கப் புறப் பட்டார். நளபுராணத்தை இத்துடன் நிறுத்திய பிரஹதஸ் வர், திரவுபதியைப் பார்த்தார். அவள் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

"பாஞ்சாலி... தமயந்தியின் துன்பம் உன்னை பாதித்து விட்டதா?" என்று கேட்டார்.

"ஆம் குருநாதா!பாவம் தமயந்தி... நீங்கள் சொன்னது போல, என் துன்பம் ஒரு விதம். தமயந்திக்கு வேறு விதம். அவள் பாம்பின் வாய்ப்பட்ட போதே நான் பதைத்துப் போனேன். பூவினும் மென்மையான தமயந்தியை விதி இப்படியா சோதிக்கும்?" என்று திருப்பிக் கேட்டாள்.

"அங்கே தான் பாஞ்சாலி, நீ மானுடப் பிறப்பின் பாவ புண்ணியத்தை எண்ணிப் பார்க்க வேண்டும் "

"அப்படியானால், தீவினை தான் இது போன்ற துன்பங்களுக்குக் காரணமா?"

"ஒரு வார்த்தையில் சொல்வதானால் அது தான் உண்மை. அதே வேளையில், நற்செயல்கூட சோதனை என்னும் பெயரில் துன்பம் தருகிறது "

"அது சரியல்லவே."

"தங்கத்தைச் சுட்டு உருக்காமல் ஆபரணம் செய்ய முடியுமா?"

"பொன்னும் பெண்ணும் ஒன்றா?"

"பொன்னை விட பெண் பல படிகள் மேலானவள் பாஞ்சாலி..."

"எப்படி?"

"பொன் பேசாது. கருணை காட்டாது. ஆனால் பெண் அப்படியா?"

"கவிதையாக பதில் கூறி விட்டீர்கள். இதனால், மனம் சமாதானம் அடையாது முனிவரே..."

"தொடர்ந்து என்னாயிற்று என்று கேள்! உன் மனம் சமாதானம் அடைவதுடன் ஞானம் பெறும் "

"நல்லது... தொடருங்கள்."

பாஞ்சாலி கூறிட பிரஹதஸ்வர் நளசரிதத்தை தொடர்ந்தார். அயோத்தி நாட்டில் ருதுபர்ணனின் குதிரைக் கூட்டத்துக்குத் தலைவனாகவும், ருசியாக சமைத்துத் தருபவனாகவும் இருந்தான் நளன். அவனது துணையின்றி ருதுபர்ணன் எங்கும் செல்வதில்லை. இப்படி ஒரு நிலையில், சுதேவன் அயோத்தி வந்து சேர்ந்தார். அரண்மனையில், ருதுபர்ணனை சந்தித்தார். தான் நளனைத் தேடி வந்திருப்பதைக்கூறிட, அரண்மனையே ஆச்சரியப்பட்டது. நளன் சும்மாயிருப்பானா? தமயந்தி எதிர்பார்த்தது போலவே, அவன் சுதேவனை தனிமையில் சந்தித்தான்.

அந்தணர் சுதேவரை நளன் தனியே சந்தித்தான். அவனை சுதேவரால் அடையாளம் காண முடியவில்லை. இருப்பினும், அவன் பேச்சைக் கேட்டு மனம் உருகினார்.

"அந்தணரே! ஒரு குலப் பெண்ணின் மனக்குமுறலை நான் உங்கள் வாயிலாக அறிந்தேன். கதியற்ற நிலையிலும், தன் கணவன் மீது கோபம் கொள்ளாது, நம்பிக்கையோடு காத்திருக்கும் அவள் என் மனதை கலங்கச் செய்து விட்டாள். பாவம் அவள் கணவன்...! அவனுக்கு என்ன துன்பமோ? தான் படும் துன்பம் மனைவிக்கு வேண்டாம் என்றே அவன் எண்ணியிருக்க வேண்டும். எது எப்படியோ அவன் விருப்பப்படி அவள் பெற்றோரிடம் நலமாக இருக்கிறாள். ஆனால், பாவம் அவனுக்குத் தான் இன்னும் வேளை வரவில்லை போலும்... விரைவில் நல்ல காலம் பிறக்க வேண்டிக் கொள்கிறேன். நம்பிக்கை இழக்காமல் அவள் இருக்க வேண்டும்" என்றான்.

சுதேவர் அவன் சொன்னதை வார்த்தை மாறாமல் தமயந்தியிடம் சொல்லப் புறப்பட்டு விட்டார். ஏனென் றால், தமயந்தியும் அப்படித் தான் கட்டளை இட்டிருந் தாள். சுதேவர் விதர்ப்ப நாட்டுக்குத் திரும்பினார். அவர் சொன்னதை வைத்தே அவன் தான் நளன் என்பதை தமயந்தி உறுதி செய்தாள். உருவ அமைப்பு விகாரமாக இருப்பது என்பதன் பின்னே தன்னை பாம்பு விழுங்க முற்பட்டது போல் ஏதேனும் நடந்திருக்கலாம் என்று சரி யாக யூகித்தாள். அதன் பின், ஒரு முடிவுக்கு வந்தாள்.

சுதேவரை அழைத்து அவரிடமே தன் முடிவைச் செயல் படுத்த தொடங்கினாள்.

"அந்தணரே! அயோத்தியில் தாங்கள் சந்தித்த விகா ரமானவரின் அரசனான ருதுபர்ணனிடம், விதர்ப்ப தேசத்து அரசன் பீமராஜனின் மகளான தமயந்திக்கு மறு சுயம்வரம் நடைபெற உள்ளது என்று கூறி, அவ ரைப் பங்கேற்கும் படி கூறுங்கள். அவர் எதனால் இப்படி என்று கேட்டால், தமயந்தியின் கணவன் நளன் உயி ரோடு உள்ளானா என்பதே தெரியவில்லை. அதனால், நாளையே தமயந்தி தன் எதிர்கால நலனை உத்தே சித்து மறு மணம் புரிய தயாராகி விட்டாள் என்று கூறுங் கள்," என்றாள்.

இதைக் கேட்ட சுதேவர் அதிர்ந்து போனார்.

'அந்தணரே... இது உண்மையல்ல. நாடகம். ஆனால், இது தான் என்னை வாழ வைக்கப் போகிறது' என்றாள் தமயந்தி. அதற்கு மேல் சுதேவர் நேரத்தை வீணடிக்க வில்லை. உடனேயே புறப்பட்டு விட்டார்.

இதற்கிடையில், லாயத்தில் குதிரைகளை வருடிக் கொண்டிருந்த நளனாகிய பாஹீகனை சேவகர்கள் சிலர் வந்து, 'அரசர் அழைக்கிறார்' என்றனர். அவனும் சென்று அரசரை வணங்கி நின்றான்.

"பாஹீகா... பொழுது விடிந்தால் விதர்ப்ப நாட்டில் தமயந்திக்கு மறுசுயம்வரம். இப்போது தான் எனக்கு அழைப்பு வந்தது. விடிவதற்குள் அவ்வளவு தொலைவுக்கு ரதத்தை உன்னால் செலுத்த முடியுமா?" என்று கேட்டான் அரசன் ருதுபர்ணன். நளனின் இதயத்தை கத்தியால் குத்தியது போலிருந்தது இந்தச் செய்தி.

"அரசே... உண்மையாகவா?" என்றபடி பொங்கிய கண்ணீரை அடக்கியபடி, "நிச்சயமாக... செல்ல முடியும்! அதற்கு நான் பொறுப்பு" என்றான்.

"நல்லது. உடனே ரதம் தயாராகட்டும்" என்றான் அரசன்.

"உத்தரவு அரசே..." என்று விலகிய நளனுக்குள் தமயந்தியின் எண்ணம் புரிந்து விட்டது.

"தமயந்தி உன்னை நானறிவேன்! நீ தீயினும் மேலான ஒளி உடையவள். இப்படி ஒரு நாடகம் நடத்த நான் காரணமாகி விட்டேன். கண்மணி... உன்னைக் காண நிச்சயம் வருவேன் "

என்று மனதிற்குள் கூறிக் கொண்டான். ருதுபர்ணனை ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். நளன் குதிரையின் காதுகளில் 'அஸ்வ மந்திரம்' ஓத அவை விண்ணில் சிட்டாகப் பறந்தன.தரை மேல் சென்ற ரதம் சிறகு முளைத்தது போல விண்ணில் பறந்ததைக் கண்ட ருதுபர்ணன் வியந்தான்.

"பாஹீகா... உன்னைப் போல் ஒரு ரத சாரதியை நான் கண்ட தில்லை. அஸ்வ மந்திரத்தை எனக்கும் கற்றுக் கொடுப்பாயா?" என்று கேட்டான்.

"அரசே... எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், குருதட்சணை பெற்றுக் கொண்டே அதை உபதேசிக்க முடியும் "

"மிக்க மகிழ்ச்சி... நீ எதைக் கேட்டாலும் தருகிறேன்."

'சூதாடுவதில் வல்லவரான நீங்கள், ஒருமுறை கூட அதில் தோற்றதில்லை என்பதை நானறிவேன். எனக்கு அந்த வித்தையை அளிப்பீரா?"

"ஆஹா... தாராளமாக! எனக்குப் பிறகு அது உன் மூல மாக இந்த உலகில் வாழட்டும் "

"குதிரைகளுக்கு ஓய்வு தரும் நேரத்தில் தாங்கள் எனக்கு போதிக்க வேண்டும்."

"அவ்வாறே ஆகட்டும் "

ருதுபர்ணன் சொன்னதும், ரதம் ஒரு தடாகக் கரையில் நின்றது. நளன் அதில் நீராடி வந்தான். ருதுபர்ணனும் அவனுக்கு சூதாட்ட நுட்பங்களை விரிவாக போதித் தான். அது நளன் மனதில் ஆழமாகப் பதிந்தது. நள னைப் பாடாய் படுத்திய கலி புருஷனால், அதற்கு மேல் அவன் உடலில் நீடிக்க முடியவில்லை. அவனை விட்டு விலகினான். தன் இழி நிலைக்கு காரணம் கலிபுரு ஷனே என்ற உண்மை நளனுக்கும் புரிந்தது.

கலிபுருஷன் நளனிடம், "அரசே! தங்கள் பார்வையின் பொருள் புரிகிறது. இதுநாள் வரை தங்களை ஆட்டிப் படைத்தது நானே! என்னால் உங்களுக்குள் அடங்கிக் கிடக்க முடியவில்லை. காரணம் காளிங்கனின் விஷம் மட்டுமல்ல... எனக்கான சூதாட்ட வித்தை என் தயவில் லாமல், உங்களுக்கு வசமாகி விட்டது.

உங்கள் மனைவியின் பதிவிரதா சக்தியும் கூட இதற் குக் காரணம். இனி நான் ஒருபோதும் தீங்கு செய்ய மாட்டேன். உங்களின் வரலாறை எவர் கேட்டாலும் நன்மையே செய்வேன் என்ற வரத்தையும் தருகிறேன். என்னை மன்னியுங்கள். சபித்து விடாதீர்கள்," என்று கெஞ்சினான்.

நளனும் அவனை மன்னிக்க கலிபுருஷன் விலகி அருகி லுள்ள மரத்தைப் பீடிக்க, அது பட்டுப் போய் இலைகள் உதிர்ந்தன.

பிரஹதஸ்வர் நளசரிதத்தை முக்கியமான கட்டத்தில் வந்து நிறுத்தியவராக பாண்டவர்களைப் பார்த்தார்.

பாண்டவர்கள் நளனுக்கு சாபம் நீங்கியதை எண்ணி மகிழ்ந்தனர்.

"அப்பாடா... கலிபுருஷன் விலகினான்! விலகியதோடு, நள் சரிதம் கேட்டவர்க்கு என்னால் துன்பம் நேராது என் றும் வரம் அளித்தது தான் உச்சம். நமக்கெல்லாம் இனி அவனால் துன்பம் நேராது," என்றான் நகுலன்.

"ஆம்... நாம் வனவாசத்தில் இருந்தாலும், குரு பார் வையால் நமக்கு நல்லதே நடக்கிறது. அதனாலேயே, மாமுனிவரிடம் நள்புராணம் கேட்கும் பாக்கியம் கிடைத்

திருக்கிறது. அர்ஜுனனும் அஸ்திரக்கல்வி கற்றுக் கொண்டிருக்கிறான். மொத்தத்தில் எல்லாம் நம் நன் மைக்காகவே," என்று சகாதேவன் ஜோதிட ரீதியாகப் பேசினான்.

"முனிவரே... கலிபுருஷன் விலகிய நிலையில், நளன் என்ன செய்தான்? தமயந்தியோடு எப்படி சேர்ந்தான்? இழந்த நாட்டை திரும்ப பெற்றானா? என்பதையும் கூறுங்கள்..." என்றான் பீமன்.

"அவசியம் கூறுகிறேன்... எந்த ஒரு வரசித்தியுள்ள வர லாற்றையும் ஆதியோடு அந்தமாக கூற வேண்டும். அதி லும் சுபமாக அதை முடித்தால் தான் சொன்ன பலன், கேட்ட பலன் எல்லாம் முழுமையாக கிடைக்கும்," என்ற பிரஹதஸ்வர் தொடர்ந்தார். கலிநீங்கிய நிலையில் நளன், ருதுபர்ணனுடன் தமயந்தியின் தந்தை நாடான குண்டின்புரத்தை அடைந்தான். ரதம் வந்த வேகமும், குதிரைகளின் குளம்படிச் சத்தமும் தமயந்தியின் காதுக ளில் விழவும், அவள் அந்தப்புரத்தில் இருந்து வெளியே வந்து மாடத்தில் நின்றாள். அயோத்தி நாட்டு கொடி பறக்க, ருதுபர்ணன் நிற்பதைக் கண்டாள். அருகில் இருந்த நளன் கருப்பாகவும், குட்டையாகவும் இருந் ததால் அவளால் அடையாளம் காண முடியவில்லை. அதே வேளை, ரதம் வந்த வேகம் நளனை அவளுக்குள் ஞாபகப்படுத்தியது.

கேசினி என்னும் தன் தோழியை அழைத்து, 'ரதத்தில் வந்திருப்பது யார்?' என அறிய அனுப்பி வைத்தாள்.ரு துபர்ணன் வரவு அரசன் பீமனை ஆச்சரியப்படுத்தியது. ஏனெனில், நளனை அங்கு வரவழைக்க அந்தணரிடம்

தனக்கு சுயம்வரம் என சொல்லி அனுப்பியிருந்த விஷயம் அவனுக்குத் தெரியாது.

இருப்பினும் அவனை வரவேற்று, "தங்களின் எதிர்பாராத வரவு கண்டு மகிழ்ச்சி கொள்கிறேன். தாங்கள் இங்கு வந்ததற்கு காரணங்கள் ஏதேனும் உண்டா?" என்று கேட்டான்.

ருதுபர்ணனுக்கும் குழப்பம். தமயந்திக்கு சுயம்வரம் என்றால், அங்கே ஏற்பாடுகள் பிரமாதமாக இருக்க வேண்டுமே! இங்கோ அமைதியாக இருக்கிறது. எனவே சுயம்வரம் என கேள்விப்பட்டு வந்ததைக் கூறினால், பீமராஜன் தவறாக நினைக்க கூடும் என்று உணர்ந்து சமாளிக்க ஆரம்பித்தான்.

"நான் அஸ்வ மந்திரம் கற்றேன். அதை பரிட்சை செய்து பார்க்க அயோத்தியில் இருந்து வந்தேன். இந்த ரத சாரதி தான் எனக்கு கற்றுத் தந்தவன்," என்றான்.

இதைக் கேட்ட கேசினி, தமயந்தியிடம் இதை தெரிவித்தாள். தமயந்திக்கும் ரதசாரதி மீது சந்தேகம் எழுந்தது. தன் பிள்ளைகளான - இந்திர சேனனையும், இந்திர சேனையையும் அனுப்பினாள். பிள்ளைகளைக் கண்ட நளன் பாசத்தால் அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தான். தூரத்தில் இருந்து கவனித்த தமயந்தியும் அங்கு வர, அவனால் துக்கத்தை அடக்கமுடியவில்லை. 'தமயந்தி' என்று தன்னை மறந்து அழைத்துவிட்டான்.

மகிழ்ச்சி அடைந்த தமயந்தி 'உங்கள் உருவம் ஏன் இப்படி மாறியது' என்று கேட்டாள்.

"எல்லாம் விதி தமயந்தி... கலிபுருஷனால் பீடிக்கப் பட்ட நிலையில், கார்கோடகனால் இப்படி ஆனேன்! உன்னைப் பிரிந்து சென்ற என்னை மன்னித்து விடு! என் தவறுக்கு நீயும், பிள்ளைகளும் பலியாவதை நான் விரும்பவில்லை. அதனால், உங்களைப் பிரிந்தேன். அயோத்தி அரசனின் ரதசாரதியானேன். ஆனால், நீ என்னை மறந்து மறுமணத்துக்கு துணிந்து விட்டாயே... அதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை..." என்றான் நளன்.

"தேவர் தலைவன் இந்திரனுக்கே மயங்காத நானா உங் கள் இடத்தில் இன்னொருவரை வைக்கத் துணிவேன்? உங்களை வரவழைக்க செய்த தந்திரமே இந்த சுயம்வ ரம் என்ற செய்தி," என்றாள் தமயந்தி.

அப்போது வாயுவும், அக்னியும் தோன்றினர்.

" நளச்சக்கரவர்த்தியே... இனியும் நீ கோர வடிவுடன் இருக்கத் தேவையில்லை. நீ இழந்த நாட்டை அடை யும் காலம் வந்து விட்டது. ருதுபர்ணனிடம் கற்ற சூதாடும் வித்தை கை கொடுக்கும்," என்று கூறி மறைந்தனர்.

நளனும் கார்கோடகன் அளித்த ஆடையை அணிந்து கொண்டு இயல்பான வடிவை அடைந்தான். நானும், தமயந்தியும் ஒன்று சேர்ந்ததை அறிந்த பீமராஜனும், ருதுபர்ணனும் அங்கு வந்தனர். பீமராஜன் ஆனந்தக் கண்ணீர் விட்டான்.

ருதுபர்ணனோ, "சக்கரவர்த்தியான தாங்களா என்னி டம் குதிரையோட்டியாக இருந்தது... தங்களிடம் அஸ்வ

வித்தை கற்றுக் கொண்ட நான் உண்மையில் பாக்கிய வான்..." என்று பூரித்தான்.

அதன்பின்பீமராஜன் பொன், பொருள், நூறு யானை கள், ஆயிரம் குதிரைகள், பத்தாயிரம் பசுக்கள் என பெரும் செல்வத்தை அளித்து நளனை நிடத நாட் டுக்கு அனுப்பி வைத்தான். செல்வத்துடன் நளன் வரும் செய்தி, சூதாட்டத்தில் முன்பு வெற்றி பெற்ற புஷ்கரனை எட்டியது. நளனும், தான் சூதாட விரும்பு வதாக அவனுக்கு செய்தி அனுப்பினான். புஷ்கரனும் சம்மதிக்க, இருவரும் சூதாடினர். நளன் வெற்றி பெற்று இழந்த செல்வத்தைப் பெற்றான். சகோதரன்புஷ்கர னுக்கு மன்னிப்பும் அளித்தான். தமயந்தியின் பதிபக் தியை உலகமே அறிந்து கொண்டது. நளன், தமயந்தி இருவரும் இறவாப்புகழ்அடைந்தனர்.

பிரஹதஸ்வர் நளன் வரலாற்றை முடித்தவராக பாண்ட வர்களைப் பார்த்தார். அவர்களிடம் ஒரு நிறைவு.

"தர்மா! இப்போது சொல். நளனை விட நீ மேலான புண் ணிய ஆத்மா தானே?" என்று கேட்க அவனால் மறுக்க முடியவில்லை.

"ஆம் மகரிஷி... தாங்கள் சொல்வது உண்மையே" என் றான்.

"மகரிஷி... நளன் இழந்ததை பெற்றது போலவே, நாங் களும் அடைவோம். மீண்டும் நல்வாழ்வு பெறுவோம்" என்று பீமன் ஆர்வமுடன் கூறினான். பிரஹதஸ்வரும் ஆசியளித்து புறப்பட்டார்.

நளனது வரலாற்றை அறிந்த பாண்டவர்களின் உள்ளத்தில் புத்துணர்வு தோன்றியது. இந்த வேளையில், பிரஹதஸ்வர் சூரிய வம்சத்தில் பிறந்த அரிச்சந்திரன் வரலாற்றையும் கூறினார். சத்தியத்தை காப்பதற்காக அரிச்சந்திரன் பட்ட பாட்டினைக் கூறி முடிக்கவும் பாண்டவர்கள் உள்ளம் உழுத நிலம் போல ஆகி விட்டிருந்தது. அதன் பின், பிரஹதஸ்வர் விடைபெற்றார். பாண்டவர்கள் புதிய தெம்புடன் இந்திரலோகத்தில் பயிற்சி பெற்று வரும் அர்ஜுனனுக்காகக் காத்திருக்கத் தொடங்கினர். இந்த வேளையில், லோமசர் என்ற முனிவர் பாண்டவர்களைச் சந்தித்து, அர்ஜுனன் திரும்பி வர ஐந்து ஆண்டுகள் ஆகும் என்பதால் தீர்த்த யாத்திரை மேற்கொள்ளும்படி கூறினார். இதனால், புண்ணியம் உண்டாகும் என்பதையும் விளக்கினார்.

லோமசரின் அறிவுரையை ஏற்ற தர்மன் தம்பிகளோடும், திரவுபதியோடும் தீர்த்தயாத்திரை மேற்கொண்டான். இந்த யாத்திரை பாண்டவர்களுக்கு பலவித அனுபவங்களை அளித்தது. பாரத பூமியில் தவம் செய்யும் ஆயிரக்கணக்கான முனிவர்களின் தரிசனம் அவர்களுக்கு கிடைத்தது. தீர்த்த யாத்திரை என்னும் நீராடலின் சிறப்பு பற்றி பாண்டவர்கள் அறிந்து கொண்டனர்.

ஐந்து பூதங்களில் புலனாகும் பூதம் மூன்று. அவை நீர், நிலம், நெருப்பு. இதில் நீருக்கே மூன்று குணங்கள். நீருக்குள் நெருப்பின் குணமும் உண்டு. இது உறைந்து பனியான நிலையில் தீயை விட எரிச்சலை ஏற்படுத்தும். அடுத்து காற்று சம்பந்தம் கொண்டே மேகமாகி மழையாகிறது. கூடுதலாக ஓடிப் பரவும் தன்மையோடு, தன்னுள் உயிர்களை பாதுகாக்கக் கூடியது நீர் மட்டுமே! நெருப்பு சர்வத்தையும் நாசப்படுத்தும். மண்ணோ அசைவற்றுக்

கிடக்கும். நீரால் மட்டுமே மண் செழித்திடும். வனங்கள் உருவாகவும் நீரே காரணம். எனவே தான் காக்கும் கடவுளான விஷ்ணு கடலில் பாம்பின் மேல் பள்ளி கொண்டு ஜலத்தின் இன்னொரு பெயரான 'நாரம்' என் னும் பெயருடன் நீரை அணைந்து கிடப்பவன் என்னும் பொருளில் 'நாரணன்' என்றானார். எந்த ஒரு கடல் அல் லது நதியில் மூழ்கும் போது, ஒட்டுமொத்த நீருக்குள் ளும் மூழ்குவதாகவே பொருள்.

ஏனென்றால் சமுத்திரத்தோடு நதிகள் தொடர்பு கொண்டு அதன் கிளைகளாகவே உள்ளன. எனவே, நீர்நிலையில் நாம் மூழ்கும் போது உலகில் நீர்நிலைக ளில் அவ்வேளையில் மூழ்கிடும் அனைவரோடும் சம் பந்தம் கொள்கிறோம். தேக சம்பந்தம், சித்த (எண்ண) சம்பந்தம் என்று இரண்டும் நீருக்குள் விசைக்கதிராக இடையறாது பரவியபடியே உள்ளன. எனவே, அந்த கதிரின் தொடர்பு நமக்கு ஏற்படுகிறது. நீராடுவதால் உடல் தூய்மை பெறுவதோடு, உள்ளத்துக்கும் புத்து ணர்வும் ஏற்படுகிறது. அந்த வேளையில், புரியும் வந்தன மும், தோத்திரங்களும் பாவத்தை போக்கி விமோசனம் அளிக்கிறது.

நாம் புரியும் ஒரு தீவினை தான் பாவமாகிறது. இந்த பாவம் என்பது 'பாவித்தல்' என்னும் பொருளில் அதா வது 'பயன்படுத்துதல்' என்னும் பொருளில் நம் மன தில் நினைவாக தங்கி விடுகிறது. நினைவாக படிந் ததை நினைவாலேயே தான் விலக்க முடியும். பாவ நினைப்புக்கு எதிர்ப்பதம் புண்ணிய நினைப்பு. புண்ணி யச் செயல்பாடுகளைச் செய்யும் போது, எண்ணத்தில் நெகிழ்வு ஏற்படுகிறது. தீர்த்தங்களில் நீராடும் போது, நெகிழ்வுக்கு ஆளாகி, இறுகப் பற்றியிருக்கும் பாவ எண்

ணங்கள் நெகிழ்ந்து நீரில் கலந்து விடுகிறது. நாம் தூய்மையாகிக் கரையேறுகிறோம்.

முன்னோர்களுக்கு நீர்வழியாகவும், தேவர்களுக்கு நெருப்பு வழியாகவும் நாம் பொருள்களை அளிக்க முடியும் என்கிறது சாஸ்திரம். தேவர்களுக்காக யாக நெருப்பைக் கூட நீரால் அணைத்து விட முடியும். ஆனால், நீர்வழி அளிப்பதை நெருப்பால் ஏதும் செய்ய முடியாது. இதனால் நீர் பிரதான பூதமாக முதலாவதாக உள்ளது.

நதியில் நீராடும் போது பாவம் நீங்குகிறது. குளத்தில் புண்ணியம் பெறப்படுகிறது. கடலில் பாவம் நீங்குதலும், புண்ணியம் பெறுதலும் ஒருசேர நடக்கின்றன என்ற நுட்பத்தை உணர்ந்து பாண்டவர்கள் நீராடுகிறார்கள். சிறப்பு மிக்க இந்த நீரைத் தன் கமண்டலத்தில் அடக்கியவர் அகத்தியர். முனிவருக்கு முனிவராகவும், சித்தருக்குச் சித்தராகவும் விளங்கிடும் அகத்தியருக்கு 'லோபமுத்ரா' என்றொரு மனைவி இருந்தாள். அவர்களைப் பற்றிய வரலாற்றை லோமச முனிவர் பாண்டவர்களிடம் எடுத்துச் சொன்னார்.

அந்த நாளில், மணிமதி என்றொரு நகரம் வலன் என்னும் அசுரனின் பிடியில் இருந்தது. அவனுக்கு வாதாபி என்ற தம்பி இருந்தான். இந்திரஜாலம் கற்ற வாதாபி, நினைத்த வடிவம் எடுக்கும் ஆற்றல் கொண்டவன். இருவரும் தங்களின் மந்திர தந்திரத்தால் அனைவரையும் அடிமைப்படுத்தி வந்தனர்.

பிள்ளை இல்லாத வலன், தன் குறை நீங்க பிராமணர்களின் உதவியை நாடினான். அவர்களோ அசுர வர்க்கம் தழைக்க வேண்டாம் எனக் கருதி தங்களுக்கு

புத்திரத் தடைக்கான காரணம் தெரியவில்லை என்று உதவ மறுத்தனர். உண்மை அறிந்த வலன், வாதாபியின் துணையோடு பிராமணர்களைக் கொன்று குவித்தான். எப்படி தெரியுமா? வாதாபி ஒரு மாம்பழமாக மாறுவான். அதை வலன் உண்ணக் கொடுப்பான். உண்டு முடித்ததும், பிராமணர்களின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வாதாபி வெளியில் வருவான். இதனால் அவர்கள் துடி துடித்து உயிர் விடுவர். இதனால், அவர்கள் தங்கள் பெற்றோருக்கு பிதுர் கர்மா (முன்னோர் வழிபாடு) செய்ய முடியாமல் போனது. அதனால், புண்ணிய உலகத்தை அடைய முடியாமல் மரங்களில் வேதாளம் போல் தொங்கியபடி இருந்தனர்.

இதில் அகத்தியரின் முன்னோர்களும் இருந்தனர். பலரும் மயானத்து மரங்களில் தொங்கிக் கொண்டு கிடப்பதைக் கண்ட அவர், விமோசனம் தேட முனைந்தார். அதற்கு ஒரே வழி அகத்தி யருக்கு திருமணமாக வேண்டும். ஏனென்றால், மனைவியோடு இருந்தால் மட்டுமே பிதுர் காரியங்களைச் செய்ய முடியும். பிரம்மச்சாரியோ, சன்னியாசியோ பிதுர்கடன் செய்ய சாஸ்திரம் அனுமதிக்கவில்லை. எனவே, அகத்தியர் தனக்கொரு துணையை தேடத் தயாரானார்.

தனது முன்னோர்களுக்காக அகத்தியர் திருமணம் செய்ய தீர்மானித்தார். ஒருவேளை அகத்தியர், சந்நியாசியான தான் மணம் செய்வது தகாது என்று பிடிவாதம் பிடித்தாலும் பயனில்லை. முன்னோர்கள் மேன்மை பெறாமல் இருக்கும் போது, ஒருவர் எத்தனை தவம் செய்தாலும் பலன் கிடைக்காது. அகத்தியர் தயாரானால் போதுமா? அவருக்குப் பெண் கிடைக்க வேண்டாமா? அங்கே தான் சிக்கல் உருவானது.உலகமெங்கும் தேடி

யும் அகத்தியருக்குப் பொருத்தமான பெண் அமைய வில்லை. திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் விஷயம் என்பார்கள். இன்னாருக்கு இன்னார் என்பதும் இறை சித்தமே...! தனக்கு ஏற்ற ஒரு பெண் கூட பூவுல கில் இல்லை என்பதை ஞான திருஷ்டியால் அகத்தியர் உணர்ந்து கொண்டார்.

இப்படி ஒரு நிலையில், அவரது நோக்கம் எப்படி நிறை வேறும்? இங்கே தான் அகத்தியர் போன்ற தவசீலர்கள் சாமான்ய மக்களில் இருந்து வேறுபடுகிறார்கள். இது போல சோதனைகள் ஏற்படுவது சாதனையாக மாறு வதற்காகத் தான். தனக்கு பொருத்தமான பெண்ணை அகத்தியர் தவசக்தியால் மனோரீதியாக சிருஷ்டி செய் யத் தொடங்கினார். உலகில் ஆணுக்கும், பெண்ணுக் கும் ஜாதக ரீதியாக பத்து பொருத் தங்கள் இருக்கிறதா என்று பார்ப்பார்கள். இதில் யோனிப் பொருத்தம் முக்கி யம். இதில் தவறு நேர்ந்தால் குழந்தைப் பேறு முதலிய விஷயங்கள் பாதிப்புக்குள்ளாகும். இந்த பொருத்தங்க ளில் இருந்து மாறுபட்டும், இது எதோடும் சேராத விதத் திலும் ஒரு அற்புத அமைப்புடைய பெண்ணை, யோனி வழி பிறக்க அகத்தியர் வழி காண்கிறார்.

விதர்ப்ப நாட்டு அரசன் அந்த சமயத்தில் புத்திரப் பேறு இன்றி இருந்தான். அகத்தியர் அவனுக்கு, சர்வ லட்ச ணம் பொருந்திய தனித்துவம் மிக்க பெண் குழந்தை பிறக்கும்படி செய்தார். உலக அழகு அவ்வளவையும் தன் வசம் பெற்றிருந்ததால் 'லோப முத்ரா' என்று பெய ரிட்டனர். 'அழகை கவர்பவள்' என்றும் பொருள் உண்டு. மற்ற பெண்களின் அழகு அவள் முன்னால் கேலிக்குரி யதாக இருந்தது.

லோபமுத்ரா கன்னிப்பருவம் எய்தும் வரை காத்திருந் தார் அகத்தியர். பருவப்பெண் ஆனதும், பூவுலக அரசர் கள் எல்லாம் அவளை அடைய போட்டியிட்டனர். சுயம் வரம் நடத்தி தகுதியான மாப்பிள்ளையை தேர்வு செய்ய முடிவெடுத்தனர் பெற்றோர். ஆனால், அகத்தியர் முந் திக் கொண்டார்.

"விதர்ப்ப ராஜனே! பித்ருக்களின் ஆத்ம நலன் கருதி நான் லோபமுத்ராவை மணம் புரிய சித்தமாக உள் ளேன். நீ அதற்கு துணை நிற்க வேண்டும்" என்றார்.

மன்னன் கலங்கிப் போனான். 'வயது முதிர்ந்த குறுமு னிக்கு இப்படி ஒரு ஆசையா? இவரது விருப்பத்துக்கு, அழகுக் செல்லாம் அழகான என் மகள் தானா கிடைத் தாள்...?" என்று வருந்தினான்.

அதே நேரம் அகத்தியரிடம், 'எனக்கு இதில் விருப்ப மில்லை ' என்று சொல்ல முடியாமல் தவித்தான்.அகத் தியர் சாபமிட்டால்,தலைமுரையெ பூண்டற்றுப் போகும் என்பது அவனுக்குத் தெரியும்.

இந்த சமயத்தில் லோபமுத்ரா தானே முன் வந்தாள். அகதியரை கணவராக ஏற்க சம்மதித்தாள்.

பட்டும், பொன்னுமாய் மயில் போல அரண்மனையில் வாழ்ந்தவள் அகத்தியரின் பத்தினி என்றானதும்,அவற் றைத் துறந்தாள். மரவுரி தரித்து ரிஷிபத்தினியாக மாறி காட்டிலுள்ள ஆஸ்ரமத்திற்குப் புறப்பட்டாள். ஒருவழி யாக அகத்தியர் முன்னோர் சாப விமோசனத்திற்காக தன்னைக் சிரமதனாக ஆக்கிக் கொண்டு விட்டார். தான் ஒரு பாயாகவும் வேண்டும் என்பதற்காக ஒரு நல்ல

நாளில் லோபமுத்ராவை அழைக்க அவள் ஒரு நிபந்தனை விதித்தாள்.

"நதரெ! நான் இந்த மரவுரியோடு உங்களுடன் கூட விரும்பவில்லை. இந்த விஷயத்தில் நான் அரசன் மகளாகவும், நீங்கள ராஜ குமாரனாகவும் திகழ வேண்டும். நீங்கள் மாறாவிட்டாலும் பாதகமில்லை. நான் ஒரு ராணியாக பிள்ளை பெறுவதையே விரும்புகிறேன்" என்றாள்.

இதை அகத்தியர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"சரி... இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?"

"தாங்கள் என் தந்தை போல பெரும் செல்வத்துக்கு சொந்தமாக வேண்டும் "

"நான் பற்றற்ற துறவி. பொன்னும் பொருளும் எனக்கு எதற்கு?"

"உங்களுக்கு அது தேவையற்றதாக இருக்கலாம். ஆனால், எனக்கு அது வேண்டும். லோபமுத்ரா ஒரு சந்நியாசிக் கரனை மணந்தாள் என்ற அவப்பெயர் நீங்க வேண்டும். அது யுயர்.தியர் பெருமானுக்கும் பெருமை சேர்த்தது என்று ஊரார் சொல்ல வேண்டும் "

"உன் விருப்பத்தை நிறைவேற்ற என்னால் இயலாது. நான் எனக்கென்று யாரிடமும் எதையும் கேட்டதில்லை... பொருளை விட அருளே பெரிது. அதில் நான் தான் முதலிடம் பெற்றவன் "

"மன்னியுங்கள். தாங்கள் மனம் வைத்தால் எனக்காக ஒரு புதிய பொன்னுலகையே படைக்க முடியுமே "

"முடியும். ஆனால், இதற்காகவா இத்தனை காலம் நான் தவசக்தியை சேமித்தேன் "

"நாதரே...! தாங்கள் முயன்றால் தங்களின் தவத்துக்கும் பழுதின்றி, என் விருப்புக்கும் பாதிப்பின்றி பொன், பொருளை அடைய முடியும். இல்லாளின் இந்த விருப்பத்தை கூடவா உங்களால் ஈடேற்ற முடியாது" என்றாள் லோபமுத்ரா.

அகத்தியர் தன் தவசக்தியை வீணாக்க விரும்பவில்லை. அரசர்களிடம் பொன் பொருளைத் தானமாகப் பெறத் தீர்மானித்தார். ஆனால், அவர் சந்தித்த அரசர்கள் யாருமே தானம் செய்யும் நிலையில் இல்லை. லோபமுத்ராவின் விருப்பம் அவருக்கு ஒரு சவாலாக அமைந்து விட்டது. இதற்கு என்ன வழி என்று அவர் சிந்தித்தபோது, பொன், பொருளை அளவுக்கு அதிகமாக வைத்திருந்த அசுரன் ஒருவன் இருப்பது தெரிய வந்தது.

அராஜமாக ஆட்சி புரிந்த அவன், தவசிகளைக் கொன்று உணவாக்கி வந்தான். அவன் பெயர் இவ்வலன். அவனது தம்பி பெயர் வாதாபி. இந்த வாதாபி மாயாசக்தியால் நினைத்த வடிவம் எடுக்கும் ஆற்றல் கொண்டவன். யாராலும் தன்னைக் கொல்ல முடியாது என்ற வரத்தையும் அவன் பெற்றிருந்தான்.

அசுர ராஜனான இவ்வலனைச் சந்தித்து, அவனது சூதில் இருந்து வெற்றி பெற்றால் பொன்னும் பொருளும் கிடைக்கும் என்பதை அகத்தியர் அறிந்தார். அவனைக்

காணத் தயாரானார். உரிய முறையில் இவ்வலனுக்கு செய்தி அனுப்பப்பட்டது. இந்த அசுரன் யாரோ அல்ல... இரண்யனின் வம்சாவளியில் வந்தவன். இதில் பிரகலாதன் ஒருவனைத் தவிர மற்றவர்கள் அசுர குணத்துடன் இருந்தனர். அதிலும் இவன் நரமாமிசம் சாப்பிடுபவனாகவும், தவசிகளையும், அரசர்களையும் கொல்வதையும் வழக்கமாக கொண்டிருந்தான்.

இவனுக்கு தம்பி வாதாபியும் துணை நின்றான். அகத்தியர் வருகிறார் என்று தெரிந்தவுடன் அண்ணன், தம்பி இருவரும் ஒன்றுகூடி விவாதித்தனர்.

"தம்பி... நீ அகத்தியர் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன். தவசக்தி படைத்த இவர் ஒரு குறுமுனி" "இவர் எதற்கு நம்மைக் காண வர வேண்டும்?"

"நிச்சயம் எதையோ எதிர்பார்த்து தான் வருகிறார் "

"ஒருவேளை நம்மைப் பற்றி தெரிந்து கொண்டு தான் வருகிறாரா?"

"அப்படித் தானிருக்கும். இவரை நாம் சாதாரணமாக கருதி விடக்கூடாது "

"என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"இவரையும் கொன்று விட வேண்டும். இல்லாவிட்டால், அவர் நம்மை ஏதாவது செய்து விடலாம் "

"சரி... நான் வழக்கம் போல் வரவேற்று அவருக்கு விருந்து தருவது போல நடந்து கொள்கிறேன். நீ அவ

ருக்கான உணவாக மாறி வயிற்றுக்குள் சென்று விடும். வழக்கம் போல், நான் உன்னை அழைக்கவும் வயிற்றைக்கிழித்துக்கொண்டு வெளியே வந்துவிடு. இந்த சம்பவம் மண்ணில் வாழும் முனிவர்களுக்கெல்லாம் ஒரு பாடமாக அமையட்டும். அதன்பின் ஒருவரும் நம் பக்கமே வர மாட்டார்கள்" என்று முடிவெடுத்தனர்.

அகத்தியரைப் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றனர். விருந்தும் தயாரானது. வாதாபி ஒரு மாங்கனியாக மாறினான். இவ் வலன் அதை அகத்தியரிடம் கொடுத்தான். அதை அனுபவித்துச் சாப்பிட்ட அகத்தியரின் ஞானதிருஷ்டிக்கு எல்லாம் தெரிந்தது. வயிற்றை நன்கு தடவிக் கொண்டவராக சாப்பிட்ட உணவு ஜீரணமாகட்டும் என்னும் பொருளில், 'வாதாபிஜீர்ணாபி' என்றார். இவ்வலன் இது கேட்டு அதிர்ந்தான்.

"தம்பி வாதாபி வெளியில் வா" என்று கத்தினான். அகத்தியரோ அதைக் கேட்டு சிரித்தார்.

"அசுர ராஜனே! உன்னைப் பற்றி தெரிந்தே வந்தேன். உனக்கு பாடம் கற்பிக்கவே விருந்துக்கு சம்மதித்தேன். உன் தம்பி இனி வர மாட்டான். அவன் என்னோடு ஐக்கியமாகி விட்டான். உன் பாட்டன்களில் ஒருவன் நரசிம்மத்தால் வதம் செய்யப்பட்டான். இன்று என்னால் இந்த வதம் நிகழ்ந்துள்ளது. இதில் என் பிழை ஏதுமில்லை. நான் உன்னிடம் இருக்கும் செல்வத்தை பெற்றுச் செல்ல வந்தேன். எனக்கு அளிக்க வேண்டியதை அளித்து, இதுநாள் வரை செய்த கொலை பாதக பாவங்களில் இருந்து விடுபட முயலாமல், என்னைக் கொல்லவும் துணிந்தாய்! அசுர புத்திக்கும், அகிம்சைக்கும் இடமே இல்லை என்பதை நிரூபித்து விட்டாய்" என்று

அகத்தியர் கூறவும் இவ்வலன் வேறுவழியின்றி அவரிடம் பணிந்தான். பின், 'என்னை மன்னியுங்கள். நீங்கள் என்னிடம் எதை எதிர்பார்த்து வந்தீர்கள்?" என்று கேட்டான்.

"பதினாயிரம் பசுக்கள், அதற்கு ஈடான பொற் காசுகள். இவற்றோடு உன் வசம் இருக்கும் சிவாஜி, விவாஜி என்னும் குதிரைகளால் பூட்டப்பட்ட தங்க ரதம்! இதுவே நான் வேண்டுவது" என்று அகத்தியர் கேட்கவும், அரை மனதாக அவற்றை வழங்கினான். அவை எல்லாமே அவன் தன்னை நாடி வந்தவர்களிடம் அபகரித்தவை! அகத்தியர் அந்த நிதிகளுடன் ஆஸ்ரமம் நோக்கிப் புறப்பட்டார்.

இவ்வலன் அதன்பின்னும் திருந்தவில்லை. அகத்தியரைக் கொல்லும் எண்ணத்துடன் பின் தொடர்ந்தான். அவனைத் தன் 'ஹும்கார' கர்ஜனையால் காது கிழிந்து, தலை வெடித்துப் போகச் செய்தார் அகத்தியர். இதையறிந்த அனைவரும் மகிழ்ந்தனர். அகத்தியரும் லோபமுத்ராவிடம் பொன்னைக் குவித்தார்.

மகிழ்ந்த லோபமுத்ரா, "சுவாமி. உம்மை நான் ஒரு அரசராகவும், க்ஷத்திரிய வீரராகவும் காண்கிறேன். புலன்களை வென்ற தவசி என்பதோடு, புலன்களை ஆட்சி செய்த தவசி என்ற பெருமையும் காலத்திற்கும் உமக்கு கிடைக்கும்படி செய்ததை எண்ணி மகிழ்கிறேன். இனி புத்திரப்பேறு எனக்கு வாய்த்தால் அது அர்த்தமுள்ள பேறாக இருக்கும். இதுவரை, நீர் உம் விருப்பப்படி நடக்காமல், என் விருப்பம் போல நடந்து கொண்டீர். இதன் மூலம், கணவன், மனைவி உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகி விட்டீர். இனி உம் மனம் போல் நல்ல புத்திரன் நமக்கு பிறக்கட்டும்," என்றாள்.

அகத்தியரும் மிக உயர்ந்த நோக்கத்தை மனதில் கொண்டு, சரியான காலம் நேரம் பார்த்து லோபமுத்ரா வுடன் சேர கரு உண்டானது. எல்லா பிள்ளைகளையும் போல், பத்துமாத கர்ப்பத்தில் பிறக்கும் சாமான்ய குழந் தையாக அது இல்லை. ஏழு பிறப்பு என்னும் பிறவிக் கணக்குக்கு ஏற்ப ஜனித்து முக்தி பெறாமல் தவிக்கும் அகத்தியரின் முன்னோர்கள்

அனைவரும் நற்கதியடைவதற்காக, கருப்பையில் ஏழு வருடம் வளர்ந்தது. எவரிடமும் காணாத தேஜசுடன் ஜொலித்ததன் காரணமாக 'த்ருடஸ்யு' என்ற பெய ரைச் சூட்டினார் அகத்தியர். மழலைக் குரலுக்குப் பதி லாக அவன் வேதத்தை இனிமையுடன் ஓதி வந்தான். தவழ்ந்து செல்லும் வயதில் நடந்து செல்ல ஆரம்பித் தான்.

ஹோமத்தில் இடம்பெறும் சமித்துகளைப் பொறுக்கி வந்து வேள்வியின் சிறப்பை உணர்த்தும் விதத்தில் செயல்பட்டதால், 'இத்மவாகன்' என்றும் பெயர் பெற் றான். வேள்வியின் சிறப்பை உணர்த்துபவன் என்பது இதன் பொருள். த்ருடஸ்யு என்னும் இந்த இத்மவாக னின் பிறப்பால் அகத்தியரின் முன்னோர் கடைத்தேறி னர்.

பாண்டவர்கள் வனவாசத்தின் போது லோமச முனிவ ரைச் சந்தித்தனர். அவர் புனித தீர்த்தங்களில் நீராடுவ தன் அவசியம் பற்றி பாண்டவர்களிடம் எடுத்துரைத்தார்.

அப்போது காலஞானியான சகாதேவன் தன் சந்தேகம் ஒன்றைக் கேட்டான்.

"முனிவர் பெருமானே! "நீராடுவதால் உடல் தூய்மை பெறும். உள்ளத்திலும் புத்துணர்ச்சி உண்டாகும். இது தவிர பெரிய நன்மை என்ன இருக்கிறது?" என்றான். அவனது கேள்வி லோமச முனிவரைச் சற்று அதிர்வுக்கு ஆளாக்கியது.

"சகாதேவா! புனித நீராடுவதன் மகிமை தெரியாமல் இருக்கிறாயே? பூதங்கள் ஐந்தில், நீருக்கே அனைத்தி லும் வியாபிக்கும் தன்மை உண்டு. நெருப்பும் நீருள் அடங்கி விடும். ஆகாய வெளியில் காற்றைப் புணர்ந்து மேக வடிவில் திகழும். மண்ணோடு கலந்தாலும் தனது நிலையைத் துளியும் இழக்காது. உயிர்கள் அனைத்திற் கும் தண்ணீரே மூலம். உலகம் அழியும் காலத்தில் நீரில் தான் ஒடுங்கும். அவ்வாறு ஒடுங்கினால் தான், மீண்டும் உலகம் உண்டாகவே முடியும். இதன் காரணமாக பஞ்ச பூதங்களில் தண்ணீரையே முதல் பூதம்' என்பர்.

தண்ணீரின் நிலைகள் ஆறு. அதனாலேயே இதன் ஓட்ட கதியை 'ஆறு' என்று காரணப் பெயரால் சொல் கிறோம். கடல் நீரே நன்னீராகிறது. ஆவியாதல், மேக மாதல், குளிர்ந்து மழையாகுதல், பின் விழுதல், ஓடுதல், கடலில் சேர்தல் என்று ஆறு நிலைகள் ஒரு ஆற்றுக்குப் பின் இருப்பதை அறிவாயாக.

பூமியில் நான்கில் மூன்று பங்கு நீரால் சூழப்பட்டுள்ளது. எனவே, நிலத்தை விட, நீருக்கே பூமியில் வலிமை அதிகம். இதன் காரணமாக மட்டுமின்றி, இதன் உயர் சிறப்பு கருதியே இதன் மேல் பள்ளி கொண்டிருக்கிறான் பரந்தாமன். இதை தன் சடை மேலேயே கங்கையாக கொண்டிருக்கிறான் ஈசன். நீரில் பூத்த கமலத்தையே தன் இருப்பிடமாக கொண்டுள்ளார் பிரம்மா. பராசக்

தியோ பூலோகம் முழுவதும் பல்வேறு பெயர்களில் நதியாக ஓடிக்கொண்டிருக்கிறாள். மூவரைக் கடந்து தோன்றிய மற்ற மூவர்களான கணபதி, கந்தன், சூரியன் போன்றோரும் நீருடன் பெரிதும் தொடர்பு கொண்டவர் கள்.

சரவணப் பொய்கை தான் கந்தனின் கர்ப்பத் தலம். பார் வதியின் ஸ்நானக் கட்டமே கணபதியின் கர்ப்பத்தலம். சூரியனால் பூவுலகில் மட்டுமே உயிர்கள் வாழ்கின்றன. காரணம் கடல்நீர்! நீரின் பெருமையை இதுபோல் கூறிக் கொண்டே போகலாம். நமது உடம்பிலும் நீர்ச்சக்தியே அதிகம். அன்னமின்றி கூட ஒருவர் உயிர் வாழலாம். ஆனால், நீரின்றி வாழவே முடியாது. இதனாலேயே ரிஷி கள், முனிவர்கள், ஞானிகள், தவசிகள், வேதியர்கள் என்று சகலருக்கும் நீராடுதல் முக்கியமாக இருக்கிறது.

நீரில் ஒருவர் மூழ்கும் போது, நீர் என்னும் பூதமாகவே ஆகி விடுகிறார். மற்ற நான்கு பூதங்களின் தொடர்பு அற் றுப் போகிறது. இதனால், மற்ற பூதங்களால் உண்டான கர்மா வர்தங்கள் (வினை) உடலைச் சுற்றி, அலைக் கற்றைகளாய் சூழ்ந்திருப்பதில் இருந்து விலக்கு ஏற்ப டுகிறது. நீருக்கு மட்டுமே உடல் அழுக்கு மட்டுமின்றி உள்ளம் சார்ந்த அழுக்குகளையும் போக்கும் தன்மை உண்டு. இதனாலேயே தர்ப்பணம், சிராத்தம் போன் றவை நீரை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளன.

நீரானது நேர்மறை, எதிர்மறை என்னும் இருவித விளைவுகளைத் தரும் தன்மை உடையது. அமைதி யான எண்ணமுடன் நேர்மறை மந்திரங்களுடன் நீரைத் தீண்டும் போது அதன் மூலக்கூறுகள் நன்மையாக செயல்படும். எதிர்மறை எண்ணத்துடன் நீராடும் போது,

மூலக்கூறுகள் தீயதாக செயல்படும். சத்தியம், பக்தி, நன்றியுணர்வோடு நீரை அணுக வேண்டும். அதை அழுக்காக்க கூட, அதன் அனுமதியை வணங்கிப் பெற வேண்டும். இதனாலேயே ஆறு, குளங்களில் நீராடும் முன், முதலில் காலை நனைக்காமல், தலையில் தெளித்த பிறகு உள்ளே இறங்குவர்.

ஒருவருக்கு ஒரு பொருளை நீரின் பெயரால் அர்க்கியமாக அளிப்பதும் நீரின் சிறப்பினால் தான். 'நீரின்றி அமையாது உலகு' என்று நீரைப் போற்றினர் நம் சான்றோர்.

"மகாமுனியே... நீருக்கு பின்னால் இத்தனை விஷயங்களா... அடேயப்பா!" என்றான் தர்மன்.

"ஒருவன் தண்ணீர், உப்பு கேட்கும் போது இல்லை என்று ஏன் சொல்லக்கூடாது என்பது இப்போது தான் புரிகிறது. வானம் அளித்த நீரை பூமி நமக்கு அளிக்கிறது. இதை நமக்கு மட்டுமே உரியது என்று நினைப்பது எவ்வளவு பேதமை?" என்றான் பீமன்.

"ஆம் அண்ணா... நீராலேயே பெருமை... உழைத்து வியர்வை பெருகும் போது உடம்புக்குப் பெருமை! தாகத்தோடு நீர் அருந்தும் போது உணர்வுக்குப் பெருமை! மகா முனி கூறியது போல், நீரில் மூழ்கும் போது நாமும் நீரின் ஒரு அணுவாக மாறுகிறோம். ஒவ்வொரு ஆறும் கடலோடு சங்கமிப்பதால், நமக்கும் கடல் சம்பந்தம் உருவாகி நாமும் பெரிதினும் பெரிதாகி விடுகிறோம்" என்றான் நகுலன்.

இதையடுத்து பாண்டவர்கள் லோமசரிடம், தண்ணீரின் பெருமை பற்றி சொன்ன நீங்கள், மிகச்சிறந்த புண்ணிய தீர்த்தம் பற்றி சொல்லுங்களேன்..." என்றனர்.

உடனே லோமசர், "உலகில் தலை சிறந்த தீர்த்தம் பிருகு தீர்த்தம். இதன் பின்புலத்தில், இருப்பவர் பரசுராமர் ஜம தக்னி என்னும் மகாமுனிக்கும், ரேணுகா தேவி என்ற பத்தினிக்கும் பிறந்தவர். சிவனை துதித்து அவரிடமி ருந்து பரசினை(கோடரி) பெற்றதால் பரசுராமர் எனப் பட்டார். இவருக்கே இந்த தீர்த்தம் தான் ஒரு கட்டத்தில் சக்தி அளித்தது." என்றார் லோமசர்.

பரசுராமர் தன் சக்தியை இழந்ததையும், மீண்டும் அதைப் பெற்றதையும் பற்றி லோமசர் கூறத் தொடங்கி னார். "ரிசீக முனிவரின் புத்திரரான ஜமதக்னியின் புத் திரர் பரசுராமர். இவரது தாய் தான் ரேணுகா தேவி. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றொரு பழ மொழி உண்டு தெரியுமா?" என்று லோமசர் கேட்க, தர் மன் புன்னகைத்தபடியே, "மகரிஷி... அப்படியே தாயும் உயர்ந்தவள் தானே," என்றான்.

"சரியாகச் சொன்னாய் தர்மா...! ஆனால், பரசுராமனைப் பற்றிக் கூறும் போது மட்டும் முதலில் தந்தையே உயர்ந் தவர் என்ற கருத்து நினைவுக்கு வரும். ஏனென்றால், தந்தையின் கட்டளை என்பதன் பொருட்டு தன் பரசு என்கிற கோடரியாலே தன் தாயான ரேணுகாதேவியை வெட்டி வீழ்த்தியவன் தான் பரசுராமன்," என்று லோமச முனிவர் கூறவும் அனைவரிடமும் அதிர்வு...

"மகரிஷி. தந்தை பேச்சைக் கேட்டு தாயையே கொன் றாரா பரசுராமர்... இது என்ன கொடுமை?" என்று பீமன் ஆவேசமாகக் கேட்டான்.

"அது ஒரு தனிக்கதை... அதற்குள் இப்போது நாம் செல் லத் தேவையில்லை. இங்கே நீங்கள் பரசுராமர் குறித்து தெரிந்து கொள்ள நிறைய நுட்பமான சங்கதிகள் உள்ளன. தன் சொல்லுக்காக மகன் தாயைக் கொன் றதை எண்ணி ஆச்சரியப்பட்ட ஜமதக்னி முனிவர்.

"மகனே! உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்," என்றவுடன், "என் தாய் உயிர் பெற்று எழ வேண்டும்" என்ற வரத்தையே கேட்டான். அவரும் அவ்வாறே செய் தார். பரசுராமர், இப்படி தாய், தந்தை இருவர் மீதும் அன்பு கொண்டிருந்தார். இவர் வசமுள்ள பரசு என்ற கோடரியை இவருக்கு தந்தவர் சிவபெருமான். கடும் தவம் செய்து அதன் பயனாகப் பெற்றதே 'பரசு'. இதைப் பெற்ற பின், தனக்கு நிகரான வீரனோ அல்லது பெற் றோரை மதிப்பவனோ பூவுலகில் இல்லை என்று கருதி னார். இப்படி கருதினாலே ஆபத்து தானே... இவருக்கு அயோத்தியை அரசாட்சி செய்த ராமன் பற்றி பிறகே தெரிய ஆரம்பித்தது.

"ராமபிரான் பற்றி நீங்கள் அறிவீர்கள் அல்லவா?" என்று லோமசர் கேட்க, "அந்த விஷ்ணு அவதார மூர்த்தியை அறியாது இருப்போமா?" என்று திருப்பிக் கேட்டாள் திர வுபதி.

"நல்லது. அயோத்தி ராமனுக்கும், இந்த பரசுராமனுக் கும் ஒரு சமயம் யுத்தம் மூண்டது என்றால், உங்களுக் கெல்லாம் ஆச்சரியமாய் இருக்கும்."

லோமசர் இப்படி கூறவும் ஐவரும் வியப்புடன் பார்த்தனர்.

" என்ன பார்க்கிறீர்கள்?"

"பார்க்கிறோமா... திகைத்துப் போய் விட்டோம்..." "எத னால்?"

"இரண்டு ராமர்களுமே மோதிக் கொண்டார்கள் என்கி றீர்களே... எப்படி திகைப்பு நேராது போகும்..."

"அங்கே தான் மனித மனங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மனதைப் போல விசித்திரமான ஒன்று, இந்த உலகில் மட்டுமல்ல... புவனம் பதினான்கி லும் கூட கிடையாது..."

"எப்படி என்று சற்று விளக்கமாக கூறுங்களேன்..."

"கூறுகிறேன்... பரசுராமருக்கு தன் வசமுள்ள பரசுவே மேலானது என்றும், தானே நிகரில்லாதவன் என்றும் செருக்கு ஏற்பட்டது என்றேன் அல்லவா?"

"ஆமாம் "

"அங்கே தான் ஆரம்பமானது பிரச்னை."

"தெய்வீக புருஷர்களுக்குமா செருக்கு?"

"நல்ல கேள்வி... சாமான்யர்களின் செருக்கு அவர்க ளையே அழித்து விடும். தெய்வீகர்களின் செருக்கு திரு விளையாடலாகி உலகிற்கு பாடமாகி விடும் "

"புரிகிறது... ராமரும், பரசுராமரும் எங்கே எப்போது மோதிக் கொண்டனர் "

"அயோத்தி ராமரின் பெருமையைக் கேள்விப்பட்ட பரசு ராமர், தன்னையும் விஞ்சும் அளவுக்கு ஒரு வீரனா என்ற எண்ணத்தில் பரிசோதித்துப் பார்க்க விரும்பினார். அயோத்தி புறப்பட்டார். ராமனும் அவரைப் பணிந்து வர வேற்றான்.

பரசுராமரோ அலட்சியத்துடன், தன் வசமிருந்த சிவ தனுசுவை ராமனிடம் கொடுத்து, "ராமா... நீ சுத்த வீரன் என்றால், இந்த வில்லில் அம்பைப் பூட்டி நாணேற்று," என்றார்.

"ஏன் இந்த சோதனை?" என்றார் ராமர்.

"உன்னைப் பற்றி நான் கேள்விப்பட்டது எல்லாம் உண் மையா என்பதை அறிய வேண்டாமா?"

"நான் ஒதுங்கிக் கொள்கிறேன் பரசுராமரே "

"நீ என்னை மதிப்பது உண்மை என்றால், இந்தவில்லை எடுத்து நாணைப் பூட்டு. பிறகு பேசு..."

"நான் விளையாட்டுக்கு வேண்டுமானால், நாணேற்றிப் பார்க்கிறேன். ஒருவேளை இயலாது போனால் பரிகாசம் செய்யாதீர்கள்..."

"எனக்கும் அது தானே வேண்டும்..."

இப்படி வாக்கு வாதம் நடந்தது. ராமரும் நாணேற்ற ஆரம்பித்தார். அவரைக் கண்டு உலகமே நடுநடுங்கி யது.

பூமியிலும் பெரும் நடுக்கம். கடலிடமும் தடுமாற் றம். ராமர் நாணேற்றி முடித்ததும், பரசுராமர் தடுமாறிப் போனார். அப்படியே, விஷ்ணுவாக விஸ்வரூபம் எடுத்த ராமரைக் கண்ட பரசுராமர், கைகளைக் கூப்பி கண்ணீர் பெருக தரிசித்தார்.

பின் அப்படியே பரசுராமர், தன் தோல்வியை ஒப்புக் கொண்டு, சந்நியாசி கோலம் ஏற்றார். தவறான நோக் கத்தில் தான் செய்த பாவம் நீங்க, ஓராண்டு வரை தவத் தில் ஆழ்ந்தார். பின் பிருகு தீர்த்தத்தில் நீராடிய பின்னரே பாவம் விலகியது. முகப்பொலிவு, எண்ணத் தெளிவு, மன அமைதி மூன்றும் கிடைக்கப் பெற்றார். அன்று முதல் நீராடுவோர் அனைவருக்கும் இந்த நற்பலனை எல்லாம் இத்தீர்த்தம் வாரி வழங்குகிறது," என்று முடித் தார் லோமச முனிவர்.

பரசுராமர் பிருகு தீர்த்தத்தில் நீராடி நன்மை பெற்றதாக லோமசர் கூறவும், பாண்டவர்களும் அந்த தீர்த்தத்தில் நீராடினர்.

லோமசர் மூலமாக கடந்த காலத்தில் நிகழ்ந்த அரிய சம் பவங்களை அறிந்து கொண்டதற்காக, தர்மர் நன்றி கூறி னான். நகுல, சகாதேவர்கள் தங்களின் மனம் அமைதி பெற்றதாக கூறினர். பீமனும் அதை வழிமொழிந்தான்.

திரவுபதியும் இதை ஆமோதித்தவளாய், "வலியே வலிமை தருவதாக உள்ளது. காண்டவப் பிரஸ்தத்தில்,

நாம் நல்லாட்சி நடத்திக் கொண்டிருந்தால், இந்த உலகத்தின் ராஜாக்களுள் ஒருவராகத் தான் இருந்திருப்போம். இத்தனை அரிய தகவல்கள் நமக்கு தெரிந்திருக்காது. எனவே, வனவாச காலத்தை, ஒரு வரப்பிரசாதமாகவே நான் கருதுகிறேன்," என்றாள்.

இதையடுத்து தர்மன், "மகரிஷியே! அகத்தியர் சிரஞ்சீவியாயிற்றே... இப்போதும் அவர் சஞ்சாரம் செய்கிறாரா?" என்று தர்மன் கேட்கவும், லோமசர் அகத்தியர் பற்றிய எண்ணத்தில் மூழ்க ஆரம்பித்தார்.

"பாண்டவர்களே! அகத்தியர் பற்றி முழுமையாக அறிய விரும்பும் உங்களின் எண்ணம் எனக்கு மனநிறைவு தருகிறது. வலாசுரன், வாதாபி மட்டுமில்லாமல் ஆயிரக் கணக்கான அசுரர்கள் அழிய அவர் காரணமாக இருந்தார். குறுமுனியான அவர் ஏழுகடலையும் கமண்டலத்தில் அடக்கியவர். பின் அதைக் குடித்து ஜீரணமும் செய்தவர்," என்று பீடிகையுடன் தொடங்கினார். பாண்டவர்களும் அதுபற்றி கேட்கத் தயாராயினர்.

"முன்னதாக விருத்திகாசுரன் என்னும் அசுரனைப் பற்றி அறிய வேண்டியது அவசியம். இவன் எப்படி தோன்றினான் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

திரேதாயுகத்தில், விண்ணிலுள்ள இந்திரன் சபை கேளிக்கை நிறைந்ததாக இருந்தது. ஒருநாள் ரம்பை, ஊர்வசி, மேனகை ஆகியோர் நடனமாடியதில், இந்திரன் தன்னையே மறந்து விட்டான். இந்த வேளையில், பிரஹஸ்பதி என்னும் தேவகுரு சபைக்கு வந்தார். பலத்த குரலில், இந்திரனை அழைத்தும், அவன் நடனத்திலேயே கண்ணாய் இருந்தான். இதனால், மனம்

வெதும்பிய குரு, இனி இந்திரசபைக்கே வரமாட்டேன் என்று சொல்லிப் புறப்பட்டார்.

குருவருள் இருந்தால் தானே செல்வம் நிலைக்கும். குரு விலகியதால், இந்திரனை இருள் சூழ்ந்தது. அவனது தேஜசும் குறையத் தொடங்கியது. கலக்கமுற்ற இந்திரன், குருவைத் தேடினான். அவரோ, பாதாள லோகம் சென்று விட்டார். தேவர்களை சோர்வு ஆட்கொண்டது. இந்திரன் ஒரு முடிவுக்கு வந்தவனாய், வியாழ குருவுக்கு பதிலாக வேறொரு குருவை ஏற்று, நலம் வேண்டி வேள்வி செய்யும் முடிவுக்கு வந்தான்.

பாண்டவர்கள் அதிர்ச்சியுடன், "குரு பகவான் விலகினால், இப்படியும் கூட ஆகுமா?" என்று கேட்டனர்.

"ஆம். நவக்கிரகங்களில் ஒருவரான குரு பகவானால் செல்வம், புகழ், ஆரோக்கியம், மகிழ்ச்சி எல்லாம் கிடைக்கும். அவர் பார்வை பட்டால் போதும். அனைத்தும் வசமாகும். இப்படி ஒரு வல்லமை அவருக்கு இருக்கிறது."

"இப்படிப்பட்டவரை இந்திரன் அலட்சியப்படுத்தலாமா?"

"என்ன செய்வது? கேளிக்கையால் இந்திரனும் சிரமத்திற்கு ஆளானான் என்று வருங்காலம் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"அப்படியானால், இவை எல்லாம் திட்டமிட்ட செயல்பாடுகளா?"

"ஒரு கோணத்தில் பார்த்தால், திட்டமிட்டது தான். இன்னொரு கோணத்தில் ஒன்றைத் தொட்டு ஒன்று என்ற இயல்பான போக்கு என்றும் கொள்ளலாம் "

"முடிவாக என்னவாயிற்று?"

"இந்திரன், புதிய குருவாக விஸ்வரூபன் என்ற அசுரச் சார்பானவரைக் குருவாக ஏற்றுக் கொண்டான் "

"ஆச்சரியமாக இருக்கிறதே?"

"அவனுக்கு வேறு வழியில்லை. விஸ்வ ரூபனுக்குத் தான் தகுதி அனைத்தும் இருந்தது "

"பிறகு?"

"பிறகென்ன. அமரலோகத்தின் நலனை உத்தேசித்து, இந்திரன் விஸ்வரூபனைக் கொண்டு வேள்வி புரிந்தான். மூன்று சிரசுகளைக் கொண்ட இந்த விஸ்வரூபன், துவட்டா என்பவனின் மகன் "

"மூன்று சிரசுகளா?"

"ஆம்... தேவர்களுக்கு எதிரானவனும் கூட..."

"எதிரியோடு இந்திரன் எப்படி இணைந்தான்?"

"குருவருள் விலகினால் தீயதெல்லாம் நல்லது போலத் தோன்றும். விஸ்வரூபனைக் கொண்டு வேள்வி புரிந்தான் இந்திரன். மனதில் அசுரர்களையும், உதட்டில் தேவர்களையும் சொல்லி விஸ்வரூபன் அவிர்பாகம் அளித்தான். "

"முடிவாக என்ன நடந்தது?"

"முடிவில் இந்திரன் விழித்துக் கொண்டான். நன்மை செய்வது போல, துரோகம் செய்த விஸ்வரூபனின் மூன்று தலைகளையும் வஜ்ராயுதத்தால் வெட்டி விட்டான். இதனால், அவனுக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டானது. அதை தேவர்கள், பெண்கள், தண்ணீர், மரம், மண் என ஐந்து அம்சங்கள் மீது ஏற்றி விலகிக் கொண்டான்.

அது முதல் தேவர்களுக்கு அச்சமும், பெண்களுக்கு மாத விடாயும், தண்ணீரில் நுரையும், மரத்தில் பிசினும், மண்ணில் உவர்தன்மையும் உருவாயிற்று."

இதைக் கேட்ட திரவுபதியின் மனம் அதிர்ச்சி அடைந்தது.

"சரி...பிரம்மஹத்தி தோஷத்தில் இருந்து விலக்கு பெற்ற இந்திரனிடம், வியாழ குரு திரும்ப வந்தாரா?"

"அது எப்படி வருவார்?... இந்திரனுக்கு இதன் பிறகே கடுமையான சோதனைகள் காத்திருந்தன" என்றார் லோமசர். இதையடுத்து மீதிக்கதையையும் கேட்க பாண்டவர்கள் ஆர்வமாயினர்.

விஸ்வரூபனை இழந்து விட்ட அவன் தந்தையான துவட்டா, இந்திரனை அழிக்க ஒரு பெரும் வேள்வி செய்தான்.

அந்த வேள்வித்தீயில் இருந்து விருத்திகாசுரன் என்னும் அசுரன் தோன்றினான். அவனை இந்திரன் வஜ்ரா யுதத்தோடு எதிர்த்தான். ஆனால், அது ஒடிந்து போனது

தான் மிச்சம். அசுரனை எதிர்க்க முடியாமல் புறமுது கிட்டு ஓடினான். இதன் பின், விண்ணுலகைக் கைப்பற் றிய விருத்திகாசுரன், தன் கொடுங்கோல் ஆட்சியைத் தொடங்கினான்.

இந்திரனின் தவறால், அவன் மட்டுமல்ல... தேவலோ கமே பாதிப்படைந்தது. இந்நிலையில், அவன் பிரம்ம தேவரிடம் சென்று முறையிட, அவர் இதற்குரிய தீர்வை மகாவிஷ்ணுவே தரமுடியும் என்று அனைவரோடும் வைகுண்டத்துக்கு சென்று நின்றார்.

மகாவிஷ்ணுவும் ஏதுமறியாதது போல, என்ன நடந் தது என்று கேட்க இந்திரன் கதறிக் கொண்டு காலில் விழுந்து நடந்ததைச் சொன்னான்.

"இந்திரா... நீ தலைவன்! தலை இருப்பதால் மட்டும் தலைமைப் பொறுப்பு வந்து விடுவதில்லை. தலையைத் தாங்கும் உடல் போல, நீ தேவர்களைத் தாங்கினால் தான் நீ கடமையைச் சரியாகச் செய்தவனாவாய். உன் தவறால் எத்தனை பெரிய விளைவு உண்டாகி விட்டது பார்த்தாயா?" என்று கேட்க, இந்திரனும் தவறை ஒப்புக் கொண்டான்.

"மகா பிரபு... இது எனக்கு மட்டுமல்ல. இனி வரும் காலத்தில் சகலருக்கும் ஒரு பாடமாக இருக்கட்டும். நான் எக்காலத்திலும் குரு நிந்தனை செய்ய மாட்டேன். உல்லாச கேளிக்கையில் ஈடுபட மாட்டேன்," என்றான்.

கண்களை மூடித் திறந்த மகாவிஷ்ணு," விருத்திகா சுரனை எதிர்த்து நீ வெல்வதே இதற்கான பரிகார மாக அமையும். வஜ்ராயுதத்தை விட ஆயிரம் மடங்கு

பலம் வாய்ந்த ஆயுதம் இப்போது தேவை. அதனை தேவர்களாகிய நீங்களே செய்வது தான் உங்களுக்கும் பெருமை.

விருத்திகாசுரன் வேள்வித்தீயில் தோன்றியவன். நெருப்பை நீர் அணைப்பது போல், வேள்விப்பயனை அதற்கு மேலான தியாகத்தால் மட்டுமே வெல்ல முடியும். இதற்கு தியாக உள்ளமே முதல் தேவை. அதன் பிறகு தான், ஆயுதத்துக்கான மூலத்தை தேடிச் செல்ல இயலும்," என்று பீடிகையுடன் பேசிய விஷ்ணுவைக் கண்ட தேவர்கள் புரியாமல் விழித்தனர்.

புன்னகைத்த விஷ்ணு, "நீங்கள் ததீசி என்னும் முனிவரிடம் செல்லுங்கள். அவர் தன்னலம் இல்லாதவர். பாற்கடலைக் கடைந்த போது தேவர், அசுரர்கள் தங்களிடமிருந்த ஆயுதங்களை எல்லாம் அந்த முனிவரிடம் அளித்தனர். அதன் பின் அமிர்தம் பெற்ற அவர்கள், ஆயுதம் இனி தேவை யில்லை எனக் கருதி விட்டு விட்டனர். ஆபத்தான அந்த ஆயுதங்களை தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்ட முனிவர், அவற்றைத் தன் முதுகெலும்பாக்கி கொண்டார். அந்த எலும்பினால் செய்யப்படும் ஆயுதத்தை விருத்திகாசுரனால் வெல்ல முடியாது" என்று கூற இந்திரன் தயங்கி நின்றான்.

"என்ன தயக்கம் இந்திரா?" "ஒரு முனிவரை அழித்து ஆயுதம் செய்யலாமா?"

"ததீசி போன்ற தியாக மனம் படைத்தோருக்கே வேள்விச் சக்தி கட்டுப்படும். அதனால் தான், இப்போதைய முதல் தேவை தியாகம் என்று கூறினேன்" என்றார் விஷ்ணு.

இந்திரனும் ததீசி முனிவரிடம் செல்ல, அவரும் மகிழ்ச்சியுடன் தன் முதுகெலும்பைத் தர முன் வந்தார். யோக நிலையில் அமர்ந்து தன் உயிரை உடம்பிலிருந்து பிரித்தார். அந்த உயிர் அழியாத சொர்க்கத்தை அடைந்தது. உடலை அக்னியால் சாம்பலாக்க, அதில் முதுகெலும்பு வைரமாக ஜொலித்தது. விஸ்வகர்மா மூலம் அதைப் புதிய ஆயுதமாக்கிப் புறப்பட்டான் இந்திரன்.

அந்த ஆயுத பலத்தை தாங்க முடியாத விருத்திகாசுரன் கடலுக்குள் ஒளிந்து கொண்டான். அந்த ஆயுதத்திடம் இருந்து தப்பிக்க, ஒரு மறைவான இடத்தில் மூச்சை அடக்கி தவத்தில் ஆழ்ந்தான். அவனைக்கண்டுபிடிக்க முடியாத இந்திரன், பிரம்மாவிடம் முறையிட்டான்.

"இந்திரா... நீ இப்போதே போய் அகத்திய முனிவரைப் பார். அவர் மனம் வைத்தால் கடல் நீர் முழுவதையும் குடித்து விட முடியும். கடல் வற்றினால் அசுரன் புலப்படுவான்" என்றார்.

இந்திரனும் அகத்தியரின் உதவியை நாடினான். அவரும் சம்மதித்து - கடல்நீரை * குடித்தார். விருத்திகாசுரன் கண்ணுக்குப் புலப்பட, புதிய ஆயுதத்தால் இந்திரன் கொன்றான். தவத்தில் இருந்தவனைக் கொன்றதால், இதுவும் பிரம்மஹத்தி தோஷமாக மாறி விரட்டியது. இந்திரனின் இந்த நிலை, நகுஷன் என்ற அசுரனை வேறு விதமாகத் தூண்டியது.

பிரம்மஹத்திக்கு ஆளானதால், இந்திரனால் தேவர்களுக்கு தலைமை தாங்க இயலாது என்பதை உணர்ந்த அவன், இந்திரலோகத்தை தன் வசமாக்கியதோடு, இந்திராணியையும் தனது அடிமை என அறிவித்தான்.

அத்துடன் நூறு அஸ்வ மேத யாகங்களையும் செய்து முடித்தான். இதை அறிந்த இந்திராணி மனம் கலங்கினாள்.

ஒருபுறம் தன் கணவன் இந்திரன் சாபப்பட்ட நிலை... மறுபுறம் இந்திரலோகமே அசுரமயமாகி விட்ட கொடுமை... இதற்கு ஒரே தீர்வாக, வியாழ குருவின் உதவியை நாடிச் செல்ல முடிவெடுத்தாள்.

ஏனென்றால், இவ்வளவும் குருவை அலட்சியப்படுத்தியதால் தானே விளைந்தது...! இந்திராணி கண்ணீர் மல்கி, எங்கிருந்தாலும் நேரில் பிரசன்னமாகும் படி வியாழகுருவை வேண்டினாள். தவறினால், தன்னை நெருப்பில் அர்ப்பணம் செய்ய முடிவு செய்தாள்.

இந்திராணியின் இந்த முயற்சி குருவைக் கொண்டு வந்து அவள் முன் நிறுத்தியது. அவளுக்காக இந்திரனை மன்னிக்கத் தயாரானார் அவர். இதற்குள் நகுஷன் இந்திர பதவி ஏற்க தயாரானான். அவனை அழைத்து வர சொர்ணப் பல்லக்கு தயாராகி விட்டது. இதை அறிந்த இந்திராணியின் மனம் பதைத்தது. அப்போது வியாழ குரு ஒரு உபாயம் செய்தார். அது...

அசுரன் நகுஷனை இந்திரலோக தர்பார் மண்டபத்துக்கு சப்த ரிஷிகளே பல்லக்கில் தூக்கி வர வேண்டும் என்ற உபாயத்தை வியாழ குரு செயல்படுத்த தயாரானார். அப்படி வந்தால் தான் இந்திராணி அவனை ஏற்பாள் என்று நகுஷனுக்கு கூறப்பட்டது. அவனும் உற்சாகமானான்.

ரிஷிகளை பல்லக்கு தூக்கச் சொல்வதை விட, வேறு அவமானம் இருக்க முடியாது. பல்லக்கு என்பது இன் பத்தின் குறியீடு. அதில் ஒருவரே அமரலாம். ஆனால், அதைத் தூக்க நான்கு பேர் வேண்டும்.

பூவுலகில் இன்பம் அனுபவிப்போர் பல்லக்கில் இருக் கும் ஒருவரைப் போல ஒரு பங்கே... அதை அளிப்பதற் காக துன்பப்படுகிறவர்கள் தான் நான்கு பங்காக உள்ள னர்.

சப்தரிஷிகளும் தேவர்களின் நன்மைக்காக நகுஷனைச் சுமக்கத் தயாராயினர். அகத்தியர் முன்வந்து பல்லக் கைத் தூக்கினார். உயரம் குறைந்தவரான அவர், பல் லக்கின் நடுவில் நிற்க நேர்ந்தது. பல்லக்கு புறப்பட்டது. அகத்தியருக்கு பல்லக்கின் மூங்கில் சரியாக வசப்படாத தால், அவர் தடுமாறியபடி நடந்தார். இதனால் பல்லக்கு குலுங்கியது. நகுஷன் கோபத்துடன், திரைச்சீலையை விலக்கிப் பார்த்தான். குலுங்கலுக்கு அகத்தியரே கார ணம் என்பதை அறிந்து கொண்டு, 'சர்ப... சர்ப...' என்று கத்தினான்.

அதாவது, பாம்பு போல வளைந்து போக வேண்டாம். நேராக வேகமாக போக வேண்டும் என்னும் பொருளில் கத்தினான்.

பல்லக்கு தூக்கிப் பழக்கம் இல்லாத சப்தரிஷிகள் நிதா னமாகவே சென்றனர். நகுஷனின் கோபம் அதிகரித் தது. உடனே தன் இடதுகாலால் அகத்தியரின் தோளில் உதைத்த நகுஷன், 'சர்ப.சர்ப...' என்றான். அகத்தியர் கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டார்.

ரிஷிகளுக்குக் கோபம் வரக்கூடாது. அப்படி வந்தால் அது மோசமான விளைவைத் தரும். அகத்தியர் பல் லக்கை விட்டு விலகியதோடு, மற்றவர்களையும் தடுத்து நிறுத்தினார்.

கோபத்துடன், "அரக்கப்பதரே! என்னை எட்டி உதைத்த உன்னை சபிக்கிறேன். உன் வேள்விப்பயன் பயனில் லாமல் போகட்டும். பாம்பு போல நாங்கள் செல்வதாக கோபப்பட்ட நீ, அந்த பாம்பாகவே ஆகக் கடவாய்" என் றார்.

அவ்வளவு தான்! நகுஷன் பாம்பாக மாறினான்.

தாயம் விளையாடும் பரமபத கட்டத்தில் இவனே பெரிய பாம்பாக நிற்பவன். உச்சிக்கே சென்றாலும், இவன் வசம் சிக்கி விட்டால் ஆரம்பித்த இடத்துக்கே வந்து விட வேண்டியது தான். நகுஷனும் இந்திரப்பதவியை அடை யும் முன் ஆத்திரத்தால் அதை இழந்து பாம்பானவன் தானே?

எப்படியோ நகுஷன் இந்திரனாகும் ஆபத்து குரு பக வனால் நீங்கியது. அகத்தியர் நகுஷனைச் சபிக்க எல் லாம் நலமானது. அதன் பின் ஒளிந்திருந்த இந்திரனும் திரும்ப வந்து வியாழ குருவிடம் மன்னிப்புக் கோரி இந் திரபதவியை அடைந்தான்.

அகத்தியர் மட்டும் இல்லாவிட்டால், தேவர் உலகமே ஸ்தம்பித்திருக்கும். அவராலேயே கடலைக் குடித்து விருத்திகாசுரன் ஒளிந்திருந்த இடத்தைக் காட்ட முடிந் தது. அவரே நகுஷனிடம் இருந்தும் தேவர்களைக் காத் தார்.

அகத்தியர் இப்படி சாதித்தவை பல!" என்று லோமசர் கூறவும் தர்மன் உள்ளிட்ட பாண்டவர்கள் பெருமூச்சுடன் 'அப்பாடா' என்றனர்.

'உருவில் சிறியவர் என்றாலும், கருவில் திருவுடையாயும், அருளில் மலை போல் உயர்ந்தவராயும் அகத்தியர் விளங்குவதை புரிந்து கொண்டோம்," என்றான் சகாதேவன். "நீங்கள் அவரை மலையோடு ஒப்பிடவும் தான், விந்தியமலையை அவர் தடுத்த சாகச நிகழ்வும் என் நினைவுக்கு வருகிறது" என்றார் லோமசர்.

"விந்திய மலையை தடுத்தாரா... எப்படி? எதற்காக?" என்று வேகமாக கேட்டான் சகாதேவன். லோமசரும் கூறத் தொடங்கினார். முந்திய யுகங்களில் எல்லாம் மலைகளுக்கு பறக்கும் சக்தி இருந்தது. ஏதோ ஒரு தேவசக்தியோ அல்லது அசுரசக்தியோ மலைகளின் மேல் தங்களின் ஆதிக்கத்தை செலுத்தியதால் அவை இப்படி இருந்தன. அந்த வகையில், மேருமலையை தேவ சக்திகள் ஆட்சி செய்தன.

இதனால் சூரியனும் அதைச் சுற்றி வந்தான். இது ஒரு பிரதட்சண வழிபாடு போல் ஆயிற்று. இதைக் கண்ட விந்திய மலைக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. அசுர சக்திகளின் ஆதிக்கத்தில் இருந்தால் தாழ்வு மனப்பான்மை மிகுதியாக இருக்கும். விந்தியமலை தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி, சூரியன் தன்னையும் வலம் வந்து வணங்க வேண்டும் என்று விரும்பியது. ஆனால், சூரியன் அதன் விருப்பம் அறிந்து சிரித்தான்.

"விந்தியனே! பிரபஞ்ச விதி இது! தேவசக்திகளுக்கு உட்பட்ட மலைகளை வலம் வந்தால் தான் இரவு, பகல்

சீராக உண்டாகும். உயிர்கள் நலமாக பூமியில் வாழும். இது புரியாமல் தவறாக எண்ணுகிறாய்," என்றான் சூரியன்.

இதனால் விந்தியமலைக்கு கோபம் ஏற்பட்டது. மேருமலையை விட தான் - உயரமானவன், வலிமை வாய்ந்தவன் என்பதைக் காட்டுவதற்காக பெரிதாக வளரத் தொடங்கியது. சூரியனின் சஞ்சாரம் தடைபட்டு பூமியில் இருள் சூழ்ந்தது. உயிர்கள் உலகம் அழிந்து விடுமோ என அஞ்சின.

தேவர்கள் திருமாலைச் சரணடைந்து வேண்டினர். அவர் அகத்தியர் உதவியைப் பெறக் கட்டளையிட்டார். அகத்தியரும் விந்தியமலையைக் கட்டுப்படுத்தப் புறப்பட்டார்.

"விந்தியனே! ஏன் இப்படி வளர்ந்து கொண்டே போகிறாய்?"

"சிகரங்களில் நானும் சளைத்தவன் இல்லை என்பதை உணர்த்த தான் அகத்தியரே! "

"நல்லது. நான் தென்பகுதிக்குச் செல்கிறேன். எனக்கு வழி விடு "

"என்னை நீங்கள் இப்படி சோதிக்கலாமா?"

"நான் திரும்பிய பிறகு நீ விருப்பம் போல வளர்ந்து கொள் "

"சரி அகத்தியரே "

"சரி என்று கூறி விட்டு, நான் சென்ற பின் வளர்ந்து விட்டால் சாபத்திற்கு ஆளாகாதே" என்ற அகத்திய ருக்கு விந்தியமலை வழி விட்டது. இதன் பின் சூரியனின் செயல்பாடு தடையில்லாமல் நிறைவேறியது." என்றார் லோமசர்.

இதைக் கேட்ட பீமன், "அகத்தியர் இதன் பின் திரும்பி வந்தாரா" என்றான்.

"விந்தியன் சிந்திக்கட்டும் என்ற எண்ணத்தில், அகத்தி யர் தென்பகுதியில் நீண்டகாலம் தங்கி விட்டார். மகா ஞானியான அவர் கடல் நீரைக் குடித்ததால், அசுரர்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டனர்," என்ற லோமசரை, சகாதேவன் இடைமறித்தான்.

"அகத்தியர் கடலைக் குடித்தார் என்றீர்கள். கடல் இல் லாவிட்டால் பூமியில் உயிர்கள் எப்படி வாழ முடியும்? நீரின்றி அமையாதே உலகு?" என்று கேட்டான்.

சகாதேவன் கேட்ட அந்தக் கேள்வி லோமசரை, வற்றிய சமுத்திரம் எப்படி நிரப்பப்பட்டது என்னும் சம்பவத்துக் குள் இழுத்துச் சென்றது.

கடல் நீர் இல்லாததால் மழை இல்லாமல் பூலோகம் வறண்டது. இதற்கு தீர்வு காண தேவர்கள் பிரம்மாவின் உதவியை நாடினர். "படைப்புக்கடவுளே! அசுரனை அழிக்க அகத்தியரைக் கொண்டு கடலைக் குடிக்க வைத்தீர்கள். அதனால், பூலோகமே பாலை வனமாகி விட்டது. வெப்பம் தகிக்கிறது. உயிர்கள் வாழ வழியில் லாமல் தவிக்கின்றன. மீண்டும் கடலை பெருகச் செய்து

உயிர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும்," என்று வேண்டினர்.

அவர்களிடம் பிரம்மா, "தேவர்களே! காரணமில்லாத காரியம் இல்லை. அதன் அடிப்படையில் எது நடக்க வேண்டுமோ அது நடந்தது. இனியும் அதன்படியே நடக்கும்.

பகீரதன் என்னும் உத்தமனால் பூவுலகில் நீர்த்தேவை பூர்த்தியாகும். நீங்கள் உங்கள் கடமையைச் சலிப்பின்றி செய்யுங்கள்," என்றார். தேவர்களும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டனர். "பாண்டவர்களே! பகீரதனால் நீர்வளம் உண்டான வரலாற்றைக் கூறுகிறேன்.

கேளுங்கள். இந்த வரலாறுக்கு முன்னதாக சகரன் என்னும் இஷ்வாகு குலத்து மன்னன் குறித்து அறிந்து கொள்வது அவசியம். இவன் பகீரதனின் முப்பாட்டன். சகரனுக்கு வைதர்ப்பி, சைப்யை என்று இரு மனைவிகள். இருவருக்கும் புத்திரப்பேறு வாய்க்கவில்லை. இதனால், சகரன் சிவனை நோக்கி தவமிருந்தான்.

ஈசனும் காட்சி தந்து வரம் அளித்தார். எப்படித் தெரியுமா? லோமசர் இடைவெளி விட, பாண்டவர் முகங்களில் ஒரு எதிர்பார்ப்பு! "இரு மனைவிகளில் ஒருத்திக்கு பூரணமாக ஒரு பிள்ளை பிறக்கும். ஆனால், அவன் அசுர குணம் கொண்டிருப்பான். இன்னொருத்திக்கு ஒன்றல்ல... இரண்டல்ல... 60 ஆயிரம் பிள்ளைகள் பிறப்பர். இவர்கள் அனைவரும் ஒரே நாளில் ஒரே பொழுதில் நாசம் அடைவர். உன் முன் பிரசன்னமான இந்த கால கட்டத்தில் இவ்வாறே வரம் தர இயலும்," என்று கூறியவராக சிவன் மறைந்தார்.

சகரனும் பிள்ளைகளின் பிறப்பை எதிர்நோக்கி காத்தி ருந்தான். இருவரில் ஒருத்தி சுரைக்காய் போல் ஒரு உருவத்தைப் பெற்றாள். இன்னொருத்திக்கு பூரண மான பிள்ளை பிறந்தது. குறைப்பிரசவம் போன்ற சுரைக் காயை வீசி எறிய முற்பட்டபோது வானில் அசரீரி ஒலித் தது.

"வீசி எறியாதே... இதனுள்60 ஆயிரம்ஜீவ அணுக்கள் உள்ளன. இதைப்பிளந்து இதன் அணுக்களைநெய் யோடு கலந்து 60 ஆயிரம் குடங்களில் வைத்தால், பிள் ளைகள் உரு கொள்வார்கள்," என்றது.

அதன்படியே செய்ய பிள்ளைகள் தோன்றினர். இவர் கள் 'சகர புத்திரர்' என அழைக்கப்பட்டனர். பூரணமாக பிறந்த பிள்ளையின் பெயர் 'அசமஞ்சன்'. பிள்ளைகள் அனைவரும் நல்ல விதமாய் நடந்து கொள்ளாது அட்ட காசம் புரிந்தனர். இப்படி பிள்ளைகள் பிறந்ததற்கு, இல் லாமல் போனால் நல்லது என உலகத்தில் மற்றவர்கள் எண்ணினர்.

சகரனோ, அவ்வளவு பேரும் ஒரே சமயத்தில் நாசமடை வர் என்று சிவன் சொன்னதை எண்ணிப் பார்த்தான். பாசம் மேலிட்டதால், அவர்கள் செய்த அட்டகாசத்தை பொருட்படுத்தவில்லை.

இந்நிலையில், அசமஞ்சனுக்கு திருமணம் முடிந்தது. அம்சுமான் என்ற பேரப்பிள்ளை பிறந்தான். சகரன் பூலோகத்தில் பெரும் புகழும், சொர்க்கத்தில் நிலை யான இடமும் பெற விரும்பி அஸ்வமேதயாகத்தை தொடங்கினான்.

அதற்காக ஒரு உயர் ஜாதி வெள்ளைக் குதிரையை சகல தேசங்களுக்கும் அனுப்பி வைத்தான். அஸ்வ மேதயாகம் செய்வோர் இப்படி அனுப்புவது மரபு. அந் தக் குதிரை சகரனின் நாட்டை விட்டு, கடல்வற் றிய பாகத்தை அடைந்தது. அதன் பின் குதிரையைக் காணவில்லை. குதிரை வராவிட்டால், அஸ்வமேதயா கம் நின்று போவதுடன், யாகம் நடத்தும் மன்னனின் பெருமை அனைத்தும் கெட்டுப் போகும்.

எனவே, தன் 60 ஆயிரம் பிள்ளைகளுடன் அதைத் தேடத் தொடங்கினான். எப்பாடு பட்டாவது குதிரையு டன் தான் வர வேண்டும் என்று கட்டளையிட்டான். அவர்கள் பாலைவனப்பகுதியை அடைந்தனர். குதிரை யின் குளம்படித் தடயம் வழிகாட்ட, பாலைவனத்தின் நடுவிலுள்ள பிளவில், கபிலர் என்னும் முனிவர் சகல ஜீவராசிகளுடன் தவம் புரிவதைக் கண்டனர். அவரது பர்ணசாலை லாயத்தில் அவர்களது குதிரை கட்டப்பட் டிருந்தது. அதை அவிழ்த்து தங்களுடன் அழைத்துச் செல்ல முயன்றனர்.

கபில முனிவர் அவர்களைத் தடுக்க முயன்றார். ஆனால், அவர்கள் அவரை அலட்சியப்படுத்தினர். விஷ்ணுவின் அம்சமான கபிலர், கடும் கோபத்தோடு பார்த்திட, அவ்வளவு பேரும் சாம்பலாயினர். இதை அறிந்த சகரன் மனம் வருந்தினான்.

உடனே பேரனான அம்சுமான், குதிரையோடு நிச்சயம் திரும்பி வருவதாகச் சபதம் செய்து விட்டு, கபிலரைக் காணப் புறப்பட்டான். முனிவரின் திருவடியில் விழுந்து ஆசி பெற்றான். கபிலரும் அம்சுமானின் பணிவைக் கண்டு, 'உனக்கு விருப்பமானதைக் கேள்' என்றார்.

அப்போது அவரிடம், "நான் சகரனின் பேரன். என் தாத்தாவின் விருப்பத்தை நிறைவேற்ற உதவுங்கள். யாகத்தை நடத்த குதிரையை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்," என்று வேண்டினான்.

கபிலரும் குதிரையை அவன் வசம் ஒப்படைத்தார். குதிரையுடன் வந்த அம்சுமான் அஸ்வமேதயாகத்தை நிறைவேற்றினான். இதன் பயனாக சகரன் இறந்து சொர்க்கத்தை அடைந்தான். ஆனால், அவனது 60 ஆயிரம் பிள்ளைகளும் கபில முனிவரால் சுட்டெரிக்கப்பட்ட நிலையில், ஆத்மாக்களாக அலைந்தனர்.

கபிலரிடம் இருந்து குதிரையைக் கொண்டு வந்த சகரனின் பேரனான அம்சுமான் இஷ்வாகு குலத்தின் மன்னராக ஆட்சி செய்தான். அவனுக்கு பிறந்த பிள்ளையான திலீபன் ஆட்சிக்கு வரவும், அம்சுமான் சொர்க்கம் அடைந்தான். திலீபனின் மகனே பகீரதன். இந்த சமயத்தில் பூமியில் கடல் பெருகாமல் நீரின் தேவை அதிகரித்தது. உயிர்கள் செய்வதறியாமல் தவித்தன.

திலீபன் ராஜரிஷிகளை அழைத்து ஆலோசித்தான்.

அவர்கள், "திலீபா உன் முன்னோர்களில் 60 ஆயிரம் பேர் கபில முனிவரின் கோபத்திற்கு ஆளாகி சாம்பலாகி விட்டனர். பாலைவன வெளியில் சாம்பல் திட்டுகள் இன்னும் அப்படியே உள்ளது. அவர்கள் ஆத்மா சாந்தியடைய அங்கே நீர் பெருக வேண்டும்.

அதிலும் புண்ணிய நதியான கங்கை, தேவலோகத்தை விட்டு பூமியில் பாய்ந்து அந்த சாம்பல் திட்டைக் கரைத்தால் அவர்கள் சாந்தி பெற்று சொர்க்கம் சொல்வர்," என்

றனர். இதையறிந்த பகீரதன் ராஜரிஷிகளின் உதவியை நாடினான்.

"பூமியில் கங்கை பாய வேண்டும் என்றால் நீ தவமிருந் தாக வேண்டும். வேறு எது செய்தாலும் இந்த துயரம் தீராது. அதுவரை உங்கள் முன்னோர்களின் ஆத்மா தவித்தபடியே இருக்கும்," என்றனர். மகனை ராஜகு மாரனாக்கிப் பார்க்காமல், தவம்புரியச் சொல்வதுதிலீப னுக்கு பிடிக்கவில்லை. என்ன செய்வதென தெரியா மல், இதை சிந்தித்து சிந்தித்தே திலீபனுக்கும் உயிர் பிரிந்தது.

அதன் பின் பகீரதன், அனைத்திற்கும் ஒரே தீர்வு தவம் செய்வது தான் என்ற முடிவுக்கு வந்தான். நாட்டை மந் திரிகளிடம் ஒப்படைத்து விட்டு, தவம் செய்வதற்கு இம யமலையைத் தேர்ந்தெடுத்தான். வெள்ளிப்பனி மலைச் சிகரத்தை அடைந்தான்.

பகீரதனின் கடும் தவம் தொடங்கியது. ஒரு வருடம்... இரு வருடம் அல்ல...! ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந் தது. பனிமலையின் குளிரைப் பொருட்படுத்தாமல், ஒற் றைக்காலில் நின்று அவன் மேற்கொண்ட தவத்தின் சக்தி, இமயத்திற்கு மாதாவான கங்கையை உலுக்கத் தொடங்கியது.

மானிட வடிவம் தாங்கிய கங்கை, பகீரதனுக்கு நேரில் காட்சியளித்தாள். "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டாள்.

"நீ தான் வேண்டும். பூவுலகில் நீ நடந்து வந்தால் தான், என் முன்னோர்களுக்கு நற்கதி உண்டாகும். என் முன்

னோர் போல் உள்ள மற்றவர்களும் உன்னால் கடைத் தேறுவர். அது மட்டுமல்ல. வற்றிப் போன கடலும் பெரு கும். கடல் பெருகினால் மழை பொழியும். மழைவளம் சிறந்தால் பூமி செழித்து உயிர்கள் நலம் பெறும். மனிதர் களும் பாவத்தைச் சுமக்காமல் உன்னிடம் ஒப்படைத்து விட்டு நற்கதி பெறுவர். இத்தனை நன்மைகளும் நிகழ நீ பூமிக்கு வரவேண்டும் தாயே..." என்றான் பகீரதன்.

அதைக் கேட்ட கங்கா மாதா சிலிர்த்தாள். அவள் விழிக ளில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது.

"பகீரதா... துளியும் சுயநலம் இல்லாமல் உன் முன் னோர்கள், பூவுலக உயிர்கள் அனைவருக்காகவும் நீ செய்த தவமும், கேட்ட வரமும் என்னை மகிழ வைத்து விட்டது. உனக்காக பூமியில் தவழவும் சித்தமாகி விட் டேன். ஆனால், நான் பொங்கிப் பெருகி வரும் போது, என்னைத் தாங்கும் வலிமை பூமிக்கு இல்லையே! அது பிளவுபட்டு, நான் பாதாள உலகை சென்று சேர நேரி டும். என்னைத் தாங்கிப் பிடித்து வழிப்படுத்த சிவன் ஒரு வரால் மட்டுமே முடியும். நீ அவர் குறித்து தவம் செய்யத் தொடங்கு," என்றாள்.

அடுத்த நொடியே பகீரதன் சிவனைக் குறித்து தவத் தில் ஆழ்ந்தான். அதிகம் சோதிக்க விரும்பாமல், சிவன் விரைவில் காட்சியளித்து, கங்கையைத் தலையில் தாங்கி பூமியில் விழச் செய்ய வரம் அளித்தார். அதன்படி கங்கையும் பொங்கி எழுந்தாள்.

சிவபெருமான் ஜடை மேல் தாங்க, அங்கிருந்து வழிந் தோடி, பத்ரிநாத் என்னும் தலத்தில், திருமாலின் பாதங் களை வருடிக் கொண்டு ஓடத் தொடங்கினாள். அப்

படியே மூன்று கூறாக பிரிந்தோடிய கங்கை, கடைசியில் கடலை அடைய சமுத்திரம் பெருகியது. கங்கையின் கரையில் பகீரதன் பிதுர் தர்ப்பணத்தைச் செய்ய, 60 ஆயிரம் பிதுர்களும் மோட்ச கதியை அடைந்தனர். பூலோகத்திலுள்ள ரிஷிகள் உள்ளிட்ட அனைவரும் தங்களுக்குரிய பிதுர் கடமையைச் செய்து பகீரதனை வாயார வாழ்த்தினர்.

அகத்தியரில் தொடங்கி, பகீரதன் வரையில் முடித்த லோமச் முனிவரின் பேச்சு பாண்டவர்களுக்கு தெளிவைத் தந்தது.

"இந்த பூமியில் எத்தனை விதமான வாழ்க்கைப் பாடுகள்? எத்தனை யோகிகள்...! எத்தனை ஞானிகள்...!" என்றான் தர்மன்.

"அது மட்டுமா? பகீரதன் போல தன்னலம் கருதாத ஒருவனும் பூமியில் இருக்க முடியுமா? வானுலக நதியை பூமிக்கு கொண்டு வந்து விட்டானே...! அடேயப்பா! எப்பேர்பட்ட முயற்சி..." என்று வியந்தான் பீமன்.

"லோமசரே! பூமியில் கங்கை பாயவும் பூமியில் எல்லாம் சரியாகிவிட்டதா?" என்று கேட்டான் நகுலன்.

"சரியாகாமல் போகுமா? பூவுலகமே பகீரதனால் புத்துயிர் பெற்றது. கடின முயற்சி செய்பவர்களுக்கெல்லாம் பகீரதன் முன் உதாரணம் ஆனான்.

இதைத்தான் 'பகீரத பிரயத்தனம்' என்பார்கள். இருப்பினும், அசுர சக்திகள் இருப்பதால் அவ்வப்போது நல்ல விஷயங்களுக்கு சோதனை வரத் தான் செய்தது." என்றார் லோமசர். பகீரதனின் முயற்சியால் பூவுலகுக்கு

கங்கை வந்த விதத்தை, பாண்டவர்களிடம் சொல்லி முடித்தார் லோமசர். அப்போது அவர்கள் ரிஷபகூட மலையை அடைந்திருந்தனர். அங்கே நந்தை, அபர நந்தை என்னும் நதிகள் ஓடிக் கொண்டிருந்தன. அவற்றைக் கண்ட லோமசர் பெருமூச்சு விட்டார்.

இதைக் கவனித்த பீமன் மலையின் பின்னணியில் ஏதோ வரலாறு இருப்பதை அனுமானித்தான். அது உண்மை என்பது போல லோமசரின் பேச்சும் அமைந்தது.

"பாண்டு புத்திரர்களே! வனவாச காலம் உங்களுக்கு ஞான விலாச காலமாக அமைந்து விட்டது. இந்த ரிஷிப கூட மலை பற்றியும், நந்தை, அபர நந்தை நதிகள் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள்.

ரிஷபர் என்னும் முனிவரின் பெயராலேயே இந்த பர்வதம் ரிஷப கூட பர்வதம் என்றானது. இங்கே உற்பத்தியாகி ஓடி வரும் நந்தா நதியில் நீராடினால் நாம் செய்த அத்தனை பாவங்களும் நாசமாகும்," என்ற லோமசரை நகுலன் இடையிட்டு தடுத்தான்.

"முனிவரே! நதிகளில் நீராடினாலே பாவம் போய் விடுகிறது என்றால் அது எவ்வாறு என்று விளக்கமாக கூறுங்கள். இதற்கு முன்பும் பல தீர்த்தங்களில் நாங்கள் நீராடிய போது இதையே கூறினீர்கள். பொதுவாக ஓடி வரும் எந்த நதியில் குளித்தாலும் பாவம் போய் விடுமா? பாவம் செய்திராத மகாத்மாக்கள் இது போன்ற நதிகளில் குளித்தால், அவர்களுக்கு எப்படிப்பட்ட நன்மை உண்டாகும்? இதற்கு நீங்கள் விளக்கமாக பதில் கூறுங்கள்," என்றான்.

"அருமையாகக் கேட்டாய் நகுலா! இப்படித் தான் கேள்விகள் இருக்க வேண்டும். ஓடி வரும் எந்த நதியில் குளித்தாலும் பாவம் போகும் என்பது ஒரு அடிப்படையான உண்மை. பாவம் என்பது ஒரு வித உணர்வு நிலை இதில் தெரிந்து செய்வது, தெரியாமல் செய்வது என்று இருவித தன்மைகள் உள்ளன. இதில் தெரியாமல் செய்தவை குளத்து நீரில் குளித்தாலும் போய் விடும். தெரிந்து செய்தவை நம்மை விட்டு நீங்கிட கங்கை, நந்தை போன்ற நதிகளில் உருக்கமான பிரார்த்தனையுடன் மூழ்கி எழ வேண்டும்.

நதி என்பது இயக்க சக்தியும், விசைப்பாடும் கொண்டது. கடலோடு தொடர்புடையதால் நதி கடலின் ஒரு பகுதி என்றும் கூறலாம். கடலே உலகில் பெரியதும் வலியதுமாகும். நாம் மனம் ஒன்றி அவற்றில் மூழ்கி எழும் போது, அதன் அங்கமாகி விடுகிறோம். அந்த நேரத்தில் அந்த நதி நீரின் விசைப்பாடும் (சக்தி), அதில் கலந்துள்ள ஆயிரக்கணக்கான முனிவர்களின் மந்திர சக்தியுமே நம் உணர்வு பூர்வமான பாவங்கள் தீர காரணமாகின்றன. குறிப்பாக, ரிஷப் கூட மலை மீது சாமான்யமான ஒருவனால் ஏற முடியாது. அப்படி ஏறினால் அவன் மீது கல் விழுந்து மரணம் அடைவான். கடுந்தவம் புரியும் தவசிகள் மட்டுமே இதில் ஏற முடியும். அவர்களும் கூட இங்கு வாய் பேசாது மவுனியாகவே செல்வர். இங்கு வாயுவான காற்றும் கூட சப்தமில்லாமல் மென்மையாக வீசும்.

ரிஷப முனிவர் இந்த மலைக்கு இப்படி விதித்திருக்கிறார். எனவே, இந்த மலையைத் தேடி வந்து தேவர்களும், ரிஷிகளும் தவம் புரிகின்றனர். அவர்களின் தவ சக்தியோடு, அவர்கள் மீது பொழியும் மழை நீரே நந்தா,

அபரநந்தாவாக ஓடி வருகிறது. இதுவே இதன் வரலாறா கும்," என்றார்.

பாண்டவர்கள் அதைக் கேட்டு இரு நதிகளிலும் பரவ சத்துடன் நீராடி ரிஷப் கூட மலையை வணங்கினர். அப் போது சகாதேவன் இடையிட்டு, "மகாமுனியே! இன்று இந்த நதியானது பெருக்கெடுத்து ஓடுகிறது.

ஆனால், அசுர சக்திகளால் இந்த பூமியே வறண்டு போனதாக கூறினீர்கள். அப்போது மக்கள் எப்படி தங்க ளைக் காத்துக் கொண்டனர். திரும்பவும் நீர்வளம் எவ் வாறு உண்டானது?" என்று கேட்டான்.

"சொல்கிறேன்...! மழைக்கு அதிபதியான இந்திரன், விருத்திகாசுரனால் துன்பப்பட்டதும், ததீசி முனிவரின் தியாகத்தால் அவன் அழிந்த வரலாறையும் நீங்கள் அறி வீர்கள் தானே! - இந்திரனின் ஏவலுக்கு கட்டுப்பட்ட வருணனாலும் அப்போது செயல்பட முடியவில்லை. அப்போது ரிஷ்ய சிருங்கர் என்னும் முனிவரே மழை பொழிவுக்குக் காரணமாக விளங்கினார்" என்ற லோம சர், ரிஷ்ய கூட மலை, நந்தா, அபரநந்தா நதிகளைப் பற் றிக் கூறி முடித்து ரிஷ்ய சிருங்க முனிவரின் வரலாற்றை ஆரம்பித்தார்.

"ரிஷ்ய சிருங்கர்... இந்த பெயருக்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டாள் திரவுபதி.

"இதற்கு பெரும் பொருள் இருக்கிறது தாயே! காஸ் யபர் என்னும் மகரிஷிக்கு பிள்ளையாக அவதரித்தவர் இவர். இவரது தலையில் மிருகம் போல கொம்பு ஒன்றும் இருந்தது! "

"என்ன... தலையில் கொம்பா "

"ஒரு முனிவருக்கும், ஒரு பெண் மானுக்கும் பிறந்த காரணத்தால் மான் இனத்துக் கொம்பு இவர் தலையில் அமைந்தது..."

"அது எப்படி ஆணும், மானும் இணைந்து குழந்தைப் பேற்றை பெற முடியும்?"

"நல்ல கேள்வி... உண்மையில் ஒரு தேவ மங்கையே பிரம்ம சாபத்தால் பெண்மானாகப் பிறந்திருந்தாள். ஒரு வீரியமுள்ள ஆணோ அல்லது ஆணின் வீரியமோ அவளை அடையும் போது சாப விமோசனம் ஏற்பட்டு உலகமே வியக்கும் விதத்தில் ஒரு பிள்ளை உண்டாகும் என்பது அவளின் பின்னால் உள்ள நிகழ்வாகும் "

"அடேயப்பா... விந்தையாக இருக்கிறது... சாபத்தால் மான் வடிவெடித்த பெண்ணுக்கு காஸ்யப முனிவரின் சம்பந்தம் எப்படி உண்டானது?"

"காஸ்யபர் ஒருநாள் குளிர்ந்த நீரில் தவத்தால் ஏற்பட்ட உஷ்ணத்தை தன் வீரியத்தோடு வெளியிட்டார். அப்போது தாகம் தீர்க்க வந்த பெண்மான் ஒன்று குடிக்க நேர்ந்தது. அதனால், சாபநிவர்த்தி பெற்று கருவைச் சுமக்கும் பாக்கியம் அடைந்தது. நீர் மீது கரு கொண்ட இவர் செல்லும் இடமெல்லாம் நீர்வளம் நிறைந்தது."

"ஓ... அதனால் தான், இவர் காலடி பட்டாலே மழை பொழிகிறதா... அவரைப் பற்றி அறிய ஆவலாகஇருக்கிறோம்," என்றார் தர்மன். லோமசரும் தொடர்ந்தார்.

ரிஷ்ய சிருங்கர் குறித்து லோமசர் தொடர்ந்து கூற ஆரம்பித்தார். "பாண்டவர்களே! ரிஷ்ய சிருங்கரின் பிறப்பு, தோற்றம் மட்டும் விநோதமாக இல்லை. அவர் வாழ்வும் அப்படியே. உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் ஆண், பெண் உயிர்களும் உண்டு. தாயே திரவுபதி! நீயே கூட துருபதனும், அவன் மனைவியும் செய்த புத்திரப் பேற்றுக்கான யாகத்தீயில் பூத்தவள் தானே?

நீ ஒரு அதிசயமாக விளங்குவதைப் போலவே ரிஷ்ய சிருங்கரும் ஒரு அதிசயப் பிறவியே! காஸ்யப கோத்திரத்தின் வழி வந்த காஸ்யபர் என்னும் விபாண்டகரின் புத்திரரான ரிஷ்ய சிருங்கரின் பிறப்பு எப்படி அமைந்தது என்பதை நான் முன்பே கூறினேன். சபிக்கப்பட்ட தேவமங்கை மானாகத் திரியும் சமயம், விபாண்டகரிடம் இருந்து வெளிப்பட்ட வீரியம் நீரில் கலந்த நிலையில், அதன் மூலம் அந்த மான் கர்ப்பம் தரித்தது. சாப நிவர்த்தி பெற்ற தேவமங்கைக்கு பிறந்த ரிஷ்ய சிருங்கர், தன் தாயின் அம்சமாக தலையில் கொம்புடன் பிறந்தார்.

விபாண்டகரின் ஆஸ்ரமத்தில் வளர்ந்தார். கண்ணால் ஒரு பெண்ணைக் கூட காணாதவராக வளர்ந்தார். பிறந்தது முதல் வேதங்களைக் கேட்டு ஒரு முனிவராக வளர்ந்தார். இவை எல்லாமே விநோதமானவை தான். இதனாலேயே பஞ்ச பூதங்கள் அவர் விருப்பத்துக்கு கட்டுப்பட வேண்டியதாகி விட்டது. குறிப்பாக நீர் மிசை வீரியம் கலக்கப்போய், அந்த நீரை ஒரு மான் குடித்ததால் பிறந்தவர் என்பதால் நீர் என்பது அவரின் அம்சமாகி விட்டது.

இதனால், அவர் எங்கிருந்தாலும் அந்த இடத்தில் மழை பொழிந்து குளிர்ச்சி மிக்கதாக மாறியது. வருணன் ரிஷ்ய சிருங்கரை விட்டு நீங்க முடியாதவனாக ஆகி விட்டான்.

இப்படியே காலம் அவரை போகவிடுமா என்ன?

வாழ்வில் பெண்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை லோமபாதன் என்ற அங்கதேசத்து அரசனால் அவ ருக்கு ஏற்பட்டது," என்று லோமசர் சொல்ல, "இந்த உல கில் தான் மனிதர்களிலேயே எவ்வளவு விசித்திரங்கள்," என்றான் சகாதேவன்.

"சகாதேவா... அதற்கு பேர் தான் சிருஷ்டி மாயை. அது செயல்படாமல் போனால் மனித வாழ்வில் மாற்றம் என் பதே இல்லாமல் போகும்' என்றார் முனிவர்.

சகாதேவனும், "உண்மை தான் முனிவரே! ரிஷ்ய சிருங் கரின் அபூர்வ வரலாற்றைத் தொடருங்கள்..."என்று சொல்ல லோமசர் தொடர்ந்தார்.

"லோமபாதன் சூரியவம்ச அரசனான தசரத சக்கரவர்த் திக்கு நல்ல நண்பன் "

"அப்படியானால், இந்த சம்பவம் தசரதரின் காலத்தி லேயே நடந்தவையா?"

"ஆம். இவை அந்த நாளைய மாயா விநோதங்களே! "

"அந்த விநோதம் எப்படிப்பட்டது. ரிஷ்ய சிருங்கருக்கு பெண் தொடர்பு எப்படி ஏற்பட்டது?"

"அங்கதேசத்தில் ஒரு சமயம் மழை இல்லாமல் போனது. குடிக்க நீரின்றி உயிர்கள் வாடின" "என்ன கொடுமை... இந்திரன் மழைக்கு அதிபதியான வருணனுக்கு கட்ட ளையிடவில்லையா'?

"நல்ல கேள்வி... வருணன் முதலான தேவர்களுக்கு பசி என்ற ஒன்று உண்டு. இதை நீங்கள் அறிவீர்களா?"

"பசி என்பது பிணி ஆயிற்றே... எப்படி தேவர்களுக்குப் பசிக்கும்?"

"ஒன்று இயங்க வேண்டும் என்றால் அதற்கு சக்தி வேண்டும். அதில் இருவகை உண்டு. ஒன்று உடல் சார்ந்தது. இன்னொன்று உள்ளம் சார்ந்தது. தேவர்க ளுக்கு இருப்பது உள்ளப்பசி"

"உள்ளமாகிய மனம் பட இயங்கிக் கொண்டே இருப் பதால், அதற்கும் பசி உண்டு என்பது ஏற்புடையது தானே...! "

"சரியாக புரிந்து கொண்டீர்கள்...! அவர்களுக்கான உணவு தான் நாம் வேள்வியில் போடும் ஆகுதிகள்! "

"ஓ... இந்த ஆகுதிகள் தான் அவர்களிடம் சென்று சேர் கின்றனவா?"

"ஆம்... இதற்காகவே, வேத வேள்வி தவறாது நிகழ வேண்டும். அந்தணர்கள் அதற்கேற்ப செயல்பட வேண் டும் என்ற கோட்பாடுகள் உருவாயின." -

"அப்படி என்றால் அங்கதேசத்தில் அவ்வாறு நடைபெற வில்லையா?"

"சரியாக கேட்டாய். அந்தணர் கடமை தவறினாலும், யாக வேள்வி நிகழாவிட்டாலும், தான தர்மம் தடைபட்டாலும், உத்தம பெண்ணுக்கு துரோகம் நேர்ந்தாலும் முதலில் பாதிப்படைவது விண்ணுலகம் தான். இதை உணர்ந்த லோமபாதன் சதுர்வேத மங்கலம் என்னும் பகுதியை அந்தணருக்கு அளித்தான். அதன்பின்னும் வருணன் மழையைத் தர தயாரில்லை. இந்த சமயத்தில் ரிஷ்ய சிருங்கரைப் பற்றி கேள்விப்பட்டான் மன்னன். அவரை அங்கதேசத்திற்கு அழைத்து வருவோருக்கு வேண்டிய அளவு பொன்னும், பொருளும் தரப்படும் என்று அறி வித்தான்.

அதைக் கேட்ட வயதான தாசி ஒருத்தி, தன் மகளான இளம் தாசியுடன் ரிஷ்ய சிருங்கரைத் தேடிச் சென் றாள். அவள், அவரது ஆஸ்ரமத்திற்கு சற்று தூரத்தில் ஆஸ்ரமம் அமைத்து தங்கினாள். அதில் மலர்ச்செடிகள், கொடிகள், போதை தரும் பழங்களை வளர்த்தாள். ஆட வர்கள் கண்டால் மயங்கும் விதத்தில் 3 மகளை அழகுப டுத்தினாள். வபான ஆஸ்ரமத்தில் இல்லாத சமயத்தில், தன் மகளை அங்கு அனுப்பி வைத்தாள். இளம் தாசி யைக் கண்ட ரிஷ்ய சிருங்கருக்கு மெல்லிய சலனமும், வியப்பும் ஏற்பட்டது. தாசியும் அவரை மயக்கும் விதத் தில் பேசத் தொடங்கினாள்.

சற்று தூரத்தில் உள்ள ஆஸ்ரமத்தில் வசிப்பதாக தெரி வித்த அவள், அங்கு வந்து தன்னை கவுரவப்படுத்த வேண்டும் என்று வேண்டினாள். அவரது கால்களில் விழுந்து வணங்கும் போது, அவரின் உடல் மீது படும் விதத்தில் நெருக்கமாக இருந்தாள்.

அப்போது ரிஷ்ய சிருங்கரிடம் மாயை தன் வேலையைக் காட்டத் தொடங்கியது.

ரிஷ்யசிருங்கர் அந்த பெண்ணின் அழகில் ஈடுபட்டு, புதிய சுகத்தை உணர்ந்தார். அவளும் அன்றைக்கு அவ் வளவு போதும் என்ற முடிவோடு 'நான் பிறகு வருகிறேன்' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

அவள் சென்றாலும் ரிஷ்ய சிருங்கரால் அவளை மறக்க முடியவில்லை. அவள் வரும் போது, கொண்டு வந்த பழத்தின் ருசி, சூடியிருந்த பூக்களின் மணம் என்று எல் லாமே அவருக்கு புதிதாக இருந்தது.

இந்நிலையில், ஆஸ்ரமத்திற்கு திரும்பிய விபாண்டகர் தன்னை மறந்த நிலையில் கிடந்த மகனைக் கண்டு, 'என்னாயிற்று?' என்று கேட்க, ரிஷ்ய சிருங்கர் வந் தது ஒரு பெண் என்பது கூட தெரியாமல், "தந்தையே அழகிய ஒருவன் வந்தான்... அவனுக்கு நெடிய கூந்தல், பருத்த மார்பு, சிவந்த உதடு, மீன் போன்ற கண்கள், தின்னக் கொடுத்த பழங்கள் எப்படி தித்திப்பு தெரியுமா? எனக்கு கண்கள் செருகி விட்டன...? என்று மிக அப்பா வித்தனமாகப் பேசினார்.

விபாண்டகருக்கு புரிந்து விட்டது! வந்து சென்றவள் ஒரு பெண்... மயக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே வந்திருக்கிறாள். இதை உணர்ந்த விபாண்டகர் மகனை எச்சரித்தார்.

"மகனே... நீ வேதம், வேள்வி என்று தவ வாழ்வு வாழ் பவன்... தவசிகளையே இந்த உலகமும் மதிக்கும். தவ சிகளைத் தான் இந்த உலகத்தால் ஒன்றும் செய்ய

முடியாது. நீ நினைத்தால் இந்த உலகத்தையே ஆட்டி வைக்கலாம். மிக வலியவர்கள் நாம். நம் வலிமையை குன்ற வைக்க சில அசர சக்திகள் எப்போதும் முயலும். அப்படி ஒரு சக்தி தான் பெண் வடிவில் வந்து உன்னுள் சலனம் ஏற்படுத்தி விட்டு சென்றுள்ளது. நீ இனி அதற்கு இடம் தராதே. மன உறுதியோடும், கட்டுப்பாட்டோடும் இரு. அது தான் நமக்கு நல்லது," என்று அறிவுரை கூறினார்.

ஆனால், விதியின் முன் அவர் அறிவுரை பயனற்றுப் போனது. மீண்டும் விபாண்டகர் இல்லாத சமயம் வந்தாள் அந்த இளம்தாசி. இம்முறை ரிஷ்யசிருங்கரை பல மடங்கு கவர்ந்து தன்னோடு அழைத்துக் கொண்டு போய் விட்டாள்.

அப்போது, லோமபாதன் அரண்மனையில் பெரும் புழுக்கத்தில் இருந்தான். திடும்மென்று மேகங்கள் திரண்டு மழை பொழியவும், ரிஷ்யசிருங்கர் அங்க தேசத்திற்குள் நுழைந்து விட்டதை தெரிந்து கொண்டான். தாசியும் ரிஷ்யசிருங்கருடன் வந்து நின்றாள்.

லோமபாதன் ரிஷ்யசிருங்கரை வணங்கினான். அப்போது தான் ரிஷ்யசிருங்கர் நாடு, மக்கள், அதில் ஆண், பெண் என்ற இன பேதம் என சகலத்தையும் உணர்ந்தார். லோம்பாதனும் அவரை அழைத்து வரப்பட்ட பாட்டைக் கூறி, அந்த வேசிகளுக்கு பொன், பொருள் கொடுத்து அனுப்பினான். ரிஷ்யசிருங்கரை தன் அரண்மனையில் தங்குமாறு வேண்டினான். தன் மகளான சாந்தை என்னும் சாந்தாவை அறிமுகம் செய்து வைத்தான். சாந்தாவும், ரிஷ்யசிருங்கர் எந்த நிலையிலும் தன்

நாட்டை விட்டு போய் விடக் கூடாது என்று விரும்பி னாள். அதற்காக மிகப் பணிவுடன் உபசரித்தாள்.

"பெருமானே! உம்முடைய தனித் தன்மையால் தான் இந்த நாட்டில் மழை பொழிகிறது. இனி இந்த தேசம் பசி, தாகம் இல்லாத தேசமாகி விடும். எல்லாம் உமது மகி மையால் தான் நடக்கிறது. நீங்கள் வனத்தில் இருந்து வேள்வி செய்து அடையும் பயனை விட, ஒரு நாட்டு மக் களை வாழ்விக்கச் செய்து அடையும் பயன் பெரியது என்பதை உணருங்கள்," என்றாள்.

சாந்தாவின் பேச்சு ரிஷ்யசிருங்கரை கட்டிப் போட்டு விட்டது. பின் அது காதலாகவும் ஆகியது. வனத்திலோ விபாண்டகர் ஆஸ்ரமத்தில் மகனைக் காணாது துடித் தார். ஞான திருஷ்டியால் நடந்ததை அறிந்து அங்கதே சம் நோக்கி நடந்தார். விபாண்டகர் கோபத்துடன் வந் தால் அங்கதேசம் என்ன கதியாகும் என்று லோம பாத னும் உணர்ந் திருந்தான். எனவே, அவர் அரண்மனை நோக்கி வரும் போது உழவர்கள், பிராமணர்களை வரி சையாக நிறுத்தி வணங்கச் செய்தான். விபாண்டக ரும் மக்களின் அன்பைக் கண்டு நெகிழ்ந்தார். கோபம் தணிந்தவராக அரண்மனைக்குள் நுழைந்தார்.

லோமபாதன் அவரை வணங்கினான். ரிஷ்யசிருங்கரை அரண்மனைக்கு அழைத்த காரணத்தைக் கூறினான். விபாண்டகரும் லோமபாதனுக்கு ஆசி வழங்கினார். அதன்பின் சாந்தாவை ரிஷ்யசிருங்கருக்கு மணம் செய் வித்தார்.

எப்படி சந்திரனுக்கு ரோகிணியும், பட வசிஷ்டருக்கு அருந்ததியும், அகத்தியருக்கு லோபமுத்திரையும், முத்

கலருக்கு நளாயினியும், ராமனுக்கு சீதையும் பொருத்தமாக அமைந்தார்களோ, அப்படி ரிஷ்யசிருங்கருக்கு சாந்தா இருந்தாள்," என்று முடித்தார் லோமசர்.

வனவாசம் செய்த பாண்டவர்களுக்கு, நடப்பதை எல்லாம் பார்க்கும் போது, தண்டனைக்குரிய காலத்தில் வாழ்வதாக அவர்களுக்கு தோன்றவில்லை.

ஒருவேளை காண்டவ பிரஸ்தத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருந்தால் புண்ணிய தீர்த்தங்களில் நீராடியிருக்க முடியுமா? அகத்தியர், ரிஷ்ய சிருங்கர், பரசுராமர், ததீசி முனிவர் போன்றோரை எல்லாம் தெரிந்து கொண்டிருக்க முடியுமா?

"இன்னும் பலரைப் பற்றி அறிய ஆவலாக இருக்கிறோம்," என்று தர்மன் தெரிவித்தான்.

கங்கையின் ஒரு பாகமாக ஓடும் வைதரணி நதியை அவர்கள் அடைந்தனர்.

"இங்கும் நீங்கள் தெரிந்து கொள்ள பல வரலாறுகள் உள்ளன" என்றார் லோமசர்.

"யாருடையது" என்றான் சகாதேவன்.

"ஆயிரம் கரங்கள் கொண்ட கார்த்த வீர்யார்ஜுனின் வரலாறு. இவனைப் பற்றிச் சிந்திக்கும் போது, ரிஷிகர், காதி, சத்யவதி, ஜமதக்னி போன்றோரையும் நாம் மறக்க முடியாது," என்றார் லோமசர்.

கார்த்த வீர்யார்ஜுனன் பற்றிச் சொல்லத் தொடங்கினார் லோமசர்.

"பாண்டவர்களே! தவ வாழ்வில் ஈடுபட்ட நான் கற்றுணர்ந்த விஷயங்களை உங்களிடம் பகிர்ந்து வருகிறேன். அந்த வகையில் இப்போது சொல்லப் போகும் கார்த்தவீர்யார்ஜுனன் வரலாறு விநோதமானது. மிக கவனமாக கேளுங்கள்," என்றார்.

சூரிய வம்சத்தினர் ஆட்சி செய்யும் நாடு கேகயம். இதை சமஸ்கிருதத்தில் 'ஹேஹயம்' என்பர். இதன் மன்னனாகத் திகழ்ந்தவன் கிருதவீர்யன். இவனது மனைவி சுனந்தை. இவர்களுக்கு புத்திரப் பேறு வாய்க்கவில்லை. இறைநம்பிக்கை இல்லாமல், ஆன்மிக நெறிகளைப் பின்பற்றாமல், மனித உடலுக்குள் இருக்கும் ஆற்றலைப் பெரிதாக எண்ணி வாழ்ந்து மடிந்தவர்கள் அனைவரும், தங்கள் தலைமுறைக்கு புத்திர தோஷத்தை விட்டுச் செல்கின்றனர்.

பூவுலகில் வாழும் வரை உடல் சக்தியை நம்பியும், அதைப் பேணியும் வாழ்ந்தவர்கள், இறப்புக்கு பின் சூட்சும உடம்போடு திரியும் போது தான், வாழ்வின் மறுபக்கம் எப்படிப்பட்டது என்பதை உணர்கின்றனர்.

ஆனால், அதனால் ஒரு பயனுமில்லையே! இவர்கள் சூட்சும உடம்போடு புண்ணிய பலன் என்று ஒன்றும் இல்லாததால் மண்ணுலகைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். இவர்கள் இப்படி தவிப்பதே, இவர்களது தலைமுறையில் புத்திர தோஷமாக எதிரொலிக்கிறது..." என்ற லோமசரை சகாதேவன் இடைமறித்தான்.

"லோமசரே! நீங்கள் கூறுவது புதிராக உள்ளது. தன் வசம் உள்ள சக்தியைப் பெரிதாகக் கருதி வாழ்வது எப்படி தவறாகும்? உலக உயிர்கள் எல்லாம் அப்படித்

தானே வாழ்ந்து மடிகின்றன. அவை எல்லாம் தோஷத்திற்கு ஆளானால், ஒரு உயிர் கூட உலகில் இருக்க வாய்ப்பில்லையே...?" என்றான்.

"சகாதேவா... உன் கேள்வி மேம்போக்கானது. சிந்தித்துப் பேசு. அதற்கே உனக்கு ஆறாவது அறிவு வழங்கப்பட்டுள்ளது. ஆறாவது அறிவு இல்லாத உயிர்களுக்கு தோஷம் என்ற ஒன்றே கிடையாது. பாவ, புண்ணியமும் அவற்றுக்கு இல்லை. ஆறாம் அறிவுள்ள மனிதர்களுக்கு பகுத்துப் பார்க்கும் திறன் இருப்பதால், அவர்களுக்கே இது பொருந்தும்."

"அப்படி என்றால், மனிதன் தன் சக்தியால் செய்யும் செயல்களால் தான் அனைத்தும் ஏற்படுகின்றதா?"

"ஆம்... அப்படித் தான் கிருதவீர்யனுக்கு புத்திர தோஷம் ஏற்பட்டது. தோஷத்துக்கு மருந்து தவம் தான். கிருதவீர்யன் புத்திரபேறுக்காக தவமிருந்தான். அதன் பயனாக புத்திரன் பிறந்தான். ஆனால் பாவம்..." என்று லோமசர் சொல்லும் போதே, ஏதோ சிக்கல் என்பது பாண்டவர்களுக்குப் புரிந்து விட்டது.

"அந்தக் குழந்தை. கை கால் இன்றி வெறும் சதைப் பிண்டமாக பிறந்தது. 'இப்படி ஒரு பிள்ளைக்காகவா தவமிருந்தேன்...? இது என்ன கொடுமை' என்று மனம் வருந்திய கிருதவீர்யன் சுனந்தை இருவரும், குழந்தையோடு தற்கொலை செய்ய முயன்றனர்.

அப்போது தர்மதேவதை அசரீரியாகத் தோன்றி, "கிருதவீர்யா... அவசரப்படாதே. இது முற்பிறவி கர்ம வினையின் விளைவு... இந்த பிள்ளை ஆயிரம் கைகள், கால்க

ளைப் பெற வாய்ப்பு இருக்கிறது. தத்தாத்ரேயர் என்னும் பரம்பொருளின் அருளால், இவன் 'மேன்மை அடை வான். வருந்தாதே...!" என்று தடுத்தது.

கிருதவீர்யன் அமைதி அடைந்தான். அவன் உயிரோடு வாழ்ந்தவரை கார்த்தவீர்யன் ஊனமாகத்தான் இருந் தான். அவன் மறையவும் வாரிசு என்ற முறையில் கார்த் தவீர்யனுக்கு பட்டம் சூட்ட ஏற்பாடானது. ஆனால், பட்ட மேற்க அவன் சம்மதிக்கவில்லை. 'எனக்கு அரச பதவி வேண்டாம். நான் பெரும் பாவி. அரசனாகி மேலும் பாவி யாக விரும்பவில்லை," என்றான்.

இந்த நிலையில் கர்க்கர் என்னும் முனிவர், மக்களும் பாவம் செய்ய வழி இல்லாதபடி செய்து விட்டால், அச்சப் படவே தேவையில்லை. எனவே, அதற்கான வரத்தைப் பெற வனத்தில் வாழும் தத்தாத்ரேயரை நாடிச் செல்," என்று வழி காட்டினார்.

"முனிவரே... எல்லாரையும் பாவம் செய்யாதபடி வழி நடத்துவது என்பது நடைமுறைக்கு சாத்தியமானதா?" என்று எதிர் வினா எழுப்பினான்.

"கார்த்தவீர்யனே! அப்படி நினைக்காதே! அனைத்துக் கும் அடிப்படையான ஒரு விஷயம் இருக்கிறது. அதைப் புரிந்து கொள்வதில் தான் வாழ்வின் சிறப்பு உள்ளது" என்றார் கர்க்கர்.

"அப்படி என்ன விஷயம்?" என்று கேட்டான் கார்த்தவீர் யன்.

அவனிடம் கர்க்கர், "முதலில் தத்தாத்ரேயர் பற்றி தெரிந்து கொள். அத்திரி மகரிஷிக்கும், அனுசூயாவுக்

கும் பிறந்தவர் இவர். விஷ்ணுவே தனக்கு பிள்ளையாக பிறக்க வேண்டும் என்று விரும்பி தவமிருந்த அத்திரி மகரிஷிக்கு, அவர் தம்மையே தத்தம் செய்து கொடுத் ததால் 'தத்தாத்ரேயர்' என்று பெயர் பெற்றார். விஷ்ணு வின் நாபிக் கமலத்தில் உதயமானவர் பிரம்மா. சூரிய னும், சந்திரனும் அவரின் இருவிழிகள். அவரின் ஆன் மாவாக இருப்பவர் ருத்ரர். எனவே, மும்மூர்த்திகளின் மானிட அம்சம் தான் இந்த தத்தாத்ரேயர். இவர் ரிஷிக ளில் எல்லாம் மேலான ரிஷி. புத்திரர்களில் மேலான புத் திரர். ஞானியரில் நிகரில்லாத ஞானி. இப்படி... அவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். உனது குறைக ளைப் போக்கி மேலான மனிதனாக ஆக்க தத்தாத்ரேய ரால் மட்டுமே முடியும். நீ அவரை உன் குருவாக, இஷ்ட தெய்வமாக மனதில் ஏற்றுக் கொள். பிறகு பார்," என்றார்.

"தேவர்களுக்கே வழிகாட்டியாக விளங்கியவர் தத்தாத் ரேயர்," என்ற கர்க்க முனிவர், அதற்கு சாட்சியாக சம்ப வம் ஒன்றைக் கூறத் தொடங்கினார்.

பலமுறை தேவ அசுர யுத்தத்தில் அசுரர்கள் வெற்றி பெற்றனர். பயந்து போன தேவர் தலைவன் இந்தி ரன், தங்கள் குருவான வியாழ பகவானிடம், அவர்களை ஒடுக்குவது குறித்து ஆலோசனை கேட்டான்.

தேவகுரு தன் ஞானசக்தியால் தத்தாத்ரேயர் எப்படிப் பட்டவர் என்பதை அறிந்து வைத்திருந்தார். விஷ்ணு வின் அம்சமான தத்தாத்ரேயரிடம் இந்திரனைச் சரண டையச் சொன்னார். ஆனால், இந்திரன் தத்தாத்ரேயரை ஒரு ரிஷிபுத்திரனாக மட்டுமே பார்த்தான்.

அவனிடம் வியாழ பகவான், "இந்திரா! உனக்கு முக் காலத்தையும் உணரும் ஞானம் இல்லை. தேவர்களின் தலைவன் என்ற கர்வம் உன்னை மழுங்கச் செய்து விட் டது. தத்தாத்ரேயர் ஒருவரால் மட்டுமே உனக்கு உதவ முடியும். தயங்காமல் புறப்படு," என்றார்.

குருவின் பேச்சை ஏற்ற இந்திரன் தத்தாத்ரேயரின் ஆஸ்ரமத்தை அடைந்தான். கையில் மதுக்கிண்ணத்து டன் இருந்த தத்தாத்ரேயர், ஒரு பெண்ணைக் கொஞ்சி யபடி இருந்தார். திடுக்கிட்ட இந்திரன், குருவிடம் திரும்பி வந்து, தான் பார்த்ததைக் கூறினான். தத்தாத்ரேயரின் மாயா விளையாட்டு தான் இது என்பதை குரு விளக்கத் தொடங்கினார்.

"இந்திரா! தத்தாத்ரேயரை எவ்வளவோ ரிஷி புத்திரர் கள் அண்டியிருந்தனர். குருகுல வாசம் முடிந்த பின்ன ரும் அவரை பிரியாமல் இருந்தனர். அவர்கள் தத்தாத் ரேயரின் ஆஸ்ரமத்தை வைகுண்டம் போல் கருதியதே இதற்கு காரணம். எனவே, அவர்களை அவர்களின் ஊருக்கு அனுப்ப, ஒரு உபாயத்தைக் கையாண்டார். லட்சுமியின் மாயா சக்தியை ஒரு பெண் வடிவமாக்கி ஆஸ்ரமத்தில் இருக்கச் செய்தார். இதைக் கண்டரிஷி புத்திரர்கள் மனம் வெறுத்து, அவரை விட்டுச் சென்று விட்டனர். நீயும் அந்த நாடகத்தைப் பார்த்து ஏமாந்து வந்து விட்டாய்," என்றார்.

இந்திரன் குருவிடம், "இப்படி ஏன் அவர் தன்னை தாழ்த் திக் கொள்ள வேண்டும். அவர் நினைத்தால் அவரவர் மனதிற்குள் புகுந்து மாயையை தெளிவிக்க முடியாதா?" என்று கேட்டான்.

"இந்திரா... சகலமும் படைத்த அவருக்கு உயர்வு, தாழ்வு என்பதெல்லாம் ஏது?"

"குருவே... இது என்ன பதில்... பரந்தாமனை ஒரு பெண் பித்தராகக் காண சகிக்குமா?"

"இந்திரா... விஷ்ணு ஆதியந்தம் இல்லாதவர். தேவர்கள் மட்டுமல்ல, அசுரர்களும் அவரின் படைப்பே. நிர்குண பிரம்மமான அவருக்கு குணமே கிடையாது. மனம் உயரிய நிலையில் இருந்தால் மட்டுமே இது போன்ற மாயத்திரையை கிழித்து ஊடுருவிப் பார்க்க முடியும். சராசரி மனப்பான்மை இருந்தால் மாயைக்கு இரையாகி விடுவோம்," என்று விளக்கம் கொடுத்தார். இந்திரனும் தெளிந்த மனதுடன் தத்தாத்ரேயரிடம் சரணடைந்தான்.

தத்தாத்ரேயர், "இந்திரா! என் மீது நம்பிக்கை வைத்து தைரியமாகப் போரிடு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றார். மீண்டும் போர் தொடங்கியது. அசுரக் கூட்டம் இந்திரனைத் துரத்தியது. பயத்துடன் இந்திரன், தத்தாத்ரேயர் ஆஸ்ரமம் நோக்கி ஓடினான். அசுரர்களும் பின் தொடர்ந்தனர். ஆஸ்ரமத்தில் இருந்த பெண் அசுரர்களைப் பார்த்துச் சிரித்தாள். அசுரர்கள் அவளது அழகில் மனதைப் பறிகொடுத்தனர். ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, அந்தப் பெண்ணை நெருங்க முற்பட்டனர். யார் அவளை அடைவது என்ற போட்டி அவர்களுக்குள் ஏற்பட்டது.

பலசாலியான ஒரு அசுரன், அந்த பெண்ணைத் தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு ஓடினான். மற்றவர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர். தத்தாத்ரேயர் இதைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

அதிர்ச்சியுடன் இந்திரன், "மகரிஷி... அசுரர்களின் அடாத செயலைப் பார்த்தீர்களா?" என்றான். தத்தாத்ரேயர் பலமாகச் சிரித்தார். "இந்திரா... போரிட வந்தவர்கள் போரிடாமல் போனதை வெற்றி என்று கருதுகிறாயே...

கவலைப்படாதே. அவர்கள் தூக்கிச் சென்றது லட்சுமியின் மாயா அம்சத்தையே! பாற்கடலில் பிறந்த மகாலட்சுமியின் திருவடிகளைச் சரணடைந்தால் மோட்ச சாம்ராஜ்யத்தையே தந்தருள்வாள். அதை விட்டு எவரொருவர் அவளைத் தலைக்கு மேல் தூக்குகிறார்களோ, அவர்களிடம் ஒரு வினாடி கூட இருக்க மாட்டாள். அசுரர்கள் தூக்கிச் சென்றதைப் பார்த்தாய் அல்லவா?" என்று தத்தாத்ரேயர் கேட்க இந்திரனுக்கு விஷயம் புரிந்தது.

"மகரிஷி... அன்னை மகாலட்சுமி அசுரர்களை விட்டு செல்வதற்கும், போரில் வெற்றி பெறுவதற்கும் என்ன சம்பந்தம் என்று விளக்குங்கள்?" என்றான்.

"இந்திரா...லட்சுமி உள்ள இடத்தில் தான் வெற்றி குவியும். அவள் நீங்கி விட்டால் வெற்றி பறிபோய் விடும்," என்றார். இந்திரனும் போரிட்டு வெற்றி பெற்றான். இவ்வாறு, தத்தாத்ரேயர் எப்படிப்பட்டவர் என்பதை கர்க்க முனிவர் விளக்கி முடித்தார்.

இதைக் கேட்ட கார்த்தவீர்யன் இந்திரனைப் போலவே தெளிவு பெற்றவனாய், தத்தாத்ரேயரைத் தேடிச் சென்றான். அவரது காலில் விழுந்து சேவை செய்தான். கைகள் இல்லாத அவனது சேவையை ஏற்று மகிழ்ந்த தத்தாத்ரேயர், "உன் தேவை என்ன?" என்று கேட்டார்." மகரிஷி... என் நாட்டு மக்களின் பாவம் என்னைச் சேரக்

கூடாது. நானும் உடல்குறை நீங்கி முழுமனிதனாக வாழ வேண்டும்," என்று வேண்டினான்.

"ஒன்றல்ல... இரண்டல்ல... ஆயிரம் கைகள் தருகி றேன். உன் தேச மக்கள் தவறு செய்ய எண்ணும் போது, உன் ஆயிரம் கைகளில் ஒன்று அவர்களின் மனக் கண்ணில் தோன்றி அவர்களைத் தடுக்கும். அது மட்டு மல்ல... எவ்வளவு பெரிய எதிரியையும் வெற்றி கொள் ளும் மாவீரனாகத் திகழ்வாய்," என்று வரம் கொடுத்தார். கார்த்தவீர்யார்ஜுனன் என்னும் மாவீரன் இப்படித் தான் உருவானான்.

லோமச முனிவரிடம் சகாதேவன், "கார்த்தவீர்யார்ஜு னனை அறியும் அதே நேரத்தில் தத்தாத்ரேயர் குறித்தும் அறிந்து கொண்டோம். அந்த வீரனின் வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்களைக் கூறுங்கள்," என்றான்.

லோமசர் தொடர்ந்தார்.

"ஆயிரம் கைகளைப் பெற்றதால் கார்த்தவீர்யன் மாவீர னாகத் திகழ்ந்தான். சூரியனுக்குப் பிறகு ஆயிரம் கரங் கள் கொண்டவன் என்ற பெருமையை அடைந்தவன் இவன்.

இவனது ஆட்சியில் மக்கள் பாவம் செய்யாதவர்களாக இருந்தனர். ஒருவேளை பாவம் செய்ய நேர்ந்தால், கார்த்தவீர்யனின் கரங்களில் ஒன்று அதைக் கட்டுப்ப டுத்தி வந்தது.

தத்தாத்ரேயர் அருளால் கார்த்தவீர்யனுக்கு ஒரு தங்க விமானம் கிடைத்தது. அதில் ஏறிக் கொண்டு எங்கும் பயணித்தான். இதன்பின், அவன் தன்னை தேவர்க

ளுக்கும் மேலானவன் என்ற ஆணவம் கொண்டான். தேவர்களும், ரிஷிகளும் இந்திரனுக்கும் மேலாகத் தன்னை மதிக்க வேண்டும் எனக் கருதினான். ஆனால், அவனை தேவர்கள் லட்சியம் செய்யவில்லை. இதனால் பகையுணர்வு உண்டாக, கார்த்தவீர்யன் வலிமையான கைகளால் தேவர்களுக்கு துன்பம் தரத் தொடங்கினான்.

'தேவர்கள் தன் காலில் விழுந்து வணங்கினால் நிம்மதியாக வாழலாம். இல்லாவிட்டால் துன்பத்திற்கு ஆளாவர்' என்று அறிவிப்பும் செய்தான். இதன் பின் இந்திரன், தத்தாத்ரேயரின் மூல வடிவமான மகாவிஷ்ணுவைச் சரணடைந்தான்.

"மகா விஷ்ணுவே! தங்கள் அருளால் கார்த்தவீர்யன் பலம் பெற்று, அசுரனைப் போல மாறி விட்டான். தாங்களே அவனுக்குப் புத்தி புகட்டி தேவர்களைக் காத்தருள வேண்டும்," என்று வேண்டினான்.

விஷ்ணு - இந்திரனிடம், "கவலை - வேண்டாம். கார்த்தவீர்யனை யாம் மற்றொரு மேலான சிருஷ்டி மூலம் வீழ்த்துவோம். உன் வழியில் தைரியமாகச் செல்," என்று அருள் புரிந்தார்.

இதன் பின் கார்த்தவீர்யனின் அழிவு ஆரம்பமானது," என்ற லோமசர் சற்று நிறுத்தினார்.

அப்போது குறுக்கிட்ட நகுலன், "முனிவர் பிரானே! கார்த்தவீர்யனின் வரலாறு எனக்கு வியப்பை அளிக்கிறது. நாட்டு மக்கள் செய்த பாவம் தன் தலை மேல்விழக் கூடாது என்று கவலைப்பட்டு அரசபதவியை மறுத்

தவன், பின்னாளில் அசுரத்தன்மை பெறக் காரணம் என்ன? ஏன் இப்படி நடந்தது?" என்று கேட்டான்.

"நகுலா... நல்ல கேள்வி கேட்டாய்... மாற்றம் மட்டுமே மாறாதது' என்ற விதத்தில் எல்லா உயிர்களும் நடந்து கொள்கின்றன. மாற்றம் இல்லாதவன் பரந்தாமன் ஒரு வனே. அவனும் கூட சிருஷ்டியின் பெயரால், மாற்றம் நிகழ்த்த அவதார காலத்தில் அவசியம் வந்து விடுகி றது. பிஞ்சாகப் பிறந்த குழந்தை கிழப்பருவம் அடைந்து மறைவது போல், மாற்றம் நிகழ்ந்தபடியே இருக்கிறது. அப்படி நிகழாவிட்டால், இயக்கச் சக்கரம் சுழலவில்லை என்றாகி விடும்.

கார்த்தவீர்யனுக்கும் ஒரு முடிவு வர வேண்டுமே... அத னாலேயே அவன் மனதில் கர்வம் புகுந்தது," என்றார் லோமசர்.

"சரி... அவனை அழித்தது யார்?" என்று கேட்டான் சகா தேவன்.

"பரசுராமர்" என்றார் லோமசர்.

"பரசுராமரா... நான் அறிந்த வரையில் ரிஷி புத்திரரான அவரும் ஒரு ரிஷி தானே... அப்படி இருக்க அவரால் எப்படி ஆயிரம் கரங்கள் கொண்ட மாவீரனை வெல்ல முடிந்தது?"

"பரசுராமரின் சிறப்பை தெரிந்து கொண்டால் அது புரி யும். சப்த ரிஷிகளில் ஒருவரான பிருகு முனிவரின் புதல் வர் ரசீகர். இந்த ரசீகருக்கும், காதி என்பவரின் மகளான சத்தியவதிக்கும் திருமணம் நடந்தது. அப்போது பிருகு

முனிவர், "சத்தியவதி... உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

"எனக்கு புத்திரன் ஒருவன் பிறக்க வேண்டும். என் தாய், என்னை பிரிந்து தவிக்கிறாள். அவளுக்கும் ஒரு புத்திரன் பிறக்க வேண்டும்," என்று வேண்டினாள்.

உலகிலேயே தன்னோடு, தன் தாயும் கருவுற வேண்டும் என்று வேண்டிக் கொண்டவள் சத்தியவதியாகத் தான் இருப்பாள். பிருகுவும் வரம் தர முன் வந்தார். இதற்காக தாய் அரச மரத்தையும், மகள் அத்தி மரத்தையும் அணைத்தபடியே வணங்கும்படி கூறினார். இதற்கிடையே ரசம் கொண்ட குளிகையை (ஒரு வகை மருந்து) சாப்பிடவும் கட்டளையிட்டார்.

விதிவசத்தால் இருவரும் மரத்தையும், குளிகையையும் மாற்றிக் கொண்டு விட்டனர். இதனால், சத்தியவதியின் தாய்க்கு பிராமண தேஜசும், ஷத்திரிய புத்தியும் கொண்ட புத்திரன் உருவானான். சத்தியவதிக்கும் அவ்வாறே பிராமண, ஷத்திரிய கலப்பில் புத்திரன் தோன்றினான். இதை அறிந்த சத்தியவதி பிருகு முனிவரிடம், "என் வயிற்றில் கலப்பான புத்திரன் பிறக்க வேண்டாம். தவவாழ்வில் ஈடுபடும் பிள்ளையே எனக்கு வேண்டும். வேண்டுமானால், என் புத்திரனுக்கு இப்படி ஒரு மகன் பிறக்கட்டும்," என்று வேண்டினாள்.

ரிசீகரும் தன் தவ வலிமையால் அப்படியே வரம் கொடுத்தார். சத்தியவதிக்கு ஜமதக்னி என்ற மகன் பிறந்தார். அவர் தந்தை, தாத்தா போலவே ரிஷி புத்திரனாக வளர்ந்தார். பிற்காலத்தில் இவர் ரேணுகாவை

மணந்தார். இந்த தம்பதிக்கு பிறந்தவரே பரசுராமர். இவர் பிராமண, ஷத்திரிய தேஜசோடு அவதரித்தார்.

ஒருநாள் பரசுராமரின் தாய் ரேணுகா ஆற்றுக்கு தண்ணீர் எடுக்கச் சென்றாள். அப்போது வானில் தேவன் ஒருவன் சென்று கொண்டிருந்தான். ஆற்று நீரில் அவனுடைய எழிலைக் கண்டு தன்னை மறந்து நின்றாள். ஞானியான ஜமதக்னி இதனை உணர்ந்தார்.

"ரேணுகா... நீ இனி என் பத்தினி இல்லை" என்று கோபம் கொண்டார்.

பரசுராமரை அழைத்து, "உன் தாயை வெட்டிக் கொலை செய்," என்றும் ஆணையிட்டார். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்ற வாக்கின்படி பரசுராமரும் தாயைக் கொன்றார்" என்று லோமசர் நிறுத்த பாண்டவர்கள் திகைத்துப் போய் நின்றனர்.

'தாயைக் கொன்ற தனயன்' பற்றிக் கேட்டதும், 'பரசுராமருக்கு தாய்ப்பாசமே இல்லையா? இப்படியா ஒரு பிள்ளை தாயைக் கொலை செய்வது? ஒரு முனிவரே இப்படி கொலை செய்யத் தூண்டலாமா?" இப்படி பல கேள்விகள் பாண்டவர்களின் மனதில் எழுந்தன.

"காரணம் இல்லாத காரியம் இல்லை," என்ற லோமச் முனிவர், அதுபற்றி விளக்கத் தொடங்கினார்.

"பாண்டு புத்திரர்களே! நான் சொல்லும் வரலாறு எல்லாமே உங்களுக்கு ஒரு பாடம் தான். கார்த்தவீர்யனின் வரலாறு மனிதன் செருக்கு கொள்ளக் கூடாது என்பதை உணர்த்தியது. பரசுராமரின் வரலாறோ தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்னும் நீதியை புரிய வைத்

தது. பெற்ற தாயையே வெட்டிக் கொன்ற போதிலும், கொல்லப்பட்ட தாய் உயிரோடு வர வேண்டும் என்றும், எவர் யுத்தத்திற்கு வந்தாலும் வெல்லும் வலிமை வேண்டும் என்றும் தந்தையிடம் பரசுராமர் வரம் கேட்டார். ஜமதக்னியும் அவ்வாறே வரம் கொடுத்தார்.

ஜமதக்னி முனிவரிடம் வரம் பெற்ற பரசுராமருக்கு, கார்த்தவீர்யார்ஜுனனுடன் மோதல் ஆரம்பித்தது. அதன் பின்னணியில் மோசமான சம்பவம் ஒன்று இருந்தது.

வனத்தில் ஜமதக்னி முனிவர் தன் புத்திரன் பரசுராமர், மனைவி ரேணுகா ஆகியோருடன் வாழ்ந்து வந்தார். விதி கார்த்தவீர்யாஜுனன் வடிவில் அங்கு வந்தது. படையுடன் வேட்டைக்கு வந்த கார்த்தவீர்யார்ஜுனன் பசியோடு ஜமதக்னி முனிவரின் ஆஸ்ரமத்திற்குள் நுழைந்தான். முனிவர் அப்போது தியானத்தில் இருந்தார். கார்த்தவீர்யார்ஜுனன் தன் தளபதியிடம், முனிவரின் தியானத்தைக் கலைக்கச் சொன்னான்.

தளபதியும் அவரது தோளைக் குலுக்கி, "ஏய்... முனிவா... யார் வந்திருக்கிறார்கள் என்று கண்ணைத் திறந்து பார்," என்றான். ஜமதக்னி கண் திறக்கவில்லை. அப்போது பரசுராமனும் அங்கு இல்லை. ரேணுகா ஆற்றுக்கு நீராடச் சென்றிருந்தாள். ஆஸ்ரமமே அமைதியாக இருந்தது.

இந்நிலையில் ஆஸ்ரம வாசலில் கட்டப்பட்டிருந்த ஹோமப் பசு, கன்றுக்கு பால் கொடுத்த படி 'அம்மா' என்று கத்தியது. அந்தக் குரல் கார்த்தவீர்யார்ஜுனனுக்கு நாராசமாக காதில் ஒலித்தது. ஒருபுறம் ஜமதக்னி

யின் கலையாத தியானம், மறுபுறம் பசுவின் தீனக்குரல் இரண்டும் ஆவேசத்தை உண்டாக்கியது. ஆஸ்ரமத்தை அடித்து நொறுக்க உத்தர விட்டான். படை வீரர்களும் அப்படியே செய்தனர். கார்த்த வீர்யார்ஜுனன் கன்றுக் குட்டியைப் பசுவிடமிருந்து பிரித்து இழுத்துச் சென்றான். கன்றைப் பிரிந்ததால் பசு கதறியது. கோபம் கொண்ட கார்த்தவீர்யார்ஜுனன் பசுவை வாளால் இரு துண்டாக வெட்டினான். தொழுவத்திற்கும் தீயிட்டு நகர்ந்தான்.

சற்று நேரத்தில் ஜமதக்னி முனிவர் தியானம் கலைந்து எழுந்தார். அவரால் நடந்ததை உணர முடிந்தது. அப் போது பரசுராமரும் அங்கு வந்து சேர்ந்தார். நடந்ததைக் காண அவருக்கு சகிக்கவில்லை. குறிப்பாக ஹோமப்பசு இரு துண்டாகக் கிடப்பதும், தொழுவம் தீக்கிரையாக் கப்பட்டதும், அவரை கோபத்தின் உச்சத்திற்கு இழுத் துச் சென்றது. ஆவேசமுடன் கார்த்தவீர்யார்ஜுனனை நோக்கிப் புறப்பட்டார்.முனிவரும் மகனைத் தடுக்க வில்லை.

கார்த்தவீர்யார்ஜுனனும் பரசுராமரை எதிர்த்து நின் றான். பசுவைக் கொன்ற பாவம் அவனது வலிமையைக் குறைத்து விட, அவனது ஆயிரம் கரங்களைப் பரசுராமர் கோடரியால் வெட்டினார். பிறந்த நேரத்தில் இருந்தது போல, காலும் கையும் இல்லாதவனான கார்த்தவீர்யார் ஜுனன் பரசுராமரின் கோடரிக்கு இரையானான்.

இவ்வாறு லோமச முனிவர் கார்த்த வீர்யார்ஜுனன் கதையைச் சொல்லி விட்டு நிறுத்தினார். பாண்டவர்க ளின் முகத்தில் பலமான சிந்தனை எழுந்தது.

"உங்களுக்கு என்ன சிந்தனை?" என்று கேட்டார் லோமசர்.

"அற்புத வளர்ச்சி கண்டகார்த்த வீர்யார்ஜுனன், இப்படியா ஒரு ரிஷி புத்திரனால் வதம் செய்யப்படுவான். விதியின் போக்கை நினைத்தேன். ஒன்றும் பேசத் தோன்றவில்லை" என்றான் தருமன்.

"நாச காலம் வந்து விட்டால் புத்தியும் விபரீதமாகி விடும் என்ற உண்மை புரிகிறது" என்று பெருமூச்சு விட்டான் நகுலன்.

"கார்த்தவீர்யார்ஜுனனின் முடிவு எனக்கு ஒரு விஷயத்தை உணர்த்துகிறது. எத்தனை கைகள் ஒருவருக்கு இருந்தாலும் அதில் பெருமை இல்லை. அதை நன்மைக்குப் பயன் படுத்தாவிட்டால், அவை வெட்டி வீழ்த்தப்படும் என்பது புலனாகிறது," என்றான் சகாதேவன்.

"மகரிஷியே... இனி தான் பெரும் சம்பவங்கள் நடக்க ஆரம்பித்தன என்று சொன்னீர்களே... அவை என்ன?" என்று விஷயத்தின் மையத்தை தொட்டாள் திரவுபதி. லோமசரும் சிரித்தபடி சொல்லத் தொடங்கினார்.

"திரவுபதி... நன்றாகத் தெரிந்து கொள். வாளெடுத்தவனுக்கு வாளால் தான் முடிவு உண்டாகும். யுத்தம் என்று வந்து விட்டால் இரு பக்கமும் இழப்பு ஏற்படவே செய்யும்.

கார்த்தவீர்யார்ஜுனன் கொல்லப்பட்ட பிறகு அவனது புத்திரர்கள் ஒன்று கூடி, தந்தையைக் கொன்ற பரசுராமன் உயிரோடு இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தனர். பரசுராமர் இல்லாத நேரத்தில் ஜமதக்னி முனிவரின் ஆஸ்ரமத்திற்கு வந்தனர். முனிவர் மீது பாணம்

போட்டு கொலை செய்ததோடு, ஆஸ்ரமத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். அங்கிருந்த ரேணுகாதேவியும் எரிந்து சாம்பலானாள்.

பெற்றோரைக் கொலை செய்ததைக் கண்ட பரசுராமர், பழிக்குப் பழி வாங்கும் எண்ணத்துடன் புறப்பட்டார். கார்த்தவீர்யார்ஜுனனின் பிள்ளைகள் அத்தனை பேரையும் வெட்டி வீழ்த்தினார். அதன் பிறகும் கோபம் தீரவில்லை. ஷத்திரிய வீரன் ஒருவனைக் கூடஉயிரோடு இருக்க விடவில்லை. 21 தலைமுறையினரையும் வெட்டிச் சாய்த்தார். பிருகு வம்சம் உலகில் நிகரில்லாதது என்பதையும் நிரூபித்துக் காட்டினார்," என்று லோமசர் கூறி முடித்திட பாண்டவர்கள் பரசுராமரின் வீரத்தை அறிந்து கொண்டனர்.

அங்கிருந்த பரசு தீர்த்தத்தில் நீராடிய பாண்டவர்கள் பரசுராமரைத் தியானித்தனர். அவர்களுக்கு பரசுராமர் காட்சியளித்து ஆசியளித்தார். அதன்பின் மகேந்திர பர்வதத்தை அடைந்த பாண்டவர்கள், இரவு நேரத்தை அங்கு கழித்தனர். பின் தெற்கு நோக்கிப் பயணம் புறப்பட்டனர். வழியில் பயோஷினி என்னும் நதி குறுக்கிட்டது.

அந்நதியைப் பார்த்த லோமசருக்கு, கயன் என்பவன் அங்கு இந்திர வேள்வி புரிந்தது நினைவுக்கு வந்தது. அப்படியே மகா தபஸ்வியான சியவன மகரிஷியின் நினைவும் உண்டானது.

பயோஷினி நதிக்கரைக்கு வந்த லோமசர் பாண்டவர்களிடம் கயன், சியவன முனிவர் பற்றிக் கூறத் தொடங்கினார். "பாண்டவர்களே! இந்த நதி தீரத்தில் கயன் பெரும் யாகம் செய்தான். ஏழு முறை அஸ்வமேத யாகம் நடந்

தது. இதனைக் கண்ட இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் பெரிதும் மகிழ்ந்தனர்.

பாண்டவர்களே... ஒரு விஷயத்தை நீங்கள் தெளிவாக மனதில் கொள்ளுங்கள். அரசர்களுக்குச் சிறப்பே அவர்கள் புரியும் யக்ஞம் எனப்படும் வேள்விகளால் தான்...! அடுத்து அதன் பொருட்டு அவர்கள் அளித்திடும் தான தர்மங்கள்! வேள்வித் தீயில் இடப்படுபவை மறுமையில் கை கொடுக்கும். அந்தணர்க்கும், மற்றவர்களுக்கும் அளிப்பவை வாழும் நாளில் கை கொடுக்கும்.

அந்த வகையில் கயன் செய்த யாகம் அவனுக்கு பெரும் புகழை அள்ளித் தந்தது. பொதுவாக தானம் செய்யும் போது, ஆயிரம் பொன், லட்சம் பொன் என்று தானம் தருவார்கள். ஆனால், அவன் கொடுத்த பொற்காசுகளையோ எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. ஆற்றுமணலை எப்படி எண்ண முடியாதோ, அதுபோல அவன் அளித்த தானத்தின் அளவும் இருந்தது. கயனை நாடி வந்த தேவர் முதல் ரிஷிகள் வரை இங்கே ஓடும் பயோஷினி நதியில் மகிழ்ச்சியுடன் நீராடினர். இந்நதியில் நீராடும் அனைவருக்கும் மகிழ்ச்சி, செல்வம், வெற்றி உண்டாகும்," என்றார்.

பாண்டவர்களும் அதில் நீராடி நித்ய கர்மங்களைச் செய்தனர். அப்போது லோமசர் சியவனர் என்னும் மகரிஷி பற்றி குறிப்பிட்டார்.

"சியவனர் ஒரு மகா தபஸ்வி. அமர்ந்த இடத்தில் உடம்பைச் சுற்றி புற்று கட்டி விடும் அளவுக்கு அசைவற்று தவம் புரிந்தவர். அவர் இந்த நதிக்கரையில், 'சுகன்யா' என்னும் ராஜகுமாரியை தன் பத்தினியாக கைபிடித்

தார்," என்றார். இதைக் கேட்ட பாண்டவர்களுக்கு ஒரே ஆச்சரியம்.

நகுலன் லோமசரிடம், "மகரிஷி... இது என்ன விந்தை! ஏழு அஸ்வமேத யாகம் நடந்தது என்றீர்கள். அடுத்து இதே நதி தீரம் ஒரு முனிவரையும், ராஜகுமாரியையும் ஒன்று சேர்த்து வைத்ததாகவும் கூறுகிறீர்கள். ஒன்றுக் கொன்று முரண்பாடாக உள்ளதே," என்றான்.

"ஆம். முரண்பாடு நிரம்பியது தான் வாழ்க்கை. இதில் ஒவ்வொரு முரணும் ஒவ்வொரு விதம். பாண்டவர்களா கிய உங்கள் வாழ்வே மற்றவரில் இருந்து முரண்பட்டது தானே... ஒருவருக்கு ஐந்து பேர்...! எங்கும் எப்போதும் ஒன்றாகவே போகிறீர்கள், வருகிறீர்கள். ஐவரும் ஒருத் தியை மணந்துள்ளீர்கள். நாட்டை ஆளாமல் காட்டில் திரிகிறீர்கள். நீங்கள் நினைத்தால் தனித்தனியே நூறு பெண்களை மணம் செய்யலாம். வனவாசம் மேற்கொள் ளவும் தேவையில்லை. துரியோதனனைப் பந்தாடி விட்டு அஸ்தினாபுரத்திற்கு அரசராகலாம். ஆனால், இதை எதுவும் செய்யாமல், தர்ம வழியில் சென்று கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு பெரிய முரண்பாடு... சியவன மகரிஷிக்கும், சுகன்யாவுக்குமான உறவும் கூட அப்படித் தான்..."

"அதை சற்று விரிவாக கூறுங்களேன்..."

"கூறுகிறேன்... நான் கூறப் போகும் விஷயத்திற்கு 'சுகன்யோ பாக்யானம்' என்று பெயர். ஏற்கனவே நளோ பாக்யானம் என்னும் நளச்சக்கரவர்த்தி வரலாற்றை அறிந்தீர்கள். அதே போல இதையும் அறிவது நன்மைய ளிக்கும்."

"சர்யாதி என்னும் மன்னரின் ஒரே மகள் சுகன்யா. சர்யாதிக்கும் நாலாயிரம் பத்தினிகள். இத்தனை மனைவியர் இருந்தும் ஒரு மகள் மட்டும் இருந்ததில் தான் சிறப்பே இருக்கிறது." என்ற லோமசரை சகாதேவன் ஒரு கேள்வியோடு ஏறிட்டுப் பார்த்தான்.

"மகாமுனிவரே! நாலாயிரம் பத்தினியர் இருந்தும் ஒரு மகள் மட்டும் பிறந்தாள் என்பது வினோதமாக இருக்கிறதே?" "அதில் தான் சூட்சுமம் இருக்கிறது. ஒரு அரசனுக்கு மனைவியாக எத்தனை பேர் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், அவன் அத்தனை மனைவியருடன் வாழத் தேவையில்லை. ஏனென்றால், அத்தகைய உறவை அவன் உருவாக்கிக் கொள்ளவில்லை.

'இன்று முதல் நான் ராஜபத்தினி' என்று அந்த பெண்கள் தாங்களாகவே முன்வந்து சர்யாதியின் பத்தினிகள் என அறிவித்துக் கொண்டனர். இதற்கு ஒரு காரணம் இருக்கிறது. ராஜபத்தினி என ஒரு பெண் அறிவித்த பின், பிற ஆண்கள் அவரைத் தீண்டினால் பெரும் குற்றமாகும். எனவே, தங்களின் பிரத்யேக பாதுகாப்பிற்காக பெண்கள் அக்காலத்தில் இப்படி செய்வது உண்டு "

"ஓ... இந்த அடிப்படையில் தான் ராமச்சந்திர மூர்த்தியின் தந்தையான தசரதருக்கும் ஆயிரக்கணக்கான மனைவியர் இருந்தனரா?"

"ஆம்... இது புரியாமல் அரசர்களை காமாந்தகனாக கருதுவது மடமை "

"இப்போது புரிகிறது. போகட்டும்...

சர்யாதியின் மகளான சுகன்யாவிடம் வாருங்கள். சுகன் யாவிற்கும், சியவன மகரிஷிக்கும் எவ்வாறு உறவு உண் டானது என்று கூறுங்கள்."

"கூறுகிறேன்... பயோஷினி கரையில் தவத்தில் ஆழந்தி ருந்தார் சியவனர். நீண்டகாலம் தவம் புரிந்ததால் புற்று அவரை மூடி விட்டது. இப்படி ஒரு நிலையில் தான், சர் யாதி தன் மகளோடு இந்த வனப் பகுதிக்கு வந்து தங்கி னான். அப்போது அங்கிருந்த புற்றைக் கண்ட சுகன்யா, அதற்குள் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள் ளும் ஆவலில், ஒரு குச்சியை விளையாட்டாகச் செரு கிப் பார்த்தாள். அது முனிவருடைய கண்ணைக் குத்தி விட்டது. தவம் கலைந்த முனிவர், புற்றை உடைத்துக் கொண்டு எழுந்து நின்றார். இதைக் கண்ட சுகன்யா பயந்து போனாள். கூடாரத்தில் தங்கியிருக்கும் தன் தந் தையான சர்யாதியிடம் ஓடிச் சென்று நடந்ததைக் கூறி னாள்.

அதிர்ச்சியடைந்த சர்யாதி, முனிவரின் சாபத்திற்கு மகள் ஆளாகி விடுவாளே என்று பயந்தான். முனிவரிடம் அவளை அழைத்து வந்து மன்னிப்பு கோரினான். அப் போது கண்களுக்கு மருந்திட்டுக் கொண்டிருந்த சியவ னர் அவர்களிடம், "செய்த தவறுக்கு பரிகாரம் செய்ய சம் மதித்தால் நான் சாபம் தராமல் இருப்பேன்," என்றார். சர் யாதியும் சம்மதித்தான்.

அவனிடம், "உன் மகள் என்னை மணந்து கொள்வதே இதற்குரிய பரிகாரம்," என்றார் சியவனர்.

சுகன்யாவை மணப்பதே சரியான பரிகாரம் என்ற சிய வனர், "மனைவி என்பவள் கண்களுக்கு இணையான

வள். நான் புறக் கண்களை இழந்து காயம்பட்டு விட்ட தால், அகக்கண்களாய் உன் மகளை வேண்டுகிறேன்," என்றார்.

சர்யாதி மிகவும் யோசித்தான். சுகன்யா ஒரு ராஜகுமாரி. அரண்மனை சுகங்களை அனுபவித்து வளர்ந்தவள். சியவனரோ துறவி! ஒரு இளவரசி துறவியை மணப்பது பொருந்துமா? அதிலும் மிக வயதான ஒருவரை மணந்து அவள் எப்படி வாழ முடியும்?" என்றெல்லாம் அவனுக் குள் சிந்தனை எழுந்தது.

அவனது தயக்கம் சியவனருக்குப் புரிந்தது. "என்ன யோசிக்கிறாய்? துறவிக்கு எப்படி ஒரு இளவரசியை மணம் முடிப்பது என்று தானே..."

"ஆம் மகரிஷி! "

"அது தான் உன் மகளின் விதி. இல்லாவிட்டால், நீயும் உன் மகளும் எதற்காக இந்த வனத்திற்குள் வர வேண் டும்?"

"மகரிஷி... நான் விதிக்கான விளக்கத்தை கேட்க வில்லை. ஒரு பொறுப்புள்ள தந்தையாக அந்த விதியை மதியால் வெல்ல முடியுமா என்று பார்க்கிறேன்..."

"உன்னால் முடியாது. நீ மறுத்தால், கண்களை இழந்த என் பாவம் உன் மகளைப் பாதிக்கும். நான் சாபம் கொடுத்தாலோ, இன்னமும் மோசமான விளைவை ஏற் படுத்தும் "

"பயமுறுத்தாதீர்கள். இந்த திருமணத்திற்கு, நான் சம் மதித்தால் மட்டும் போதாது. என் மகளும் சம்மதிக்க வேண்டுமே. அதை மறந்து விடாதீர்கள் "

"இப்போது அவளை அழைத்து சம்மதம் கேள். எனக்கு மனைவியாகி பரிகாரம் காணப் போகிறாளா? இல்லை. பாவத்தைச் சுமக்கும் பாவையாகப் போகிறாளா?" என்று சியவனர் கேட்க, சுகன்யா மறுப்பேதும் சொல்லாமல் தலையசைத்தாள்.

அதன் பின் சர்யாதி அரைமனதுடன் திருமணம் செய்து கொடுத்தான். இளவரசி சுகன்யா ரிஷி பத்தினியானாள். கண்ணை இமை காப்பது போல, சியவன மகரிஷிக்கு தேவையான பணிவிடைகளைச் செய்தாள்.

சியவனரும் சுகன்யாவின் நல்ல மனதைப் புரிந்து கொண்டார். காலம் இப்படியே போய் விடுமா என்ன? என்று லோமச மகரிஷி சற்று மவுனம் காத்தார். பாண்ட வர்கள் ஆர்வத்துடன் அவரைப் பார்த்தனர்.

"மாமுனிவரே... நீங்கள் சொல்வது அவர்களுக்கு ஏதோ விபரீதம் நடந்ததை உணர்த்துகிறதே..." என்று கேட்ட னர்.

"சுகன்யாவும், சியவன மகரிஷியும் நன்றாக வாழ்ந்த னரா? சொல்லுங்கள்" என்றாள் திரவுபதி.

"சொல்கிறேன்... வாழ்க்கை என்பது வற்றாமல் சீராக ஓடும் நதி போன்றதல்ல... அது நவரசங்களையும் கொண்டது."

"சுகன்யாவுக்கு நேர்ந்த சிக்கல் தான் என்ன?" "அஸ்வினி தேவர்களால் சுகன்யாவுக்கு சிக்கல் உண்டானது"

"அஸ்வினி தேவர்களா? யார் அவர்கள்?"

"சப்த ரிஷிகள், நவ சித்தர்கள், எம கிங்கரர்கள், கந்தர்வர்கள், நாகலோகத்தவர்கள், அப்சர கன்னியர்கள், பாதாள லோகத்தினர், கின்னரர், கிம்புருடர் போல தேவர்களில் அஸ்வினி தேவர்களும் முக்கியமானவர்கள். இவர்களே தேவர்களின் மருத்துவர்கள்."

"தேவர்களுக்கு கூடவா உடல் உபாதை உண்டாகும்?"

"அவர்களின் செருக்காலோ, பிறரால் ஏற்படும் சாபத்தாலோ உடல் நலத்தை இழக்க நேரிடலாம். அப்போது அவர்களை சீர்படுத்த மருத்துவரின் உதவி தேவைப்படும்..."

சரி இவர்களால் சுகன்யா எப்படி சிக்கலுக்கு ஆளானாள்?"

"எப்படி கலிபுருஷன் தமயந்தியை மணக்க விரும்பினானோ, அது போல அஸ்வினி தேவர்கள் சுகன்யாவின் அழகில் மயங்கி மணந்து கொள்ள விரும்பினர் ".

"ரிஷி பத்தினியான சுகன்யா மீது ஆசைப்படுவது தான் தேவர்களுக்குரிய லட்சணமா... இது அநீதி அல்லவா?" "இதைத் தான் தேவமாயை என்று சொல்வார்கள் "

"சுகன்யா அஸ்வினி தேவர்களிடம் என்ன சொன்னாள்..."

"அவள் என்ன சொல்வாள்... நான் ரிஷி பத்தினியாகி விட்டேன். உங்கள் எண்ணம் தவறானது என்றாள்."
"அவர்கள் கேட்டார்களா?"

"அவர்கள் எப்படி கேட்பார்கள். பதிலுக்கு ஒரு உபாயத்தைக் கூறினர். நீ எங்களை மணக்க சம்மதித்தால், எங்களின் விசேஷ சக்தியால் உன் கிழட்டு கணவரான சியவனரை எங்களைப் போல் இளமையாக மாற்றி விடுகிறோம் என்றனர். அதைக் கேட்ட சியவனர் சுகன்யாவை அழைத்து, அவளின் காதில் ஏதோ சொல்ல சுகன்யா முகம் மலர்ந்தாள். அஸ்வினி தேவர்களிடம் திரும்பி வந்தவள், சம்மதம் தெரிவித்தாள்.

"அஸ்வினி தேவர்களே... முதலில் என் கணவரை இளமையானவராக மாற்றுங்கள். பிறகு பார்க்கலாம்" என்றாள். அஸ்வினி தேவர்களும் சுகன்யா தங்களை ஏமாற்ற ஏதோ சூழ்ச்சி செய்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டு அவளைக் குழப்பி வெற்றியடைய முயற்சித்தனர்.

அதன்படி, இதோ இங்கு தென்படும் இக்குளத்தில் இறங்கி குளிக்கச் சொன்னார்கள். அவரும் குளத்தில் இறங்கினார். அவரோடு அஸ்வினி தேவர்களும் இறங்கினர். சுகன்யா சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

இறங்கியவர்கள் எழுந்த போது, இளமைப் பருவத்தை அடைந்து, சுகன்யாவுக்கு பொருத்தமான இளவரசன் போல் மூன்று சியவன மகரிஷிகள் அங்கு காட்சியளித்தனர். அஸ்வினி தேவர்களும் சியவன மகரிஷியாக மாறி நின்றதே இதற்கு காரணம். மூவரில் ஒருவரே உண்மையானவர்.

அப்போது, "சுகன்யா உண்மையான பத்தினி எனில், அவளுக்குரிய கணவரைத் தேர்வு செய்யட்டும்" என்று வானில் அசரீரி ஒலித்தது.

இந்த சமயத்தில், உண்மையான சியவன மகரிஷி மவுன மாக சுகன்யாவைப் பார்த்தார். சுகன்யா அவரைத் தேர்வு செய்தாளா...?

சுகன்யா தன் எதிரில் நிற்கும் மூவரில் உண்மையான கணவரான சியவனரை அடையாளம் கண்டு கொண் டாள். சியவனர் சுகன்யாவை மணந்த போதிலும், அவள் முகத்துக்கு கீழே பார்த்ததில்லை. அதுவே அவளுக்கு அவரை அடையாளம் காட்டியது.

எனவே, சரியாக சுகன்யா சியவனரின் காலில் விழுந்து வணங்கினாள். அவளின் உடல் அழகையே ரசித்துக் கொண்டிருந்த அஸ்வினி தேவர்கள் ஏமாற்றம் அடைந் தனர்.

சியவன மகரிஷியும் அவர்களிடம், "தேவர்களே... நற் சக்தி இருந்தும் மனிதரைப் போல மயக்கத்திற்கு ஆளாகி தவறு செய்யத் துணிந்தீர்களே... இந்த நொடியே நான் உங்களைச் சபித்து விட முடியும். அத னால், என் தவசக்தியை இழப்பதோடு, முதுமையில் என்னை ஏற்றுக் கொண்ட சுகன்யாவிற்கு பாரமாக ஆகி விடுவேன். அதை தவிர்க்கவே, உங்கள் போக்கில் போய் உங்களுக்குப் புத்தி புகட்ட முடிவு செய்தேன். ஒரு முனிவரைப் பொறுத்தவரை, முதுமை என்பது உடம்புக் கான மாற்றம் மட்டுமே.

இருந்தாலும் சுகன்யாவை மகிழ்ச்சிப்படுத்தவே, நான் இளைஞனாக மாற சம்மதித்தேன். இதனால், சுகன்யா மட்டுமல்ல, என் மாமனாரான சர்யாதியும் மகிழ்ச்சி அடைந்தார். நீங்களோ என்னிடம் உபதேசம் பெறும் நிலைக்கு ஆளாகி விட்டீர்கள். இது தேவையா? இப்படி நீங்கள் நடந்து கொள்ளலாமா?" என்று கேட்டார். அஸ்வினி தேவர்களும் பதில் கூற ஆரம்பித்தனர்.

"மகரிஷி... நாங்கள் திட்டமிட்டே இப்படி நடந்தோம். சுகன்யாவை அடைவது எங்கள் நோக்கம் அல்ல. இளமைக்கு ஆளான உங்களின் மூலமாக, நாங்கள் சோமரசத்தை பெற விரும்புகிறோம். தேவர்களாக இருந்தும், இந்திரன் எங்களுக்கு சோமரசம் பருகத் தகுதி இல்லை என்று கூறி விட்டான். அதனால், எங்களுக்கு முழுமை இல்லாமல் போனது. அந்தணனுக்கு பூணூலும், முனிவருக்கு கமண்டலமும், அரசருக்கு வாளும் எவ்வளவு முக்கியமோ அப்படியே தேவர்களுக்கு சோமரசம் முக்கியமானது. நாங்கள் அதைப் பருக கொடுத்து வைக்காதவர்களாக இருக்கிறோம். எங்களுக்காக வேள்வி செய்து, அக்னியிடம் இருந்து அதைப் பெற்று வழங்கினால் தான் எங்களின் குறை தீரும். நீங்கள் இளமை பெற உதவிய எங்களுக்கு, சோமரசம் தந்து உதவ வேண்டும்" என்றனர் அஸ்வினி தேவர்கள்.

மகரிஷியும் அவர்களின் குறை களைய தீர்மானித்தார். அப்போது மன்னன் சர்யாதி அங்கு வர, சியவனரின் இளமைக் கோலம் கண்டு மகிழ்ந்தான்.அவனிடமே யாகம் நடத்த மகரிஷி உதவி கேட்டார்.

சர்யாதி வேகமாக யாகசாலை பணியை மேற்கொண்டான். வேள்விப் பொருட்களை குவித்தான். யாகத்தீயில்

உரிய மூலப் பொருட்கள் சேர்ந்த போது, 'சோமம்' என்னும் தெய்வீக ரசம் ஒரு கலசத்தில் தோன்றியது. அதை மகரிஷி எடுக்க முயன்ற போது, 'தொடாதே' என்றொரு குரல் ஒலித்தது.

குரலுக்கு உரியவன் இந்திரன்! அவனைக் காணவும் சியவன மகரிஷி கோபம் கொண்டார்.

"என்ன இந்திரா... எதற்காக இதை தொடாதே என்கிறாய்?"

"அது அஸ்வினி தேவர்களுக்குத் தானே?"

"ஆம்... அவர்களுக்குத் தான்..."

"அதனால் தான் தடுத்தேன்"

"காரணம் என்ன?"

"அவர்கள் பெயரளவில் தான் தேவர்கள். ஆனால், அவர்களிடம் தேவ குணம் கிடையாது. மருத்துவ சாஸ்திரம் அறிந்த அவர்கள் நினைத்த வடிவம் எடுப்பர். பூலோக மனிதர் போல நடப்பர் இப்படிப்பட்டவர் கள் அரிய சோமரசத்தை அருந்துவது கூடாது".

"நீ சொல்வதற்கும், சோமரசம் பருகுவதற்கும் என்ன சம்பந்தம்?"

"சோமரசம் என்பது மேலானவர்களின் சொத்து. அதைப் பருகிட தேஜஸ் அதிகரிக்கும். உடல் பொலிவு பெறும். உற்சாகம் கூடும். அதனால், சோம ரசத்தை கீழானவர்

கள் அருந்துவது எங்களை இழிவுபடுத்துவது போலா கும் "

"இப்படி சொல்ல எப்படி மனம் வந்தது? ஒரு பானத்தை குடிப்பதால் ஒருவன் மேலானவனாக முடியாது. எண் ணம், செயலே மனிதனின் மதிப்பை தீர்மானிக்கிறது."

"மகரிஷி... எனக்கு உபதேசம் தேவையில்லை. நான் தேவர் தலைவன். வேள்வியில் எனக்கும் அவிர்பா கம் உண்டு. என் பேச்சைக் கேட்காவிட்டால் நீங்கள் அழைத்தாலும் நான் வர மாட்டேன். வராத நிலையில் வேள்வி முழுமை பெறாது," இந்திரன் மிரட்டுவது போல் பேசினான்.

இது சியவன மகரிஷியின் கோபத்தை மேலும் தூண் டியது. "தேவேந்திரா... வேள்வியில் அவிர்பாகம் இடும் போது, நீ வர வேண்டும் என்பது நியதி. இதை மறந்து பேசுவது அறிவீனம். நீ என் கோபத்தை அதிகரித்துக் கொண்டே போகிறாய்"

"மகரிஷி... உங்களின் கோபம் என்னை எதுவும் செய்து விடாது. ஆனால், என் வஜ்ராயுதம் உங்களைத் தவிடு பொடியாக்கி விடும்."

" என்ன சவால் விடுகிறாயா?"

"அப்படியே கூட வைத்துக் கொள்ளுங்கள்..." சியவன மகரிஷி தன் தவ சக்தியால் இந்திரனைக் கட்டிப் போட் டார். அவன் சிலை போல நின்றான். அதே சமயம் வேள் வித் தீயில் இருந்து தேவ குணங்களுக்கு நேர் எதிரான பெரிய பூதம் ஒன்று தோன்றியது. அதற்கு 'கிருத்யை' என்று பெயர். வாய் பிளந்தபடி கோரமாக இருந்த அதன்

வாயில், கொடிய தீ நாக்குகள் தோன்றி இந்திரனை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

இந்திரன் ஏவிய வஜ்ராயுதம் அதன் உடம்பில் ஒரு குச்சி போல பட்டு கீழே விழுந்தது. அதன் சக்தியை உணர்ந்த இந்திரன், சியவன மகரிஷியின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான். சோமரசத்தை தானே முன் வந்து, அஸ்வினி தேவர்களுக்கும் மட்டுமல்லாமல் - அனைவருக்கும் கொடுத்தான். இதன் பின் சியவனரின் புகழ் எங்கும் பரவியது. அவ்வாறு அன்று வேள்வி நடந்த இடம் தான் இது. சியவனரால் உருவானதே இங்குள்ள தீர்த்தம்," என்றார் லோமசர்.

பாண்டவர்கள் அதில் நீராடினர். அதில் சோமரசம் சேர்க்கப் பட்டிருந்ததால் அதைப் பருகவும் செய்தனர்.

லோமச மகரிஷியுடன் பாண்டவர்கள் யமுனை நதிக் கரையோரம் வந்தனர்.

"மாந்தாதா என்னும் பேரரசன் ஆட்சி நடத்திய இடம் இது" என்றார் மகரிஷி.

மாந்தாதா என்ற பெயரே கம்பீரமாக இருப்பதை உணர்ந்த பாண்டவர்கள், "நாங்கள் மாந்தாதா பற்றி அறிய விரும்புகிறோம்" என்றனர்.

"நானும் அவசியம் மாந்தாதா குறித்து சொல்லியே தீர வேண்டும் "

"மகரிஷி... யார் இந்த மாந்தாதா? பெயரே வினோதமாக இருக்கிறதே?" என்றான் பீமன்.

"பெயர் மட்டுமல்ல பீமா... அவன் பிறப்பும் கூட வினோத மானதே," என்றார் லோமசர். "ரிஷ்ய சிருங்கரை விடவா வினோதமானது?" "தேவமாதாவின் வயிற்றில் தான் ரிஷ்ய சிருங்கர் பிறந்தார். ஆனால், இந்த மாந்தாதா பெண் சம்பந்தமே இல்லாமல், ஒரு ஆணால் பெறப்பட் டவன் என்றால் எத்தனை ஆச்சரியம்?"

"என்ன... ஆணால் பெறப்பட்டவனா? இது எப்படி சாத்தி யம்?"

"பாண்டவர்களே... என் போன்ற தவ வாழ்வில் ஈடுபட்ட வர்கள் நினைத்தால் எதுவும் சாத்தியமே..."

"சுவாமி... அருள் கூர்ந்து விளக்கமாகச் சொல்லுங்கள்," என்றாள் திரவுபதி.

"திரவுபதி... நீ கூட யாக குண்டத்தை வயிறாகக் கொண்டு நெருப்பில் பிறந்தாய்... அதற்கு காரணம் வேள்வியின் மகிமை. அதே காரணம் தான் இங்கும்..."

"மகரிஷி. பீடிகை போதும். விஷயத்தைச் சொல்லுங்கள்."

"இதோ சொல்கிறேன். ராமன் அவதரித்த சூரிய வம்ச மான இஷ்வாகு குலத்தில் தோன்றியவன் யுவநாஸ்வன் என்னும் மன்னன். எந்த அரசனும் இவன் அளவுக்கு யாகம் செய்ததில்லை. நூறு அஸ்வமேத யாகம் செய் தாலே இந்திரப் பதவி கிடைப்பது உறுதி. இவனோ ஆயிரம் அஸ்வமேத யாகம் செய்தான். தேவர்கள் தலை வன் இந்திரன், யாரையும் யாகம் நடத்த விட மாட்டான். பெருமழை பொழியச் செய்து யாகத்தைத் தடுப்பான். ஆனால், யுவநாஸ்வனின் வேள்விக்கு இந்திரன் தடை

உண்டாக்கவில்லை. காரணம் இந்திரனிடம் சென்ற யுவநாஸ்வன்,

"நீயே விட்டுக் கொடுத்தாலும், எனக்கு இந்திர பதவி வேண்டாம். எந்த நாளும் உனக்கு போட்டியாக நான் இருக்கவும் மாட்டேன்" என்று கூறி நண்பனாகி விட் டான். அதனால் யுவநாஸ்வனால் ஆயிரம் அஸ்வமேத யாகங்களைத் தடையின்றி செய்ய முடிந்தது," என்றார் லோமச முனிவர்.

புருவத்தை வளைத்தபடி ஆர்வமுடன் பாத்தான் நகு லன்.

"நகுலா... எதற்காக அப்படி பார்க்கிறாய்?"

"பார்க்கிறேனா... நான் குழப்பத்தில் இருக்கிறேன் "

"குழம்பும் அளவுக்கு எதையும் நான் சொல்லவில் லையே..."

"உங்கள் பேச்சு தெளிவாகவே உள்ளது. ஆனால், யுவ நாஸ்வனின் செயலில் தான் குழப்பம் உள்ளது "

"என்ன சொல்கிறாய் நகுலா?" "எதற்காக ஒரு மனி தன் இப்படி ஆயிரம் முறை வேள்வி நடத்த வேண்டும்? அதுவும் அஸ்வமேத யாகம். இதை ஒருவன் ஒருமுறை செய்தாலே அதன் பலன் தலைமுறைக்கும் போதுமான தாக இருக்க, இவன் ஆயிரம் வேள்வி செய்தது எனக்கு குழப்பத்தை அளிக்கிறது மகரிஷி..."

"ஒரு கோணத்தில் நீ கேட்பதும் நியாயம் தான். யுவ நாஸ்வன் இப்படி நடந்து கொண்டான் என்பதை விட்டு,

விதி அவன் மூலம் இப்படி நடத்திக் கொண்டது என்றும் கூறலாம்... பாண்டவர்களே... ஒரு விஷயத்தை நன்றாக மனதில் கொள்ளுங்கள். நாம் ஒரு செயலைச் செய்வதால் விளைவு உண்டாகிறது என்பதில் உண்மையில்லை. நாம் ஒரு செயல் செய்வதே அந்த விளைவுக்காகத் தான். இதை உணர்வது தான் ஞானம்..."

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால், நம்மால் ஆவது ஏதும் இல்லையா?"

"சகாதேவா... கை தேர்ந்த ஞானியான நீயா கேட்கிறாய்?"

"கேட்டால் தானே விவாதம் தோன்றும். விவாதித்தால் தானே விடை கிடைக்கும் "

"சரி... நீங்கள் விரும்பியபடி தான் உலகில் எல்லாம் நடக்கிறதா? இந்த வனவாசத்தையும், யாத்திரையையும் கூட திட்டமிட்டு செய்தீர்களா... இல்லை காலத்தால் உருவானதா?"

"புரிகிறது... நினைப்பதெல்லாம் வாழ்வில் அப்படியே நடப்பதில்லை. நடப்பதை ஏற்று, அதன் வழியில் செல்ல வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம் "

"நீங்கள் சொல்வது உண்மை தான் மகரிஷி. யுவநாஸ்வனின் ஆயிரம் யாகம் விஷயத்திற்கு வாருங்கள் "

"வருகிறேன். ஆயிரம் யாகம் செய்ததன் பலனாக யுவநாஸ்வன் வாழ்வில் பற்று இல்லாதவனாக மாறினான். அரசனாக வாழ்வதை விட, யோகியாக வாழ்வதை உயர்வானதாகக் கருதினான்."

"யாகம் இப்படி கூடவா ஒரு பலனைக் கொடுக்கும்?"

"அது தான் விதியின் ஆற்றல் சகாதேவா..."

"பிறகு என்ன ஆயிற்று?"

"புத்திரர் என்று யாரும் இல்லாததால் தன் ராஜ்யத்தை அமைச்சர்களிடம் ஒப்படைத்தான். வனத்திற்குப் புறப் பட்டான். அங்கு மகரிஷியின் ஆஸ்ரமம் இருந்தது. அங்கு அவர் யுவநாஸ்வனுக்காக, மண்கலத்தில் புனித நீர் நிரப்பி, மந்திரம் ஜெபித்து அதில் சக்தியை நிரப்பியிருந் தார். அதை யார் குடித்தாலும், இந்திரனுக்குச் சமமான பிள்ளை உண்டாவது உறுதி. அதை யுவநாஸ்வனின் மனைவிக்கு அளிக்க வேண்டும் என்று பிருகு ஆசைப் பட்டார். ஆனால், மகரிஷியைக் காண வந்த யுவநாஸ் வன், தாகம் தீர்க்க அதைப் பருகி விட்டான். எல்லாம் விதிப்படி தானே நடக்கும்...! "

பிருகு முனிவரின் ஆஸ்ரமத்திற்குள் தாகத்துடன் நுழைந்த மன்னன் யுவநாஸ்வன், அங்கிருந்த மந்திரம் ஜெபித்து உருவேற்றப்பட்ட நீரைக் குடித்தான். அதைக் கண்ட பிருகு மகரிஷி அதிர்ச்சியடைந்தார். அந்த நீரை யுவநாஸ்வனின் மனைவி குடித்திருந்தால் கர்ப்பம் தரித் திருப்பாள். அது இயல்பானதாகவும் இருந்திருக்கும். ஆனால், யாரும் எதிர்பாராத வகையில் யுவநாஸ்வன் அதை குடிப்பான் என்பது யாருக்கும் தெரியாது.

யுவநாஸ்வன் மந்திர நீரைக் குடித்ததை அறிந்து வருந்தி னான்.

"பிருகு மகரிஷி... என் தாகமும், தவிப்பும் கண்களைக் கட்டி விட்டன. அறியாமல் குடித்து விட்டேன். அதனால்,

நீங்கள் மீண்டும் வேள்வி செய்து புத்திரப் பேற்றுக்கான மந்திர நீரை உருவாக்குங்கள்" என்றான்.

அதை வேகமாக மறுத்தார் பிருகு மகரிஷி.

"மன்னவா... இது ஒரே ஒரு முறை மட்டுமே செய்ய முடிந்த வேள்வி. உன் வம்ச விருத்திக்காக இதை செய்தேன். ஆனால், அதை நீயே பருகியதற்கும் விதியே காரணம். யாராக இருந்தாலும், வேள்விப் பயனைப் பெற்றே ஆக வேண்டும். ஒருவேளை ஜடப்பொருளான கல் இந்த நீரைக் குடித்தாலும், பிள்ளைப்பேற்றை அடையத் தக்கதாக மாறி விடும்," என்றார்.

யுவநாஸ்வன் விக்கித்துப் போனான்.

"மாமுனிவரே... நீங்கள் சொல்வதை எப்படி ஏற்பது... நான் ஒரு ஆண்மகன். என்னால் பிள்ளை பெற முடியுமா? அதற்கான உடல்கூறு இல்லாத நிலையில், எப்படி பிள்ளை பெற முடியும்?" என்று கேட்டான்.

"ஜடப்பொருளும் பிள்ளை பேறு அடையும் போது உன்னிடம் ஏன் இது நடக்காது? நீ பிள்ளை பெறுவது நிச்சயம்! நன்றாக கேட்டுக் கொள். அது ஆண் பிள்ளையாகவும், பலசாலியாகவும், நற்குணம் மிக்கவனாகவும் இருக்கும். அந்தக் குழந்தையால் உன் வம்சம் புகழ் பெறும்," என்றார் பிருகு மகரிஷி.

வழக்கத்திற்கு மாறான அபூர்வ கர்ப்பம் என்பதால், பத்து மாதம் என்றில்லாமல் நூறாண்டு காலம் யுவநாஸ்வன் கர்ப்பம் தரித்திருந்தான். அவன் உடம்பில் பெரிதாக மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. எப்போதும் போலவே இருந்தான். அதே வேளை அவன் வலது தொடை மட்

டும் பருத்துக் கொண்டே போனது. ஒருநாள் அந்த தொடையைப் பிளந்து கொண்டு ஒரு ஆண்மகன் பிறந் தான்.

கர்ப்ப வயிற்றில் பனிக்குட நீருக்குள் பாதுகாப்பாக வள ரும் கருப்பிண்டமாக இல்லாமல், தொடைக்குள் மாமி சத் திசுக்களின் சேர்க்கையால் ஒரு கட்டி போல் உரு வாகி பின் முழு மனிதனாக பிறந்தான். அவனைக் காண அனைவரும் ஆசைப்பட்டனர். 'அப்படி பிறந்த குழந்தை பசியால் அழுதால் தாய்ப்பால் வேண்டுமே பாலுக்கு யுவ நாஸ்வன் என்ன செய்வான்?' என்ற கேள்வி அனைவர் மனதிலும் எழுந்தது.

அந்த வேளையில் இந்த அதிசய குழந்தையைக் காண விண்ணில் இருந்து இந்திரனே நேரில் வந்தான். அப் போது குழந்தை பாலுக்காக அழத் தொடங்கியது. குழந் தையின் அழுகுரல் கேட்ட இந்திரன் மனம் இளகினான். உடனடியாக தன் விரலை குழந்தையின் வாயில் வைத் தான். அவன் கையில் அமிர்தம் இருப்பதாக ஐதீகம். சுட்டு விரல் வழியாக வந்த அமிர்த பாலைக் குழந்தை குடித்து பசியாறியது. இதனால், 'இந்திர அமிர்தம் பரு கியவன்' என்னும் பொருளில், குழந்தைக்கு 'மாம்தாதா' என்று பெயரிட்டனர்.

அமிர்தம் குடித்ததால், அவன் பிறந்த அன்றே பதி னைந்து வயது பிள்ளைக்குரிய தோற்றத்தை அடைந் தான். எழுந்து நின்ற அந்த கணமே தனுர் வேதம் மற்றும் அஸ்திரங்களும் அவனுள் கலந்தன. இதைக் கண்டு இந்திரன் மகிழ்ந்தான்.

"மாம்தாதா... நீ இந்த சராசரங்களின் உயிர்கள் அனைத்திலும் மாறுபட்டவன். நீ ஒரு மந்திரப் பிரசாதம். வேள்விப் பயனால் பிறந்தவன் நீ... அதனால் தான் தேவர் தலைவனான நான் உனக்குத் தாயாகிப் பசி தீர்த்தேன். இனி நீ விரும்பினால் மட்டுமே உனக்கு பசிக்கும். என் புதல்வனுக்குரிய எல்லா தகுதிகளும் உனக்கு உண்டு," என சொல்லி விட்டு மறைந்தான்.

மாம்தாதா பற்றி இந்திரன் புகழ்வதைக் கேட்ட யுவநாஸ்வன் மகிழ்ந்தான். அதன்பின் மாம்தாதாவின் புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது. அவனும் யுவநாஸ்வன் போல வேள்விகள் செய்து இந்த உலகிற்கே சக்கரவர்த்தியாக திகழ்ந்தான்.

இவ்வாறு லோமச முனிவர் மாம்தாதா பற்றி கூறி முடிக்க பாண்டவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

"முனிவரே! நீங்கள் கூறும் ஒவ்வொரு விஷயமும் ஒவ்வொரு விதமாக உள்ளது. நளோபாக்யானம், சுகன்ய பாக்யானம், ரிஷ்ய சிருங்கர் வரலாறு என்று நாங்கள் அறிந்து வந்த செய்திகளில் கார்த்தவீர்யார்ஜுனனுக்கு தத்தாத்ரே யரால் ஆயிரம் கைகள் தரப்பட்டது கூட எங்களுக்கு பெரிதாகத் தோன்றவில்லை. தந்தை சொல் கேட்டு தாயைக் கொன்ற பரசுராமர் கார்த்தவீர்யார்ஜுனனை வெற்றி கொண்டதும் பெரிதில்லை. இந்த மாம்தாதா ஒரு ஆண்மகனின் தொடையில் இருந்து தோன்றியவன் என்பது உண்மையில் மெய் சிலிர்க்க வைக்கிறது. பிரம்மனால் எப்படித்தான், இப்படி எல்லாம் படைக்க முடிகிறதோ தெரியவில்லை," என்றான் சகாதேவன்.

"அது பிரம்மனின் படைப்பு என்பதை விட, பிருகு மக ரிஷியின் தபோ சிருஷ்டி என்றால் மிகையில்லை. சரி தானே முனிவரே..." என்றான் நகுலன்.

"முனிவரே... பிறப்பில் தான் எத்தனை வினோதம்? இது போல வினோதமாக பிறந்தவர் வேறு யாரும் உண்டா?" என்று கேட்டான் பீமன்.

"ஏன் இல்லாமல்... ஒருவரல்ல... இருவரல்ல... நூறு பேர் இருக்கிறார்கள்" என்று பீடிகையுடன் சொன்னார் லோமசர்.

"யார் அவர்கள்?"

"வினோதமாகப் பிறந்த நூறு பேர்," என்றபடியே, சோம கன் என்னும் அரசனின் வாழ்வைப் பற்றி கூறத் தொடங் கினார் லோமசர்.

"பெண் சம்பந்தமே இல்லாமல் ஆணின் தொடை வழியே பிறந்த 'மாந்தாதா' ஒரு அதிசயம் என்றால், இந்த சோமகனுக்குப் பிறந்த நூறு பிள்ளைகளும் கூட, ஒரு வகையில் அதிசயமானவர்களே...! இவர்கள் மட் டுமல்ல... சோமகனே கூட மிக அதிசயமான ஒருவன் தான். எப்படி என்று கூறுகிறேன், கேளுங்கள்," என்றார் லோமசர்.

"மாமுனிவரே... உங்கள் மூலமாக எங்களுக்குத் தெரிய வரும் அவ்வளவு செய்திகளும் ஏதோ ஒரு வகையில் வித்தியாசமானதாகவும், மானுடப்பிறப்பின் மகத்துவம் பற்றி விளக்குவதாகவும் உள்ளது. இப்போது நாங்கள் அறியப் மபாகும் இந்த சோமகன் ஏதோ ஒரு வகை

யில் எங்களுக்கு பாடமாக விளங்குவான் என்று கருதுகி றேன்," என்றான் தர்மன்.

"ஆம்... சோமகன் ஒரு நல்ல பாடம்! ஒரு அரசனுக்கு குரு பக்தியும், பிராமணர் மீது மதிப்பும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணம் இவன்," என்ற லோமசர் அவன் வரலாற்றுக்குள் புகுந்தார்.

"சோமகனுக்கு நூறு மனைவிகள். புத்திரப் பேறுக்கா கவே, இத்தனை பெண்களை மணந்தான். ஆனால், வாரிசு உருவாகவில்லை. அவனுடைய கர்மபயன் கார ணமாகவே பிள்ளை வாய்க்காமல் போனது. கடைசி யாக, புத்திர பாக்கியம் உறுதியாக இருக்கும் ஜாதகம் கொண்ட பெண்ணை மணந்தான். அவளது வயிற்றில் கரு தங்கியது.

ஆனால், பூரணமான மானுடக் குழந்தையாக பிள்ளை பிறக்கவில்லை. பிறந்ததற்கு பிறக்காமலே இருந்திருக் கலாம் என்ற நிலையில், கருப்பிண்டமாக ஜந்து போல அந்த பிள்ளை இருந்தது. ஒருநாள், அந்த பிள்ளையை எறும்புகள் சில கடித்தன. அதனால், உடம்பெல்லாம் வீங்கிட குழந்தை வீறிட்டு அழுதது. அழுகுரல் கேட்ட சோமகனின் நூறு மனைவியரும் அழ ஆரம்பித்தனர். அரண்மனையே சோக மயமானது. அரசன் சோமகனும் சோகத்திற்கு ஆளாகி தன்னை வழிநடத்தும் குருநா தரை அழைத்துப் பேசினான்.

"குருநாதரே! இத்தனை மனைவியர் இருந்தாலும், எனக்கு ஒரே ஒரு பிள்ளை தான் இருக்கிறது. ஆனால், அந்த பிள்ளையும் அற்ப ஜந்துவான எறும்புக்கடி கூட தாங்க முடியாமல் இருக்கிறதே... இவன் வளர்ந்து

ஆளாகி எப்படி இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்? இதற்கெல்லாம் நான் செய்த பாவம் தான் காரணமா?" என்று வருந்திக் கேட்டான்.

குருநாதரான பிராமணரும் சோமகனைத் தேற்றும் விதத்தில், "சோமகா... ஊழ்வினை என்பது இப்படித் தான்... வினையை யாராலும் வெல்ல முடியாது. இதற்கு மாற்றாக, பரிகாரமுடன், தியாகமும் செய்யத் துணிந்தால் தீமை விலகி நன்மை உண்டாகும்," என்றார்.

"அது எதுவாக இருந்தாலும் கூறுங்கள் குருநாதா! செய்ய முயற்சிக்கிறேன்," என்று சோமகன் ஆர்வமுடன் கேட் டான்.

"சோமகா... எந்த பிள்ளைக்காக நீ வருந்தினாயோ, அந்த பிள்ளையை பலியிட்டு வேள்வி ஒன்றைச் செய். அந்த வேள்வித் தீயில் எழுகின்ற புகையை உன் மனை வியர் அனைவரும் முகர்ந்திட வேண்டும். அப்படிச் செய் தால் போதும். அனைவரும் கர்ப்பம் தரிப்பர். அதன் மூலம் நூறு பிள்ளைகள் உனக்கு பிறப்பார்கள். அதோடு மட்டுமல்ல... எந்த பிள்ளையை நீ பலி கொடுத்தாயோ அந்த பிள்ளையும் நல்லவிதமாக மீண்டும் பிறப்பான். அதற்கு சாட்சியாக, இந்த நூறு பிள்ளைகளில் ஒருவ னுக்கு மட்டும் இடது தோளில் மச்சம் இருக்கும்" என் றார்.

இதைக் கேட்ட சோமகன் சற்று தயங்கினாலும், ஒரு எறும்புக் கடியைக் கூட தாங்காத உயிர்ப்பிண்டமான பிள்ளை வாழ்வதை விட அவனை யாகத்தில் பலியிடு வதே மேல் என தீர்மானித்தான். இதன் மூலம் மீண்டும் தன் பிள்ளை நல்ல பிறப்பெடுத்து வரவும் அவன் விரும்

பினான். ஆனால், பிள்ளையின் தாயும், மற்ற மனைவிக ளும் இதற்கு சம்மதிக்கவில்லை. மாறாக குழந்தையைச் சூழ்ந்து நின்று, அதைக் கொன்று விடாமல் பாதுகாத்து வந்தனர்.

ஆனால் அரசனை யாரால் தடுக்க முடியும்? குழந்தை யைப் பறித்துச் சென்று, வேள்விக் குண்டத்தில் பலி யிடச் செய்தான். என்ன தான் பறித்துச் சென்றாலும், பெற்ற பிள்ளை இல்லையா...பாசமிகுதியால், தன் குழந் தையின் இறப்பைக் கண்டு கண்ணீர் விட்டான். அவன் மனைவியர் அனைவரும் புகையை முகர்ந்ததால் மூர்ச் சையடைந்தனர்.

அதன் பின், சில நாட்களில் அனைவருக்கும் கர்ப்பம் உண்டானது. பத்து மாதத்தில் நூறு மனைவியரும் நூறு பிள்ளைகளைப் பெற்றனர். யாகத்தில் பலியிடப்பட்ட குழந்தையும், இடது தோளில் மச்சத்துடன் பிறந்தான். இதனால், சோமகன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

வேள்வி செய்த பயனாகப் பிறந்த இக்குழந்தைகள் சிறந்த கல்விமான்களாக விளங்கினர். தங்களுக்குள் ஒற்றுமையுடன் வளர்ந்தனர். ஆனால், பாவம் சோமகன் மட்டும், இதையெல்லாம் காண கொடுத்து வைக்காமல், அற்ப வயதிலேயே உயிர் விட்டான். மேலுலகம் சென்ற அவனுக்கு சொர்க்கத்தில் வாழும் பாக்கியம் கிடைத் தது. ஒருநாள் சோமகன் தன் குருநாதரான பிராமணர் குறித்து சொர்க்கத்து தேவதைகளிடம் கேட்க, அவர் கள் எமலோகத்தில் அவர் தண்டனை அனுபவித்து வருவதாக கூறினர்.

தனக்கு வேள்வி நடத்தி ஒன்றுக்கு நூறு பிள்ளைக ளைத் தந்த குருநாதர், நரகத்தில் இருப்பதை சோமக னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

'அவருக்கு மட்டும் ஏன் நரகம் கிடைத்தது?' என்று எம னிடமே சோமகன் கேட்டான்.

எமன் என்ன பதில் கூறினார் தெரியுமா?

எமன் சொன்ன பதிலை, லோமசர் சொல்லும் முன், திர வுபதி குறுக்கிட்டாள்.

"முனிவரே! எமன் என்ன சொல்லியிருப்பான் என்று நான் கூறட்டுமா?" என்றாள்.

"எங்கே கூறு பார்க்கலாம்," என்றார் லோமசர்.

"அந்த பிராமண குரு அந்த குழந்தையை யாகத்தில் பலி கொடுத்து வேள்வி புரியச் சொன்னார் அல்லவா?"

"ஆமாம்..."

"அது எவ்வளவு பெரிய பாவம்?"

"மிகச் சரியாக சொன்னாய்...ஆனாலும், சோமகனும் ஒரு குற்றவாளி தானே?"

"இல்லை... அவன் குருவின் பேச்சைக் கேட்டு அதன் படி நடந்தவன். எனவே, அவனை அந்த பாவம் சேராது..."

"இருந்தாலும், அவனுக்கு நல்வழி காட்டியவர் நரகத்தில் வாடுவது முறையா...?"

"முறையில்லை தான்... அது போகட்டும்... சோமகன் அதன் பிறகு என்ன செய்தான்?"

"எமனிடம் சண்டையிட்டான். எனக்காக வேள்வி நடத்தியவர் அவர். என்னை நரகத்தில் சேர்த்து விட்டு, அவருக்கு சொர்க்கத்தில் இடம் தா..." என்றான்.

"எமன் ஒப்புக் கொண்டானா?"

"அது எப்படி ஒப்புக் கொள்வான்? தாயானாலும், பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறு என்பது போல, இங்கே காரணம் இருவருக்கும் பொதுவாக இருந்தாலும், செயலில் ஈடுபட்டவரே பாவி...! ஒருவர் விதிப் பயனை இன்னொருவர் அனுபவிக்கவும் வழியில்லை. எனவே, என்னால் ஏதும் செய்ய முடியாது," என்று கூறி விட்டான் எமன்.

உடனே சோமகன், "அப்படி சொல்லாதே. நான் அவரது புண்ணிய பலனைக் கேட்கவில்லை. பாவத்தின் பயனையே கேட்கிறேன். தண்டனையை அனுபவித்து அவருக்கு உதவ விரும்புகிறேன். இதற்கு நீ அனுமதிக்காவிட்டால், எதிர்காலத்தில் எந்த ஒரு குருவும் என் போன்ற அரசர்களுக்கு உரிய வழியைக் காட்ட மாட்டார்கள். தான் நரகம் போனாலும், எனக்கு பிள்ளைகள் பிறக்க வேண்டும் என்று விரும்பிய குருநாதரை தவிக்க விட்டு இனியும் இருக்க மாட்டேன்," என்று வேண்டினான்.

சோமகனின் பரந்த உள்ளத்தை கண்டு எமன் வியந்து போனான். அதோடு, பிராம்மண குருவின் பாவத்தில் சரி பாதியை சோமகன் கணக்கில் சேர்த்து, அவனையும் நரகத்தில் தண்டனை அனுபவிக்கச் செய்தான். தண்டனைக் காலம் வெகுவாய் குறைந்ததால், இருவரும் நரகத்தில் இருந்து சொர்க்கம் வந்தடைந்தனர்.

இப்படியாக, லோமசர் சோமகனின் வரலாற்றைக் கூறி முடித்தார்.

"உண்மையில் சோமகன் ஒரு அதிசய மனிதனே! புண்ணியத்தில் தான் எல்லோரும் பங்கு கேட்பார்கள். ஆனால், பாவத்தில் பங்கு கேட்டு எல்லோருக்கும் நல்வழி காட்டி விட்டான்," என்றான் நகுலன்.

"சரியாகச் சொன்னாய் நகுலா... அந்த சோமகன் வேள்வி செய்த இடமே இது. இந்த இடத்தில் ஒருவர் ஆறு நாள் தங்க வேண்டும். அப்படி தங்கினால் தங்குபவர்க்கெல்லாம் நற்கதியும், எமனிடம் கருணையும் உண்டாகும்," என்றார்.

அதன்படியே, பாண்டவர்களும் அங்கே ஆறுநாள் தங்கினர். அப்போது சகாதேவன் லோமசரிடம், ஒரு சந்தேகத்தை எழுப்பினான்.

"மகரிஷி... எல்லா அரசர்களுக்கும் புத்திரப்பேறு என்பது ஒரு பெரும்பாடாகத் தான் உள்ளது. எனக்குத் தெரிந்து வேள்வி நடத்தாமல் எவரும் புத்திரப்பேறு அடைந்ததாக தெரியவில்லை. இதன் காரணம் என்ன?"

"நல்ல கேள்வி... மக்கள் புரியும் பாவம் ஒரு அரசனையே சேரும். அந்த பாவ கர்மாவின் காரணமாக, அரசன் புத்தி

ரப்பேறு இல்லாதவன் ஆகிறான். எனவே, ஸ்ரீராமர் போல ஒவ்வொருவரும் நல்லாட்சி நடத்துவதோடு, மக்களும் தர்ம நெறிதவறாமல் நடக்கும்படி செய்ய வேண்டும்."

"ரிஷிகளுக்கு இந்த விதி பொருந்தாதே. ஆனால், அவர்களில் சிலரும் சோதனையாக பிள்ளைகள் பிறந்துள்ளது போலத் தெரிகிறதே...?"

"உண்மை தான். நாம் அடுத்தபடியாக மார்க்கண்டேய ரிஷியின் ஆஸ்ரமத்திற்கு செல்ல இருக்கிறோம். அவர் வரலாறு உன் கேள்விக்கான பதிலாக அமையும்."

"மார்க்கண்டேய மகரிஷியா?"

"ஆம்... இவர் பரம சிவபக்தர். மிருகண்ட மகரிஷியின் புதல்வர். இவர் பிறப்பே ஒரு நிபந்தனையால் தான் உண்டானது."

"அது என்ன நிபந்தனை?"

"மார்க்கண்டேயரின் தந்தையான மிருகண்ட ரிஷியின் தவத்திற்கு இணங்கிய சிவன் அவர் முன் தோன்றினார். அப்போது சிவன் ஒரு நிபந்தனை விதித்தார். 16 வருடம் மட்டுமே வாழ முடிந்த குணமுள்ள பிள்ளை வேண்டுமா? இல்லை குணம் கெட்ட நூறாண்டு வாழும் பிள்ளை வேண்டுமா?" என்றார்.

"இது என்ன விநோதம்... நூறாண்டு வாழும் குணமுள்ள பிள்ளையைத் தரலாம் அல்லவா?"

"தரலாம். தரவும் முடியும். ஆனால், இது தான் சிவனின் திருவிளையாடல்..."

"இதில் என்ன திருவிளையாட்டு?"

" காரணம் இல்லாமல் காரியமில்லை என்பதை நீ அறி வாய் அல்லவா?"

"நிச்சயமாக..."

"இங்கேயும் அப்படித் தான்... மிருகண்ட முனிவர் குண முள்ள அற்ப ஆயுள் கொண்ட பிள்ளை போதும் என்று கூறி விட, சிவனும் அப்படியே வரமளித்தார்."

"இதனால், சிவனுக்கு என்ன நன்மை உண்டாகப் போகிறது?"

"சிவனுக்கு நன்மை இல்லை... நமக்குத் தான் நன்மை "

"நமக்கா... எந்த வகையில்?"

"மனிதன் எத்தனை ஆண்டு காலம் வாழ்கிறோம் என் பதா விஷயம்? எப்படி வாழ்கிறோம் என்பது தானே பெரி யது..."

"உண்மை தான்... இருந்தாலும், ஒரு நல்ல பிள்ளை வெறும் 16 ஆண்டு வாழ்ந்து என்ன சாதித்து விட முடி யும்? அதற்கு பிறக்காமலே கூட இருக்கலாம்..."

"அது ஒரு கோணம். ஆனால், இந்தப் பிள்ளை சாதனை புரிந்தது. சாதித்து நூறாண்டு வாழவும் செய்தது."

"அது எப்படி?"

"அது தான் மார்க்கண்டேய புராணம். அதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். கேளுங்கள்," என்ற லோமசர், அந்த வரலாறைச் சொல்லத் தொடங்கினார்.

"காரணம் இல்லாத காரியம் இல்லை. சிவன் தன்னை சோதித்ததாக கருதிய மிருகண்ட முனிவர், தனக்கான வரமாக 16 வயது புத்திரனைப் பெற்றுக் கொள்ளவே, மார்க்கண்டேயனும் புத்திரனாகப் பிறந்தான்.

மார்க்கண்டேயனுக்கும் தன் ஆயுள் காலம் பற்றி தெரிந்திருந்தது. தனக்கு அப்படி வரமளித்த சிவனையே இஷ்ட தெய்வமாக வழிபட்டான். நிச்சயம் சிவபெருமான் தனக்கு தீர்க்கமான நுற்றாண்டு ஆயுளைத் தருவார் என்றும் நம்பினான். 16வது வயதில் எமன் வரவும், சிவனின் லிங்க வடிவைச் சரணடைந்து நின்றான். சிவனும் அவன் பக்தியை ஏற்ற சிவன், நேரில் தோன்றி எமனிடம் இருந்து காப்பாற்றியதோடு நூறாண்டு வாழும் பேறு வழங்கினார்.

அந்த மார்க்கண்டேயரின் ஆஸ்ரமம் உள்ள இடமே, இப்போது நாம் கடக்கும் வனம்" என்று லோமசர் சொல்லி முடித்தார்.

"லோமச முனிவரே! சிவன் எதற்காக மிருகண்ட முனிவருக்கு குணமுள்ள நூறாண்டு வாழும் புத்திரனை தொடக்கத்திலேயே தரவில்லை?" என்று கேட்டான் சகாதேவன்.

"அப்படி தந்திருந்தால் மார்க்கண்டேயர் இளம் வயதில் எமனால் துன்பத்துக்கு ஆளாகவோ, சிவன் வந்து காப்பாற்றவோ இடமில்லாமல் போகுமே...?"

"துன்பத்தை தந்த சிவனே, பின்னர் அத்துன்பம் போக்க துணை புரிந்தார் என்றால் அது எப்படி சரியாகும்?"

"தந்தது சிவன் அல்ல... மிருகண்ட முனிவர் மூலம், வரம் என்பது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று உலகம் தெரிந்து கொள்ளவே, இந்த திருவிளையாடலை நிகழ்த்தினார். அற்ப ஆயுள் உள்ளவன் கூட, சிவனருளால் நீண்ட ஆயுள் உள்ளவனாக மாறும் சூழல் உண்டு. அதாவது, சிவபக்தனுக்கு எமபயம் இல்லை என்று உணர்த்தவே மார்க்கண்டேயருக்கு நூறாண்டு ஆயுளை வழங்கினார்.

லோமசா இப்படி கூறி முடித்த நிலையில், அவர்கள், நகுஷன் என்பவனின் மகனான 'யயாதி' என்பவனின் தேசமான குருஷேத்திரம் உள்ளிட்ட காஷ்மீர தேசத்தை அடைந்தனர்.

யயாதி மட்டுமல்ல, பரதன் என்பவனும் அங்கே கணக்கற்ற வேள்விகளைச் செய்திருந்தான். அங்கே பலவிதமான

தீர்த்தங்களும் உண்டு. அவைகளில் பாண்டவர்கள் நீராடிய பின், குருஷேத்திரத்தில் உள்ள பிரம்மாவின் யாகவேதியை அடைந்தனர். யாகவேதியை வழிபட்ட பின், சரஸ்வதி நதி மறைவாக கலக்கும் தீர்த்தங்களிலும், வசிஷ்டருக்கு விமோசனம் அளித்த விபாசா நதியிலும் நீராடினர். அதன் பின் உசீநரம் என்னும் பெயர் கொண்ட தேசத்தை ஆட்சி செய்த உசீநரன் என்னும் சிபிச் சக்கரவர்த்தி பற்றி லோமசர் கூறத் தொடங்கினார்.

"பாண்டவர்களே...! நாம் கடந்து செல்லும் வனாந்திரம், நீராடும் தீர்த்தங்கள் என எல்லாமே புனிதமானவை. இங்கு வரும் மனிதர்கள், வாழ்வில் புடம் போட்ட தங்கமாகி விடுவார்கள். இங்கு எப்போதும் எதிரொலிக்கும் வேத மந்திர மகிமை இது. அடுத்ததாக, உசீநரன் என்னும் சிபிச்சக்கரவர்த்தியை இந்திரனும், அக்னி தேவனும் சேர்ந்து சோதித்த வரலாற்றைச் சொல்கிறேன் கேளுங்கள்...! இந்த பூவுலகில் பிறந்த அனைவரும் எந்த அளவுக்கு வாழ்வில் தர்மநெறி தவறாமல் வாழ வேண்டும் என்பதை உணர்த்தும் வரலாறு இதுவாகும்," என்றார்.

"ஒருநாள் இந்திரன், அக்னி இருவரும் சிபியை சோதிக்க முடிவு செய்தனர். இந்திரன் கழுகு வடிவமும், அக்னி புறா வடிவமும் எடுத்தனர். இந்திரனாகிய

கழுகு புறாவை துரத்த, உயிர் பயம் கொண்டு பறந்த புறா, சிபியின் முன்னால் வந்தது. அவன் தொடைக்குள் புகுந்து ஒளிந்தது.

ஆவேசமாக வந்த கழுகு சிபி சக்கரவர்த்தியிடம், புறாவைத் தன் வசம் ஒப்படைக்கச் சொன்னது. புறாவோ, சிபியிடம் தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சியது. தர்ம சங்கடத்தில் ஆழ்ந்த சிபி சக்கரவர்த்திக்கு, ஒருபுறம் இரை தேடும் கழுகு என்னும் நியாயம்..., மறுபறம் தஞ்சம் புகுந்த உயிரைக் காப்பாற்ற வேண்டிய கடமை என்னும் சூழல் உருவானது.

கழுகிடம் சிபி கெஞ்ச ஆரம்பித்தான்.

"கழுகே... உனக்கு நான் ஆடு, மாடு என்று மற்ற மிருகங்களின் கொழுப்பை தந்து பசியாற்றுவேன். நீ இந்த புறாவை உயிருடன் விட்டு விடு," என்றான்.

"இயற்கை நியதிப்படி, எனக்கான முதல் உணவு புறா. அதுவே எனக்கு வேண்டும்," என்றது கழுகு.

"இருக்கலாம். சரண் புகுந்த உயிரைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை. அதற்காக உயிரையும் தர தயாராக இருக்கிறேன்," என்றான் சிபி.

"புறாவின் எடைக்கு எடை சமமான சதையைக் கொடு. உன்னால் முடியுமா?" என்றது கழுகு.

சிபியும் சம்மதித்தான். புறாவின் எடைக்கு எடை தன் தொடையை அறுத்து சதையை வைத்தான். ஆனால், தராசின் தட்டு நேராகவில்லை. சதை இருந்த தட்டில் சிபியே ஏறி நின்ற பின்னரே தராசுத் தட்டு சமமானது.

சிபியும் தன்னைக் கழுகு உணவாக கொள்ளட்டும் என்று, தன் கிரீடம், வாள் முதலானவற்றை கழற்றி விட்டு அதன் முன் மண்டியிட்டான். கருணை மிக்க அவனது செயல் கழுகு வடிவில் இருந்த இந்திரன், புறா வடிவில் இருந்த அக்னியின் மனதை உருக்கி விட்டது. இருவரும் அந்த நொடியே தங்களின் சுயவடிவத்தில் தோன்றி சிபியை மனதார வாழ்த்தினர்.

"மன்னவா... நீ அரசர்களின் கருணைக்கு இலக்கணம் படைத்து விட்டாய். அடைக்கலம் புகும் உயிர் எது என பார்க்காமல், எதுவாக இருந்தாலும் அதற்காக நீ உன் உயிரைத் தர முன் வந்து விட்டாய். சிபி! உன்

புகழ் வானும் மண்ணும் உள்ளவரை நிலைத்து நிற்கும்," என்று வாழ்த்தி விட்டு மறைந்தனர்.

லோமசர் சிபியின் கருணை மிகுந்த செயலைக் கூறி முடிக்கவும், தர்மனின் கண்களில் நீர் கசிந்தது.

"முனிவரே! நான் சிபியை ஒரு சிறந்த முன்னுதாரணமாக கருதுகிறேன்" என்றான்.

"அற்புதம்... சிபி வாழ்ந்து சென்ற இந்த இடம், நாங்கள் காணக் கிடைத்த ஒரு அதிசயம்," என்றான் நகுலன்.

"எத்தனை உயர்ந்தவர்கள் இந்த மண்ணில் வாழ்ந்துள் ளனர். அடேயப்பா!" என்று சிலிர்த்தான் சகாதேவன்.

"மகாமுனியே... எங்கள் யாத்திரையில் வழிநடைக் களைப்பே தெரியாதபடி எங்களை வழிநடத்திச் செல்வ தோடு, ஒரு பல்கலைக் கழகம் போல், பலர் பற்றிய விஷ யங்களையும் எங்களுக்குள் பதிய வைத்துக் கொண்டும் போகிறீர்கள். ஒவ் வொருவரும் ஒவ்வொரு விதத்தில் வியக்க வைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்ன மும் இருக்கிறார்களா?" என்று கேட்டான் பீமன்.

பீமன் அப்படிக் கேட்ட தருணத்தில் அவர்கள், ஸ்வேத கேது என்னும் முனிவரின் ஆஸ்ரமத்தின் முன் இருந்த னர். அந்த ஆஸ்ரமத்தைச் சுற்றி ஏராளமான மரங்களில் பழங்கள் பழுத்திருந்தன. லோமசர் அதைப் பார்த்தப டியே கூறத் தொடங்கினார்.

"பாண்டு புத்திரர்களே! உங்கள் வனவாச பர்வத்தில் இப்போது முக்கியமான கட்டத்தில் உள்ளீர்கள். இதோ! இந்த ஆஸ்ரமமானது உத்தாலகர் என்னும் முனிபுத்தி

ரரான ஸ்வேதகேது என்பவருடையது. இவருக்கு ஒரு பெரும் சிறப்பு உண்டு. இவர் இங்கே சரஸ்வதி தேவியை எழுந்தருளச் செய்து, தேவியுடன் உரையாடி மகிழ்ந்தவர். அப்போது சரஸ்வதி தேவி, ஸ்வேதகேதுவுக்கு அனேக ஞான உபதேசங்களைச் செய்தாள். அதனாலேயே இவருக்கு பெருமை உண்டானது. அஷ்டவக்கிரர் என்னும் ஞானியோடு இவருக்கு நெருக்கமான நட்பு உண்டு.

இந்த அஷ்டவக்கிரரின் தந்தை பெயர் கஹோளர். இவர் மிதிலை மன்னர் ஜனகரின் அவையில் இருந்த வந்தி என்னும் ஆணவம் கொண்ட கல்விமானிடம் வாதப் போரில் ஈடுபட்டு தோற்றுப் போய், அதன் காரணமாக மன்னிப்பு கோரினார்.

இதனால், வந்தியின் ஆணவத்தை அடக்க ஸ்வேத கேதுவும், அஷ்ட வக்கிரரும் முடிவு செய்தனர். அதற்கேற்ப அரண்மனையை அடைந்து வந்தியோடு வாதப் போருக்குத் தயாராயினர். ஆனால், அஷ்டவக்கிரரையும், ஸ்வேத கேதுவையும் மன்னர் வந்திக்குச் சமமாக கருதவில்லை.

"நீங்கள் வந்தியோடு மோதினால் நிச்சயம் தோற்றுப் போவீர்கள்," என்றார்.

அஷ்டவக்கிரர் மனம் தளரவில்லை.

"நான் நிச்சயம் அந்த வந்திக்கு பாடம் கற்பிப்பேன்," என்றார்.

"அப்படியானால், முதலில் என் கேள்விகளுக்குப் பதில் கூறுங்கள் பார்க்கலாம்" என்றார் மன்னர்.

"தாராளமாக நீங்கள் கேள்வி கேட்கலாம்," என்றார் அஷ்ட வக்கிரர்.

"ஆறு நாபி, 12 அச்சு, 24 பொருத்து, 360 கோணம் கொண்டது எது?" என்றார் மன்னர்.

"அது தான் காலம் என்னும் சக்கரம்," என்றார் அஷ்ட வக்கிரர்.

"தேரில் பூட்டப்பட்ட இரு குதிரைகள், விண்ணில் இருந்து விழுகின்றவையாக உள்ளன. அவை என்ன?" என்று அடுத்த கேள்வி கேட்கப்பட்டது.

"இடியும் மின்னலும்" என்றார் அஷ்டவக்கிரர்.

தொடர்ந்து வரிசையாகக் கேள்விகள் கேட்கப்பட்டன. "எந்த பிராணி தூக்கத்திலும் கண்களை மூடாது?"

"மீன் "

"எது பிறந்ததும் அசைவதில்லை?"

"முட்டை "

"எதற்கு இதயம் இல்லை?"

"சரீரம் இல்லாத எதற்கும் இதயம் இல்லை "

"எது வேகத்தால் விருத்தி அடைகிறது?"

"நதி "

இப்படி கேட்ட கேள்விகளுக்கு அஷ்டவக்கிரர் பதில் கூறவும் மன்னர் திகைத்தார். பின் அவையில் வந்தியோடு வாதிடுவதற்கு ஏற்பாடு செய்தார். மோதலும் தொடங்கியது.

வந்தி, "அஷ்டவக்கிரா... நான் ஒன்று என்று உரைப்பதை நீ மறுத்து, அது ஒன்றல்ல என்று நிறுவ வேண்டும்," என்றார். அஷ்டவக்கிரரும் அதற்கு தயாரானார்.

"அக்னி ஒருவனே! சூரியனும் ஒருவனே! தேவராஜன் இந்திரனும் ஒருவனே. எமனும் ஒருவனே...!" என்று சொல்ல அஷ்டவக்கிரர் மறுக்கத் தொடங்கினார்.

"அக்னி ஒருவனல்ல. இந்திரனோடு எப்போதும் சேர்ந்தேயிருப்பவன். சூரியன் ஒன்றாக இருப்பினும் பிரதிபலிக்கப்படுவதால் எப்போதும் இரண்டாக மட்டுமின்றி, பல்லாயிரம் - ஒளித்துண்டுகளில் பிரதிபலிப்பவன். தேவரிஷியான நாரதர் கூட, பர்வதர் என்பவரோடு கூடி இருவராக உள்ளவரே! அஸ்வினி தேவர்களும் இருவரே... ரதம் ஒன்றாக இருந்தாலும், சக்கரம் இரண்டாக இருந்தால் தான் ஓட முடியும்" என்று இரண்டுக்கு உரியவற்றை அஷ்டவக்கிரர் நிறுவினார்.

"ஒளியானது சூரியன், சந்திரன், அக்னி என மூன்றாக உள்ளது. இது போல நான்கு எது என்று கூற முடியுமா?" என்று வந்தி கேட்க, "அகாரம், உகாரம், மகாரம், அர்த்த மாத்திரை ஆகிய அட்சரங்கள் நான்கு," என்றார் அஷ்டவக்கிரர்.

"இந்திரியங்கள் ஐந்து. இதற்கு ஏற்ற ஆறு எது" என்று வந்தி கேட்க, "ஞானேந்திரியம் சேர்ந்தால் இந்திரியம் ஆறு" என்றார் அஷ்டவக்கிரர்.

"ரிஷிகள் ஏழு. இதற்கு இணையான எட்டு பேர் யார்?"

"அஷ்டவசுக்கள் "

"யாகத்தில் ரிக்குகள் ஒன்பது. அடுத்த பத்து எது?"

"இந்த உலகத்தில் தேகம் என்ற உடம்பில் வசிக்கும் ஜீவனுக்கு திசைகள் பத்து. ஒரு பெண் கருவை பத்து மாதம் சுமக்கிறாள்," என்று, சளைக்காமல் பதில் அளித்த அஷ்ட வக்கிரர், "அடுத்த பதினொன்று எது?" தானும் ஒரு கேள்வியை வந்தியின் முன் வைத்தார்.

"பதினொன்று எது?" என்ற கேள்விக்கு விடை தேட ஆரம் பித்தார் வந்தி!

"எது பதினொன்று?" அஷ்ட வக்கிரர் கேட்ட கேள்விக்கு வந்தி விடை கூறத் தொடங்கினான்.

"ஜீவர்களாகிய நமக்கெல்லாம் இந்திரியங்களால் அறியப்படும் விஷயங்கள் பதினொன்று... தேவர்களில், ருத்திரர்கள் பதினொருவர்," என்றான். அதைத் தொடர்ந்து பன்னிரண்டு தொடர்பான விளக்கத்தை அஷ்டவக்கிரர் அளிக்கத் தொடங்கினார்.

"ஆண்டுக்கு மாதங்கள் பன்னிரண்டு. யாகங்களுக்கான நாட்களும் பன்னிரண்டு. அறிஞர்களில் ஆதித்தியர்கள் பன்னிருவர்" அஷ்டவக்கிரர் விளக்கம் அளித்ததை

தொடர்ந்து, வந்தி பதின்மூன்றுக்கு விளக்கம் அளித்தான்.

அதன்படி, "பூமி பதிமூன்று த்வீபங்கள் கொண்டது. திதிகளில் பதிமூன்றான திரயோதசி மிகச் சிறந்தது," என்றான்.

அஷ்டவக்கிரர் வந்தியை நோக்கி, 'பதிமூன்றுக்கான விளக்கம் இவ்வளவு தானா?' என்பது போல் பார்த்தார். வந்தி மவுனம் சாதித்தான்.

"அவ்வளவு தானா?"

"பதிமூன்று குறித்து கூற இதற்கு மேல் எனக்குத் தெரிந்து ஏதுமில்லை..." என்றான் வந்தி.

"எனக்குத் தெரிந்து என்று தன்னடக்கமாய் கூறியதற்கு நன்றி. ஆனால், பதிமூன்று தொடர்பாய் பல விஷயங்கள் உள்ளன. நான் அவைகளைக் கூறினால் தங்கள் தோல்வியை ஒப்புக் கொள்வீர்களா?" என்று கேட்டார் அஷ்டவக்கிரர்.

வந்தி பெருமூச்சை வெளிப்படுத்தி மவுனம் காக்க, ஜனகரோ, "அஷ்டவக்கிரரே... விதிகள் பொதுவானவை. எனவே, தாங்கள் தாராளமாக கூறலாம்," என்றார்.

அஷ்டவக்கிரரும் சொல்லத் தொடங்கினார்.

"பத்து இந்திரியங்கள், புத்தி, அதனால் உண்டான மனம், அதற்கான தன்மையாய் விளங்கும் பணிவு மற்றும் அகங்காரம் ஆகமொத்தம் பதிமூன்றே யாகத்தில் சொல்லப்படும் மந்திரங்களின் ஒவ்வொரு பாதமும் பதிமூன்று

எழுத்துக்களால் ஆனவை. அந்த மந்திர அட்சரங்க ளைத் தெரியுமா?" என்று கேட்டார் அஷ்டவக்கிரர்.

வந்தியின் முகம் வாட்டம் அடைந்தது. தன்னை எதிர்த்து தோல்வி அடைந்தவர்களை எல்லாம் நீரில் மூழ்கடித்து கொன்று வந்த வந்தியின் ஆணவம் அழிந்தது. வந்தி தோல்வியை ஒப்புக் கொண்டதால், அஷ்டவக்கிரர் பதி மூன்று மந்திர அட்சரங்களைச் சொல்லி முடிக்க, அவரே வெற்றியாளர் என சபையோரால் அறிவிக்கப்பட்டார். அவை முழுக்க ஓரே கரகோஷம்!

ஆனாலும், அஷ்ட வக்கிரரிடம் பெரிதாக சந்தோஷம் உண்டாகவில்லை. காரணம், அதே அவையில் இதே வந்தியிடம் தான் தோற்றுப் போய் நீரில் மூழ்கி விட்டிருந் தார் அஷ்டவக்கிரரின் தந்தையான கஹோளர். 'வெற்றி பெற்று விட்டதால், தன்னை விட்டுப் பிரிந்த தந்தை உயி ருடன் வரவா போகிறார்?' என்ற கேள்வியும் வருத்தமும் அவருக்குள் எழுந்தது. அவருடைய வருத்தம் வந்திக் குப் புரிந்தது.

"அஷ்ட வக்கிரரே! கவலை வேண்டாம். என்னிடம் தோற்று நீரில் மூழ்கிய உங்களின் தந்தையை இப்போது நீங்கள் காண்பீர்கள். நான் யாரோ அல்ல... பஞ்ச பூதங் களில் ஒருவரான நீரின் அதிபதி வருணனின் புத்திரன் நான். விதிப்படி நானும் நீரில் மூழ்கி என் தந்தையான வருணனுடன் சேர்ந்து விடுவேன்," என்றான். அதன் பின், அவர்கள் சமங்கா என்னும் நதிக்கரையை அடைந் தனர்.

வந்தி நதியில் மூழ்கும் முன்பே, கஹோளர் நீரில் இருந்து வெளிப்பட்டார். அதுவரை கணவரைப் பிரிந்த சோகத்

தில் ஆழ்ந்திருந்த கஹோளரின் மனைவியும், அஷ்ட வக்கிரரின் தாயுமான சுஜாதாவும் அங்கு வந்தாள்.

பெற்றோரைக் கண்ட அஷ்டவக்கிரர் அளவில்லாத சந் தோஷம் அடைந்தார். வந்தியும் நதியில் மூழ்கி வரு ணனை அடைந்தான். இதன்பின், அங்கு ஒரு அற்புதம் நிகழ்ந்தது. தோற்றவர்கள் எந்த நதியில் மூழ்க வேண் டும் என்று விதி இருந்ததோ, அந்த சமங்கா நதியில் அஷ்டவக்கிரர் மூழ்கி எழுந்தார். அவருடைய விகார மான எண் கோணல் உடம்பு நேரானதோடு, எழில் மிகுந்ததாகவும் மாறியது.

அன்று முதல் உடல் சார்ந்த குறைபாடு, அறிந்தும், அறி யாமலும் செய்த பாவம் போக்க கூடியதாக சமங்கா நதி மாறியது. இன்று 'சமங்கை' என்னும் பெயரில் ஓடும் அந்த நதியானது ஜனகன் ஆட்சி செய்த மிதிலை நகரை ஒட்டியே ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் பாண்டவர் களை லோமசர் நீராடச் சொன்னார். அவர்களும் மகிழ்ச் சியுடன் நீராடினர்.

சகாதேவன் லோமசரிடம், "அஷ்டவக்கிரரும், வந்திக் குமான வாதப்போர் எங்களுக்கு பல உண்மைகளை உணர்த்தியது. ஒன்று, இரண்டு என்று எண்களின் பின் புலத்தில் புதைந்து கிடக்கும் பல செய்திகளை அறிந்து கொண்டோம். அஷ்டவக்கிரரின் கோணல் உடம்பு விமோசனம் பெற்றதையும் அறிந்தோம். நல்ல குருநாத ரிடம் சீடர்கள் எப்படி யெல்லாம் ஞானமும், நலமும் பெற முடியும் என்பதை எங்களுக்கு உணர்த்தி விட்டீர்கள். தாங்கள் உணர்த்தி வரும் பேருண்மைகள் அசாதாரண மானவை. மனித வாழ்வு பலவித வண்ணங்களையும், ஏற்ற இறக்கங்களையும் கொண்டவையாக உள்ளது.

நாங்கள் உங்களுக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கி றோம்," என்று உருகினான்.

தர்மன், பீமன், நகுலன் மூவரும் அதை ஆமோதிக்க, திர வுபதியும் முனிவரை கைகூப்பி வணங்கினாள். லோமசர் இது கண்டு மகிழ்ந்தார். அங்கிருந்து கந்தமாதன பர்வ தம் என்னும் மேருவை ஒட்டிய மலைப்பகுதி நோக்கி அனைவரும் நடந்தனர்.

இந்த வேளையில் லோமசர் ரிஷிகளில் குறிப்பிடத்தக்க பரத்வாஜர் பற்றியும், அவருடைய உற்ற தோழரான ரைப் யர் பற்றியும் கூறத் தொடங்கினார்.

லோமச முனிவர் பாண்டவர்களிடம் பரத்வாஜர், ரைப்யர் பற்றிப் பேசத் தொடங்கினார்.

அவரிடம் நகுலன், "மகரிஷி. இவர்கள் வரலாற்றை தாங் கள் எதற்காக எங்களிடம் கூறுகிறீர்கள்?" என்று கேட் டான்.

"நகுலா... நீ நல்ல கேள்வி கேட்டாய். இவர்கள் மூலம் வேதம் என்பது எப்படிப்பட்டது என்பதையும், அதை ஒருவர் எவ்வாறு அடைய முடியும் என்பதையும் தெரிந்து கெள்ள போகிறீர்கள்.

வேதங்களைக் கற்றவரே முழுமையான மனிதர். அதைப் போல உயிர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது வேறில்லை. சுருக்கமாகக் கூறினால், அரசாட்சி புரியும் ராஜ பரம்ப ரையில் வந்த நீங்கள் வேதம் பற்றியும், அதை சிறப்பாக ஓதிடுவோர் பற்றியும் அவசியம் அறிந்திருக்க வேண்டும். இந்த வனத்தின் வழியாகச் சென்று சேர இருக்குமிடம்

பரத்வாஜரின் ஆஸ்ரமத்தையே... அதன் காரணமாகவும் நான் அவர்களைப் பற்றிக் கூற முன் வந்தேன்," என்றார்.

அருகில் ஒரு பெரிய ஆலமரம்! அதன் நிழலில் அங் கங்கே உட்கார ஏதுவாக கற்பாறைகள் தென்பட்டன. அதன் மேல் பாண்டவர்கள் அமர்ந்து கொள்ள, அந்த மரத்தின் வேர்கள் ஒன்று திரண்ட பாகத்தின் மேல் பரத் வாஜர் அமர்ந்து கொண்டார். பின் அகன்று நீண்டிருந்த அந்த மரத்தை ஒரு பார்வை பார்த்தார்.

"மகரிஷி. இந்த மரம் பல நூறு ஆண்டுகளாக இருக்க வேண்டுமே..." என்று கேட்டான் பீமன்.

"ஆம் பீமா... மரங்களில் ஆலம், அரசு, புன்னை, வேம்பு, வன்னி என்னும் ஐந்தும் தெய்வீக சக்தி படைத்தவை. மா, பலா, கொய்யா, மாதுளை, விளா என்னும் ஐந்தும் லட்சுமிகரமானவை. இங்கே இந்த ஆலமரத்தைக் கண் டதும், எனக்கு மற்ற மரங்கள் குறித்த எண்ணம் வந்து விட்டது," என்றார் லோமசர்.

அதன்பின் அவர் பரத்வாஜர் மற்றும் ரைப்யர் பற்றி கூறத் தொடங்கினார்.

"பரத்வாஜரும், ரைப்யரும் உற்ற நண்பர்கள். இவர்களில் ரைப்யருக்கு பராவசு, அர்வாவசு என்னும் இரு புத்திரர் களும், பரத்வாஜருக்கு யவக்ரிதர் என்றொரு புத்திரனும் இருந்தனர். யவக்ரிதர் மனதில் ஒரு வருத்தம் இருந்தது. அவர் எதிரில் பிராமணர்கள் ரைப்யரை மதித்த அள விற்கு, பரத்வாஜரை மதிக்கவில்லை. அதற்கு காரணம் ரைப்பருக்கு வேதங்கள் அவ்வளவும் நன்றாக தெரிந்தி ருந்தது தான்.

இதனால் யவக்ரிதர் ஒரு முடிவு செய்தார். வேதங்களை குரு குலத்தில் முறைப்படி படிக்காமல், கடுந்தவம் புரிந்து வரமாக அடைந்து விடுவது என்பதே அது. அதற்காக பெரும் தீ மூட்டி அதன் மேல் நின்று உடல் வாடத் தவத்தில் ஆழ்ந்தார். குறிப்பாக, அவரின் தவம் இந்திரனை நோக்கித் தான் இருந்தது. இந்திரனும் அவன் தவத்துக்கு மகிழ்ந்து நேரில் தோன்றினான். ஆனால், வரமாய் வேதங்கள் சித்திக்க வேண்டும் என்பதை ஏற்க மறுத்தான்.

"யவக்ரித முனிவரே! நீர் குருவின் வாயால் சப்த ஒலியாக வேதங்களைக் கேட்டு பயில்வதே சிறந்த மார்க்கமாகும். அதை ஒருவர் தவத்தால் அடிமைப்படுத்தி அடைவது கூடாது. வேறு வரம் வேண்டுமானால் கேளுங்கள்," என்றான்.

யவக்ரிதரோ மறுத்து விட்டதோடு, மேலும் கடுமையான தவவாழ்வை மேற்கொள்ளத் தொடங்கினார். இதைக் கண்ட இந்திரன் மீண்டும் தோன்றி, முன்பு சொன்ன பதிலையே கூறினான். அப்போதும் யவக்ரிதர் மனம் தளரவில்லை.

"தேவேந்திரா... நீ இம்முறை நான் கேட்ட வரத்தை மறுத்தால், அடுத்தபடியாக என் உடல் உறுப்புகளை உன் பெயரால் வெட்டி வேள்வித் தீக்கு விருந்தாக்குவேன். ஆனால், வேதங்களை அடையாமல் போக மாட்டேன்," என்றான்.

இம்முறை இந்திரன் யவக்ரிதரைத் திருத்த ஒரு உபாயம் மேற்கொண்டான். "முனிவர் பிரானே! நாளை கங்கை நதிக்கரைக்கு வந்து விடுங்கள். நீங்கள் விரும்பும்

வரத்தை அங்கே தர முடியுமா என்று பார்க்கிறேன்," என்றான்.

யவக்ரிதரும் கங்கைக் கரைக்குச் சென்றார். அங்கே ஒருவன் மண்ணைக் குழைத்து, கங்கையாற்றின் நடுவில் சுவர் எழுப்பிக் கொண்டிருந்தான். அசுரப் பாய்ச்சலாக வந்த கங்கை, அந்த மண் சுவரை நொடிப் பொழுதில் காணாமல் மறையச் செய்து கொண்டிருந்தது. இதைக் கண்ட யவக்ரிதர் சிரித்தார்.

"அப்பா... இது என்ன வேண்டாத வேலை! இந்த வீண் வேலையை எதற்காகச் செய்கிறாய்?" என்று கேட்டார்.

"நான் அணை கட்டி கங்கையை எனக்கு சொந்தமாக்கிக் கொள்ள விரும்புகிறேன்," என்றான் அவன்.

"இது நடக்கக் கூடிய செயலா? ஆயிரம் பேர் ஒன்றாக கூடினாலும், இதை செயல்படுத்த முடியாது. அப்படியிருக்க நீ தனியாளாகச் செய்வது எப்படி சாத்தியம்?" என்று யவக்ரீதர் கேட்டார்.

அவனும் சிரித்தபடியே, "குரு குலத்தில் படிக்காமல், தவம் மட்டும் செய்து வரமாகவே வேதங்களை அடையலாம் என நீங்கள் எண்ணுவது நடக்கும் என நினைக்கும் போது, இது மட்டும் சாத்தியமில்லாததா என்ன?" என்று அவன் திருப்பிக் கேட்டான்.

அடுத்த நொடி, யவக்ரீதருக்குள் பெரும் திகைப்பு ஏற்பட்டது. பிறகே, அங்கே அணை கட்டும் மனிதன் வடிவில் இருந்தது தேவேந்திரன் என்பது தெரிய வந்தது.

யவக்ரீதர், "இந்திரா... வேதமே என் லட்சியம். என்ன செய்தால் அது எனக்கு கிடைக்குமோ அதை நீ செய்வாய். இந்த வேதங்களைக் கூட நான் என் தந்தை பரத்வாஜருக்காகவே அடைய விரும்புகிறேன். அவரையும் வேதங்கள் சென்று சேர வேண்டும். அவர் எல்லா பிராமணர்களாலும் போற்றப்பட வேண்டும்," என்றார்.

இந்திரனும் தன் விசேஷ சக்தியால் மிக குறுகிய காலத்திற்குள் யாரும் போதிக்காமல், இருவரிடமும் வேதங்களை அடையச் செய்தான். உற்சாகத்தோடு பரவத்வாஜரிடம் புறப்பட்ட யவக்ரீதர் மிகுந்த அகந்தையுடன், "தந்தையே... நான் இப்போது வேதத்தை கரைத்துக் குடித்தவன். நான் மட்டுமல்ல... நீங்களும் தான். நம்மை இனி எவராலும் இகழ முடியாது. பிராமணர்களும் உங்கள் நண்பர் ரைப்யரை வணங்குவது போல் வணங்க வேண்டும்," என்றார்.

யவக்ரீதரின் பேச்சைக் கேட்ட பரத்வாஜர் கவலையில் ஆழ்ந்தார். பாலதி முனிவரின் புத்திரனான மேதாவி என்பவன் பெற்ற வரத்தையும், அதனால் நேர்ந்த முடிவும் அவர் மனதில் நிழலாடியது.

"யவக்ரீதா... நீ இந்திரனை நிர்பந்தம் செய்து, நினைக்கும் போது மனதில் வேதங்கள் தோன்றும் வரத்தைப் பெற்று விட்டாய். அந்த வகையில், நானும் நீயும் வேதம் அறிந்த வித்தகர்களுக்கு இணையானவர்கள் ஆவோம். எவரிடம் வேதம் இருக்கிறதோ, அவர் பிரம்மத்துக்கு சமமானவர்.பிரம்மத்திற்கு சமமாகி விட்ட நீ, அற்ப ஆசைகளுக்கு ஆளாகக் கூடாது. அகந்தை இல்லாமல் பணிவுடன் இருப்பதில் தான் நன்மை உள்ளது.

பாலதி என்னும் முனிவர் இருந்தார். அவரது பிள்ளை கள் சிறிது காலத்திலேயே இறந்து விட்டனர். மனம் வருந்திய அவர், மரணமே அடையாத புத்திரன் வேண்டி பிரம்மாவை நோக்கி தவமிருந்தார். தன் உடல் உறுப்பு களை வெட்டி, யாக குண்டத்தில் இட, பிரம்மா நேரில் தோன்றினார்.

"இறவாத தன்மை என்பது தேவர்களுக்கு உரியது. மனி தர்களுக்கு அதை அளிக்க முடியாது," என்று பிரம்மா மறுத்தார்.

அவரிடம் பாலதி முனிவர், "உலகம் அழியும் வரை என் பிள்ளை உயிர் வாழ வேண்டும். உலகம் அழியும் போது அவனும் இல்லாமல் போகட்டும்," என்று வரம் தரும்படி வேண்டினார்.

பிரம்மா அதைச் சற்று மாற்றி, "நீ தவம் புரிந்த இந்த வனத்தில் உள்ள இந்த மலைகள் என்றும் மாறாதவை. அவை அழியாமல் இருக்கும் வரை உன் பிள்ளையும் இருப்பான்," என்று கூறி விட்டார்.

அதன்படி, பிறந்த தன் பிள்ளைக்கு 'மேதாவி' என்று பெயரிட்டார். பெயருக்கேற்ப புத்திசாலியான அவன், வரத்தின் பலத்தால் ஆணவம் கொண்டான். முனிவர்க ளிடம் யாகத்தில் அவிர்பாகம் தனக்கும் அளிக்க வேண் டும் என்று கட்டளை இட்டான். இதனால் பாதிக்கப்பட்ட தனுஷாஷி என்னும் முனிவர், தன் தவ சக்தியால் மேதா வியை எரிக்க முயன்றார்... முடியவில்லை.

அதைக் கண்ட மேதாவி கைகொட்டி சிரிக்க, கோபம் கொண்ட அவர், "எந்த மலை இருந்தால் நீ அழியா

மல் இருப்பாயோ, அந்த மலை முழுவதும் இப்போதே நொறுங்கட்டும்," என்று சபித்தார். மலை நொறுங்கியது. மேதாவியும் இறந்தான். பாலதி முனிவர் மீண்டும் புத்திர சோகத்தில் ஆழ்ந்தார். இந்த மேதாவியின் முடிவைச் சிந்தித்தால், உன் மனதிலும் அற்ப ஆசை ஏதும் உண்டாகாது," என்றார் பரத்வாஜர்.

பரத்வாஜர் இவ்வளவு எடுத்துச் சொல்லியும், யவக்ரீதருக்கு தவறு செய்யும் சூழல் எழுந்தது. ஒருநாள் ரைப்யரின் ஆஸ்ரமத்திற்குச் சென்ற யவக்ரீதர், ரைப்யரின் மருமகளைக் கண்டு அவள் அழகில் ஈடுபட்டான். தன்னுடன் சேராவிட்டால் சபித்து விடுவதாக கூறி நிர்பந்தமும் செய்தான். இதைக் கேட்ட பாண்டவர்கள் திகைப்பில் ஆழ்ந்தனர்.

"யவக்ரீதர் வேதம் அறிந்தும் பயனில்லையே. பெண்ணாசையில் மூழ்கி விட்டானே..." என்றனர்.

"அது தான் மாயையின் சக்தி. உலகில் யாராக இருந்தாலும் அழிவு நிச்சயம் உண்டு," என்றார் லோமசர்.

"மகரிஷி. இதன் பிறகு யவக்ரீதருக்கு என்ன நேர்ந்தது" என்று கேட்டனர் பாண்டவர்.

"என்ன நடக்கும்? ரைப்யர் தன் மருமகளுக்கு நேர்ந்த இழிவைக் கண்டு கொதித்தார். அவர் தன் ஜடாமுடியை வெட்ட, அதிலிருந்து இரு பூதங்கள் புறப்பட்டன. அவற்றை யவக்ரீதரை நோக்கி ஏவி விட்டார். பயந்தோடிய யவக்ரீதர், தந்தையான பரத்வாஜரின் வேள்விக் குண்டத்தில் ஒளிந்து தப்பிக்கப் பார்த்தான்.

ஆனாலும் பயனில்லை. பூதங்கள் அவனைக் கொன்று விட்டுச் சென்றன. அன்றாட வேள்விக்காக வந்த பரத்வாஜர், குண்டத்தில் கிடந்த யவக்ரீதன் பிணத்தைக் கண்டார். நடந்ததை எல்லாம் ஞானதிருஷ்டியால் அறிந்து கொண்டார். புத்திர சோகத்திற்கு ஆளான அவர், பூதங்களை ஏவி விட்ட ரைப்யரை சபித்தார். அவரின் மூத்தமகனான பராவசுவாலேயே உயிர் பிரிய வேண்டும் என சபித்தார். பின் யவக்ரீதனின் சிதைக்கு தீயிட்ட அவர் தானும் உயிர் விட்டார்."

இவ்வாறு, லோமசர் மூலம் பரத்வாஜரின் முடிவைக் கேட்ட பாண்டவர்கள் அமைதி காத்தனர்.

"பாண்டவர்களே... பரத்வாஜர் வரலாறு மூலம் நீங்கள் அறிவது என்ன?" என்று கேட்டார் லோமசர்.

"பூலோகத்தில் பற்றற்ற துறவிகளையும் புத்திரசோகம் பதறச் செய்து விடும் என்பதை அறிந்தோம். அது மட்டுமல்ல, கொடிய காமத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால், அது அழிவுக்கு வழி வகுக்கும் என்பதையும் புரிந்து கொண்டோம்," என்றனர்.

"சரியாகச் சொன்னீர்கள்," என்றார் லோமசர்.

"மகரிஷி. இதன் பிறகு என்ன நடந்தது. ரைப்யரை அவரது மூத்தமகன் பராவசு கொன்றானா?" என்று கேட்க, "ஆம். அது ஒரு கொடிய தருணம். பாவம் ரைப்யர்," என்றார் லோமசர்.

ரைப்யர், தன் மகனாலேயே எப்படி கொல்லப்பட்டார் என்பதை லோமசர் கூறத் தொடங்கினார்.

"பிருஷத்யும்னன் என்றொரு அரசன் இருந்தான். அவன் தன் குருவான ரைப்யரிடம் வேள்வி நடத்த வேண்டினான். ஆனால், ரைப்யர் தன் புத்திரர்களான பராவசுவையும், அர்வாவசுவையும் அனுப்பி வைத்தார். அதன் பின், அவர் காட்டில் கடும் தவத்தில் ஆழ்ந்தார்.

பிருஹத்யும்னனும் ரைப்யரின் பிள்ளைகளோடு வேள்வி செய்யப் புறப்பட்டான். வேள்வித் தீயில் இடுவதற்கு திரவியங்கள் தேவைப்பட்டன. அதில் இடம் பெற வேண்டிய மிக முக்கியமான ஒன்று பசு அல்லது மானின் மாமிசம். பராவசு வேட்டையாடப் புறப்பட்டான். இதற்கு வேடர்களின் உதவி தேவைபப்பட்டது. அவர்கள் யாராவது காட்டிற்குள் இருக்கிறார்களா என தேடிச்சென்றான்.

பராவசு எந்த காட்டிற்குச் சென்றானோ, அந்த காட்டில் தான் அவனுடைய தந்தை ரைப்யர் தவம் செய்யச் சென்றிருந்தார். அங்கு அவருக்கு ஜுரம் ஏற்பட்டதால், குளிர் வந்து விட்டது. மான் தோல் ஒன்றைப் போர்த்தியபடி ஒரு மரத்தடியில் படுத்திருந்தார். வேடர்களைத் தேடி வந்த பராவசு, யாரும் கண்ணில் தென்படாததால் தானே வேட்டையாட தீர்மானித்தான்.

மான்தோல் போர்த்தியபடி சுருண்டு படுத்திருந்த ரைப்யரை, மான் என்று தவறாக எண்ணி அம்பு தொடுத்தான். ரைப்யர் துடிதுடித்து உயிரை விட்டார். மனித சப்தம் கேட்டு அருகில் வந்த பராவசு, அதிர்ச்சியில் உறைந்து போனான்.

'தந்தையை கொன்று விட்டோமே' என்று கலங்கிய அவன் பிரம்மஹத்தி தோஷத்திற்கு ஆளானான். பரத்

வாஜரின் சாபத்தால் தான், தனக்கு இந்தக் கதி நேர்ந்ததை அறிந்தான்.

அரண்மனைக்கு புறப்பட்ட பராவசு, தம்பியான அர்வாவசு விடம் நடந்ததைக் கூறினான்.

"நான் இப்போது பிரம்மஹத்தி தோஷத்திற்கு ஆளாகி விட்டேன். இதை எப்படி போக்குவேன்? வேள்வியை எப்படி நடத்துவது?" என்றான்.

அர்வாவசு, "அண்ணா! நான் காட்டிற்குச் சென்று பரிகாரம் செய்து கொள்கிறேன். உன்னாலேயே இந்த வேள்வியை முழுமையாக முடிக்க முடியும். பிரம்மஹத்தி பற்றி சிறிதும் கவலைப்படாதே. மன்னர் பிரஹத்யும்னனுக்கு ஒரு பிராமணராக இருந்து செய்ய வேண்டிய கடமையைச் செய்து விடு," என்றவனாக காட்டிற்குப் புறப்பட்டான். அண்ணன் பராவசுவும் வேள்வி செய்யத் தொடங்கினான்.

ஒரு கட்டத்தில் வேள்வியும் முடிவுக்கு வந்தது. அர்வாசுவசு அண்ணனின் பிரம்மஹத்தி தோஷம் நீங்க, எமனை நோக்கி தவத்தில் ஆழ்ந்திருந்தான். அவனது தவசக்தி எமனை இழுத்து வந்தது.

"அர்வாவசு... உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டான் எமன்.

"என் சகோதரன் மீதிருக்கும் பிரம்மஹத்தி தோஷம் இப்போதே நீங்க வேண்டும்," என்றான் அர்வாவசு எமன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிக்காமல் என்ன செய்வது... பாவம் செய்வது அவன். பரிகாரம் தேடுவது நீயா?"

"அதனால் என்ன?"

"அவன் பசிக்கு நீ சாப்பிட்டால், அவன் பசி அடங்கி விடுமா?"

"அப்படியானால், நான் கேட்ட வரம் தர மாட்டாயா?"

"சாத்தியமே இல்லை. உன் தேவை எது என்றாலும் எதையும் கேட்கலாம். ஒருவேளை நீ பாவம் செய்தி ருந்தால், இந்த தவப்பயனால் நீங்கும். உன் சகோதரன் செய்த பாவத்தை அனுபவித்தே தீர வேண்டும்."

"வேண்டுமானால் அவன் பாவத்தை, நான் அனுபவிக்க லாம் அல்லவா?"

"அதுவும் முடியாது. உன் புண்ணிய பலனை நீ அவனுக் குத் தானமாகத் தரலாம்."

"அப்படியே ஆகட்டும். எனக்கு என் சகோதரன் சங்க டப்பட்டு விடக்கூடாது. அதுவே முக்கியம்" எமன் அர்வா வசுவின் தியாக உணர்வை எண்ணி மகிழ்ந்தான்.

"உனக்காக உன் சகோதரனை பிரம்மஹத்தி தோஷத் தில் இருந்து நான் ரட்சிக்கிறேன்" என்று சொல்லி மறைந்தான். அர்வாவசு சகோதரனைக் காணம் அரண் மனைக்குப் புறப்பட்டான். அப்போது பராவசு பெரிதும் மனம் மாறியிருந்தான். அர்வாவசுவை தனக்கு போட்டி யாகக் கருதினான்.

"நீ ஒரு பாவி... உன்னை உள்ளே சேர்க்கமாட்டேன்," என்று சொல்லி அனுப்ப, அர்வாவசு அதிர்ச்சிக்கு ஆளானான். இப்போது அர்வாவசு சபித்தால், அது உடனே பலித்து விடும். ஆனாலும், அண்ணன் தன்னைக் கண்டு பயப்படுவதைப் புரிந்து கொண்டு தானாகவே வெளியேறினான்.

சூரியனைக் குறித்து தவம் செய்யத் தொடங்கினான். சூரியனும் நேரில் தோன்றி ரகசிய வேதத்தை உபதேசம் செய்தான். இதை அறிந்தவர்கள் கேட்டது கிடைக்கும். நினைத்தது நடக்கும். அதன் பின் ஆற அமர நடந்தது அனைத்தையும் யோசித்தான்.

தந்தை ரைப்யருக்கும், பரத்வாஜருக்கும் இருந்த நட்பு. பரத்வாஜரின் பிள்ளையான யவக்ரீதனின் பேராசை, வேதத்தை குருவின் மூலம் அடையாமல் குறுக்குவழியில் அடையும் முயற்சி, தன் சகோதரன் தன்னை போட்டியாக கருதிய விதம் என அனைத்திற்கும் அச்சமே அடிப்படைக் காரணம் என்பதை உணர்ந்தான்.

இனியாவது ஒரு வேத பிராமணன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ, அந்த வழியில் நடக்க முடிவுக்கு வந்தான். வேண்டாத ஆசை, பயம் அனைத்தும் நீங்க வேண்டும் என்னும் கோரிக்கைக்காக தவத்தில் ஆழ்ந்தான். யாருமே இப்படி ஒரு தவமுயற்சியில் ஈடுபட்டதில்லை. அர்வாவசுவைக் கண்டு மகிழ்ந்த தேவர்கள் அவன் முன் தோன்றினர்.

"நீ கேட்கும் வரம் எது என்றாலும் தருகிறோம்,' என்றனர். அவனும், "உயிர் துறந்த அனைவரும் மீண்டும் திரும்ப வேண்டும்," என்று வேண்டினான். தற்கொலை புரிந்து

கொண்ட பரத்வாஜர், யவக்ரீதர், ரைப்யர் என அனைவ ரும் உயிர்ப்பிக்கப்பட்டனர்.

தேவர்கள் அவர்களிடம், "ஒருவனுடைய தவம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அர்வாவசு சாட்சி. எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு பராவசு சாட்சி. வேதத்தை குருவிடம் இருந்த கற்க வேண்டும் என்பதற்கு யவக்ரீ தன் சாட்சி. இது ஒரு பாடம்," என்று கூறிச் சென்றனர்.

பாண்டவர்கள் லோமசருடன் கந்தமாதன பர்வதத்தை அடைந்தனர். அங்கு திரும்பிய பக்கமெல்லாம் எலும்புக் கூடுகளாக கிடந்தன.

அதைப் பார்த்த சகாதேவன் "இது என்ன விபரீதம். இது யாருடையது. மிருகங்களின் எலும்புமாகத் தெரி யவில்லை. மண்டை ஓட்டுடன் கிடப்பதைப் பார்த்தால் மனித எலும்புக் கூடு போலத் தோன்றுகிறதே..." என் றான்.

லோமசரும், "ஆம்... இது மனித எலும்புக்கூடு தான்!" என்றார்.

"ஒரு மனிதன் இறந்து விட்டால் அதை அக்னிக்கு இரை யாக்குவார்கள். அவனே ஞானாசிரியனாக இருந்தால் உடம்பை வெட்டிப் பதினெட்டு கூறுகளாக்கி மிருகங்க ளுக்குத் தின்னக் கொடுப்பார்கள். இது போல யாரும் குவியலாக கிடக்க விட மாட்டார்களே..." என்று கேட் டான் நகுலன்.

"நகுலா... நீ நல்ல கேள்வி கேட்டாய். பூலோகத்தில் உயரமானதும், தேவர்கள், ரிஷிகள் சஞ்சாரம் மிகுந்தது மான பகுதியே இந்த கந்தமாதன பர்வதம். இங்கு ஒருவர்

வருவதற்கே புண்ணியம் செய்திருக்க வேண்டும். இங்கி ருந்தே இமயமலை தொடங்குகிறது. இப்படி ஒரு இடத் தில் கிடக்கும் எலும்புக் குவியலுக்கு உரியவன் யாரோ அல்ல... ஒரு நரகன். இந்த உலகத்தையே தன் கொடிய குணத்தால் ஆட்டிப் படைத்தவன்" என்றார் லோமசர்.

பீமன் ஆச்சரியத்துடன், "மகாமுனிவரே... நீங்கள் கம்ச சக்கரவர்த்தியைக் கூறுகிறீர்களா?" என்று கேட்டான்.

லோமசர், "இவன் கம்சனை விட கொடியவன். அரக்க குணம் கொண்டவர்களால் ஆதரிக்கப்பட்டவன்" என் றார்.

"அது யார் என்று நீங்களே கூறி விடுங்கள். எதற்கு இந்த பீடிகை?" என்று கேட்டாள் திரவுபதி.

"இந்த எலும்புக்கு உரியவன் நரகாசுரன். அவனை உங் களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் லோமசர்.

தர்மனும், "இந்த அசுரனைப் பற்றிய விஷயங்கள் அவ் வப் போது எங்களின் காதுக்கு வரும். எங்கும் தவமோ, வேள்வியோ நடக்க கூடாது. அப்படி நடந்தால் அது தனக்கானதாக இருக்கவேண்டும் என்று கட்டளையிட் டவன் அல்லவா நரகாசுரன்...?"

"மிகச் சரியாக கூறினாய் தர்மா... அவனே இவன். கிருஷ்ண பிரபுவே விஷ்ணுவாகத் தோன்றி சத்தியபாமா உதவியுடன் இவனை சம்ஹாரம் செய்தார். எவராலும் அழிக்க முடியாதபடி வரங்களைப் பெற்றிருந்தான். சிசு பாலன் முதல் ஜராசந்தன் வரை எப்படி கிருஷ்ணரால் அழிக்கப்பட்டனரோ அதைப் போலவே இவனும் வதம் செய்யப்பட்டான்.

பவுமன் என்ற பெயருடன் பூமாதேவியின் மகனாகப் பிறந்தான். விஷ்ணுவின் புத்திரனாகப் பிறந்தும், எந்த நற்குணமும் இவனிடம் இல்லை. பூமாதேவியோ மிகப் பொறுமையானவள். சகல் பாரங்களையும் தாங்கி நிற்ப வள். இந்த பூமியில் நல்லவை மட்டும் நடப்பதில்லை. தீமைகளும் நடக்கவே செய்கின்றன. நல்லதை ஏற்க தேவர்கள் உள்ளனர். தீமை எங்கு செல்லும்? அவை யோக மாயை காரணமாக அசுர வடிவம் கொண்டு விடு கின்றன. பின் அவை அனைத்திற்கும் காரணமானவ னாலேயே அழிக்கப்பட்டு விடுகிறது. இங்கும் அப்படியே நடந்தது.

கொடும் பாவத்தின் வடிவம் நரகாசுரன். அவன் அழிவு நல்ல விஷயமே. அவன் தாயான பூமாதேவியே அவன் வதம் - செய்யப்பட்ட நாளை இந்த உலகத்தவர் கொண் டாட வேண்டும் என்று விரும்பி வரம் கேட்டாள்.

பகவானும் அவள் கேட்ட வரத்தை அருள்புரிந்தார். அந்த நாளே ஐப்பசியில் இருள் நீக்கி ஒளி தரும் தீபா வளி நாளாக கொண்டாடப்படுகிறது. பாண்டவர்களும் நரகாசுரனைப் பற்றி அறிந்து கொண்டபின், அங்கிருந்து நராராயணாஸ்ரமம் என்னும் ரிஷிகளுக்கான ஆஸ்ரமம் நோக்கி நடந்தனர். பனிப்பொழிவும், மழையும் அதிக மாக இருந்ததால், பீமன் தன் மகனான கடோத்கஜனை மனதால் நினைத்தான்.

மாயாபலம் மிகுந்த அவனும் நேரில் வந்து திரவுபதி, தர் மர் இருவரையும் தன் தோளில் ஏற்றிக் கொண்டு பறந் தான். நர நாராயணர் ஆஸ்ரமத்தில் சேர்த்தான். மீண்டும் திரும்பி வந்து மற்றவர்களையும் சுமந்து சென்றான்.

அந்த நரராயண ஆஸ்ரமம் நல்ல நிழலும், இதமான நிழலும் கொண்டதாக இருந்தது. மாயையை வென்ற மகரிஷிகளின் இருப்பிடமாக அது இருப்பதைப் பாண்டவர்கள் புரிந்து கொண்டனர். காண்டவ பிரஸ்தத்தில் பிரச்னை இல்லாமல் ஆட்சி செய்து வந்திருந்தால், இங்கே வரும் நல்ல வாய்ப்பு தங்களுக்கு கிடைத்திருக்காது என்பதை புரிந்து கொண்டனர். எல்லாம் நன்மைக்கே என்ற உண்மையை உணர்ந்தனர்.

பாண்டவர்களின் வனவாச கட்டத்தில் தான் எத்தனை விதமான அனுபவங்கள் எத்தனை எத்தனை சந்திப்புகள்! இதைத் தொடர்ந்து வனவாசம் முடிந்து யுத்தத்தில் வெற்றியும் பெற்றனர். முடிவாக பாண்டவர்கள் பூலோக வாழ்வு முடிந்து சொர்க்க லோகம் சென்றனர்.

(முற்றும்)